# ஆண்டறிக்கை 2015




## மத்திய சுற்றாடல் அதிகாரசபை

### மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு

# தூரநோக்கு

சிறந்த சேவையின் ஊடாக

சுத்தமானதும் பசுமையானதுமான

சுற்றாடல்

# செயல் நோக்கு

ஒருங்கிணைத்தல், ஊக்குவித்தல், பொது மக்களின் பங்கேற்றலை மேம்படுத்தல், வலுவூட்டல், முறையான தொழில்நுட்பவியல் தலையீடுகள் மேற்கொள்ளல் மற்றும் சுற்றாடல் கல்வி ஆகியவற்றின் மூலம் சுற்றாடலின் தரத்தை முகாமைத்துவம் செய்வதில் தேசத்திற்கு தலைமைவகித்தல்.

# முன்னுரை

இவ்வாண்டு அறிக்கையானது, பணிப்பாளர்கள்/பிரிவுகள் 15 தைச்சேர்ந்த தலைவர்கள்/ தலைமையகத்தின் பிரிவுகள், 09 மாகாண அலுவலகங்கள் மற்றும் சுற்றாடல் பேரவை ஆகியோர்/ஆகியவற்றிடமிருந்து கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது. மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் (ம.சு.அ) மேற்கொள்ளப்பட்ட விஷேட கருத்திட்டங்களின் செயலாற்றுகை மற்றும் தகவல்கள் ஆகியனவும் இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இத்தகவல்கள் பிரதான பிரிவுகள்/தலைமையகத்தின் பிரிவுகள் மற்றும் மாகாண அலுவலகங்கள் ஆகியவற்றின் பிரதான செயலாற்றுகையின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன.

1971 ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14ஆம் வாசகம் மற்றும் நல்லாட்சி வழிக்காட்டிகள் ஆகியவற்றுக்கு அமைவாக ம.சு.அ இவ்வாண்டின் அறிக்கையை தயாரிக்கவேண்டி உள்ளதுடன், இவ்வறிக்கையானது அதிகாரசபையின் செயலாற்றுகை, வருடாந்த கணக்குகள் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை பற்றிய தகவல்களையும் கொண்டுள்ளது.

அவசியமான தகவல்களை அனுப்பிவைத்ததன் மூலம் ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்கிய அனைத்து பணிப்பாளர்கள்/ பிரிவுகளின் தலைவர்கள்/ பிரிவுகள்/ மாகாண அலுவலகங்கள் மற்றும் கருத்திட்ட பணிப்பாளர்கள் ஆகிய அனைவருக்கும் நன்றி கூறுவதற்கு இந்த வாய்ப்பை திட்டமிடல் கண்காணிப்பு குழு பயன்படுத்திக்கொள்கின்றது.

திட்டமிடல் கண்காணிப்பு குழு

# 2015 ஆம் ஆண்டறிக்கை பற்றியதலைவரின் செய்தி

2015 டிசம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த நிதி ஆண்டுக்கான ஐந்தொகை, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் கணக்காளர் தலைமை அதிபதியின் அறிக்கை உள்ளடங்களாக மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் (ம.சு.அ) ஆண்டறிக்கை மற்றும் கணக்காய்வுக்கு உட்பட்ட கணக்குகள் ஆகியவற்றை உங்களுக்கு சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்

நாட்டின் துரித அபிவிருத்திச் செயற்பாட்டில் சுற்றுச்சூழல் கரிசனைகளை ஒருங்கிணைக்கும் மத்திய தாபனம் என்ற வகையில் ம.சு.அ அதன் முயற்சிகளை பல்வேறு பிரிவுகளின் கீழ் தொடர்ந்தது.

நாம் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் சட்ட வரைஞர் மற்றும் சட்ட ஆசோசகர் ஆகியோருடன் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டதுடன் அதன் அடிப்படையில் சுற்றாடல் தாக்க பிரிவானது (சு.தா.பி) அதன் ஒழுங்குவிதிகள், குறித்துரைக்கப்பட்ட கருத்திடங்களின் பட்டியல் மற்றும் கருத்திட்டங்களை அங்கீகரிக்கும் முகவராண்மைகளின் பட்டியல் ஆகியவற்றில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுத்தது. கருத்திட்ட ஆதரவாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட சுற்றாடல் முகாமைத்துவ கருத்திட்ட (சு.மு.க) சமர்ப்பனம் உட்பட கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கான புதிய ஏற்பாடுகள் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு ஒழுங்குவிதிகளில் உள்ளடக்கப்பட்டன. இந்த குறித்துரைக்கப்பட்ட கருத்திட்டங்களின் பட்டியல் மற்றும் கருத்திட்ட அங்கீகரிப்பு முகவாராண்மைகளின் பட்டியல் ஆகியன பங்குதாரர்களின் முகவராண்மைகள் மற்றும் ம.சு.அ மாகாண அலுவலர்கள் ஆகியோரின் கரிசனைகள் கூட்டிணைக்கப்பட்டு திருத்தியமைக்கப்பட்டன.

நீர் நிலைகளின் தரத்தை பேணுதல் மக்களின் பயனுள்ள உபயோகத்திற்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகும். ஆனால் கைத்தொழில்கள் மூலம் தோற்றுவிக்கப்படும் கழிவுகளை அகற்றப்படும் நடைமுறையானது நீர் வளங்களை சீர்குலைக்கும் வகையில் அமைந்துள்ளதுடன் துரித கதியில் அதிகரித்தும் வருகின்றது. ஆகையால், இந்த ஆண்டில் இலங்கையில் உள்ள பிரதான நீர் நிலைகளின் மாதிரிகளை சேகரித்து அவற்றை பகுப்பாய்வுக்கு உட்படுத்துவதற்கான இயலுமை ம.சு.அ யின் ஆய்வுகூடத்திற்கு இருக்கும், இந்த மாதிரிகளாவன சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் தொடர்பில் (சு.பா.உ) சேகரிக்கப்படும் கைத்தொழில் கழிவுகள், வர்த்தக அடிப்படையில் சேகரிக்கப்படும் கழிவுகள், ஒழுங்கான கண்காணிப்பு மற்றும் சட்டத் தேவைகள் ஆகிய நோக்கங்களுக்காக சேகரிக்கப்படும் கழிவுகள் பல்வேறு நீர் நிலைகளில் இருந்து சேகரிக்கப்படும் மேற்பரப்பு நீர் மற்றும் நிலத்தடி நீர் மாதிரிகள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன.

நாம் 2015ஆம் ஆண்டிலும் இயற்கை வளங்கள் முகாமைத்துவத்தில் ஈடுபட்டுள்ள சம்பந்தப்பட்ட முகவராண்மைகளின் பங்குபற்றுதலுடன் இயற்கை வளங்கள் முகாமைத்துவம் பற்றிய பல முகவராண்மைகளுக்கு இடையிலான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களை நடாத்தினோம். இந்த குழுவானது நீரேந்துப்பகுதிகளின் பாதுகாப்பு, மண் பாதுகாப்பு பற்றிய ஒழுங்குவிதிகளை தயாரித்தல் மற்றும் பொல்கொட வர்த்தமானியில் திருத்தங்களை மேற்கொள்ளல் ஆகியவை தொடர்பில் முக்கியமான தீர்மானங்களை மேற்கொண்டது. நீரேந்துப்பகுதி தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானமானது யாதெனில் தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் பதுளை மாவட்டத்தில் உள்ள தேயிலைத் தோட்டப்பகுதிகளில் உள்ள நீரேந்துப்பகுதிகள் சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசங்களாக பிரகடனம் செய்யப்படல் வேண்டும் என்பதாகும்.

மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஆணையை நிறைவேற்றுதற்கு உலகலாவிய சுற்றாடல் துறையில் ஏற்பட்டுள்ள புதிய சாதனைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் மிகவும் அவசியமாகின்றன. ஆகையால், மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது 2015 பெப்ருவரி 23 மற்றும் 24ஆம் திகதிகளில் சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் திட்டமிடல் பற்றிய சர்வதேச மாநாடொன்றை பத்தரமுல்லையில் அமைந்துள்ள ‘‘வோட்டர்ஸ் எட்ஜில்’’ ஒழுங்கமைத்து வெற்றிகரமாக நடாத்தியது. அதேவேளையில் இலங்கையில் அமைந்துள்ள மாசுபடுத்தும் கைத்தொழில்களின் பரம்பல் பற்றிய தற்போதைய நிலைமையை மீளாய்வு செய்யும் நோக்கில் குறித்துரைக்கப்பட்ட கைத்தொழில்கள் பற்றிய புவியியல்-இடஞ்சார் தரவுத்தளம் அபிவிருத்தி செய்யப்பட்டு தொடர்ச்சியாக அத்தரவுத்தளம் இற்றைப்படுத்தலுக்கு உட்பட்டும் வருகின்றது. இந்த தரவுத்தளமானது மாசுக்கட்டுப்பாட்டு பொறிமுறையை நிறைவேற்றவும் புதிய கைத்தொழில்களை தாபிக்கவும் மிகவும் உதவியாக உள்ளது.

இந்த நாட்டில் இலத்திரனியல் சாதனங்களுக்கு உயர்ந்தவொரு கேள்வி காணப்படுவதால் கடந்த சில வருடங்களில் இலத்திரனியல் கழிவு உற்பத்தியானது குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்து உள்ளது. இந்த இலத்திரனியல் கழிவானது தீங்கை விளைவிக்கும் பதார்த்தங்களை கொண்டுள்ளதால் அவற்றில் முறையான கவனத்தை செலுத்த வேண்டிய அவசியமும் ஏற்பட்டுள்ளது. ஆகையால், நாம் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்து ‘‘பவித்ரா கங்கை-ஒவ்வொரு துளியும் முக்கியமாகும்’’ என்ற திட்டத்தின் கீழ் இ-கழிவு கைவிடும் நிகழ்வுகள் பலவற்றை ஒழுங்கமைத்தோம். இலத்திரனியல் கழிவை தோற்றுவிக்கும் பிரதான பகுதிகளாக இனங்காணப்பட்ட பல்வேறு பகுதிகளில் பல இ-கழிவு கைவிடும் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இந்த இ-கழிவு கைவிடும் நிகழ்வுகள் ஊடாக 6.8 மெட்ரிக் டொன் இலத்திரனியல் கழிவுகள் சேகரிக்கப்பட்டதுடன் அவை கழிவு

முகாமைத்துவத்திற்கான (இ-கழிவு முகாமைத்துவம்) பட்டியலில் இடம்பெற்றுள்ள உரிமம் பெற்றுள்ள சேகரிப்பாளர்கள் மூலம் அகற்றப்பட்டன.

சுற்றாடலை பாதுகாக்கும் கடமையில் பொதுமக்களின் பங்கேற்றலை இணைத்தல், சுற்றாடல் பற்றிய அவர்களின் கரிசனையை அதிகரித்தல், விழிப்புணர்வை கட்டியெழுப்பல் மற்றும் கல்வியை போதித்தல் ஆகிய செயற்பாடுகளுக்கு நாம் பொறுப்பாக உள்ளோம். இதனடிப்படையில், சுற்றாடல் மற்றும் அதன் முக்கியத்துவம் தொடர்பில் மக்களை விழிப்பூட்டும் பல்வேறு கல்வி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை ம.சு.அ நடாத்தியது. மேலும், உலக சுற்றாடல் தினமானது மேதகு சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் தலைமையில் **"ஒரு கோள், ஏழு பில்லியன் கணவுகள், கவனமாக நுகருங்கள்"** என்ற தொனிப்பொருளின் கீழ் யூன் 05 ஆம் திகதி வடடாகே, பொலன்னறுவையில் இடம்பெற்றது.

வீடுகள், வர்த்தக நிலையங்கள் மற்றும் பொது இடங்கள் ஆகியவற்றில் இருந்து கழிவுகளை சேகரித்தல் கழிவு முகாமைத்துவம் தொடர்பில் உள்ளூர் அதிகாரசபைகள் கொண்டுள்ள பிரதான பொறுப்புகளில் ஒன்றாக காணப்படுகின்றது. பற்றாக்குறையான உட்கட்டமைப்பு வசதியானது மாநகர சபைகளின் கழிவை முகாமைத்துவம் செய்யும் செயற்பாட்டில் காணப்படும் பிரதான தடைகளில் ஒன்றாக உள்ளது. ஆகையால், ம.சு.அ பிலிசறு கருத்திட்டததின் கீழ் ஒன்பது புதிய சேதனப்பசளை (செயற்கைப்பசளை) அமைவிடங்கள், ஆறு உயிர் வாயு அமைவிடங்கள், ஒரு எரிசூளை ஆகியவற்றை நிர்மாணிக்கும் முன்னெடுப்பை ரூபா 21 மில்லியன் செலவில் மேற்கொண்டது.

மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது உள்ளூர் அதிகாரசபைகளை வலுவூட்டும் அதேவேளையில் நுகர்வுக்கு பின்னரான பிளாஸ்டிக் கழிவு முகாமைத்துவ கருத்திட்டத்தின் கீழ் தனியார் துறை தொழில் முனைவோருக்கு ஆதரவு அளிக்கும் முன்னெடுப்பையும் மேற்கொண்டது. ஆரம்பத்தில், அங்கீகாரத்திற்கான கருத்திட்டங்கள் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள பிளாஸ்டிக் கழிவு சேகரிப்பாளர்கள் மற்றும் மீள்சுழற்ச்சியாளர்கள் ஆகியோருக்கு ஆள் அடையாள அட்டையொன்றை ம.சு.அ வழங்கியது. மேலும், இக்கருத்திட்டமானது தெரிவு செய்யப்பட்ட பிலாஸ்டிக் கழிவு மீள்சுழற்ச்சியாளர்களுக்கு அவர்களின் மீள்சுழற்ச்சி திறனை மேம்படுத்தும் வகையில் ஏழு பிலாஸ்டிக்நசுக்கி இயந்திரங்களையும் வழங்கியது.

மேலும், அனைத்து தொழில்நுட்ப பிரிவுகள் மற்றும் கருத்திட்டங்கள் ஆகியன அவற்றின் பெறுமதிவாய்ந்த சேவைகளை வழங்கும் அதேவேளையில் திட்டமிடல், மனிதவளப் பிரிவு, நிர்வாகம் மற்றும் நிதி, உள்ளகக் கணக்காய்வு போன்ற ஏனைய ஆதரவு வழங்கும் சேவைகள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் அவற்றின் ஆதரவையும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் முயற்சியை வெற்றிபெறச் செய்யும் நோக்கில் வழங்குகின்றன.

ம.சு.அ யின் குறிக்கோள்களையும் இலக்குகளையும் அடைவதற்கு மீளாய்வுக் காலத்தில் பங்களிப்பு செய்த பணிப்பாளர் நாயகம், முகாமைத்துவ பணியாளர்கள் மற்றும் ம.சு.அ ஊழியர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். மேலும், ம.சு.அ அலுவல்களை முகாமைத்துவம் செய்வதற்கான ஒத்துழைப்பு, வழிக்காட்டல், ஆலோசனை மற்றும் ஆதரவை எனக்கு வழங்கிய ம.சு.அ முகாமைத்துவ சபையின் உறுப்பினர்கள் மற்றும் சுற்றாடல் பேரவையின் உறுப்பினர்கள் ஆகியோருக்கும் நன்றி கூற இந்த வாய்ப்பை நான் பயன்படுத்துகின்றேன். மேலும், ஒத்துழைப்பு, அக்கறை மற்றும் ஆலோசனை ஆகியவற்றை வழங்கிய மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளர், மேலதிக செயலாளர்கள் மற்றும் அனைத்து உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கும் எனது பாராட்டுக்களை தெரிவிக்க விரும்புகின்றேன். மேலும் சிறந்த ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டிகள் வழங்கிய மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சருமானஅதிமேதகு சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களுக்கும் எனது மனமாரந்த நன்றியை தெரிவிக்கவும் விரும்புகின்றேன்.

தலைவர்

மத்திய சுற்றாடல் அதிகாரசபை

## ஒழுங்கமைப்பு கட்டமைப்பு




Figure 3.1:CEA Organizational structure

## மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் முகாமைத்துவ குழு

**பேராசிரியர் லால் மேர்வின்** (பீ.ஏ, எம்.ஏ, பட்டப்பின் டிப்லோமா, எம்.எஸ்.சு, பி.எச்.டி)

தலைவர்

**திரு.கே.எச் முத்துகுடஆராச்சி** (பி.எஸ்.சி-விஞ்ஞானம், எம்.எஸ்.சீ)

பணிப்பாளர் நாயகம்

**பொறியியளாளர. ஜே.எம்.யூ. இந்திரரட்ன** (பி.எஸ்.சி (பொறி.) ஹான்ஸ்.எம்.பி.ஏ. பட்டய பொறியியலாளர்FIE (இலங்கை) பட்டதாரி IE (அவுஸ்திரேலியா)

பிரதி பணிப்பாளர் நாயகம் (ம.வ.அ,நிர்வாகம்,நிதி)

**திரு. யூ.கே.டி.ஜீ.ஜயசிங்க**(பி.எஸ்.சி,எம்.எஸ்.சீ)

பிரதி பணிப்பாளர் நாயகம் (சு.மு.மற்றும்.த)

**கலாநிதி.ஆர்.எம்.எஸ். கே.ரத்நாயக்க**(பி.எஸ்.சி (விசேட), பி.எச்.டி, பட்டய டிப்ளோமா (இரசாயனவியல்)

பதில் பிரதி பணிப்பாளர் நாயகம் (சு.மா.க)

**திரு.எம்.ஜே.ஜே. பர்ணாந்து** (பி.எஸ்.சி,எம்.எஸ்.சு, பட்டப்பின் டிப்ளோமா (RS & GIS))

பிரதி பணிப்பாளர் நாயகம (சு.க.மற்றும்.வி)

**திரு.எம்.கே.எஸ். நாணயக்கார** (பி.காம்(ஹன்ஸ்), Licentiate –SLICA, FPAF)

பணிப்பாளர் (நிதி)

**மிஸ்.கான்தி டி சில்வா.** (பி.எஸ்.சி, எம்.எஸ்.சி).

பணிப்பாளர் (சு.தா.ம)

**திரு.எம்.எஸ்.ஏ.ஈ.திஸ்மல்பொல.** (சட்டத்தரனி, பட்டப்பின் டிப்ளோமா மனித வளம்)

பணிப்பாளர் (ம.வ.அ / க/பி.நிர்வாகம்)

**திரு.எம்.ஏ.ஏ.என்.ஹேமகுமார** (பி.எஸ்.சி, எம்.எஸ்.சி)

பணிப்பாளர் (R & D)

**திரு.நீல் பெரேரா**(பீ.ஏ, பொரு. (விசேட), எம்..ஏ (பொரு)டிப்ளோமா (பொது முகாமைத்துவம்)

பணிப்பாளர்(சு.க.மற்றும் வி)

**மிஸ்.மஞ்சுலா விமலசேன**(சட்டத்தரனி, எல்.எல்.பீ (இலங்கை), பிரசித்த நொத்தாரிசு, (சத்தியப்பிரமானம் ஆணையாளர் மற்றும் கம்பனி செயலாலர்)

பணிப்பாளர் (சட்டம்)

**திரு.டி.எம்.ஏ.எஸ்.கே.ரொற்றிகோ**(பி.எஸ்.சி, எம்.எஸ்.சி (வனவியல்)

பணிப்பாளர் (இ.வ.மு&கண்காணிப்பு)

**மிஸ். வசன்த விஜேசிங்க**(எஸ்.சி(இரசாயனவியல்) ஹான்ஸ். எம்.எஸ்.சி (பகுப்பாய்வுஇரசாயனவியல்), M.I இரசாயனவியல், (பட்டய இரசாயனவியலாளர்)

பணிப்பாளர் (ஆய்வுகூட வேவைகள்)

**மிஸ்.டி.விதானகே**(பி.எஸ்.சி, எம்.எஸ்.சி (சுற்றாடல் முகாமைத்துவம்), பட்டப்பின் டிப்லோமா(சுற்றாடல் விஞ்ஞானம்)

க/பி பணிப்பாளர்(சு.மா.க)

**திரு.ஜீ.எம்.கே.பெரேரா**(பி.எஸ்.சி, எம்.எஸ்.சி(வனவியல்), பட்டப்பின் டிப்ளோமா(சுற்றாடல் விஞ்ஞானம்))

பிரதி பணிப்பாளர் (NCPO)

**மிஸ்.விஜிதா சத்யகுமார்.** (பி.எஸ்.சி, எம்.எஸ்.சி (தே.வ.மு), பட்டப்பின் டிப்ளோமா (சுற்றாடல்
**திரு.ஜீ.ஏ.வீரசுந்தர. (**எம்.எஸ்.சி, எம் பீல்ட்)

பணிப்பாளர் (க.மு)

**திரு.ஆர்.வல்தொபல.(**(பி.ஏ(ஹன்ஸ்), எம்.எஸ்.சி (சமூகவியல்) )

பணிப்பாளர் (பிலிசறு கருத்திட்டம்)

**மிஸ்.குமாரி குலதிலக**(பி.ஏ (பொது))

பணிப்பாளர் (P&M)

**திரு.சுனில் டி.சில்வா.**(பி.எஸ்.சி. (பொது), பட்டப்பின் டிப்லோமா கணனி தொழில்நுட்பவியல், எம்.எஸ்.சி (கணனி விஞ்ஞானம்), பட்டய த.தொ,பிரிடிஸ் கொம்பியுடர் சொசைடி நினுணத்துவ உறுப்பினரி (MBCS CITP))

நிகழ்ச்சிட்டவியளாலர் /பகுப்பாய்வார்

**மிஸ்.டி..விதானகே(**(பி.எஸ்.சி, எம்.எஸ்.சி (சுற்றாடல் முகாமைத்துவம்), பட்டப்பின் டிப்ளோமா (சுற்றாடல் கல்வி) )

பணிப்பாளர் (HA)

**மிஸ்.ஏ.சீ.பீ.டாபரே**(பி.ஏ, Asso. Chtd. Lib பி.ஏ, Asso.Chtd.lib, எம்.எஸ்.சி. (LIS))

சிரேஸ்ட நூலகர்

**மிஸ்.யூ.விதானச்சி**(பி.எஸ்.சி (நிரிவாகம்), SLICA, MAAT, HDM)

உள்ளக கணக்காளர்

**திரு.கே.ஜீ.டி.என.கிரியெல்ல**(பி.எஸ்.சி, எம்.எஸ்.சி )

பணிப்பாளர் (மத்திய.மாகாணம்)

**திரு.கே.ஏ.பீ.வெலிகன்னகே**(பி.எஸ்.சி, எம்.எஸ்.சி , எம்.ஏ , பட்டப்பின் டிப்லோமா (சுற்றாடல் விஞ்ஞானம் ), டிப்லோமா(ம.வ.மு மற்றும் சந்தைப்படுத்தல்) )

பணிப்பாளர் (SaP)

**திரு.எம்.சிவகுமாரர்(** பி.எஸ்.சி, எம்.எஸ்.சி )

பணிப்பாளர் (EP)

**திரு.எச்.எஸ்.பிரேமசன்திர.(** பி.எஸ்.சி (விசேட)ஹகன்ஸ் , எம்.எஸ்.சி , M.I. உயிரியல், MIEPSL, C. EnvP, MPMI (US))

பணிப்பாளர் (கம்பஹா மாவட்டம்)

**திரு.என்.எஸ்.கமகே**(பி.எஸ்.சி, எம்.பீல்ட்)

பணிப்பாளர் (மே.மா)

**திரு.சுசன்த வெதகே**(பி.எஸ்.சி, எம்.எஸ்.சி )

பிரதிபணிப்பாளர் (UP)

**மிஸ்.சமன்தா மாலேபதிரன.**(பி.எஸ்.சி,எம்.எஸ்.சி,பட்டப்பின் டிப்ளோமா)

பிரதி பணிப்பாளர் (SuP)

விஞ்ஞானம்))

பதில் பிரதி பணிப்பாளர் (வட.மாகாணம்)

**திரு.டி.எம்.கே.திசாநாயக்க.** (பி.எஸ்.சி, எம்.எஸ்.சி)

பதில்.பிரதி.பணிப்பாளர் (வடமேல் மாகாணம்)

# உள்ளடக்கம்

உள்ளடக்கம்........................................................................................................................ viii
அட்டவணை பட்டியல்................................................................................................................ix
உருக்களின் பட்டியல்................................................................................................................xi
குறியீடுகளின் பட்டியல் ............................................................................................................ xiii
1.0 மத்திய சுறறாடல் அதிகாரசபை ..................................................................................................1

1.1 அறிமுகம்......................................................................................................................1

1.2 குறிக்கோள் ...................................................................................................................1

1.4அதிகார சபையின் உறுப்பினர்கள்.............................................................................................3

1.5.சுற்றாடல் பேரவை ...........................................................................................................3

2.0. மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் கடமைகளும் பொறுப்புகளும்..................................................8
3.0. சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டு பிரிவு....................................................................................... 14

3.1 சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டு அலகு................................................................................. 14

3.1.1 ஒருங்கமைப்பு மற்றும் கண்காணிப்பு…………………………………..………………..13

3.1.2 கொள்ளை வகுத்தல்……………………………………………………………….. 16

3.1.3 தொழில்நுட்ப அனுசரணை……………………………………………………… 16

3.2. ஆய்வுகூட சேவைகள் பிரிவு............................................................................................ 23

3.2.1 வளி வளம் முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புப் பிரிவு…………………………22

3.2.2 நீரின் தரத்தை கண்காணிக்கும் பிரிவு………………………………………………… 28

3.3 கழிவு முகாமைத்துவ பிரிவு............................................................................................ 34

3.3.1இலங்கையில் அபாயகர கழிவு முகாமைத்துவ ஒழுங்குவிதிகளை நடைமுறைப்படுத்தல்……………………………………………………………………………….. 34

3.3.2 பேசல் உடன்படிக்கையை நடைமுறைப்படுத்தல்………………………………………34

3.3.3.இரசாயனப் பொருள் முகாமைத்துவம்………………………………………………… 35

3.3.4 அசுபஸ்டஸ் முகாமைத்துவம்………………………………………………………. 35

3.3.5.இல்திரணியல் கழிவு முகாமைத்துவம்……………………………………………… 35

3.3.6 மெல்லிய பொலிதீன் ஒழுங்குவிதியை நடைமுறைப்படுத்தல்………………………… 36

4.0.சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் மதீப்பீட்டு பிரிவு……………………………………………36

4.1 சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு (சு.தா.ம) ................................................................................ 37

4.2 இயற்கை வளங்கள் முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புப் பிரிவு………………………44

4.3 ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப்பிரிவு................................................................................ 54

5.0 சட்டப்பிரிவு ...................................................................................................................... 66

6.1திறைசேரி நிதியத்தின கீழ் நிறைவேற்றப்பட்ட நடவடிக்கைகள்(மீண்டெழும் மற்றும் மூலதனம்)........................................................................................................................ 71

7.0 திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு பிரிவு ............................................................................... 84
8.0. முறைப்பாட்டு பிரிவு.......................................................................................................... 88
9.0 தகவல் தொழில் நுட்ப பிரிவு(த.தொ)..................................................................................... 93
10.0 உள்ளக கணக்காய ்வு பிரிவு............................................................................................. 95
11.0. மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அதிகாரப் பரவலாக்கல் ................................................. 97

11.1. ம.சு.அ யின் மாகாண அலுவலகங்களுக்கு அதிகாரங்கள் பரவலாக்கம்.................................. 97

11.2.உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கு அதிகாரங்கள் பரவலாக்கம் ...................................................... 97
11.3. மாவட்ட சுற்றாடல் சட்டத்தை அமுல்படுத்தும் குழு (DELEC) .................................................... 98
12.0.ம.சு. அதிகாரசபையின் பிராந்திய மயமாக்கல் நிகழ்ச்சித்திட்டம். ................................................... 99
12.1 அறிமுகம்……………………………………………………………………………..96
12.2சு.தா.ம செயள்முறை.......................................................................................................... 100
12.4 சுற்றாடல் மாசு தொல்லைகள் மற்றும் இயற்கை வளங்கள் அதிகளவில் பயன்படுத்தல் பற்றிய பொதுமக்களின் புகார்களைளுக்கு தீர்வுகாணல் .................................................................... 103
12.6. சுற்றாடல் முகாமைத்துவம்................................................................................................ 105
13.1 தேசிய திண்மக் கழிவு முகாமைத்துவ கருத்திட்டம் ‘‘பிலிசறு’’.................................................. 108
13.2 தேசிய நுகர்வுக்கு பின்னரான பிலாஸ்டிக் கழிவு முகாமைத்துவம் கருத்திட்டம்..................... 145
13.3. பாடசாலை முன்னோடி நிகழ்ச்சித்திட்டம்.............................................................................. 152
13.4. இலங்கையில் ம.சு.அ ஆய்வுகூடங்களை வலுப்படுத்தலும் கண்காணிப்பு திறனை மேம்படுத்தலும் ........................................................................................................................ 163
13.5 இலங்கையில் திண்ம கழிவு அகற்றல் வசதிகள் நிர்மாணம் கருத்திட்டம் (EDCF கருத்திட்டம்) ...................................................................................................................... 170
13.6. JICA.................................................................................................................................. 181
13.7 பசுமை பூங்கா கழிவு முகாமைத்துவ நிலையம்-ம.சு.அ ............................................................ 187
14.0. கூட்டாண்மை ஆட்சி அறிக்கை ........................................................................................... 190
15.0. மனிதவள அபிவிருத்தி, நிர்வாகம் மற்றும் நிதிப்பிரிவு............................................................. 194
15.1 மனிதவளங்கள் அபிவிருத்திப் பிரிவு....................................................................................... 194
மனிதவளங்கள் முகாமைத்துவ பிரிவு ......................................................................................... 195
16.0.நிதி கூற்றுக்கள் பற்றிய கணக்காளர் தலைமை அதிபதியின் அறிக்கை........................................... 246

## அட்டவணை பட்டியல்

அட்டவணை 1.1: சுற்றாடல் பேரவையின் உறுப்பினர்கள்.......................................................................4
அட்டவணை1.2: சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் பற்றிய வல்லுநர்கள்.........................5
அட்டவணை 1.3: தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள்………………………………….5
அட்டவணை 1.4: 2015 ஆம் ஆண்டில் இடம்பெற்ற பேரவை கூட்டங்கள்………………………………6
அட்டவணை 3.1: சுற்றாடல் கட்டுப்பாட்டு பிரிவால் சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்திற்காகவும், முதலீட்டுச் சபையில் பதிவுசெய்யப்பட்ட செயற்பாடுகளுக்கான புதிய தளங்களுக்கும் வழங்கப்பட்ட இணக்கப்பாடு……………………………………………………………..………………………14
அட்டவணை 3.2: சு.மா.க பிரிவால் கையாளப்பட்ட புகார்கள்…………………………………………15
அட்டவணை 3.3:தங்க விருது வெற்றியாளர்கள் பட்டியல்………..……………………………………19
அட்டவணை3.4: முன்னேற்றத்தின் சுருக்கம்: 2015 -சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டு பிரிவு……………20
அட்டவணை3.5:2015ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட கைத்தொழில் கழிவு மாதிரிகளின் எண்ணிக்கை... 28
அட்டவணை 3.6: நீர் நிலைகளின் மேற்பரப்பில் இருந்து சேகரிக்கப்பட்ட நீர் மாதிரிகள் எண்ணிக்கை ............................................................................................................................................. 29
அட்டவணை 3.7: களனி கங்கையின் மாதிரி இடங்கள்.......................................................................... 30
அட்டவணை 4.1: 2015ஆம் ஆண்டில் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு (சு.தா.ம) பிரிவால் ஆரம்ப சுற்றாடல் மதிப்பீடு (சு.தா.ம) /ஆ.சு.ம ஒழுங்குவிதிகளுக்கு அமைய ஒப்புதல் அளிக்கப்பட்ட கருத்திட்டங்களின் பட்டியல்.....................................................................................................................................36

அட்டவணை 4.2: ஏனைய கருத்திட்ட ஒப்புதல் அளிப்பு முகவராண்மைகளால் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் இணக்கப்பாட்டுடன் அங்கீகரிக்கப்பட்ட /அங்கீகாரம் மறுக்கப்பட்ட கருத்திட்ட பட்டியல்....37
அட்டவணை4.3:சு.தா.ம. பிரிவால் வகைப்படுத்தப்படும் கருத்திட்டங்களின் பட்டியல் .... 38
அட்டவணை 4.4: 2015 ஆம் ஆண்டில் கண்காணிக்கப்பட்ட கருத்திட்டங்கள் பின்வருமாறு.............41
அட்டவணை4.5: பலகைகள் நிறுவப்பட்ட இடங்கள் .... 47
அட்டவணை4.6:ஆய்வு மூலம் இணங்காணப்பட்ட நீர்வீழ்ச்சிகளின் பட்டியல்.... 49
அட்டவணை 4.7: பிரகடனம் செய்யப்பட்ட சு.பா.பி களின் முகாமைத்தவம் மற்றும் கண்காணிப்பு.... 51
அட்டவணை 4.8: முன்மொழியப்பட்டுள்ள சு.பா.பி களின் நிலை .... 52
அட்டவணை 4.9: மாவட்ட-மட்ட கைத்தொழிலகள் பற்றிய தரவுத்தளத்தின் இறுதிச் சுருக்கம்-டிசம்பர், 2015 .... 61
அட்டவணை4.10:வர்த்தக அடிப்படையில் வழங்கப்படும் புவியியல் தகவல் முறை(GIS)சேவைகள் .... 64
அட்டவணை6.1: நடைமுறைசாத்திய நிகழ்ச்சித்திட்டங்கள்நேச்சர்ஸ் பீல்ட் நிலையத்தால் நடாத்தப்பட்டவை .... 72
அட்டவணை 6.2:சுற்றாடல் கற்கைகளுக்கான சர்வதேச நிலையத்தின் கீழ் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் .... 75
அட்டவணை6.3:செய்தி மற்றும் செய்தி வெளியீடு.... 78
அட்டவணை 8.1: புகார்களை தீர்ப்பது தொடர்பில் பொருப்புகள் எவ்வாறு பிரிவுகள், மாகாண அலுவலகங்கள் மற்றும் மாவட்ட அலுவலகங்கள் ஆகியவற்றுக்கு இடையில் பங்கிடப்பட்டுள்ள விதம் பற்றிய சுருக்கம்-2015ஆம் ஆண்டு....86
அட்டவணை12.1: சு.தா.ம செயள்முறையின் பிராந்திய மட்ட நடைமுறையாக்கம்.... 100
அட்டவணை 12.2:புதிய கைத்தொழில்களுக்கான அமைவிட பரிந்துரைகள்.... 102
அட்டவணை12.3:2015ஆம் ஆண்டில் கையாளப்பட்ட புகார்களை காட்டுகின்றது. .... 104
அட்டவணை 12.4: 2015ஆம் ஆண்டில் சு.தா.ம/ஆ.சு.ப ஒழுங்குவதிகளின் கீழ் சு.தா.ம பிரிவால் அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டங்களின்பட்டியல் .... 105
அட்டவணை12.5: 2015ஆம் ஆண்டில் குறித்துரைக்காத செயற்பாடுகளுகான பரிந்துரைகளின் பட்டியல் .... 107
அட்டவணை 13.1: கூட்டுப்பசளை அமைவிடங்களின் கண்காணிப்பு- 2015 .... 114
அட்டவணை 13.2:மாவட்ட நெறிப்படுத்தல் அமர்வுகளின் விபரம்.... 120
அட்டவணை 13.3: மாவட்ட நெறிப்படுத்தல் அமர்வுகள் பற்றிய விபரங்கள்.... 124
அட்டவணை 13.4: தற்போதைய கூட்டுப்பசளை தொகுதிகளின் மேம்பாட்டு விபரங்கள் .... 127
அட்டவணை 13.5: 2015 ஆம் ஆண்டில் முன்மொழியப்பட்ட புதிய அமைவிடங்களின் நிர்மாணப்பணி மீதான ஒட்டு மொத்த நிதியிடல் விபரங்கள்.... 128
அட்டவணை 13.6: தடுத்துவைத்த கொடுப்பனவு விபரங்கள் .... 131
அட்டவணை 13.7: தூளாக்கும பொறிகளின் விநியோகம்.... 132
அட்டவணை 13.8:2015ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்ட பசளைத் தொட்டிகளின் விபரங்கள் .... 137
அட்டவணை 13.9: ம.சு.அ பிரதேச சுற்றாடல் அலுவலகங்கள் ஊடாக மாவட்ட நெறிப்படுத்தல் அமர்வுகளின் விபரங்கள்.... 139
அட்டவணை 13.10: 2015 ஆம் ஆண்டில் நிலவிய ஆளணி நிலைகள் பற்றிய விபரங்கள் .... 142
அட்டவணை 13.11:நிதிசார் முன்னேற்ற பகுப்பாய்வின் பிரிவுகளின் அடிப்படையில் காட்டுகின்றது. .... 143
அட்டவணை13.12: 2015ஆம் ஆண்டில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் பயிற்சி செயலமர்வு... 149
அட்டவணை13.13: நாட்டிலுள்ள பாடசாலைகளின் மொத்த எண்ணிக்கை (தமிழ் மற்றும் சிங்களம் உட்பட).... 152
அட்டவணை 13.14: ஆரம்ப்பிரிவு ஆசிரியர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் பட்டியல்.... 153
அட்டவணை 13.15: தலைமைத்துவ நிகழ்ச்சித் திட்டங்களின் பட்டியல்.... 154
அட்டவணை13.16:முன்-பள்ளி ஆசிரியர்களுக்கு நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் பட்டியல் .... 154
அட்டவணை13.18: வலய மட்டத்தில் அதிபர்களுக்காக நடாத்தப்பட்ட பயிற்சிநிகழ்சிகளின் பட்டியல் 155
அட்டவணை 13.20: சு.மு.நி சாதனங்கள் உற்பத்தி.... 157
அட்டவணை13.20: சூழல் குழாம் சாதனங்களின் உற்பத்தி .... 158
அட்டவணை 13.21: முன்பள்ளி ஆசிரியர் வழிகாட்டி நூல்கள் அச்சிடல்....158
அட்டவணை 13.22: 2015ஆம் ஆண்டில் மாகாண ஆய்வுக்கூடத்தால் மேற்கொள்ளப்பட்ட நீர் தரம் பற்றிய கண்காணிப்பின் முன்னேற்றம்.... 163
13.4.1 மேற்பரப்பு நீர் தரத்தின் கண்காணிப்பு .... 164
அட்டவணை 13.23: மேற்பரப்பு நீர் தரத்தின் கண்காணிப்பு.... 164
அட்டவணை 13.24:மாதிரி அமைவிடங்களின் உளகலாவிய நிலைப்படுத்தல் அமைப்பு (உ.நி.அ) ஆள்கூறுகள்.... 164
அட்டவணை13.25: தடுகம்ஓயா மாதரியெடுத்தல் அமைவிடத்தின் உளகலாவிய நிலைப்படுத்தல் அமைப்பு (GPS) ஆள்கூறுகள்.... 165

அட்டவணை 13.26: அசல் கருத்திட்டத்துடன் ஒப்பீட்டளவில் திருத்தி அமைக்கப்பட்ட திட்டத்தின் பிரதான அம்சங்கள்........ 178
அட்டவணை13.27: கருத்திட்டப் பணியாளர் ........ 179
அட்டவணை 13.28: நிதிசார் முன்னேற்றம்-ஆண்டு 2015........ 180
அட்டவணை 13.29: செலவின் விபரங்கள்........ 180
அட்டவணை 15.1: 2015ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட உள்ளூர் பயிற்சிகள் ........ 194
அட்டவணை15.2: 2015 ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஆட்சேர்ப்பு,பதவியுளர்வு,பதவி விலகல், பதவி இடைநிறுத்தம் மற்றும் பணிஓய்வு........ 196
அட்டவணை 15.3: பிலிசறு கருத்திட்டம் ஆட்சேர்ப்பு,பதவியுயர்வு, பதவி விலகல்........ 197
அட்டவணை 15.4: தேசிய நுகர்வுக்கு பின்னரான பிளாஸ்டிக் கழிவு முகாமைத்துவம் கருத்திட்டத்தில் ஆட்சேர்ப்பு, பதவி ஓயர்வு,பதவி விலகல் ........ 197
அட்டவணை 15.5: EDCF கருத்திட்ட ஆட்சேர்ப்பு, பதவி ஓயர்வு,பதவி விலகல்........ 197
அட்டவணை15.6: 2015 ஆம் ஆண்டில் பெற்ற மானியங்கள்........ 202
அட்டவணை 15.7: நிதிசார் செயலாற்றுகை கூற்று ........ 204
அட்டவணை 16.8: நிதிசார் செயலாற்றுகை கூற்று ........ 206
அட்டவணை 15.9: கொய்க்கா காசுப்பாய்ச்சல் கூற்று........ 208
அட்டவணை 15.10: ஒப்புரவு மாற்றங்கள் பற்றிய கூற்று........ 212
அட்டவணை 15.11: குறிப்பு 4ஏ குறிப்பு........ 214
அட்டவணை 15.12: குறிப்பு 4பீ........ 216
அட்டவணை 15.13: குறிப்பு 5........ 219
அட்டவணை 15.14: குறிப்பு 6........ 220
அட்டவணை 15.15: குறிப்பு 7........ 220
அட்டவணை 15.16: குறிப்பு 8........ 221
அட்டவணை 15.17: குறிப்பு 9........ 222
அட்டவணை 15.18: குறிப்பு 10........ 223
அட்டவணை 15.19: குறிப்பு 11........ 223
அட்டவணை 15.20: குறிப்பு 12........ 225
அட்டவணை 15.21: குறிப்பு 13........ 225
அட்டவணை 15.22: குறிப்பு 14........ 228
அட்டவணை 15.23: குறிப்பு 15........ 229
அட்டவணை 15.24: குறிப்பு 16........ 230
அட்டவணை 15.25: குறிப்பு 17........ 231
அட்டவணை 15.26: குறிப்பு 18........ 232
அட்டவணை 15.27: குறிப்பு 19........ 234
அட்டவணை 15.28: குறிப்பு 20........ 234
அட்டவணை 15.29: குறிப்பு 21........ 235
அட்டவணை 15.30: குறிப்பு 22........ 236
அட்டவணை15.31: குறிப்பு 23 ........ 240
அட்டவணை15.32: குறிப்பு 24 ........ 242
அட்டவணை15.33: குறிப்பு 25 ........ 243

## உருக்களின் பட்டியல்

உரு3.1: கொழுப்பு கோட்டையில் $PM_{10}$இன் வருடாந்த சராசரி........ 24
உரு3.2:நுகேகொடை நகரின்24 மணித்தியாள சராசரி $PM_{10}$செறிவு ........ 24
உரு3.3:நுகேகொடை நகரில் 24 மணித்தியாள சராசரி$PM_{2.5}$ செறிவு........ 24
உரு3.4:நுகேகொடை நகரில் 24 மணித்தியாள சராசரி $NO_2$செறிவு........ 25
உரு3.5: நுகேகொடை நகரின் 08மணித்தியாள சராசரி CO செறிவு ........ 25
உரு3.6: நுகேகொடை நகரின் 24 மணித்தியாள $SO_2$சராசரி செறிவு ........ 26
உரு3.8: படம் 1- களனி கங்கையின் மாதிரி அமைவிடங்கள்........ 30
உரு3.9: களனி கங்கையில் pH வேறுபாடு........ 31
உரு 3.10: களனி கங்கையில் EC வேறுபாடு ........ 31
உரு 3.11: களனி கங்கையின் கலங்கள் தன்மையின் வேறுபாடு........ 32
உரு 3.12: களனி கங்கையில் கரைந்திருந்த ஒட்சிசன் வேறுபாடு........ 33
உரு4.1:இயற்கை வளங்கள் முகாமைத்துவம் பற்றிய வெளியீடுகள்........ 46
உரு 4.2: இலங்கையில் சுற்றாடல் அல்லது வரலாற்று ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் மற்றும் மரங்கள்........ 48
உரு 4.3: ம.சு.அ க்கு பொருத்தமான ஆராய்ச்சி தரவுத்தளம் ........ 54
உரு 4.5: 1972 முதல2015 வரை காட்டு நிலப்பரப்பளவில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் ........ 58

உரு 4.6: 1972 முதல் 2015வரையில் வீட்டுத் தோட்ட நில பரப்பளவில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்....... 58
உரு 4.7:1972 முதல் 2015வரையில் வயற்காணிப் பரப்பளவில் ஏற்பட்டுள்ள மாற்றம்............................... 58
உரு4.8: நடவடிக்கைகளின் அட்டைப்பக்கம்............................................................................................ 59
உரு 4.9: இலங்கையிலுள்ள கைத்தொழில்களின் இடம்-சார்ந்த பரவல் 2015............................................ 61
உரு4.10: பொலன்னறுவை, காலி, மாத்தறை மற்றும் நுவரரெலியா மாவட்டங்களின் சுற்றாடல் வளங்கள் பற்றிய சுருக்கக்குறிப்புகளின் முகப்புப் பக்கங்கள்...................................................................... 63
உரு 6.1: சோபாகெத டி.வி.டி........................................................................................................................ 79
உரு 6.2: நில்வனபெத டி.வி.டி....................................................................................................................... 80
உரு 8.1: பிரிவுகள் மற்றும் மாகாண அலுவலகங்கள் மத்தியில் புகார்களின் பகிர்வு.............................. 90
உரு13.1 மொன்ரோவியாவத்த தற்காலிக குப்பை அகற்றுமிடம்..................................................................... 138
உரு13.2: விநியோகிக்கப்பட்ட துண்டுப்பிரசுரங்கள், சுவரொட்டிகள் மற்றும் குறிப்புகள்............................ 150
உரு 13.4: தடுகம் ஓயா நீரின் pHவேறுபாடு.............................................................................................. 166
உரு 13.5: தடுகம் ஓயா நீரின் ECவேறுபாடு.............................................................................................. 166
உரு 13.6: தடுகம் ஓயா நீரின் கரைந்துள்ள ஒட்சிசன் வேறுபாடு.................................................................. 166
உரு 13.7:தடுகம் ஓயா நீரின் CODவேறுபாடு.......................................................................................... 167
உரு 13.8: தடுகம் ஓயா நீரின் குளோரைட்வேறுபாடு.................................................................................. 167
உரு 13.9: தடுகம் ஓயா நீரின் நைத்திரேட்வேறுபாடு................................................................................. 167
உரு 13.10: 2014 ஆண்டில் pH மற்றும் ECவேறுபாடு.................................................................................. 168
உரு 13.11: 2014ஆம் ஆண்டில் கலங்கல் நிலை மற்றும் கரைந்துள்ள ஒட்சிசன்.................................... 168
உரு 13.12: 2014ஆம் ஆண்டில் COD மற்றும் BOD வேறுபாடு.............................................................. 169

# குறியீடுகளின் பட்டியல்

| | | |
|---|---|---|
| BOD | - | உயிரியல் ஒட்சிசன் கேள்வி |
| BOI | - | முதலீட்டுச்சபை(மு.ச) |
| CEA | - | மத்திய சுற்றாடல் அதிகார சபை(ம.சு.அ) |
| COD | - | இரசாயன ஒட்சிசன் கேள்வி(இ.ஓ.கே) |
| CETRAC | - | நிர்மாணம் மற்றும் உபகரணப் பயிற்சி நிலையம்(நி.உ.ப.நி) |
| DDG | - | பிரதி பணிப்பாளர் நாயகம்(பி.ப.நா) |
| DEO | - | பிரதேச சுற்றாடல் உத்தியோகத்தர்(பி.சு.உ) |
| DO | - | மாவட்ட அலுவலகம்(மா.அ) |
| E & NR | - | சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள்(சு.இ.வ) |
| EE & A | - | சுற்றாடல் கல்வி விழிப்புணர்வு(சு.க.வி) |
| EIA | - | சுற்றாடல் தாக்க மதிப்பீடு(சு.தா.ம) |
| EM & A | - | சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் மதிப்பீடு(சு.மு.ம) |
| EMS | - | சுற்றாடல் முகாமைத்துவ முறைமை(சு.மு.மு) |
| EPC | - | சுற்றாடல் மாசுக் கட்டுப்பாடு (சு.மா.க) |
| EPL | - | சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் (சு.பா.உ) |
| GSMB | - | புவிச்சரதவியல் ஆய்வு சுரங்கப் பணியகம் (பு.ச.ஆ.சு.ப) |
| HRD | - | மனிதவள அபிவிருத்தி (ம.வ.அ) |
| HWM | - | தீங்கு விளைவிக்கும் கழிவு முகாமைத்துவம்(தீ.க.மு) |
| IEE | - | ஆரம்ப சுற்றாடல் மதிப்பீடு(ஆ.சு.ம) |
| IEMP | - | ஒருங்கிணைந்த சுற்றாடல் முகாமைத்துவ கருத்திட்டம் (ஒ.சு.மு.க) |
| ITI | - | கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகம் (கை.தொ.நி) |
| JBIC | - | சர்வதேச ஒத்துழைப்பு ஜப்பான் குழு (ச.ஒ.ஜ.கு) |
| JICA | - | ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை (ஜ.ச.ஒ.மு) |
| KPS | - | குருவிட்ட பிரதேச சபை (கு.பி.ச) |
| NBRO | - | தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகம் (தே.க.ஆ.நி) |
| LLF | - | சுமை அடிப்படையிலான உரிமம் கட்டணம் (சு.அ.உ.க) |
| NEA | - | தேசிய சுற்றாடல் சட்டம் (தே.சு.ச) |
| NEIC | - | தேசிய சுற்றாடல் தகவல் நிலையம் (தே.சு.த.நி) |
| NERD | - | தேசிய பொறியியளாலர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் (தே.பொ.ஆ.அ.நி) |
| OP & M | - | இயக்க திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு(இ.தி.க) |
| PO | - | மாகாண அலுவலகம் |
| PVC | - | பாலிவினைனல் குளோரைட்டு (பா.கு) |
| SEO | - | சிரேட்ட சுற்றாடல் உத்தியோகத்தர் (சி.சு.உ) |
| SLTB | - | இலங்கை போக்குவரத்து சபை (இ.போ.ச) |
| SRO | - | பிராந்திய அலுவலகம் கண்டி |
| TPS | - | தம்மன்கடுவ பிரதேச சபை (த.பி.ச) |
| WDF | - | கழிவு நீர் அகற்றும் கட்டணம் (க.நீ.அ.க) |
| WEA | - | வயம்ப சுற்றாடல் அதிகாரசபை (வ.சு.அ) |
| WWMA | - | மேல்மாகாண கழிவு மகாமைத்துவம் (மே.மா.க.மு) |
| WPO | - | மேல்மாகாண அலுவலகம் (மே.மா.அ) |
| CPO | - | மத்திய மாகாண அலுவலகம் (ம.மா.அ) |
| SaPO | - | சப்பிரகமுவ மாகாண அலுவலகம் (ச.மா.அ) |
| SuPO | - | தென் மாகாண அலுவலகம் (தெ.மா.அ) |
| NCPO | - | வட மத்திய மாகாண அலுவலகம் (வ.ம..மா.அ) |
| UPO | - | ஊவா மாகாண அலுவலகம்(ஊ.மா.அ) |
| NPO | - | வட மாகாண அலுவலகம் (வ.மா.அ) |
| JAICA | - | ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு கைத்தொழில் (ஜ.ச.ஒ.கை) |
| IQMU | - | வளித் தரம் கண்காணிப்பு பிரிவு (வ.த.க.பி) |
| PM | - | குறிப்பிட்ட விடயம் (கு.வி) |
| KECO | - | கொரியன் சர்வதேச ஒத்துழைப்பு (கொ.ச.ஒ) |

| | | |
|---|---|---|
| NCC | - | தேசிய ஒருங்கிணைப்பு குழு (தே.ஒ.கு) |
| TACMIC | - | கைத்தொழில் இரசாயனப் பொருட்களை முகாமைத்துவம் செய்யும் தொழில்நுட்ப ஆலோசனைக் குழு (கை.இ.பொ.மு.தொ.கு) |
| MEEE | - | இலத்திரனியல் மற்றும் மின் உபகரணங்கள் முகாமைத்துவம் (இ.மி. உ.மு) |
| BMICH | - | பண்டாரநாயக்க ஞாபக சர்வதேச மாநாட்டு மண்டபம் (ச.ஞா.ச.மா.ம) |
| CFL | - | கொம்பெக்ட் புளோரசண்ட் விளக்கு (கொ.பு.வி) |
| PAA | - | கருத்திட்டம் அங்கீகரிப்பு முகவராண்மை (க.அ.மு) |
| NRM&M | - | இயற்கை வள முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு பிரிவு (இ.வ.மு.க.பி) |
| EM&A | - | சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் விழிப்புணர்வு (சு.மு.வி) |
| NWP | - | தேசிய ஈரநிலக் கொள்கை(தே.ஈ.கொ) |
| NWSC | - | தேசிய ஈரநில வழிநடத்தல் குழு (தே.ஈ.வ.கு) |
| DWLC | - | வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் (வ.சீ.தி) |
| UDA | - | நகர அபிவிருத்தி அதிகாரசபை (ந.அ.அ) |
| ICASL | - | இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகம் (இ.ப.க.நி) |
| SLLRDC | - | இலங்கை காணிமீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனம்(இ.கா.அ.கூ) |
| GN | - | கிராம சேவையாளர்(கி.சே) |
| DS | - | பிரதேச செயளாலர்(பி.செ) |
| CCD | - | கரையோர பாதுகாப்பு திணைக்களம்(க.பா.தி) |
| MC | - | மாநகர சபை(மா.ச) |
| EE&A | - | சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வு பிரிவு (சு.க.வி.பி) |
| EPP | - | சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித்திட்டம்(சு.மு.நி.தி) |
| WED | - | உலக சுற்றாடல் தினம் (உ.சு.தி) |
| TRC | - | தொலைதொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழு (தொ.ஒ.ஆ) |
| DELEC | - | மாவட்ட சுற்றாடல் சட்ட அமுலாக்கல் குழு(மா.சு.ச.அ.கு) |
| NWS&DB | - | தேசிய நீர் வழங்கள் வடிகால் அமைப்புச்சபை (தே.நீ.வ.அ.ச) |
| LGA | - | உள்ளூராட்ச்சி அதிகாரசபை(உ.அ) |
| MENR | - | சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சு(சு.இ.வ.அ) |
| MERE | - | சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு(சு.பு.ச.அ) |
| PP | - | பிலிசறு கருத்திட்டம்(பி.க) |
| NSWMSC | - | தேசிய திண்மக் கழிவு முகாரமத்துவ ஆதவவு நிலையம் (தே.தி.க.மு.ஆ.நி) |
| KMC | - | குருணாகல் மாநகர சபை(கு.மா.ந.ச) |
| ICTAD | - | நிரிமாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம் |
| EDCF | - | பொருளாதார அபிவிருத்தி கூட்டுறவு நிதியம்(பொ.அ.கூ.நி) |
| PPA | - | கருத்திட்ட தயாரிப்பு உதவியாளர்(க.தா.உ) |
| NPD | - | தேசிய திட்டமிடல் திணைக்களம் (தே.தி.தி) |
| ERD | - | வெளிவள திணைக்களம் (வெ.தி) |
| NSWMC | - | தேசிய திண்ம கழிவு முகாமைத்துவ கழிவு நிலையம்(தே.தி.க.மு.நி) |
| WPWMA | - | மேல்மாகாண கழிவு முகாமைத்துவ அதிகாரசபை (மே.மா.க.மு.ச) |
| CLG | - | உள்ளூராட்சி ஆணையாளர்(உ.ஆ) |
| BOQ | - | அளவுகள் பட்டியல்(அ.ப) |
| ISWM | - | ஒருங்கிணைந்த திண்மக்கழிவு முகாமைத்துவம்(ஒ.தி.மு) |

# 1.0 மத்திய சுற்றாடல் அதிகாரசபை

## 1.1 அறிமுகம்

1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் 1981ஆம் ஆண்டு தாபிக்கப்பட்ட மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது (ம.சு.அ) 2015 ஆம் ஆண்டில் முப்பத்து நான்கு வருடங்களை பூர்த்திசெய்கின்றது. மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் ஆளுகையின் கீழ் இயங்கும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையபனது தேசிய சுற்றாடல் கொள்கையை நடைமுறைப்படுத்தும் பிரதான தாபனங்களில் ஒன்றாக செயற்படுகின்றது. ம.சு.அ யின் 2015 ஆம் ஆண்டிற்கு உரிய ஆண்டறிக்கையானது 09 மாகாண அலுவலகங்கள், 14 மாவட்ட அலுவலகங்கள் மற்றும் 2015 ஆம் ஆண்டில்ம.சு.அ யால் நடைமுறைப்படுத்தப்பட்ட விஷேட கருத்திட்டங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய செயலாற்றுகையை உள்ளடக்குவதுடன் பொது நிதிகள் மற்றும் நன்கொடையாளர் நிதிகள்/மானியங்கள் ஆகியவற்றை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட பணிகள் பற்றிய முழு விபரங்களையும் வழங்கும் முகமாக ம.சு.அ யின் வெற்றிகள் தோல்விகள் ஆகியவை பற்றிய மதிப்பீடொன்றையும் உள்ளடக்குகின்றது.

## 1.2 குறிக்கோள்

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பரிந்துரையின் பிரகாரம், 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டமானது 1988 மற்றும் 2000 ஆம் ஆண்டுகளில் முறையே 1988 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் (திருத்தம்) சட்டம் மற்றும் 2000 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் (திருத்தம்) சட்டம் ஆகியவறின் ஊடாக திருத்தப்பட்டுள்ளது. 1980 ஆம் ஆண்டின் தேசிய சுற்றாடல் சட்டத்தின் உள்ளடக்கப்பட்டுள்ள பிரதான அதிகாரங்களாவன(தத்துவங்கள்) பின்வருமாறு:

- தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழான சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக சுற்றாடலின் தரத்திற்கு ஆபத்தாகவும் அல்லது ஆபத்தை விளைவிக்கும் சாத்தியமுடைய கழிவு வகைகள், அவற்றில் அடங்கியுள்ள பகுதிகள், அவற்றின் தாக்கங்கள், வெளிவீச்சு மற்றும் வீழ்படிவுகள் அல்லது ஏனைய மாசுபடுத்திகளின் மூலங்கள் ஆகியவற்றை சீராக்கி, பேணுவதுடன் கட்டுப்பாட்டையும் மேற்கொள்ளல்.
- சுற்றாடல் தாக்க மதிப்பீட்டை (சு.தா.ம) ஓர் கருவியாக பயன்படுத்தி முறையான சுற்றாடல் விளைவுகள் பற்றிய மதிப்பீட்டின் ஊடாக சுற்றுச்சூழலுக்கு உகந்த அபிவிருத்தி தலையீடுகளை உறுதி செய்வதன் மூலம் நாட்டிலுள்ள தேசிய வளங்களின் தளத்தை பாதுகாத்தல்.
- சுற்றாடல் பாதுகாப்பில் விஷேடமாக பாடசாலை பிள்ளைகளின் பங்களிப்பை பெற்றுக்கொள்ளும் அதே வேளை பொதுமக்களை ஊக்குவித்து அவர்களின் ஆதரவையும் பங்களிப்பையும் மேம்படுத்தி உள்ளூர், தேசிய மற்றும் உலகளாவிய சுற்றாடல்பிரச்சினைகள் தொடர்பில் மக்களின் விழிப்புணர்வை ஏற்படுத்தல்
- பரந்தளவில் வாடிக்கையாளர் தேவைகளுக்கு உகந்த சேவைகளை வழங்குவதன் மூலம் சுற்றாடலுடன் தொடர்புடைய தரவுகள் மற்றும் தகவல்களை வழங்கும் தகவல் கேந்திர நிலையமாக செயற்படல்.

## 1.3அதிகாரங்கள், பணிகள் மற்றும் கடமைகள்

1980 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள பணிகள், அதிகாரங்கள் மற்றும் கடமைகள் ஆகியவை தொடர்பில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது தற்சமயம் விசேடமாக கவனத்தை செலுத்தும் பிரதான பணிகள், அதிகாரங்கள் மற்றும் கடமைகளாவன பின்வருமாறு;

அ) தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளையும் அதன் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளையும் நிருவகித்தல்.

ஆ) மாசடைதல் ஏற்படுவதற்கான காரணங்கள், இயல்புகள் மற்றும் அதன் அளவு பற்றிய ஆய்வுகள் மற்றும் விசாரணைகளை பொறுப்பேற்பதுடன் ஏனைய நபர்கள் அல்லது அமைப்புகளுக்கு அவ்வாறான ஆய்வுகள் மற்றும் விசாரணைகளை மேற்கொள்வதற்கு உதவிகள் மற்றும் ஒத்துழைப்பு வழங்குதலும்.

இ) சுற்றாடல் தரவீழ்ச்சியுடன் தொடாபுடைய ஏதேனும் அம்சங்களுடன் தொடர்புடைய ஆய்வை நடாத்துதல், மேம்படுத்தல் மற்றும் ஆய்வுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கள் அல்லது அவற்றின் (அவ்வம்சங்களின்) விளைவுகளை தடுத்தல் மற்றும் சுற்றாடலை பாதுகாக்கவும் மேம்படுத்தவும் அவசியமான கோட்பாடுகளை தயாரித்தல்.

ஈ) சுற்றாடலிள் உள்ள நன்மையளிக்கும் பயன்களை பாதுகாப்பதற்கான தரங்கள், கோட்பாடுகள் மற்றும் விதிமுறைகளை குறித்துரைத்தல்.

உ) சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் பற்றிய ஏதேனும் இயல்புடன் தொடர்புடைய அறிக்கைகள் மற்றும் தகவல்கள் பிரசுரித்தல் .

ஊ) சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் மேம்பாடு தொடர்பில் பொதுமக்களுக்கு தகவல்கள் மற்றும் கல்வியை வழங்குதல்.

மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு அதன் ஆரம்பத்திலிருந்து 1988 மற்றும் 2000 ஆம் ஆண்டுகளில் திருத்தியமைக்கப்பட்ட தேசிய சுற்றாடல் சட்டத்திற்கிணங்க விரிவான ஒழுங்கமைப்பு அதிகாரங்கள் (தத்துவங்கள்) ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இத்திருத்தங்களுடன்,மற்றவற்றிற்க்கிடையில் ஒப்படைக்கப்பட்டுள்ள பிரதான அதிகாரங்களாவன பின்வருமாறு;

அ) அதிகாரசபையில் குறித்துரைக்கப்பட்ட தரங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு இணங்க ம.சு.அ வழங்கிய உரிமத்தின் கீழ் சுற்றாடல் மாசுபடுத்திகளை அகற்றுவதால் ஏற்படும் விளைவுகளுக்கு பரிகாரம் காணும் நடவடிக்கைகளை நாடுவதற்கும்.

ஆ) நடைமுறையாக்கத்தின் போது சுற்றாடலுக்கு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய சில குறிப்பிட்ட அபிவிருத்தி கருத்திட்டங்கள் நிறைவேற்றுவதற்கு முன்னர் சுற்றாடல் தாக்க மதீப்பீட்டிற்கு உட்படுத்தும் முகமாக நடவடிக்கை மேற்கொள்ளல்.

இ) சுற்றாடலுக்கு கழிவுகளை வெளியேற்றும், வீழ்படிவை தோற்றுவிக்கும் அல்லது வெளியிடும்.

செயற்பாடுகளை“வறையரைசெய்யப்பட்ட செயற்பாடுகள்” என வர்த்தமானி அறிவித்தல் விடவும், இச்சட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்ட தரங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு இணங்கவும், அதிகாரசபையால் வழங்கிய உரிமத்தின் அடிப்படையிலும் அல்லாத வகையில் குறித்துரைக்கப்பட்ட எந்தவொரு செயற்பாட்டையும் எந்தவொரு ஆளும் முன்னெடுக்கமாட்டார் என்பதை உறுதிசெய்வதற்கும் உள்ள அதிகாரங்கள்.

### 1.4அதிகார சபையின் உறுப்பினர்கள்

அதிமேதகு சனாதிபதி சுற்றாடல் அமைச்சருடன் கலந்தாலோசித்து நியமனம் செய்யும் மூன்று உறுப்பினர்களை இந்த அதிகாரசபை கொண்டுள்ளதுடன் அவர்களில் இரண்டு நபர்கள் சுற்றாடல் விடயத்தில் போதிய நிபுணத்துவத்தையும் தகுதிகளையும் கொண்டிருப்பர். ஏனைய உறுப்பினர்களில் ஒருவர் சுற்றாடல் முகாமைத்துவத்தில் போதிய நிருவாக திறன்களையும் அனுபவத்தையும் கொண்டிருக்க வேண்டும்.மூன்று உறுப்பினர்களில் ஒருவர் அதிகாரசபையின் தலைவராக அதிமேதகு சனாதிபதியால் நியமிக்கப்படுகின்றார்.

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தலைவராக பேராசிரியர் லால் மேர்வின் தர்மசிறி 2015.02.02 ஆம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வருமாறு அதிமேதகு சனாதிபதியால் நியமிக்கப்பட்டதுடன் திரு. அஜித் டி கொஸ்தா, கலாநிதி கே.ஹசித் அரவிந்த திசேரா மற்றும் திறைசேரி பிரதிநிதியான மிஸ். அனுசியாநாதன் ஆகியோர் முறையே 2015.02.09, 2015.01.30 மற்றும்2015.03.04 ஆம் திகதிகளில் ம.சு.அ சபை உறுப்பினர்களாக அதிமேதகு சனாதிபதியால் நியமிக்கப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் சபையானது பின்வரும் உறுப்பினர்களை உள்ளடக்குகின்றது;

பேராசிரியர் லால் மேர்வின் தர்மசிறி - தலைவர்இம.சு.அ

திரு.அஜத் டி கொஸ்தா - அதிகாரசபை உறுப்பினர்

கலாநிதி கே.ஹசித் அரவிந்த திசேரா - அதிகாரசபை உறுப்பினர்

மிஸ்.ஆர்.அனுசியாநாதன் - திறைசேரி பிரதிநிதி

**மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகமான கே. எச். முத்துக்குட ஆராச்சி, தே.சு.அ வழங்கியுள்ள தத்துவங்களுக்கு இணங்க சபையின் செயலாளராக செயற்படுகின்றார். மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்தில் சபையானது சுற்றாடல்முகாமைத்துவத்துடன் தொடர்புடைய சில முக்கிய பிரச்சினைகளுக்கு வழிக்காட்டவும் பணிப்புரை வழங்கவும் 12 கூட்டங்களை நடாத்தியுள்ளது.**

### 1.5.சுற்றாடல் பேரவை

### 1.5.1 அறிமுகம்

1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் 7ஆம் பிரிவின் கீழ் திருத்தப்பட்டவாறு சுற்றாடல் பேரவையானது தாபிக்கப்பட்டது.

### 1.5.2 சுற்றாடல் பேரவையின் பிரதான வகிபாகம்

மேற்குறிப்பிட்ட சட்டத்தின் பிரகாரம் சுற்றாடல் பேரவையின் முக்கிய பணிகளாவன பின்வருமாறு.

(அ) அதிகாரசபையின் பொறுப்புக்கள், அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகள் தொடர்பில் பொதுவான ஆலோசனைகளை மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு வழங்கள்.

(ஆ) அதிகாரசபையால் பேரவைக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட எதும் விடயம் தொடர்பாக மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு ஆலோசனை வழங்கல்.

### 1.5.3 சுற்றாடல் பேரவையின் கட்டமைப்பு

1980ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க திருத்தத்தில் குறிப்பிட்டுள்ளதன் பிரகாரம் சுற்றாடல் பேரவையானது சுற்றாடல் அமைச்சினால் நியமிக்கப்பட்ட ஒரு தொகை உறுப்பினர்களை கொண்டுள்ளது. 2015 ஆம் ஆண்டில் 12 ஆவது அமர்வானது பின்வருமாறு சுற்றாடல் பேரவையால் நடாத்தப்பட்டது.

### 1.5.4 12வது அமர்வு

கௌரவ சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி(2014) அமைச்சர் மற்றும் கௌரவ மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சர்(2015) ஆகியோரால் பின்வரும் உறுப்பினர்கள் சுற்றாடல் பேரவையின் 12ஆம் அமர்வுக்கு நியமிக்கப்பட்டனர்.

**சுற்றாடல் பேரவையின் உறுப்பினர்கள்**

அட்டவணை 1.1: சுற்றாடல் பேரவையின் உறுப்பினர்கள்

| | **உறுப்பினரின பெயர்** | **பிரதிநிதித்துவம் செய்யும் அமைச்சு** |
|---|---|---|
| 1 | திரு.டபிள்யூ.பீ.எம்.ஜீ.ஆர். சான்த குமார முகந்திரம்<br>(2015 முதல் இன்றுவரையில்)<br><br>திரு.பீ.எம். நாணயக்கார<br>(2015 ஏப்பிரல்- செப்டெம்பர்)<br><br>ஏஸ்.டி.ஏ.பீ பொறலஸ்ச<br>(2013 ஒக்டோபர் முதல்) | சிரேஸ்ட உதவிச் செயலாளர்(காணி)<br>காணி காணி அபிவிருத்தி அமைச்சு<br><br>பணிப்பாளர் (காணிக் கொள்கை)<br>காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு<br><br>மேலதிக. செயலாளர் (காணி)<br>காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு |
| 2 | திரு.எம்.ஏ.அல்ஹாம் | மேலதிக செயலாளர் (நிருவாகம்)<br>கைத்தொழில் வாணிப அமைச்சு |
| 3 | திரு.என்.பீ.வீ.சீ.பியதிலக<br>(2015 ஏப்பிரல் முதல்)<br>திரு.அசோக சிறிவர்தன<br>(2013 ஒக்டோபர் முதல்) | மேலதிக.செயலாளர் (நிருவாகம் மற்றும் நிதி)<br>கமத்தொழில் அமைச்சு<br>மேலதிக.செயலாளர் (நிருவாகம்)<br>கமத்தொழில் அமைச்சு |
| 4 | மிஸ். சுபத்ரா வல்பொல | சிரேஸ்ட உதவிச் செயலாளர் (உள்ளூராட்சி)<br>உள்ளூராட்சி அமைச்சு |
| 5 | திரு. ஜே.ஜீ.எல். சுலக்சன ஜயவர்தன | பிரதிப் பணிப்பாளர் (அபிவிருத்தி)<br>மின்வலு மற்றும் சக்தி அமைச்சு |
| 6 | திரு.எச்.எம்.கே.ஜே.பீ.குணரத்ன | பணிப்பாளர்,சமூக அபிவிருத்தி<br>கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சு |
| 7 | கலாநிதி.சரத் அமுனுகம | பிரதிப் பணிப்பாளர் நாயகம்(பொது சுகாதார சேவை)<br>சுகாதார அமைச்சு |
| 8 | திரு.மொண்டி ரணதுங்க | மேலதிகபணிப்பாளர் நாயகம்(கருத்திட்ட முகாமைத்துவம்)<br>இலங்கை மத்திய வங்கி |
| 9 | திரு. கே.எச்.முத்துகுட ஆராச்சி | பணிப்பாளர் நாயகம் |

| | உறுப்பினரின பெயர் | பிரதிநிதித்துவம் செய்யும் அமைச்சு |
|---|---|---|
| | | மத்திய சுற்றாடல் அதிகார சபை **(செயலாளர்)** |

## சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் பற்றிய வல்லுநர்கள்

அட்டவணை 1.2: சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் பற்றிய வல்லுநர்கள்

| | | |
|---|---|---|
| 1 | பேராசிரியர் டபிள்யூ.எம்.டி.பீ வண்னிநாயக்க | முன்னாள் பல்கலைக்கழக பேராசிரியர்<br>சிரேஸ்ட மறைன் உயிரியலாளர் |
| 2 | கலாநிதி(மிஸ்)நிர்மலி பெலவத்த | தலைவர், தாவரவியல் திணைக்களம், கொழும்பு பல்கலைக்கழகம் |
| 3 | கலாநிதி(மிஸ்) சுதீரா ரண்வல | சிரேஸ்ட விரிவுரையாளர், தாவர விஞ்ஞானம் திணைக்களம் கொழும்பு பல்கலைக்கழகம் |
| 4 | திரு.ஜகத் குணவர்தன | சட்டத்தரனி /சூழலியலாளர்<br>**தலைவர்/சுற்றாடல் பேரவை** |

## தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள்

அட்டவணை 1.3: தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள்

| | | |
|---|---|---|
| 1 | திரு.நிவ்டன் குணரத்ன | முன்னாள் தலைவர்,சுயாதீன தொலைகாட்சி |
| 2 | திரு. சேயமன் விதானகே | நிகழ்ச்சி திட்ட ஒருங்கிணைப்பாளர்<br>IUCN - இலங்கை அலுவலகம் |
| 3 | திரு.டக்லஸ் திசேரா | பணிப்பாளர், காடோலனா நிகழ்ச்சி திட்டம்<br>சிறிய கடற்றொழில் சம்மேளனம் |
| 4 | திரு. திலக் காரியவசம் | தலைவர்,சுற்றாடல் பாதுகாப்பு நிதியம் |

## இடம்பெற்ற கூட்டங்கள்

அட்டவணை 1.4: 2015 ஆம் ஆண்டில் இடம்பெற்ற பேரவை கூட்டங்கள்

**2015ஆம் ஆண்டில் ஒன்பது கூட்டங்கள் இடம்பெற்றன. விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.**

| கூட்ட இலக்கம் | மாதம் | திகதி |
|---|---|---|
| 14காம் **கூட்டம்** | சனவரி | 22 |
| 15ஆம் **கூட்டம்** | பெப்ரவரி | 26 |
| 16ஆம; **கூட்டம்** | மார்ச | 19 |

| கூட்ட இலக்கம் | மாதம் | திகதி |
|---|---|---|
| 17லாம்; **கூட்டம்** | ஏப்பிரல | 23 |
| 18டாம் **கூட்டம்** | மே | 21 |
| 19தாம் **கூட்டம்** | யூன் | 19 |
| **கூட்டங்கள் இடம்பெறவில்லை** | யூலை | |
| | ஆகஸ்ட் | |
| | செப்டெம்பர் | |
| 20வது **கூட்டம்** | ஒக்டோபர | 22 |
| 21ஆம் **கூட்டம்** | நவம்பர் | 19 |
| 22ஆம; **கூட்டம** | டிசம்பர | 17 |

**கூட்டங்களில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள்**

- வடக்கு அதிவேகப் பாதை
- யன் ஓயா காப்பபொதுக்க கருத்திட்டம்
- உமா ஓயா கருத்திட்ட நிர்மாணப்பணி இடம்பெறும் பகுதியில் பிரச்சினைகள்
- சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசம்
- குருவிட்ட பிரதேசசபை கழிவுக் குவியல்
- துறைமுக நகர அபிவிருத்தி கருத்திட்டம்
- இந்திய கோசர்(பறவையின்) இனவிருத்திப் பகுதியை சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசமாக பாதுகாத்தல்
- ‘‘கிறியம்மா உல்பத’’ பிரதேசத்தை சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசமாக பாதுகாத்தல்
- வேலலம்பிடிய கிட்டம்பஹுவ சட்ட விரோத நிலம் நிரப்பல்
- வட மேற்கு மாகாணத்தில் சுற்றாடல் பிரச்சினைகள்
- சுற்றாடல் செயல்நுனுக்கத் திட்ட பிரச்சினைகள்
- இலங்கையின் சதுப்பு நிலங்கள்
- மூலோபாய சுற்றாடல் தாக்க மதிப்பீடு
- மோரபிடிய அத்வெல்தொட நீர் வீழ்ச்சியில் தாபிக்கப்பட்டுள்ள சிறிய நீர் மின்சார உற்பத்திக் கருத்திட்டம்
- நவுல போபெல்ல பிரதேசத்தை சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசமாக பாதுகாத்தல்
- புவல்கா உருக்கு தொழிற்சாலையால் உருவாக்கப்பட்டுள்ள பிரச்சினைகள்
- சுற்றாடல் பசுமை விருதுகள் பற்றிய மதிப்பீடு
- தீங்கு விளைவிக்கும் கழிவுகள் களனி கங்கையில் அகற்றப்படுதல்
- கொக்கா கோலா பானங்களால் களனி கங்கை மாசடைதல்
- இலங்கைக்கு கெளுத்தி மீன் இறக்குமதி செய்தல்
- இலங்கையில் வரலாற்று சிறப்புமிக்க மரங்களை பாதுகாத்தல்
- துறைமுக நகர கருத்திட்டத்தின் தற்போதைய நிலைமை
- நிலாவெளி புல்மோடை பிரதேசத்தை வன சீவராசிகள் பாதுகாப்பு பிரதேசமாக பிரேரித்தல்
- வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசங்களின் பாதுகாப்பு பற்றிய

சிறார்களுக்கான சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டங்களை தயாரித்தல்

- சேதன பசளைகளுக்கு மானியங்கள் வழங்கள்
- வன ஆசிரம பிரதேசங்களை பாதுகாத்தல்
- அசுபஸ்டஸ் கூரைத் தட்டுகளின் பாவனையை தடைசெய்தல்

# 2.0. மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் கடமைகளும் பொறுப்புகளும்

ம.சு.அ அதன் குறிக்கோள்களை அடைவதற்கு; மத்திய சுற்றாடல் அதிகார சபையானது அதன் நிறுவன கட்டமைப்பை நான்கு தொழில்நுட்ப பிரிவுகளுக்கு மையப்படுத்தி ஒழுங்கமைத்த விதம் கீழே பட்டியலிடப்பட்டுள்ளது.

- சுற்றாடல் மாசுக் கட்டுப்பாடு (சு.மா.க)
- சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் மதீப்பீடு(சு.மு. மற்றும் ம)
- சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வு (சு.க.மற்றும் வி)
- மனிதவள அபிவிருத்தி, நிருவாகம் மற்றும் நீதி (மனிதவள மேம்பாடு, நிர்வாகம் மற்றும் நீதி)

இப்பிரிவுகளாவன சுற்றாடல் முகாமைத்துவ விடயத்தில் கனிசமான வருடங்கள் அனுபவத்தை கொண்டுள்ள கல்வித் தகுதியுடைய மற்றும் தொழிற்சார் ஆற்றல் வாய்ந்த பணியாட்களால் தலைமை வகிக்கப்படுகின்றன.

### சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டு பிரிவு

சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டு பிரிவின் கீழ் மூன்று பிரிவுகள் காணப்படுவதுடன் ஒவ்வொரு பிரிவுடன் தொடர்புடையவை பின்வருமாறு:

### சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டு பிரிவு

- முதலீட்டுச் சபையால் அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டங்களுக்கு இசைவான செயற்பாட்டை நடைமுறைபடுத்தல். (புதிய தளம் பற்றிய பரிந்துரைகள் மற்றம் சு.மா.உரிமங்களுக்காக)
- கருத்திட்ட அங்கீகரிப்பு செயற்பாட்டில் பங்கேற்றல்
- சுற்றாடல் மாசடைதல்/தொல்லை பற்றிய பொதுமக்கள் புகார்களை தீர்த்துவைத்தல்.
- சுற்றாடல் மாசடைதலை கட்டுப்படுத்துவதற்கான தொழில்நுட்ப அனுசரனை வழங்கள்.
- நீதிமன்றங்கள் மற்றும் மனித உரிமை ஆணைக்குழு முன்னால் நிபுணத்துவ சாட்சிகளாக ஆஜராதல் மற்றும் பாராளுமன்ற குழுக்கள், நீதிமன்றங்கள் மற்றும் மனித உரிமை ஆணைக்குழு ஆகியவற்றிற்கு தொழில்நுட்ப அறிக்கைகள் வழங்கல்.
- பயனுறுதிமிக்க மாசுக் கட்டுப்பாட்டு செயற்பாட்டிற்கான புதிய மூலோபாயம்/கருவிகள் ஆகியவற்றை அறிமுகம் செய்தல்.

### கழிவு முகாமைத்துவ பிரிவு

- தீங்கு விளைவிக்கும் கழிவு முகாமைத்துவம் பறிறிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் ஆகியவற்றை அறிமுகம் செய்தலும் நடைமுறைபடுத்தலும்.
- திண்மக் கழிவு முகாமைத்துவ கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கான தொழில்நுட்ப உதவியை வழங்கல்.
- கழிவு முகாமைத்துவம் (க.மு) பற்றிய முன்னோடி கருத்திட்டங்களை திட்டமிட்டு நடைமுறைப்படுத்தல்.
- இணக்கப்பாடு பற்றிய வழமையான கண்காணிப்பு
- கழிவு முகாமைத்துவம் பற்றிய தொழில்நுட்ப வழிகாட்டிகளை அபிவிருத்தி செய்தல்.
- பன்நாட்டு சுற்றாடல் உடன்படிக்கைகள் மற்றும் அவற்றின் கடப்பாடுகள் ஆகியவற்றை நடைமுறைபடுத்தல் (பேசல் உடன்படிக்கை மற்றும் றொட்டர்டாம் உடன்படிக்கை).

- கைத்தொழில் நெருக்கடி முகாமைத்துவம்
- கைத்தொழில சார்ந்த இரசாயனப் பொருள் முகாமைத்துவம்.
- கழிவு முகாமைத்துவ கருத்திட்டங்கள்/ செயற்பாடுகளுக்கு சுற்றாடல் அங்கீகாரத்தை வழங்குவதல் தொடர்பில் உதவியளித்தல்.
- சட்ட நடவடிக்கை தொடர்வதற்கு தொழில்நுட்ப உதவியளித்தல்
- திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பான முன்னோடி கருத்திட்டங்கள்
- பொதுமக்கள் புகார்களை கையாளல்.
- கழிவு முகாமைத்துவம் பற்றிய கல்வி மற்றும் விழிப்புணர்வு திட்டங்களை நடாத்துவதற்கு உதவியளித்தல்.
- கழிவு முகாமைத்துவத்துடன்தொடர்புடைய கருத்திட்டங்களை மேற்பார்வை செய்தல்.
- இணக்கப்பாட்டு கண்காணிப்பு
- ஏனைய நிறுவனங்களுக்கு கழிவு முகாமைத்துவத்துடன் தொடர்புடைய செயற்பாடுகள் பற்றிய தொழில்நுட்ப உள்ளீடுகளை வழங்கல்.

**வளித் தரம் மற்றும் ஆய்வுகூட சேவைகள் பிரிவு**

- ஏனைய பிரிவுகள்/ ம.சு.அ மாகாண அலுவலகங்கள் ஆகியவற்றுக்கு பகுப்பாய்வு சேவைகள் வழங்கல்.
- சுற்றாடல் தரங்கள் பற்றிய இணக்கப்பாட்டை கண்காணித்தல்
- தெரிவு செய்யப்பட்ட பகுதிகளில் சுற்றுசூழல்நீர் மற்றும் வளி மீதான கண்காணிப்பை மேற்கொள்ளல்
- வளி, இரைச்சல், அதிர்வு மற்றும் நீரின் தரம் ஆகியவை தொடர்பில் சுற்றாடல் துறை ஆராய்ச்சி மற்றும் ஆய்வுகள் ஆகியவற்றை மேற்கொள்ளல்.
- வளித் தரம், நீர்த் தரம் மற்றும் இரைச்சல் பற்றிய ஒழுங்குவிதிகளை விருத்திசெய்தல்.

**சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் மதிப்பீட்டு பிரிவு.**

சுற்றாடல் முகாமைத்துவ மதிப்பீட்டு பிரிவின் கீழ் மூன்று பிரிவுகள் காணப்படுகின்றன.

**சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு பிரிவு (சு.தா.ம)**

- ஆரம்பக்கட்ட சுற்றாடல் பரிசீலனை செயல்முறையை (ஆ.சு.ப.செ) நடைமுறைப்படுத்தல்
- சு.தா.மசெயற்பாட்டை நடைமுறைப்படுத்தல் மற்றும் இணக்கப்பாட்டை உறுதி செய்தல்
- சு.தா.ம /ஆ.சு.ப செயற்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறையாக்கல்.
- சு.தா.ம மற்றும் ஆ.சு.ம செயற்பாடுகள் பற்றிய வழிக்காட்டிகளை உருவாக்கல்.
- SEAசெயற்பாட்டை அறிமுகம் செய்து நடைமுறையாக்கல்.

**இயற்கை வள முகாமைத்துவ பிரிவு**

- சு.தா.ம /ஆ.சு.ப. சாரா கருத்திட்டங்களுக்கு சுற்றாடல் அனுமதி வழங்கல்.
- இணக்கப்பாட்டு கண்காணிப்பை மேற்கொள்ளல்.
- இயற்கை வளங்களின் தரவீழ்ச்சி பற்றிய பொதுமக்கள் புகார்களை விசாரணை செய்தல்.
- இயற்கை வளங்கள் பாதுகாத்தல் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடைமுறையாக்கல்.
- சுற்றாடல் பாதுகாப்பு பகுதிகளை பிரகடனப்படுத்தல்.
- கொள்கை அமுலாக்கம் தொடர்பான வழிகாட்டிகளை வழங்குதல்.

**ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவு**

- புவியியல் தகவல் முறைமை தள தகவல் தயாரிப்பு

- சுற்றாடல் உணர்வுள்ள பிரதேசங்களில் கருத்திட்டம் முகாமைத்துவத்தை நடைமுறையாக்கல்
- மாவட்ட பக்கவுருக்கள் மற்றும் படங்கள் தயாரித்தல்
- சுற்றாடல் ஆராய்ச்சிஒருங்கிணைவு மற்றும் முடீவுகளை பரப்புதல்

**சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வு பிரிவு.**

- இலக்குக் குழுக்கள் மத்தியில் சுற்றாடல் கல்வி மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் ஊடாகமக்களுக்கு சுற்றாடல் தகவல்களை வழங்குதல் மற்றும் குழுத் தொடர்பாடல் ஆகியவற்றின் ஊடாகநிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்
- தேசிய மற்றும் பிரதேச மட்டங்களில் பயிற்ச்சிப் பட்டறை மற்றும் கண்காட்சிகள் ஆகியவற்றை நடாத்துதல்.
- பொதுஅரசு-சாரா நிறுவனங்களுக்கு ஆதரவு வழங்களும் அவற்றில் இருந்து ஆதரவை பெற்றுக் கொள்வதும்
- சுற்றாடல் தினத்தை நினைவுகூறல்.
- இயற்கை தள நிலையங்களை தாபித்து நடைமுறைப்படுத்தல்.

**தேசிய சுற்றாடல் தகவல் நிலையம்**

- சுற்றாடல் தகவல்களை சேகரிப்பதும் அபிவிருத்தி செய்வதும்.
- நூலக வலையமைப்பையும் ஏனைய நூலகங்களையும் ஒருங்கிணைத்தல்.
- அனைத்து வகுப்புகளையும் சார்ந்த தகவல் பயனாளிகளுக்கு நூலக ஆவணங்கள் மற்றும் தகவல் சேவையை வழங்கல்.

**ஓலி ஒளிப் பிரிவு**

- ஒலி ஒளி உபகரண வசதிகளை நிகழ்ச்சி நிரல்களுக்கு வழங்கல்.
- ம.சு.அ மற்றும் சு.இ.வ.அ ஆகியவற்றின் விசேட விழாக்களுக்கு ஒளிபரப்பு வசதியை வழங்குதல்.
- கல்வி மற்றும் விழிப்புணர்வு நோக்கங்களுக்காக வீடியோ வசதியை வழங்குதல்.
- வீடியோ கிராபிக்ஸ் காட்சியமைப்பு வசதிகளை வழங்குதல்

**ம.வ.அ நிரிவாகம் மற்றும் நிதிப் பிரிவு**

மனிதவள அபிவிருத்தி, நிர்வாகம் மற்றும் நிதிப்பிரவு ஆகியன மனித வளங்கள் பிரிவு, நிரிவாகம் மற்றும் நிதிப்பரிவின் கீழ் செயற்படுகின்றன.

**மனித வயம் அபிவிருத்திப் பிரிவு**

- ஒட்டுமொத்த மனிதவள திட்டமிடல்
- தேர்வு, ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு.
- தூண்டல் பயிற்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள்
- தனிநபர் செயலாற்றுகை மதிப்பீட்டு முறைமை
- தெரிவு செய்யப்பட்ட ஊழியர்களுக்கு (உள்ளூர் மற்றும் சர்வதேசம்) பயிற்ச்சித் தேவைகளை இனங்கண்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்.
- ஊழியர்கள் குறைகளை கையாளல்
- ஒழுக்காற்று செயற்பாடுகள்
- மனித வளம் பற்றிய தரவுத்தளம்.

**நிருவாகப் பிரிவு**

- கொள்முதல், சுவீகரிப்பு மற்றும் மூலதனம்.
- சொத்துக்களின் பேணுகை
- சேவை உடன்படிக்கைகளை வழங்குவதும் புதுப்பித்தலும்
- காப்புறுதி வசதிகள் மற்றும் ஏற்பாட்டு ஆகியவற்றுக்கு ஆதரவு வழங்கல்
- கைத்தொழில் சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் நலவோன்புகை
- பொது நிருவாகம்.

### நிதிப் பிரிவு

- வருடாந்த வரவு செலவுத்திட்டம் தயாரித்தலும் நிதிக்கணக்குகள் சமர்ப்பித்தலும்.
- இருதியான முன்னேற்ற அறிக்கைகள் மற்றும் மாதாந்த வரவு செலவுத்திட்ட கட்டுப்பாட்டு அறிக்கைகள் தயாரித்தல்.
- சம்பளம் மற்றும் சம்பளத்துடன் தொடர்புடைய அறிக்கை மற்றும் கொடுப்பனவு தயாரித்தல்.
- கருத்திட்ட கணக்குகள் பேணுகை.
- பயனுறுதியான கொடுப்பணவுகள்.

### சட்டப்பிரிவு

- தற்போதைய சட்டத்திற்கு (தேசிய சுற்றாடல் சட்டம்) திருத்தங்கள் தயாரித்தல் மற்றும் புதிய சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகள் வரைவுசெய்தல்.
- தே.சு.ச ஏற்பாடுகளை செயற்படுத்தலும் ஒழுங்குவிதிகளை வர்த்தமானியில் பிரசுரித்தலும்.
- தே.சு.ச பிரிவுகள் 12 மற்றும் 24 பீ இன் கீழ் பணிப்புரைகள் விடுத்தல்.
- சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை இறத்துச் செய்தல், இடைநிறுத்தல் மற்றும் நிராகரித்தல்.
- குப்பை கூளம் பற்றிய 235 ஆம் பிரிவு அறிவித்தள்களை வெளியிடல்.
- சு.பா.உ நிபந்தனைகளை அங்கீகரித்தல் மற்றும் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கைகளை பரீசீலணை செய்தல்.
- ம.சு.அ பதிவு செய்த வழக்குகள், மற்றும் ம.சு.அ எதிரான வழக்குகள் ஆகியவை சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராதல்.
- விசாரணைகள் மற்றும் மேல் முறையீட்டு விசாரணைகள் தொடர்பில் அமைச்சுக்கு ஒத்துழைப்பு வழங்கல்.
- சட்ட நடவடிக்கை ஆரம்பிக்கும் முகமாக ஆவணங்கள் தயாரித்தல்.
- வளவாளர்களாக சுற்றாடல் சட்டம் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் நடாத்துவதும் விழிப்புணர்வு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்றலும்.
- சுற்றாடல் தொடர்பான சட்ட விடயங்கள் பற்றி ஏனைய பிரிவுகளுக்கும் நிறுவனங்களுக்கும் ஆலோசனை வழுங்கல்.
- உடன்படிக்கைகள் வரைவும் அங்கீகாரம் வழங்கலும்.
- புகார்களை கையாள்வது தொடர்பில் பொலிஸ் திணைக்களத்துடன் ஒத்துழைத்தல்.

### திட்டமிடல் முகாமைத்து பிரிவு

- தளநிலை தரவு சேகரிப்பு, தேவையான தரவுகளின் வகை மற்றும் மூலகங்கள், மற்றும் தரவு சேகரிப்பு முறை ஆகியவற்றை விவரித்தல் மற்றும் தரவு மூலகங்களுடன் இணைத்தலும்.
- ம.சு.அ கூட்டிணைந்த திட்டத்தை வடிவமைத்தல்.
- ஒவ்வொரு கருத்திட்டப் பகுதி, வெளித்தரப்பு நிதியிடல் கருத்திட்டங்கள் மற்றும் மத்திய தர வேலைத்திட்டம் சார்ந்த ஏனைய தலையூடுகள் ஆகியவற்றுக்கு செயற்பாட்டுத் திட்டங்களை தயாரித்தல் மற்றும் மத்திய சுற்றாடல் அமைச்சின் கூட்டினை மற்றும் வருடாந்த திட்டங்கள் தயாரித்தல்.
- கண்காணிப்பு திட்டங்களை விருத்தி செய்தல்.
- பிரிவுகளுக்கு இடையில் மற்றும் மத்திய பிராந்தியங்களுக்கு இடையில் ஒருங்கிணைப்பை உறுதி செய்தல்.
- மதிப்பீடுகளை ஏற்பாடு செய்தல்.
- பல்வேறு மேற்பார்வை அமைப்புகளுக்கு அதாவது சு.தே.வ.அ, ERD, and MPD போன்றவை, அறிக்கையிடுவதற்காக முன்னேற்ற அறிக்கைகள் தயாரித்தல்.
- ம.சு.அ இன் ஆண்டறிக்கை தயாரித்தல்.

- ம.சு.அ இன் செயற்பாடுகள் தொடர்பான முன்னேற்றம் குறித்து சர்வதேச நன்கொடையாளர்கள், தனியார்துறை அமைப்புகள் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட பங்குதாரர்கள் ஆகியோருக்கு அறிவித்தல்.

**புகார் பிரிவு**

- சுற்றாடல் தொடர்பான பிரச்சினைகள், சிக்கல்கள் மற்றும் அச்சுறுத்தல் மற்றும் சுற்றாடல் பாதிப்படைதல் பற்றிய புகார்களை பொதுமக்கள் நிறுவனங்கள் ஆகியவற்றிடமிருந்து பெற்றுக்கொள்ளல்.
- சிக்கல்களை சம்பந்தப்பட்ட அதிகாரசபைகளுக்கு ஆற்றுப்படுத்தி அவர்களுடன் ஒத்துழைத்தல்.

**உள்ளக கணக்காய்வு பிரிவு**

- கணக்கியல் மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகள் என்பவற்றை மீளாய்வு செய்யல்.
- நிதிசார் மற்றும் செயற்பாட்டு தகவல்களை பரீசீலணை செய்தல்.
- தாபனத்தின் நிதிசார் விடயங்கள் அல்லாத கட்டுப்பாட்டு உள்ளிட்ட பொருளாதாரம், வினைத்திறன், மற்றும் செயற்பாட்டின் பயனுறுதித் தன்மை ஆகியவற்றை மீளாய்வு செய்யல்.
- சட்டங்கள், ஒழுங்குவிதி மற்றும் ஏனைய வெளித்தரப்பு தேவைகளுடான முகாமைத்துவ கொள்கைகள், மற்றும் பணிப்புரைகள் மற்றும் ஏனைய உள்ளக தேவைகளுடன் செயற்பாட்டு இணக்கப்பாட்டை மீளாய்வு செய்தல்.
- முகாமைத்துவத்தால் வேண்டப்பட்ட ஏதும் விடயங்கள் பற்றிய தற்காலிக விசாரணைகளை மேற்கொள்ளல்.

**மாகாண அலுவலகங்கள்**

- ஓரிடத்திற்கு மட்டுப்பட்ட தாக்கங்களையுடைய அபிவிருத்தி கருத்திட்டங்களுக்கான ஆரம்ப சுற்றாடல் பரிசீலனை (ஆ.சு.ப).
- அமர்வு கைத்தொழில்களுக்கான சுற்றாடல் பரிந்துரைகள்.
- உள்ளூர் அதிகார சபைகளுக்கு ஒதுக்கப்பட்டவை தவிர்ந்த குறித்துரைத்த செயற்பாடுகளுக்கான சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்கள் தொடர்பான நடைமுறை.
- உள்ளூர் அதிகாரசபைகளுக்கு ஒதுக்கப்பட்ட பணிகளை ஒருங்கிணைத்து செயற்பாடுகளை கண்காணித்தலும் தேவையேற்படுமிடத்து தொழில்நுட்ப உதவியை வழங்கலும்.
- இயற்கை வள முகாமைத்துவத்திற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தல்.
- ம.சு.அ அங்கீகாரம் தேவைப்படும் ஆ.சு.ம/சு.தா.ம சாரா கருத்திட்டங்கள் (மாணிக்கல் அகழ்வு, காணி நிரப்பல், மரம் வெட்டல் போன்ற) பற்றிய விடயங்களை தீர்ப்பதற்கு உதவியளித்தல்.
- சுற்றாடல் பற்றிய விழிப்புணர்வு மற்றும் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- பிராந்திய கூட்டங்கள் மற்றும் விழாக்களில் ம.சு.அ சார்பில் பங்கேற்று பிரதிநிதித்துவம் வழங்கல்.
- அரசாங்க நிறுவனங்கள், தொண்டர் அமைப்புகள், கைத்தொழில் அதிபர்கள், வர்த்தக சமுதாயம், பாடசாலைகள், இளைஞர் அணிகள், அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்கள் ஆகிபோருடன்உப-தேசிய மட்டங்களில் ஒத்துழைத்தல்.

- மாகாண, பிரதேச மற்றும் கிராமிய மட்ட கருத்திட்டங்கள் மற்றும் பாடசாலை கருத்திட்டங்கள் ஆகியவற்றை நடைமுறை செய்தல், மீளாய்வு செய்தல் மற்றும் கண்காணித்தல்.
- விஷேடமாக குறிப்பிடப்பட்டுள்ள பிராந்திய தரவுத் தளத்தை அபிவிருத்தி செய்து இற்றைப்படுத்தி பேணுதல்.
- ம.சு.அ யின் 5 வருட வேலைத்திட்டத்திற்கு உட்பட்ட வகையில் வருடாந்த வேலைத்திட்டத்தை மாகாண அலுவலகங்கள் மற்றும் மாவட்ட அலுவலகங்களுக்கு விருத்தி செய்தல்.

**அதிகாரசபையின் செயலாற்றுகை**

2014 ஆம் ஆண்டில் இப்பிரிவுகள் ஒப்வொன்றினாலும் நிறைவேற்றப்பட்ட பணிகள் பின்வரும் பிரிவில் சுருக்கமாக தரப்பட்டுள்ளன.

# 3.0. சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டு பிரிவு

### 3.1 சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டு அலகு

சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டு பிரிவினது சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டு அலகின் (சு.மா.அ) பிரதான பொருப்பானது மாசடைதலை தடுப்பதும் கட்டுப்படுத்துவதும ஆகும். இந்த குறிக்கோளை எய்தும் வகையில், சு.மா.அ அதன் வழமையான செயற்பாடுகளையும் தொடர்கின்றதுடன் சில பிரதானமாக கைத்தொழில் நடவடிக்கைகளில் இருந்து ஏற்படும் சுற்றாடல் மாசடைதலை குறைத்து தடுத்துகட்டுப்படுத்துகின்ற புதிய முன்னெடுப்புக்களையும் மேற்கொள்கின்றது. நாட்டில் உள்ள கைத்தொழில்கள் மற்றும் நிறுவனங்களின் பசுமை தொடர்பான அனுகுமுறையை ஊக்குவிக்கும் முகமாக 2012 ஆரம்பிக்கப்பட்ட பிரதான செயற்பாடேதேசிய பசுமை விருதாகும். கைத்தொழில் வெளியேற்றம் மற்றும் வெளிவீச்சுக்கள் என்பவற்றை கட்டுப்படுத்துவதற்கு ம.சு.அ உபயோகிக்கும் பிரதான சட்டக் கருவியானது சுற்றாடல் பாதுகாப்பு உரிமத் (சு.பா.உ) திட்டமாகும்.

''பாரிய நீர் நிலைகளின் நீரின் தரத்தை கண்காணித்தல் மற்றும் ம.சு.அ ஆய்வுகூடம் மற்றும் நிறைவேற்று உத்தியோகத்தர்கள் ஆகியோரின் இயலுமையை கட்டியெழுப்பல்'' என்ற கருத்திட்டமானது ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால ' (ஜெய்கா) வழங்கப்பட்டதும் 2015 ஆம் ஆரம்பிக்கப்பட்டதுமான ஒரு தொழில்நுட்ட ஒத்துழைப்பு கருத்திட்டமாகும். இதில் சுற்றாடல் மாசு கட்டுப்பாட்டு பிரிவானது சுற்றாடல் உரிமங்கள் வழங்கும் திட்டத்தை பயனுறுதியான முறையில் நிறைவேற்றும் செயற்பாட்டுடன் சம்பந்தப்பட்ட 03 முக்கிய உந்துதல் விடயங்களில் முழுமையாக ஈடுபட்டுள்ளது.

இந்த பரிவின் செயற்பாடுகளானது இலகுவாக நடைமுறைப்படுத்தும் வகையில் 4 பிரதான விடயங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவ்விடய பரப்புக்களானது பின்வருமாறு,

1. ஒழுங்கமைப்பும் கண்காணிப்பும்.
2. கொள்கை விருத்தியாக்கம்.
3. தொழில்நுட்ப அனுசரணை
4. மாசுக் கட்டுப்பாட்டிற்கான விஷேட நிகழ்ச்சித்திட்டங்கள்.

### 3.1.1 ஒருங்கமைப்பு மற்றும் கண்காணிப்பு

#### 3.1.1.1சுற்றாடல் பாதுகாப்பு உரிமத் திட்டத்தை நடைமுறையாக்கல்

சு.மா.க பிரிவானது 2008.01.25 ஆம் திகதி வெளியிடப்பட்ட 1533/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் குறித்துரைக் - கப்பட்ட செயற்பாடுகளுக்காக சுற்றாடல்பாதுகாப்பு உரிமத் திட்டத்தை நடைமுறைபடுத்துகின்றது.

குறித்துரைக்கப்பட்ட அனைத்து செயற்பாடுகளும், அவற்றால் சுற்றாடல் எந்தளவிற்குக் மாசடைகின்றது என்பதற்கு இணங்க மூன்று வகையாக வர்த்தமானியில் பட்டியலிடப்பட்டுள்ளன. பட்டியலின் பகுதி ''அ'' 80, உயர் மாசுபடுத்தும் செயற்பாடுகளையும்,பகுதி ''பி'' 33 நடுத்தர மாசுபடுத்தும் செயற்பாடுகளையும் மற்றும் பகுதி ''சீ'' குறைந்த மாசுபடுத்தல் செயற்பாடுகளையும் கொண்டுள்ளன. ''ஏ'' மற்றும் ''பீ''வகையான கைத்தொழில்களுக்கான சு.பா.உ செயற்பாட்டு நடைமுறையாக்கம் ம.சு.அ மாகாண அலுவலகங்களால் நடாத்தப்படுகின்றதுடன் பட்டியல் ''சீ'' செயற்பாடுகளின் நடைமுறையாக்கல் தத்துவமானது உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கு (உ.அ) கொடுக்கப்பட்டுள்ளது.

#### 3.1.1.2 முதலீட்டுச் சபைக்கு (மு.ச) இணக்கப்பாட்டை வழங்கள்.

முதலீட்டுச் சபை சட்டத்தின் பிரிவு 17 இன் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள மற்றும் பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடுகளுக்கு சு.பா.உ வழங்குவதற்கான அதிகாரத்தை முதலீட்டுச் சபை கொண்டுள்ளது. சு.பா.உ வழங்குவதற்கு முன்னர் ம.சு.அ யிடமிருந்து இணக்கப்பாட்டை பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. எனவே, மு.ச ஆல் சு.பா.உ திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக முதலீட்டுச் சபை கைத்தொழில்களுக்கு இணக்கப்பாட்டை வழங்குவதில் முக்கியமான வகிபாகமொன்றை சுற்றாடல் மாசு கட்டுப்பாட்டு அலகு ஏற்கவேண்டியுள்ளது.

அட்டவணை 3.1: சுற்றாடல் கட்டுப்பாட்டு பிரிவால் சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்திற்காகவும், முதலீட்டுச் சபையில் பதிவுசெய்யப்பட்ட செயற்பாடுகளுக்கான புதிய தளங்களுக்கும் வழங்கப்பட்ட இணக்கப்பாடு.

| **வழங்கப்பட்ட இணக்கப்பாடுகள்** | **2015** |
|---|---|
| புதிய சு.பா.உ கள் | 59 |
| சு.பா.உ கள் புதுப்பித்தல் | 433 |
| புதய தள பரிந்துரைகள், ஏனைய கருத்திட்டங்கள் | 99 |
| கண்காணிப்பு கைத்தொழில்கள் | 142 |

**3.1.1.3புகார்கள், விசாரணைகள் மற்றும் கண்காணிப்பு**

பொது மக்களால் முன்வைக்கப்பட்ட புகார்கள் பற்றிய விசாரணை, கைத்தொழில் நடவடிக்கைகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மாசுக் கட்டுப்பாட்டு முறைமைகள் பற்றிய மதிப்பீடு (கழிவுநீர் பகுப்பாய்வு அறிக்கைகள், இரைச்சல் மற்றும் அதிர்வு அளவீடுகள் போன்றவைகளால்) என்பனவும் சு.மா.க பிரிவால் நிறைவேற்றப்படுகின்றன.

ம.சு.அ யின் புகார் பிரிவு, தலைவர் மற்றும் பணிப்பாளர் நாயகத்தால் நேரடியாக அனுப்பப்பட்டதும், முதலீட்டுச் சபையால் அங்கீகரிக்கப்பட்டதுமான கைத்தொழிற் நடவடிக்கைகள் மற்றும் ஏனைய புகார்கள் பற்றிய விசாரணைகளை ம.சு.அ தொடர்ந்தும் முன்னெடுத்தது.

அட்டவணை 3.2: சு.மா.க பிரிவால் கையாளப்பட்ட புகார்கள்

| **புகார்கள்** | **மு.சகைத்தொழில்கள்** | **மு.ச சாரா கைத்தொழில்கள்** |
|---|---|---|
| பெறப்பட்டவை | 59 | 02 |
| விசாரணை செய்து நடவடிக்கை எடுத்தவை | 58 | - |
| சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு ஆற்றுப்படுத்தப் பட்டவை | 01 | 02 |

**3.1.1.4 ஏற்றுமதி பதனிடல் வலயங்களுக்கான (ஏ.ப.வ) சுற்றாடல் பாதுகாப்பு உரிமம்.**

சு.தா.ம செயற்பாட்டின் கீழ் அங்கீகரிக்கப்பட்டதும் உயர் மாசடைத்தல் நடவடிக்கைகளைக் கொண்டதாக வர்த்தமானி அறிவித்தல் விடப்பட்டதும் முதலீட்டுச் சபையால் முகாமைத்துவம் செய்யப்பட்டு வருவதுமான 7 ஏற்றுமதி பதனிடல் வலயங்கள் காணப்படுகின்றன. எனவே, ஏ.ப.வ களில் இருந்து ஏற்படும் சுற்றாடல் மாசடைதலை கட்டுப்பாட்டிற்குள் வைக்க வேண்டிய பொறுப்பு மத்திய சுற்றாடல் அதிகாரசபையை சார்ந்தது. இந்த கைத்தொழில் வலையங்கள் சுற்றாடலுக்கு வெளியிடும் கழிவுகள் மற்றும் வீச்சுக்களை குறைக்கவும் கட்டுப்படுத்தவும் சு.பா.உ நடைமுறையை சு.மா.க பிரிவு முன்னெடுக்கின்றது. இந்த கைத்தொழில் வலயங்களில் மாசுக்கட்டுப்பாட்டு செயல்முறையை செயற்படுத்துவதற்கு முறையான கண்காணிப்பும் அவசியமாகின்றது.

சுற்றாடல் மாசு கட்டுப்பாட்டு பிரிவானது மல்வத்த, ஹொரன, வதுபிட்டிவல, மீரிகம, அவிஸ்சாவெல, பியகம, கட்டுநாயக்க, மற்றும் கொக்கல ஆகிய பகுதிகளில முதலீட்டுச் சபையின் ஏற்றுமதி பதனிடல் வலயங்களை பரீசீலணை செய்துள்ளதுடன் மல்வத்த, ஹொரன, மற்றும் வதுபிட்டிவல ஏற்றுமதி பதனிடல் வலயங்களுக்கு சுற்றாடல் நியமங்கள் மற்றும் தகவுத்திறன் ஆகியவற்றின் இணக்கப்பாட்டின் கீழ் 03 சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை வழங்கியுள்ளது.

### 3.1.1.5சுற்றாடல் பரிந்துறைகளை பெற்றுக்கொள்ளும் வகையில் சுற்றறிக்கையை வெளியிடல்

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் சுற்றாடல் பரிந்துறையை பெற்றுக் கொண்டு 2008.01.25 ஆம் திகதிய 1533/16 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஏ, பீ மற்றும் சீ வகைகளின் கீழ் குறித்துரைக்கப்பட்ட கைத்தொழில்களை ஆரம்பிக்க அல்லது புதிய/ தற்போதைய கைத்தொழில்களை/ நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் 2015.04.29 ஆம் திகதிய 1/2015 (சட்டம்) ஆம் இலக்க சுற்றறிக்கையானது வெளியிடப்பட்டது.

### 3.1.2 கொள்ளை வகுத்தல்

### 3.1.2.1 குறித்துரைக்கப்பட்ட செயற்பாட்டு பட்டியளில் திருத்தங்களை மேற்கொள்ளல்

2008.01.25 ஆம் திகதிய 1533/16 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட குறித்துரைக்கப்பட்ட செயற்பாட்டுப் பட்டியல் மீளாய்வு செய்யப்பட்டு திருத்தி அமைக்கப்பட்டது. இறுதியான வரைவானது அங்கீகாரத்தை பெற்று வர்த்தமானி செய்பாட்டை தொடரவதற்காக சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பிரேரிக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை கலந்துரையாடும் முகமாக சட்ட வரைஞர் திணைக்களித்தின் அதிகாரிகளுடன் 03 கூட்டங்கள் இடம்பெற்றன.

### 3.1.2.2கழிவு வெளியேற்றத் தரங்கள் பற்றிய ஒழுங்குவிதிக்கள் மீதான திருத்தம்.

மக்களின் பயன்தரும் பயன்பாட்டிற்கு நீர் நிலைகளின் தரத்தை பேணுதல் மிகவும் அவசியமாகின்றது. ஆனால், தொழிற்சாலை கழிவுகள் அகற்றப்படும் நடைமுறையானது நீர் வளங்களை சீர்குலைகும் அளவிற்கு அதிகரித்து வருவகின்றது.
கைத்தொழில் கழிவுகளை வெளியேற்றும் செயற்பாட்டின் மீதுசு.பா.உ ஊடாக மாசுக் கட்டுப்பாட்டு தரங்கள் மற்றும் வரையறைகள் விதிக்கப்பட்டு அகழ்வுச் செயற்பாடு ஒழுங்கமைக்கப்படுகின்றது.

2008.02.01 ஆம் திகதிய 1534/18 ஆம் இலக்க தற்போதைய ஒழுங்குவிதியானது நீர் மற்றும் நீர் சம்பந்தப்பட்ட துறையைச் சேர்ந்த நிபுணர்களை உள்ளடக்கிய அவையால் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டதன் பின்னர்அதன் இறுதியான வரைவு சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. முன்மொழியப்பட்ட நியமங்கள் தொடர்பான பிரச்சினைகளை கலந்துரையாடுவதற்காக சட்ட வரைஞர் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுடன் மூன்று கூட்டங்கள் இடம்பெற்றன.

### 3.1.3 தொழில்நுட்ப அனுசரணை

3.1.3.1 ‘‘ஏற்றுமதி பதனிடல் வலயங்களுக்கு வெளியே (EPZ’s) அதிக மற்றும் நடுத்தர அளவில் மாசுப்படுத்தும் கைத்தொழில்கள் மற்றும் கைத்தொழில் பேட்டைகள் தொடர்பான அமைவிடங்கள் பற்றி தீர்மானிக்கும் குழுவின்’’ கூட்டங்களை நடாத்தி புதிய கைத்தொழில்களின் அமைவிடங்களை தீர்மானிதிதல். (உணர்திறனுள்ள பிதேசங்களில் தாபிக்கப்பட்டவை)

இந்த குழுவானது ஏற்றுமதி பதனிடல் வலயங்களுக்கு வெளியே (EPZ’s)அதிகமற்றும்

நடுத்தர அளவில் மாசுபடுத்தும் கைத்தொழில்கள் மற்றும் கைத்தொழில் பேட்டைகளின் அமைவிடங்கள் பற்றி தீர்மானிப்பதற்கா வடிவமைக்கப்பட்டது. இக்குழுவானது சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டு பிரிவால்தாபிக்கப்பட்ட முக்கியமான தீர்மானம் மேற்கொள்ளும் குழுக்களில் ஒன்றாகும். இந்த குழுவானது முதலீட்டுச்சபை, தேசிய நீர்வழங்கள் வடிகாலமைப்புச் சபை, நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் ம.சு.அ ஆகியவற்றைச் சேர்ந்த உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. விஷேடமாக களனி ஆற்றில் சேரும் கைத்தொழில் கழிவுகளால் ஏற்படும் நீர் மாசடைதலை குறைப்பதே இக்குழுவின் பிரதான குறிக்கோளாகவுள்ளது. அதற்கு மேலதிகமாக உயர்ந்த அளவு கழிவு நீரை தோற்றுவிக்கும் களனி ஆற்று வடிநிலத்திற்கு வெளியில் உயர் மற்றும் நடுத்தர மாசுபடுத்தல் கைத்தொழில்களை அமைப்பது பற்றிய முன்மொழிவுகளை மதிப்பீடு செய்வதற்கான தொழில்நுட்ப வெளியீடுகளையும் இக்குழு வழங்குகின்றது. 2015 ஆம் ஆண்டில் 10 கூட்டங்கள் நடாத்தப்பட்டதுடன், 85 கருத்திட்டங்களும் மதீப்பீடு செய்யப்பட்டன. அவற்றுள் 37 கருத்திட்டங்கள் பரிந்துறைக்ப்பட்டதுடன் 20 கருத்திட்டங்கள் நிராகரிக்கப்பட்டன. 28 கருத்திட்டங்கள் மேலதிக விளக்கங்கள் கோரப்பட்டு ஒத்திவைக்கப்பட்டன.

### 3.1.3.2சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு செயற்பாட்டிற்கான தொழில்நுட்ப உதவி

சு.தா.ம மற்றும் ஆ.சு.மசெயற்பாட்டின் கீழ் முன்னெடுக்கப்படும் கருத்திடங்களின் மாசுக் கட்டுப்பாட்டு அம்சங்களை மதிப்பீடு செய்வதற்கான பொறுப்பானது ஒப்படைக்கப்பட்ட சு.மா.க பிரிவின் உத்தியோகத்தர்கள் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுக்களின் உறுப்பினர்களாக கடமையாற்றுகின்றனர். 2015 ஆம் ஆண்டிலமாசுக்கட்டுப்பாடு பற்றிய தொழில்நுட்ப நிபுணத்துவத்தை வழங்கும் முகமாக சு.மா.க பிரிவின் உத்தியோகத்தர்கள் 30 தொழில்நுட்ப குழுக்களில் பங்குபற்றினார்கள். அத்துடன்மூன்று (13) கூட்டு ஆள்வுகளும் மேற்கொள்ளப்பட்டன.

### 3.1.3.3 கைத்தொழில் நடவடிக்கைகளுக்கு தொழில்நுட்ப அனுசரனை வழங்கல்.

**(அ) சுற்றாடல் பகுப்பாய்வு ஆய்வு கூட்டங்கள் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டு ஆலோசனை சேவைகள் ஆகியவற்றின் வருடாந்த பதிவு.**

சுற்றாடல் ஆலோசகர்கள் மற்றும் மாசுக்கட்டுப்பாட்டு பகுப்பாய்வு ஆய்வுகூடங்கள் ஆகியவற்றை பதிவுசெய்வதற்காக சு.மா.க பிரிவால் ஆரம்பிக்கப்பட்ட மேற்படி வருடாந்த பதிவுத்திட்டமாதுகைத்தொழில் சமூகத்திற்கு அனுசரணை வழங்கும் விதமாக மாசுக் கட்டுப்பாட்டு பிரிவால் நிறைவேற்றப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் ஒன்றாகும்.நாடளாவிய ரீதியில் தொழிலதிபர்களுக்கு குறைந்த செலவில், உண்மையான சேவையை வழங்கி அவர்களை மாசுக்கட்டுப்பாடு மற்றும் இணக்கப்பாட்டு கண்காணிப்பு செயற்பாடுகளில் ஊக்குவிப்பதேஇந்த துணிகர முயற்சியின் பிரதான நோக்கமாகும். அதேவேளையில்,மேற்படி திட்டத்தின் ஊடாக ஆலோசகர்களுக்கும் ஆய்வுகூடங்களுக்கும் தமது குறைபாடுகளை சீர்செய்து அறிவை இற்றைப்படுத்திக் கொள்ளக் கூடியதாய இருக்கும் என்பதுடன் சாத்தியமான சிறந்த சேவையை போட்டித்தன்மையுடன் வழங்கவும் இயலுமாக இருக்கும்.

2015 ஆம் ஆண்டில் 32ஆய்வுகூடங்களும் 53ஆலோசகர்களும் பதிவுக்காக விண்ணப்பம் செய்திருந்தன/செய்திருந்தனர். பரிசீலனை மற்றும் மதிப்பீட்டின் பின்னர் 29 ஆய்வுகூடங்களும் 46 ஆலோசகர்களும் இனங்காணப்பட்ட ஆய்வுகூடங்களாகவும் ஆலோசகர்களாகவும் 2015 ஆம் ஆண்டின் பட்டியலுக்கு ம.சு.அ ஆல் பதிவுசெய்யப்பட்டது. அத்துடன் இப்பட்டியலானது ம.சு.அ இணயத்தளத்திற்கு பதிவிறக்கம் செய்யப்பட்டு

அச்சிடப்பட்ட பட்டியள்களும் வெளியிடப்பட்டன.

2016 ஆம் ஆண்டின் பதிவுகளுக்காக விண்ணப்பம் கோரும் 03 விளம்பரங்கள் ஆங்கிலம், சிங்களம், மற்றும் தமிழ் மொழிகளில் 2015 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டு பகுதியில் வெளியிடப்பட்டன.

**(ஆ) ம.சு.அ யால் பதிவு செய்யப்பட்ட ஆய்வுகூடங்களுக்கான தேர்ச்சிப் பரீட்சை நிகழ்ச்சித்திட்டம்.**

சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டு பிரிவானது மத்திய சுற்றாடல் அதிகார சபையில் 2011ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ஆய்வுகூடங்களுக்கு இலங்கை பரிசோதனை ஆய்வுகூடங்களுக்கான (SLATL) சங்கம் மற்றும் ம.சு.அ ஆய்வுகூடம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் தேர்ச்சிப் பரீட்சார்ந்த நிகழ்ச்சித் திட்டமொன்றை ஒழுங்கமைத்தது. இந்த நிகழ்ச்சித் திட்டமானது ம.சு.அ யால் பதிவுசெய்யப்பட்ட ஆய்வுகூடங்களின் செயலாற்றுகையை செல்லுபடியாக்கி நெறிப்படுத்தி கழிவு நீரின் பகுப்பாய்வுத் தரத்தை மேப்படுத்துவதுடன் அவற்றின் துல்லியமான சேவையை பெற்றுக்கொள்வதையும் பிரதான நோக்கமாகக் கொண்டு செயற்படுகின்றது. 2015ஆம் ஆண்டில் தனியார் மற்றம் அரச ஆய்வுகூடங்கள் உள்ளடங்களாக 14 ஆய்வுகூடங்கள் இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் பங்கேற்றன.

### 3.1.4மாசுக்கட்டுப்பாட்டு தொடர்பான விஷேட நிகழ்ச்சி நிரல்

#### 3.1.4.1இரசாயன விபத்து தடுப்பு மற்றும் தயார்நிலை நிகழ்ச்சித்திட்டம்.

சரியான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை உரிய வேளையில் தொடர்ச்சியான கண்காணிப்புடன் முன்னெடுக்கக்கூடுமாயின் அநேகமான இரசாயன அனர்த்தங்கள் அல்லது விபத்துக்களை தவிர்த்துக் கொள்ள முடியும். சுர்வதேச நியமங்களின் கீழ் இரசாயன விபத்து தடுப்பு மற்றும் தயார்நிலை (CAPP). என்று பெயரிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் ஒன்று ஐ.நா.சு.தி தால் முன்னெடுக்கப்பட்டது.

2015ஆம் ஆண்டில் பின்வரும் விழிப்புணர்வு கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

1. இரசாயணப்பொருள் கசிவுத் தடுப்பு மற்றும் பதிலிறுப்பு பற்றிய ‘‘இரண்டு நாள்’’ பயிற்சிப்பட்டறை. இந்த பயிற்சிப்பட்டறையானது சு.மா.க பிரிவால் கடற்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபையின் ஒத்துழைப்புடன் மத்திய சுற்றாடல் சபையின் கேட்போர் கூடத்தில் ம.சு.அ மற்றும் ஏனைய பங்காண்மை நிறுவகங்களைச் சேர்ந்த 50 உத்தியோகத்தர்களின் பங்கேற்றலுடன் 2015 மே 14 மற்றும் 15ஆம் திகதிகளில் நடாத்தப்பட்டது.
2. இரசாணப் பொருட்களை பாதுகாப்பாக கையாளல், களஞ்சியப்படுத்தல் மற்றும் வகைப்படுத்தல்,இரசாணப் பொருற்களுக்கு பெயரிடல், தீங்கு விளைவக்கும் இரசாணப் பொருற்களால் ஏற்படும் சுகாதாரக் கேடுகள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டமானது வரையறுக்ககப்பட்ட கோஸ்வே பெயிண்ட், பாணதுறை ஊழியர்களுக்கு இந்த கைத்தொழிலைச் சேர்ந்த நிறைவேற்று அதினாரிகள் உற்பட 50 உத்தியோகத்தர்களின் பங்கேற்றலுடன் 20015 ஆகஸ்ட் 6ஆம் திகதி நடாத்தப்பட்டது.
3. உலகளாவிய ஒத்திசைவான முறைமை (GHS) பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்தட்டம் பியகம, (MAS) மாஸ் இன்றகிரிட்டி நிறைவேற்று அதிகாரிகளுக்கு நடாத்தப்பட்டது.

#### 3.1.4.2 தேசிய பசுமை விருதுகள் திட்டம்.

மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் சுற்றாடல் பற்றிய கரிசனைகள் தொடர்பாக நடாத்தப்பட்ட ஒரேயொரு விருது வழங்கள் திட்டமே “தேசிய பசுமை விருதுகள்”

திட்டமாகும். சுற்றாடலுக்கு உகந்த முறையில் இயங்கும் அரச மற்றும் தனியார்துறை நிறுவனங்களை இனங்கண்டு வெளியிடுவதை நோக்கமாகக் கொண்டு இந்த நிகழ்ச்சித்திட்டம முன்னெடுக்கப்பட்டது. இந்த பசுமை விருது திட்டமானது இலங்கை சுற்றுச்சூழலில் மாசுக் கட்டுப்பாட்டையும் பசுமையாக்கத்தையும் ஏற்படுத்தும் சிறந்த நடைமுறைச் சாத்தியமான தெரிவுகளை பிரயோகிப்பதற்கான போட்டித் தன்மையுடன் கூடிய மன்றம் ஒன்றை வெவ்வேறு கைத்தொழில் துறைகளுக்கு இடையில் தோற்றுவிக்கின்றது.

கண்காணிப்பு சார்ந்த மாசுக் கட்டுப்பாட்டையும், தரங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் இசைவான சுற்றாடல் முகாமைத்துவ முறைமையையும் கைத்தொழிலதிபர்கள் மற்றும் சேவை வழங்குவோர் மத்தியில் ஊக்குவிப்பதன் ஊடாக அவற்றை மேம்படுத்தி சுற்றாடல் சிநேகபூர்வ செயற்பாடுகள் மூலம் தூய்மையானதும் பசுமையானதுமான சுற்றாடலை அடைவதற்கான நிலையான தன்மையை பேணுவதே இத்திட்டத்தின் இலக்காகும்.

“தேசிய பசுமை விருதுகள் 2015 ஆம் ஆண்டுக்கான விண்ணப்பங்கள்”10 பாரிய கைத்தொழில் துறைகள், உள்ளுராட்சி அதிகார சபைகளின் கழிவு முகாமைத்துவ கருத்திட்டங்கள், சிறிய நீர் மின்சார உற்பத்தி கருத்திட்டங்கள், பொலிஸ் சுற்றாடல் பிரிவுகள், நிர்மாணத்துறையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள்,பொது நிறுவனங்கள், தனியார் தொழில் முனைவோர் மற்றும் பாடசைலைகள் உட்பட 16 பிரிவுகளின் கீழ் கோரப்பட்டன. மொத்தமாக 470 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்று புகழ்பெற்ற நீதிபதிகள் குழாத்தின் மூலம் மதீப்பீடு செய்யப்பட்டன. தேவையேற்பட்ட பட்சத்தில் உண்மை நிலையை கண்டறிவதற்காக பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன. 470 விண்ணப்பங்களில் இருந்து 54 விண்ணப்பதாரிகள் விருது வழங்கும் விழாவில் விருது வழங்கி கௌரவிக்கப்படுவதற்கு தெரிவு செய்யப்பட்டனர்.

“தேசிய பசுமை விருதுகள் 2015” அதிமேதகு சனாதிபதி, கௌரவ சுற்றாடல் அமைச்சர் மற்றும் புகழ்பெற்ற அதிதிகள் ஆகியோரின் தலைமையில் 2015, ஒக்டோபர் 05 ஆம் திகதி பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் வெற்றிகரமாக நடைபெற்றது. கௌரவ சுற்றாடல அமைச்சர் மற்றும் ஏனைய புகழ்பெற்ற அதிதிகளும் பங்குபற்றினர். மொத்தமாக 600ற்கும் மேற்பட்ட அதிதிகள் இவ்வைபத்தில் பங்கேற்றனர்.இவ் வைபவத்தில், ஆறு(06) தங்க விருதுகள், 18 வெள்ளி விருதுகள்,13 வென்கல விருதுகள் மற்றும் 12 சிறப்பு விருதுகளும் மேற்படி வகைகளின் கீழ் அவற்றின் கைத்ொழில் செயலாற்றுகைக்காக வழங்கப்பட்டன.

அட்டவணை 3.3:தங்க விருது வெற்றியாளர்கள் பட்டியல்

| இல | துறைகள் | வெற்றியாளர் பெயர் | அமைவிடம் |
|---|---|---|---|
| 01 | ஆடை தொழிற்துறை | வரையறுக்கப்பட்ட மாஸ் எக்டிவ், தனியார்- கோண்டுவர் லைன் பிரிவு | மு.ச கைத்தொழில பேட்டை -பல்லகெலே |
| 02 | உணவு மற்றும் பாணங்கள் | கிருவனாகல தேயிலை தோட்டம் | மோறகல்,கிரிலிபான |
| 03 | ஹோட்டல்கள் | சினமன் சிடாடல் ஹோட்டல் | கண்டி |

| | | | |
|---|---|---|---|
| 04 | உள்ளூராட்சி அதிகாரசபை கழிவு முகாமைத்துவ கருத்திட்டம் | பலாங்கொடை நகர சபை | பலாங்கொடை |
| 05 | பாடசாலைகள் /1 ஏ.பி வகை | ரோயல் கல்லூரி | கொழும்பு 07 |
| 06 | பாடசாலைகள்/ 2&3 வகை | மே/ஹோ/ ஹன்டுபெல்பொல க.வி | ஹொறன |




தேசிய பசுமை விருதுகள் 2015 விழாவில் இல் பங்குபற்றிய அதி மேதகு சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களால் பாடசாலை மற்றம் கைத்தொழில் துறைகளுக்கு தங்க விருதுகள் வழங்கள்

**3.1.4.3களனி ஆற்றின் வழியில் அமைந்துள்ள கைத்தொழில்களை கண்காணித்தல்.**

களனி ஆற்றில் தற்செயலாக இடம்பெற்ற எண்ணெய் கசிவைத் தொடர்ந்து ஆற்று நீரின் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் களனி ஆற்றின் வழியில் அமைந்துள்ள கைத்தொழிற்சாலைகளின் சு.பா.உ இணக்கப்பாடு அற்றும் அவற்றின் ஏனைய சுற்றாடல் அம்சங்களையும் பரிசோதிப்பதற்காக சு.மா.க பிரிவானது கண்காணிப்பொன்றை ஆரம்பித்துள்ளது.

இது தொடர்பில் முதலீட்டுச் சபையின் 13 கைத்தொழிற்சாலைகள் மற்றும் இரண்டு கைத்தொழில் வலயங்கள் (பியகம மற்றும் அவிஸ்சாவெல்ல) கண்காணிக்கப்படடண.

**3.1.4.4 பயிற்ச்சிகள் /பயிற்ச்சிப்பட்டறை, கூட்டங்கள் மற்றும் முன்நிலைப்படுத்தல்கள்.**

இப்பிரிவின் பணிகள் மற்றும் பொறுப்புக்களை பயனுறுதியாக நடைமுறைபடுத்துவதற்கு அனுபவம், கண்டுபிடிப்புகள் மற்றும் அவசியமான அறிவு ஆகியவற்றை வெளிப்படுத்தும் பயிற்ச்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மிகவும் முக்கியமான அங்கங்களாக விளங்குகின்றது. அந்த வகையில் சு.மா.க பிரிவானது பின்வரும் பயிற்சிகள், பயிற்சிப்பட்டறைகள், கூட்டங்கள் மற்றும் முன்னிலைப்படுத்தல் ஆகியவற்றை நடாத்தியது.

- கைத்தொழில் சமூகம் மற்றும் பொதுமக்களுக்கு மாசுடன் சம்பந்கப்பட்ட விடயங்களில் 15 முன்னிலைப்படுத்தல்கள்/ விரிவுரைகள் 2015ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டன.
- சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டு பிரிவு மாசுக்கட்டுப்பாடு சம்பந்தப்பட்ட 35 கூட்டங்கள் மற்றும் 14 பயிற்சிப்பட்டறைகளில் பங்குபற்றியது.

### 3.1.5 முன்னேற்றத்தின் சுருக்கம்: 2015 -சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டு பிரிவு

அட்டவணை3.4: முன்னேற்றத்தின் சுருக்கம்: 2015 -சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டு பிரிவு

| செயற்பாடு | முன்னேற்றம் | | குறிப்புகள் |
|---|---|---|---|
| | பௌதீக | நிதிசார் | |
| **1.** சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் (சு.பா..உ) திட்டத்தை நிறைவேற்றல்-முதலீட்டுச்சபை | | 2015ஆம் ஆண்டில் சு.மா.க பிரிவுக்கான பாதீட்டு ஒதுக்கீடு ரூபா 750,000.000 ஆகும். இந்த ஒதுக்கீட்டில் இருந்து ரூபா707, 000.00 வை சு.மா.க பிரிவுஉபயோகித் தது. | |
| கைத்தொழிலுக்கான புதிய அமைவிடங்கள் பற்றிய பரிந்துரைகள் | 99 | | இயக்கச் செலவுகள் முதலீட்டுச் சபையால் பொறுப்பேற்கப் பட்டது |
| சு.பா..உ புதுப்பித்தலுக்கான இணக்கப்பாடு | 433 | | |
| புதிய சு.பா..உ களுக்கான இணக்கப்பாடு | 59 | | |
| கண்காணிப்பு | 142 | | |
| **2.** சுற்றாடல பாதுகாப்பு உரிமம் திட்டத்தை நிறைவேற்றல்- முதலீட்டுச்சபை சாரா | | | |
| | | | |
| **புகார்கள்**<br><br>முதலீட்டுச்சபை சாரா<br>பெற்றுக்கொள்ளப்பட்டவை<br>பரிசோதனை செய்யப்பட்டவை<br>ஆற்றுப்படுத்தப்பட்டவை<br><br>முதலீட்டுச் சபை<br>பெற்றுக்கொள்ளப்பட்டவை<br>பரிசோதனை செய்யப்பட்டவை<br>ஆற்றுப்படுத்தப்பட்டவை | <br><br><br>50<br>12<br>38<br><br><br>59<br>58<br>20 | | |
| **3. ஆலோசகர்கள் பட்டியல் மற்றும் ஆய்வுகூடங்களின் பட்டியல் ஆகியவற்றை ஆண்டுக்கு ஒருமுறை மீளாய்வுக்கு உட்படுத்தி இற்றைப்படுத்தல்** | | | |
| ஆய்வுகூட பதிவுகளுக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் | 32 | | |

| செயற்பாடு | முன்னேற்றம் | | குறிப்புகள் |
|---|---|---|---|
| ஆலோசகர்கள் பதிவுகளுக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் | 53 | | |
| தெரிவுசெய்யப்பட்ட ஆய்வுகூடங்கள் | 29 | | |
| தெரிவுசெய்யப்பட்ட ஆலோசகர்கள் | 46 | | |
| **4. H&M குழு** | | | |
| நடாத்தப்பட்ட கூட்டங்கள் | 10 | | |
| மதிப்பீட்டுக்கு உட்பட்ட கருத்திட்ட பிரேரணைகள் | 85 | | |
| **பரிந்துரைபக்கப்பட்டவை** | 37 | | |
| நிராகரிக்கப்பட்டவை | 20 | | |
| **5. தரமான சு.பா.உ இலக்கமிடும் முறைமையை கையாளல்** | | | |
| வழங்கப்பட்ட “ஏ” வகை-புதிய சு.பா.உ கள் | 1791 | | |
| வழங்கப்பட்ட“ஏ” வகை புதுப்பித்தல்கள் | 2531 | | |
| **6. பயிற்ச்சிகள் / பட்டறைகள்** | | | |
| சு.மா.க பிரிவால் நடாத்தப்பட்ட முன்நிலைப்படுத்தல்கள்/ விரிவுரைகள் | **15** | | |
| நடாத்தப்பட்ட பயிற்ச்சிப் பட்டறைகள் | 14 | | |
| சு.மா.க பிரிவு பங்குபற்றிய கூட்டங்கள் | 32 | | |
| **7.EIA TEC குழுக் கூட்டங்கள்** | 13 | | |
| **8. தேசிய பச்சையம் விருதுநிகழ்ச்சித்திட்டம்**<br>தங்க விருதுகள்<br>வெள்ளி விருதுகள்<br>வென்கல விருதுகள்<br>சிறப்பு விருதுகள் | <br>06<br>18<br>13<br>17 | | செலவினங்கள் திறைசேரி நிதியத்தால் பொறுப்பேற்கப்பட்டன. |
| **8. இரசாயணப் பொருள் விபத்தை தவிர்ப்பதும் தயார்நிலை நிகழ்ச்சித் -** | | | |

| செயற்பாடு | முன்னேற்றம் | | குறிப்புகள் |
|---|---|---|---|
| திட்டமும் | | | |

3.2. ஆய்வுகூட சேவைகள் பிரிவு

3.2.1வளி வளம் முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புப் பிரிவு

**சல்பர் டையொக்சைட் மற்றும ் நைட்ரஜன் டையொக்சைட் வளியின் மாசுக் கழிவுகள் ஆகியவறறை கண்டுபிடிப்பதற்காக கொழும்பு கோட்டை கண்காணிப்பு நிலையத்தில் சுற்றுச்சூழல் வளித்தர கண்காணிப்பானதுஈர இரசாயண முறையை பயன்னடுத்தி மேற்கொள்ளப்பட்டது.**

கொழும்பு மாநகரில் அதிகரித்துவரும் வாகன நெரிசல் காரணமாக ஏற்படும் வேறுபாடுகளின் போக்கை பகுப்பாய்வுக்கு உட்படுத்தி கண்காணிப்பதற்காகவும் கொழும்பு கோட்டையில் (10 மைக்ரோன் விட்டத்துக்கு குறைவான காற்றியக்க துணுக்குகள்)பி.எம்-10 கண்காணிக்கப்பட்டது.

மேற்படி கண்காணிப்புக்கு மேலதிகமாக, இது வரையில் வளித் தரத்தை முகாமைத்துவம் செய்த கருவியின் பொதுவான வெளிப்பாட்டுமட்டங்கள் மற்றும் பயனுறுதித் தன்மை ஆகியவற்றை உறுதிசெய்வதற்காக குறுகிய கால சுற்றுச்சூழல் வளித்தரக் கண்காணிப்பானது கண்டி, நுவரேலியா, பொலன்னறுவை, பதுளை, மாத்தலை மற்றம் நுகேகொடை ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டது.

**3.2.1.1 இலங்கையில் வளித்தரத்தின் தகுதிநிலை**

கொழும்பு கோட்டை கண்காணிப்பு நிலையத்தின் துணிக்கை தலைப் பதார்த்தத்தின் PM-10 வருடாந்த சராசரி வேறுபாடு கீழே காட்டப்பட்டுள்ளன. கொழும்பு கோட்டை கண்காணிப்பு நிலையத்தில் PM-10இன் வருடாந்த சராசரிச் செறிவானது ஆகக் கூடுதலாக அனுமதிக்கக்கூடிய அளவைவிட அதிகரித்த நிலையில் காணப்பட்டாலும் கடந்த 16 வருடங்களில் குறைந்துவரும் போக்கையே அது காட்டுகின்றது. ஆயினும் 2015ஆம் ஆண்டில் $PM_{10}$ இன் வருடாந்த சராசரிச் செறிவானது 2014ஆம் ஆண்டைவிட உயர்ந்த பெறுமதியுடன் காணப்படுகின்றதுடன் இந்நிலைமையானது பாதையில் அதிகரித்துவரும் வாகனங்களின் எண்ணிக்கையின் காரணமாக ஏற்பட்டிருக்கலாம்

**3.2.1.2 மாநகரங்களில் மாசு மட்டங்கள்**



உரு3.1: கொழும்பு கோட்டையில் $PM_{10}$இன் வருடாந்த சராசரி

பின்வரும்வரைபட தகவலானது 2015ஆம் ஆண்டில் இறுதியாக கண்காணிப்பு இடம்பெற்ற இடமானநுகேகொடையின் வளி மாசின் அடிப்படை மட்டங்களை காட்டுகின்றது.




உரு3.2:நுகேகொடை நகரின்24 மணித்தியாள சராசரி $PM_{10}$செறிவு

**PM10** –ஒரு மணித்தியாள சராசரிகள் தினமும் நடமாடும் நிலையங்களால் பதிவுசெய்யப்பட்டன. அவற்றின் சாராசரிகள் ஏழு நாட்களுக்கு 24 மணித்தியாள சராசரியின் அடிப்படையில் கணிப்பீடு செய்யப்பட்டன. 24 மணித்தியாள அடிப்படையில் PM10 ற்கு அனுமதிக்கக் கூடிய ஆகக்கூடிய பெறுமதியானது100µg/m3 ஆகும். தேசிய நியம பெறுமதியானது தாண்டவில்லை என்பதை இவ்வரைவானது காட்டுகின்றது.




உரு3.3: நுகேகொடை நகரில் 24 மணித்தியாள சராசரி $PM_{2.5}$செறிவு

**PM2.5** –ஒரு மணித்தியாள சராசரிகள் தினமும் நடமாடும் நிலையங்களால் பதிவுசெய்யப்பட்டன. அவற்றின் சாராசரிகள் ஏழு நாட்களுக்கு 24 மணித்தியாள சராசரியின் அடிப்படையில் கணிப்பீடு செய்யப்பட்டன. 24 மணித்தியாள அடிப்படையில் PM2.5ற்கு அனுமதிக்கக் கூடிய ஆகக்கூடிய

பெறுமதியானது 50µg/m3 ஆகும். தேசிய நியம பெறுமதியானது தாண்டவில்லை என்பதை இவ்வரைவானது காட்டுகின்றது.




உரு3.4:நுகேகொடை நகரில் 24 மணித்தியாள சராசரி $NO_2$செறிவு

**$NO_2$** – நடமாடும் நிலையம் மூலம் ஒரு மணித்தியாள சராசரிகள் ஏழு நாடகளுக்கு கணிக்கப்பட்டன. அவற்றின் சராசரிகள் ஏழு நாட்களுக்கு 24 மணித்தியாள சராசரியின் அடிப்படையில் கணிப்பிடப்பட்டன.மணித்தியாளஅடிப்படையில் $NO_2$விற்கான அனுமதிக்கக்கூடிய அதிகபட்ச பெறுமதியானது 0.05ppm ஆகும். தேசிய நியம பெறுமதியானது தாண்டவில்லை என்பதை உரு காட்டுகின்றது.




உரு3.5: நுகேகொடை நகரின் 08மணித்தியாள சராசரி CO செறிவு

**CO**–நடமாடும் நிலையத்தால் ஒரு மணித்தியால சராசரிகள் தினமும் பதியப்பட்டதுடன் அவற்றின் 8 **மணித்தியால சராசரிகள்** குறிப்பிட்ட தினத்தில் கணிக்கப்பட்டன. அதன் முடிவானது ஏழு நாள் காலத்தில் காணப்பட்ட அதிகூடிய

பெறுமதியைக் காட்டியது. தேசிய நியம பெறுமதியான 9ppm ஐ தாண்டவில்லை என்பதை உரு காட்டுகின்றது.




உரு3.6: நுகேகொடை நகரின் 24 மணித்தியாள $SO_2$சராசரி செறிவு

**$SO_2$–** நடமாடும் நிலையம் மூலம் ஒரு மணித்தியாள சராசரிகள் ஏழு நாடகளுக்கு கணிக்கப்பட்டதுடன் அவற்றின் சராசரிகள் 24 மணித்தியாள சராசரியின் அடிப்படையில் ஏழு நாட்களுக்கு கணிப்பிடப்பட்டன. 24 மணித்தியால அடிப்படையில் $SO_2$ விற்கான அனுமதிக்கக்கூடிய அதிகபட்ச பெறுமதியானது 0.03 ppm ஆகும். தேசிய நியம பெறுமதியானது தாண்டவில்லை என்பதை உரு காட்டுகின்றது.

## 3.2.1.3 எல்லைத் தாண்டிய வளிமாசடைதல் கண்காணிப்பு மாலே (மாலைத்தீவு) பிரகடணக் கருத்திட்டம்.

**3.2.1.3.1**மாலே (மாலைத்தீவு) பிரகடணக் கருத்திட்டம்.

வளி மாசடைதலை கட்டுப்படுத்தல் மற்றும் தவிர்த்தல் ஆகியவற்றின் மூலம் தென் ஆசியாவில் ஏற்படக்கூடிய அதன் சாத்தியமான எல்லை கடந்த விளைவுகள் பற்றிய மாலே(மாலைத்தீவு) பிரகடனத்தின்



செயற்பாடுகளை நடைமுறைபடுத்தும் தேசிய நடைமுறையாக்கல் முகவராக **மத்திய சுற்றாடல் அதிகாரசபை** செயற்படுகின்றது. வளிவள முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு பிரிவானது ஏனைய தென் ஆசிய நாடுகளுக்கு சமாந்திரமாக மாலே(மாலைத்தீவு) பிரகடனத்தின் கீழ் எல்லை-கடந்த வளி மாசடைதலை கண்காணிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தை நிறைவேற்றுகின்றது.

## 3.2.1.3.2 எல்லைத் தாண்டிய வளிமாசடைதல் செயற்பாட்டை கண்காணித்தல்

$PM_{10}$தொரமடல்லாவ அமைவிடத்தில் வாரரந்த அடிப்பய்யில் மேற்கொள்ளப்படுகின்றது.

தொரமடல்லாவ கண்காணிப்பு அமைவிடத்தில் தாபிக்கப்பட்டுள்ள உபகரணங்கள்




உரு 3.7: தொரமடலடலாவ அமைவிட PM-10 செறிவு

### 3.2.1.4சுற்றாடல் ஒலி மாசுக்கட்டுப்பாடு

ஒலி மாசானது இலங்கை சமூகத்தில் பாரிய சுற்றாடல் பிரச்சினையை தோற்றுவிக்கும் பொது தொல்லையாக தோற்றமடைந்துள்ளது. வளி வள முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு பிரிவானது சுற்றாடல் ஒலி மாசுக் கட்டுப்பாட்டை மேற்கொள்ளும் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளது. கைத்தொழில் நடவடிக்கைகள் மற்றும் சமூக செயற்பாடுகள் மூலம் ஏற்படும் ஒலி மாசடைதல் பற்றிய பல புகார்களை மத்திய சுற்றாடல் அதிகார சபை பெற்று வருகின்றது.

கைத்தொழில்களுக்கான சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தை வழங்கல் அல்லது புதுப்பித்தல் விடயம் தொடர்பாகவும் பொதுமக்கள் இடமிருந்து கிடைக்கும் புகார்களை மீளாய்வு செய்யும் வேலையிலும் ஆய்வுகூடமானது இணக்கப்பாட்டு கண்காணிப்புக்கான இரைச்சல் மட்ட அளவீடுகளை மேற்கொள்கின்றது. 2015ஆம் ஆண்டில் 200 ஒலி மட்ட அளவீடுகளை மேற்கொண்டுள்ளது.

இணக்கப்பாட்டு கண்காணிப்புக்கான இரைச்சல் மட்ட அளவீடுகளை ஆய்வுக்கூடம் மேற்கொள்கின்றதுடன் கைத்தொழில் இரைச்சல் அளவீடுகள் தேவைக்காக வாடிக்கையாளர்கள் இடமிருந்து கிடைக்கும் வேண்டுகோள்களை வர்த்தக அடிப்படையில் ஆய்வுக்கூடம் ஏற்கின்றது.



**அளவீடுகள் தொடர்ந்தும் களத்தில் இடம்பெற்று வருகின்றன.**

வாகன ஒலிப்பானில் இருந்து எழுப்பப்படும் ஒலியை கட்டுப்படுத்தும் முகமாக அனுமதிக்கக்கூடிய ஆகக்கூடிய ஒலிப்பான் ஒலியின் மட்டத்தை வரையறுத்து வர்த்தமானி ஒழுங்குவிதியொன்றை ம.சு.அ வெளியிட்டது. மேற்படி ஒழுங்குவிதியை நடைமுறைக்கு கொண்டுவரும் நோக்கில் வளி வள முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு பிரிவானது தொடர்ச்சியாக பல பங்குதாரர் கூட்டங்கள் மற்றும் பொலிஸ் திணைக்களத்தின் போக்குவரத்து பொலிஸ் பிரிவு மற்றும் சுற்றாடல் பொலிஸ் பிரிவு ஆகியவற்றுடன் இணைந்து சாலை விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களையும் நடாத்துகின்றது. 2015ஆம் ஆண்டில் கோட்டை, கண்டி, காலி, மற்றும் மாலபே ஆகிய பிரதேசங்களில் புதிய ஒழுங்குவிதி பற்றிய விழிப்புணர்வை பொதுமக்களுக்கு ஏற்படுத்தும் முகமாக வாகன ஒலிப்பான் ஒலி மதிப்பீட்டு கள அமர்வுகள் இடம்பெற்றுள்ளன.

### 3.2.2 நீரின் தரத்தை கண்காணிக்கும் பிரிவு

#### 3.2.2.1 கைத்தொழில் மாசுக் கண்காணிப்பு மற்றும் முகாமைத்துவம்

சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் என்பது தேசிய சுற்றாடல் அதிகாரசபை ஏற்பாடுகளின் கீழ் வரும் ஒழுங்கமைப்புக் கருவியாகும். சு.பா.உ அவசியப்படும் குறித்துரைக்கப்பட்ட செயற்பாடுகளானவை வர்த்ததமானியின் “ஏ”, “பி” மற்றும் “சீ” பகுதிகளின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ளன. இவை ம.சு.அ இடமிருந்து சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்-கொள்ளப்படுகின்றன. மத்திய சுற்றாடல் அதிகார சபையின் (ம.சு.அ) சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டு பிரிவின் (சு.மா.க) நீர் தரக்-கண்காணிப்பு ஆய்வுகூடத்திற்கு ஒட்டுமொத்த நிறுவனத்திற்குமான பகுப்பாய்வு சேவைகளை வழங்கும் பொறுப்பானது ஆரம்பம் முதலே ஒப்படைக்கப்பட்டுள்ளது. நாடு பூராகவும் கைத்தொழில் கழிவுகளின் தரத்தை கண்காணித்து கைத்தொழில் கழிவுகள் மற்றும் மேற்பரப்பு நீர் பற்றிய பகுப்பாய்வு அறிக்கைகைகள் சமர்பிப்பதன் மூலம் ஒட்டு மொத்த நாட்டினதும் நீர் நிலைகளை முகாமைத்துவம் செய்து பேணிவருவதே இதன் பிரதான பணியாகும்.

2015 ஆம் ஆண்டில், 1005 மாதிரிகளை சேகரிக்கவும் பகுப்பாய்வு செய்யவும் இவ்வாய்வு கூடத்திற்கு இயலுமாக இருந்தது. இந்த மாதிரிகளானவை சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் தொடர்பில் சேகரிக்கப்பட்ட கைத்தொழில் கழிவுகள், வர்த்தக அடிப்படையில் சேகர்க்கப்பட்ட கழிவுகள், வழமையான கண்காணிப்பு மற்றும் சட்டத் தேவைகளுக்காக சேகரிக்கப்பட்ட கழிவுகள, மற்றும் பல்வேறு நீர் நிலைகளிலிருந்து சேகர்க்கப்பட்ட மேற்பரப்பு மற்றும் நிலத்தடி நீர் மாதிரிகள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன.

இக்காலத்தில் ஒட்டு மொத்த நாட்டிலும் கைத் தொழிலசார் கழிவுகளை சேகரிக்கும் நோக்கில் கைத்தொழில் துறைகளின் மீதான பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. இந்த மாதிரிகள் பொதுவாக கீழே கொடுக்கப்பட்டுள்ள பல்வேறு தேவைகளுக்காக சேகரிக்கப்பட்டன.

அட்டவணை3.5:2015ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட கைத்தொழில் கழிவு மாதிரிகளின் எண்ணிக்கை

| மாதிரியின் நோக்கம் | மாதிரிகளின் எண்ணிக்கை |
|---|---|
| சு.பா.உ | 181 |
| சட்டம் | 51 |
| புகார்கள் | 123 |

| **மாதிரியின் நோக்கம்** | **மாதிரிகளின் எண்ணிக்கை** |
|---|---|
| கண்காணிப்பு | 128 |
| CTP | 33 |
| ஏனையவை | 1 |
| வர்த்தக கைத்தொழில் கழிவு | 117 |
| மொத்தம் | 634 |

ஓவ்வொரு மாதிரியும் குறைந்த பட்சம் 6-9 சாராமாறியின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டதுடன் பகுப்பாய்வு அறிக்கையும் வெளியிடப்பட்டது.

**மேற்பரப்பு நீரின் தரக்கண்காணிப்பு**

கைத்தொழில் நீர் தரக்கண்காணிப்பு மற்றும் களனி நதி, மாஓயா,பென்தொட,மற்றும் தடுகம் ஓயா ஆகியவற்றின் மேற்பரப்பு நீரின் தரக் கண்காணிப்பு ஆகியன மாதாந்தம் மேற்கொள்ளப்படுகின்றன.

அட்டவணை 3.6: நீர் நிலைகளின் மேற்பரப்பில் இருந்து சேகரிக்கப்பட்ட நீர் மாதிரிகள் எண்ணிக்கை

| நீர் நிலை மேற்பரப்பின் பெயர | மாதிரிகளின் எண்ணிக்கை |
|---|---|
| களனி கங்கை | 146 |
| மாஓயா | 74 |
| தடுகம்ஓயா | 70 |
| பென்தொட | 71 |
| வர்த்தகம் | 10 |
| மொத்தம் | **371** |

**களனி கங்கை மீதான கண்காணிப்பு**

உத்தேச பயன்பாட்டிற்கான நீரின் பொருத்தமுடைமை பற்றிய விழிப்புணர்வை பொது மக்களுக்கு ஏற்படுத்தவும் மாசு சாராமாறிகள் பற்றிய அவர்களின் அறிவை மேம்படுத்துவதும் அந்த பணியின் பிரதான நோக்கமாகும். (சாதாரண சுத்திகரிப்புடன் பருகுதல் மற்றும் கழுவுதல் போன்றவை) பொருத்தமுடைமை பற்றிய குறிப்பு பகுப்பாய்வு தரவுடன் ஒவ்வோரு மாதிரியிடல் அமைவிடங்களில் தாபிக்கப்பட்டுள்ள காட்சிப்பலகையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

2015ஆம் ஆண்டில் களனி கங்கை முடிவிடத்தின் ஏழு (7) அமைவிடங்கள், அதன் கிளை நதிகளின் (5) அமைவிடங்கள் மாதாந்த அடிப்படையில் 14 சாராமாறிகளின் அடிப்படையில் கண்கரிக்கப்பட்டன.




உரு3.8: படம் 1- களனி கங்கையின் மாதிரி அமைவிடங்கள்

பிரதான கங்கைகள் ஏழு அமைந்துள்ள இடங்களாவன சீதாவக தோணித்துறை, பூகொடைபாலம், தோணித்துறை,ஹங்வெல்ல பாலம், கடுவெல பாலம்,வெலிவிட பாலம்மற்றும் விக்டோரியாபாலம் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்ட சாராமாறிகள் pH, மின் கடத்தும் திறன்,கலங்கிய நிலை,வெப்பநிலை, கரைந்துள்ள ஒட்சிசன், இரசாயண ஒட்சிசன் கேள்வி, உயிர் இரசாயண ஒட்சிசன் கேள்வி,குளோரைட்,கரைந்துள்ள ஆகிவையாகும்.ஐந்து கிளை கங்கைகளாவன வக்ஓயா, பூகொட, புசெல்லி ஓயா, மாஹ எல்ல,மற்றும் ராகாவத்த கால்வாய் ஆகிவையாகும்.

குரோமியம்,கரைந்துள்ள ஈயம், நைதரேட் நைட்ரஜன், பொஸ்பேட்டாகவுள்ள பொஸ்பரஸ் ஆகிவையாகும். 12 தெரிவுசெய்யப்பட்ட அமைவிடங்களில் இருந்து பெற்ற மொத்த நுண்கிருமி மற்றும் கழிவுகள்.

அட்டவணை 3.7: களனி கங்கையின் மாதிரி இடங்கள்

| அகலாங்கு | நேட்டாங்கு | மாதிரி இடங்கள் | GEMS அடையாள இல |
|---|---|---|---|
| 6 57 14 | 80 13 12 | தல்துவ பாலம் | (076005) |
| 6 58 37 | 80 11 39 | சீதாவக தோணித்துறை | (076006) |
| 6 55 02 | 80 05 53 | வக்ஓயா(கிளை ஆறு) | (076011) |
| | | பூகோடை தோணித்துறை | (076009) |
| 6 56 38 | 80 08 18 | பூகோடை எல(கிளை ஆறு) | (076010) |
| 6 54 36 | 80 05 00 | ஹங்வெல்ல பாலம் | (076007) |
| 6 54 26 | 80 03 57 | புஸ்செல்லி ஓயா (கிளை ஆறு) | (076012) |
| 6 56 00 | 79 59 32 | மஹா ஓய (கிளை ஆறு) | (076013) |
| | | கடுவெல பாலம் | (076008) |
| 6 56 21 | 79 58 09 | ருகஹவத்த எல(கிளை | (076001) |

| அகலாங்கு | நேட்டாங்கு | மாதிரி இடங்கள் | GEMS அடையாள இல |
|---|---|---|---|
| | | ஆறு) | |
| 6 56 18 | 79 56 50 | வேலிவிட்ட பாலம் | (076003) |
| 6 57 37 | 79 52 40 | விக்டோரியா பாலம் | (076002) |

**களனி கங்கையின் நீர் தரம் பற்றிய மதிப்பீடு**




உரு3.9: களனி கங்கையில்pH வேறுபாடு

ஒவ்வொரு அமைவிடத்தின் pH இந்த ஆண்டில் குறிப்பிடத்தக்க வேறுபாட்டை காண்பிக்கவில்லை என்பதுடன் ம.சு.அ யின் உத்தேச சுற்றுச்சூழல் நீர் தரத்தின் மட்டத்தினுள் காணப்பட்டது.




உரு 3.10: களனி கங்கையில் EC வேறுபாடு

பெப்பவரி மாதம் முதல் மார்ச் மாதம் வரையில் விக்டோரியா பாலத்தில் உயர்ந்த அளவிலான மின் கடத்தும் திறன் அறிக்கையிடப்பட்டது. இந்த நிலைமை இந்த மாதத்தில் காண்பட்ட வறட்சியான கால நிலையால் ஊடுருவிய உப்புத்தன்மையால்

நிகழ்ந்திருக்கலாம். சில மாதங்களில் குறிப்பிடத்தக்க EC உயர்வானது கடுவெல மற்றும் சீதாவக மாதிரி எடுத்தல் அமைவிடங்களிலும் பதிவு செய்யப்பட்டன ஆயினும் பெப்ரவரி முதல் மார்ச் மற்றும் ஆகஸ்ட மாதங்களில் EC உயர்வானது உயர்ந்த அளவில் பதிவாகியது.இந்த நிலைமை ஏற்படுவதற்கு இரண்டு சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன. ஒன்றில் சீதாவக கைத்தொழில் பேட்டையில் இருந்து வெளியேற்றப்படும் கைத்தொழில் கழிவு நீரின் காரணமாக ஏற்பட்டிருக்கலாம் அல்லது மாணிக்கக்கல் அகழ்வுச் செயற்பாடுகள் ஆற்றுப்படுகையை தாழ்த்தி மின் கடத்தும் திறனுக்கு அனுசரணையாக அமைவதன் காரணமாக ஏற்பட்டு இருக்கலாம்.




உரு 3.11: களனி கங்கையின் கலங்கள் தன்மையின் வேறுபாடு

2015 ஆம் ஆண்டில் வேறுபட்ட வானிலை மாற்றங்கள் ஏற்பட்டதன் விளைவாக குறிப்பிடத்தக்க கலங்கள் தன்மையொன்று அவதானிக்கப்பட்டுள்ளது. ம.சு.அ யின் கலங்கள் தன்மை பற்றிய உத்தேச சுற்றுச்சூழல் நீர் தர நியமங்களை விட உயர்ந்த பெறுமானங்கள் அனைத்து மாதிரி சேகரிப்பு அமைவிடங்களிலும் வருடம் முழுவதும் பதிவாகின. இந்த நிலைமையானது மண் அரிப்பு,ஆற்றுப்பிரதேசத்தின் தாவரங்கள் அழிக்கப்படல், மற்றும் பல்வேறு வகையான ஆற்றுப்படுகை அபிவிருத்தி மற்றும் களனி ஆற்றுப்படுகையில் மண் அகழ்வு ஆகிய காரணங்களால் ஏற்பட்டிருக்கலாம். மேலும், அவதானிக்கப்பட்ட பல இடங்களில் காணப்பட்ட கலங்கள் தன்மையின் தழும்பல் நிலைக்கு வறட்சியான காலத்தின் பின்னர் ஏற்பட்ட சடுதியான மழையும் பங்களிப்பு செய்திருக்கலாம்.




உரு 3.12: களனி கங்கையில் கரைந்திருந்த ஒட்சிசன் வேறுபாடு

குறிப்பிடத்தக்க கைத்தொழில் மாசு காணப்பட்ட ரக்காவத்த கால்வாய்,மாஹ எல மற்றும் சீதாவக போன்ற பகுதிகளில் கரைந்திருந்த ஒட்சிசன் தாழ்ந்த பெறுமதிகள் பதிவாகின.

### 3.2.2.2 நீர் தர கண்காணிப்பு பிரிவால் மேற்கொள்ளப்படும் ஏனைய செயற்பாடுகள்

**விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தில் பங்கேற்றல்**

2015 ஆம் ஆண்டில்,நீர் மாசடைதல் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட துறைகளில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக நடாத்தப்பட்ட விழிப்புணர்வு திட்டங்களில் பல்வேறு தரப்பைச் சேர்ந்த பொது மக்களை ஈடுபடுத்த ஆய்வுகூட பணியாளர்களால் முடிந்தது. கங்கை தூய்மைபடுத்தல் என்ற ‘பவித்ரா கங்கா”நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மூன்று விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் பாடசாலை பிள்ளைகள் மற்றும் அவர்களின் பெற்றோர்களுக்கு சுற்றாடல் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சால் நடாத்தப்பட்டது.இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் ஆய்வுகூடத்தின்பணியாட்கள்நீரின் தரத்தைபரிசோதனை செய்தல் மற்றும் முன்னிலைப்படுத்தல்ஆகியசெயற்பாடுகளில் ஈடுபட்டதன் மூலம் முனைப்புடன் செயலாற்றும் வாய்ப்புஅவர்களுக்கு கிட்டியது.

**ஏனைய செயற்பாடுகள்**

இந்த வருடத்தில் அதிவேகப் பாதை கருத்திட்டம்,திண்மக் கழிவு கருத்திட்டம், கைத்தொழில் துறை தரிப்பிடம் தாபித்தல் கருத்திட்டம் மற்றும் நோக்கெல்லை கூட்டங்கள் ஆகியவை பற்றிய சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு பரிசோதனைகளகளில் பங்கேற்கும் வாய்ப்பு ஆய்வுகூடத்திற்கு கிட்டியுள்ளது. அத்துடன் ஆய்வுகூடங்களை பதிவு செய்வதற்கான நீதிமன்ற வழக்குகள் மற்றும் சுற்றாடல் மாசு கட்டுப்பாடு பிரிவால் பதிவு செய்யப்பட்ட ஆய்வுகூடங்களுக்கு நடாத்தப்படும் ஆலோசனை சேவைகள் ஆகியவற்றிலும் ஆய்வுகூடம் பங்கேற்கலாம்.

### 3.3கழிவுமுகாமைத்துவ பிரிவு

**மத்திய சுற்றாடல் அதிகார சபையினது (ம.சு.அ) சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டு பிரிவின் (சு.மா.க) கழிவு முகாமைத்துவ (க.மு.பி) பிரிவுக்கு பின்வரும் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளது**

(அ) அபாயகர கழிவு முகாமைத்துவத்துடன் தொடர்புபட்ட ஒழுங்கு விதிகளை நடைமுறைப்படுத்தல்.
(ஆ) சர்வதேச உடன்படிக்கைகளுக்கு இணங்க செயற்படல்.
(இ) 2012 ஆம் ஆண்டின் செயற்திட்டத்தில் இணங்காணப்பட்ட அபாயகர கழிவு மற்றும் திண்மக்கழிவு முகாமைத்துவத்துடன் தொடர்புடைய அவசியமான கருத்திட்டங்கள்/ நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகியவற்றை நடைமுறைப்படுத்தல்.

### 3.3.1இலங்கையில் அபாயகர கழிவு முகாமைத்துவ ஒழுங்குவிதிகளை நடைமுறைப்படுத்தல்.

அபாயகர கழிவு முகாமைத்துவ ஒழுங்குவிதிகளை (2008.02.01 ஆம் திகதி 1534/18 இலக்க அதிவிஷேட வர்தமானி அறிவித்தலின் மூலம் 2008 ஆம் ஆண்டின் இலக்கம 01) நடைமுறைப்படுத்துவதில் ஒரு பகுதியாக 2012 ஆம் ஆண்டில் 61 உரிமங்கள் வழங்கப்பட்டன. மேலும் பிராந்திய அமைப்புக்கு தொழில்நுட்ப உதவியளிக்கும் முகமாக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சபரகமுவ மாகாண மற்றும் வட மேற்கு மாகாண அலுவலகங்களின் உத்தியோகத்தர்களுக்கு உயர்மருத்துவ கழிவு முகாமைத்துவம் பற்றிய இரண்டு தொழில்நுட்ப பயிற்ச்சிப்பட்டறைகள் ஒழுங்கு செய்யப்பட்டன.

### 3.3.2 பேசல் உடன்படிக்கையை நடைமுறைப்படுத்தல்.

### 3.3.2.1 கைத்தொழில்களுக்காக பேசல் உடன்படிக்கையின் ‘B’ பட்டியலில் பட்டியலிடப்பட்ட கழிவுப்பொருட்களை இறக்குமதி செய்தல்.

இலங்கை 1992.08.28 ஆம் திகதி எல்லைக்கடந்த அபாயகர கழிவு நகர்வு பற்றிய பேசல் உடன்படிக்கைக்கும் (பே.உ) அவற்றை அகற்றுவதற்கும் ஒப்புதலை அளித்துள்ளது. அதனைத் தொடர்ந்து பேசல் உடன்படிக்கைக்கான தகுதிவாய்ந்த அதிகார சபையாக மத்திய சுற்றாடல் அதிகார சபையானது நியமிக்கப்பட்டது. சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சின் கீழ்செயற்படும் பேசல் உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதற்கான தேசிய ஒருங்கிணைப்புக் குழுவானது(தே.ஒ.கு) நாட்டில் அபாயகர கழிவு முகாமைத்துவத்தின் தொழில்நுட்ப அம்சங்களுடன் தொடர்புடைய விடயங்கள் பற்றிய திடமான தீர்மானம் மேற்கொள்வதில் மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு உதவியளிப்பதற்காக தொழில் நுட்ப நிபுணத்துவ குழுவை நியமித்துள்ளது. ம.சு.அ யால் தலைமைவகிக்கப்படும் தொழில்நுட்ப குழுவானது பேசல் பட்டியல் ‘பீ’ யில் பட்டியலிடப்பட்டுள்ள கழிவுப்பொருட்களை மூலப் பொருட்களாக இறக்குமதி செய்வதற்கான பரிந்துரைகளையும் சமர்ப்பிக்கின்றது. (பேசல் உடன்படிக்கையின் பட்டியல் ‘ஏ’யில் பட்டியலிடப்பட்டுள்ள கழிவுப் பொருட்களின் இறக்குமதியானது அமைச்சரவையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மாணத்தின் அடிப்படையில் தடைசெய்யப்பட்டு உள்ளது)

அபாயகர இரசாயணப்பபொருட்கள் மற்றும் அபாயகர கழிவுப் பொருட்களையும் நாட்டிற்குள் இறக்குமதி செய்தல் தொடர்பான ஒழுங்குவிதியானதுஇறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரகாரம் 2013 யூன்

05ஆம் திகதிய 1813/14 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. இந்த ஒழுங்குவிதிகளை நடைமுறையாக்கம் செய்யும் செயற்பாட்டின் ஒரு பகுதியாக 2015ஆம் ஆண்டில் 285 ஒப்புதல்கள் வழங்கப்பட்டன.

#### 3.3.2.2 ஆபாயகர கழிவுகளின் எல்லை கடந்த நகர்வு

ம.சு.அ யானது பேசல் உடன்படிக்கையை இலங்கையில் நடைமுறைப்படுத்தும் தகுதிவாய்ந்த அதிகாரசபை என்ற வகையில், 2012 ஆம் ஆண்டில் 06 வழியிடைப்பயணத்திற்கும், பேசல் உடன்படிக்கை பட்டியல் 'ஏ' யில் பட்டியலிடப்பட்ட 07 கழிவுப் பொருட்களின் ஏற்றுமதிக்கும் (எல்லைக்கடந்த நகர்வு) அங்கீகாரம் வழங்கியுள்ளது. மேலும், பேசல் உடன்படிக்கை பட்டியல் 'பீ' யில் பட்டியலிடப்பட்டுள்ள கழிவுப் பொருட்கள் இறக்குமதி 01ற்கும் அங்கீகாரம் அளித்துள்ளது.

### 3.3.3.இரசாயனப் பொருள் முகாமைத்துவம்

**தேசிய இரசாயணப்பொருள் பக்கவுரு இற்றைப்படுத்தப்பட்டதுடன் கைத்தொழில் இரசாயணப்பொருட்கள் முகாமைத்துவத்திற்கான செயற் திட்டமும் தயாரிக்கப்பட்டன.**

இரசாயணப் பொருட்களின் முகாமைத்துவத்தை நடைமுறையாக்கம் செய்யும் செயற்பாட்டின் ஒரு பகுதியாக இரசாயணப்பொருட்களை கழஞ்சியப்படுத்தும் வகையில் 23 பரிந்துரைகள் வழங்கப்பட்டதுடன் சில குறிப்பிட்ட இரசாயணப்பொருட்கள் இறக்குமதிக்கும் 145 ஒப்புதல்கள் வழங்கப்பட்டன.

### 3.3.4 அசுபஸ்டஸ் முகாமைத்துவம்

அசுபஸ்டஸ் கல்நார் இறக்குமதி முகாமைத்துவம் தொடர்பில் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் மற்றும் அசுபஸ்டஸ் கல்நார் சார்ந்த உற்பத்திகளின் பாவணை ஆகியவை தொடர்பில் அனைத்து பங்குதாரர்களுடனும் சம்பந்தப்பட்ட கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. இது தொடர்பில் செயற்பாட்டுத் திட்டம் ஒன்றும் வரைவுசெய்து தயாரிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரம் சுற்றாடல் அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

### 3.3.5.இல்திரணியல் கழிவு முகாமைத்துவம்

#### 3.3.5.1 இலத்திரணியல் கழிவுவை கைவிடல் நிகழ்வுகள்

மத்திய சுற்றாடல் அதிகாரசபை மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (ஐ.நா.அ.நி) ஆகியவை இணைந்து ''பவித்தர கங்கா--ஒவ்வொரு துளியும் முக்கியத்துவம் வாய்ந்தது'' என்ற தொனிப்பொருளின் கீழ் இலத்திரணியல் கழிவு கைவிடல் நிகழ்வுகளை ஒழுங்கமைத்தன.

கடுவெல மாநகர சபை, வத்தலை நகர சபை,சீதாவக பிரதேச சபை மற்றும் களனி பிரதேச சபை ஆகிய பிரதேசங்களில் நான்கு கைவிடல் நிகழ்வுகளை ஒழுங்கமைக்கப்பட்டு இருந்தன. இந்த அமைவிடங்கள் இலத்திரணியல் கழிவுகளை தோற்றுவிக்கும் பிரதான மையங்களாக இனங்காணப்பட்டு இருந்தன. இந்த நான்கு கைவிடல் நிகழ்வுகள் நவம்பர் 6ஆம் திகதி முதல் 13ஆம் திகதி வரையில் இடம்பெற்றன.

இந்த நான்கு கைவிடல் நிகழ்வுகள் மூலம் 6.8 மெட்ரிக் தொன் இலத்திரணியல் கழிவுகள் சேகரிக்கப்பட்டு இருந்ததுடன் அவை உரிமம் பெற்றிருந்த சேகரிப்பாளர்கள் ஊடாக திட்டமிட்ட கழிவு முகாமைத்துவத்திற்காக அகற்றப்பட்டது (இலத்திரனியல் கழிவு முகாமைத்துவம்)







**இலத்திரணியல் கழிவுவை கைவிடல் நிகழ்வுகள்**

### 3.3.5.2விழிப்புணர்வு பொருட்களை தயாரித்தல்

கனமான உலோக மாசுபடுத்திகள், தீங்கு விளைவிக்கும் வீட்டுக் கழிவுகள் ஆகியவை பற்றிய சிற்றேடுகள் ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழிகளில் 10,000 பிரதிகள் விழிப்பூட்டும் சாதணங்களாக தயாரிக்கப்பட்டன.

### 3.3.6 மெல்லிய பொலிதீன் ஒழுங்குவிதியை நடைமுறைப்படுத்தல்

20 மைக்ரோன் தடிப்புள்ள அல்லது அதற்கு குறைவான எவ்விதமான பொலிதீன் மற்றும் பொலிதீன் சார்ந்த உற்பத்திவகைகளின் வர்த்தகம், மற்றும் பாவணையானதுகௌரவ சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சரால் தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் 2006ஆம் ஆண்டின் ஒக்டோபர் 10ஆம் திகதிய ஆம் 1466/5 இலக்க அதிவிசேட வர்த்தமானி வெளியீட்டின் மூலம் தடைசெய்யப்பட்டுள்ளன.

# 4.0.சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் மதீப்பீட்டு பிரிவு

## 4.1 சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு (சு.தா.ம)

**குறித்துரைக்கப்பட்ட கருத்திட்டங்களுக்காக சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு (சு.தா.ம) செயற்பாட்டை நடைமுறைப்படுத்தல்**

சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுப் பிரிவானது கருத்திட்டங்களால் தோற்றுவிக்கப்படும் பாதகமான சுற்றாடல் தாக்கங்களை தணிக்கும் முகமாக சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு செயற்பாட்டை நிர்வாகம் செய்யும் அதனது பாரிய ஒழுங்கமைப்புப் பணியைஅனைத்து குறித்துரைக்கப்பட்ட கருத்திட்டங்கள் தொடர்பிலும் தொடர்ச்சியாக முன்னெடுத்தது. இந்த செயற்பாடானது எதிர்கால பயன் மற்றும் தொழில்நுட்பம் பற்றிய மதிப்பீட்டு கூட்டங்களைகூட்டுதல், சு.தா.ம அறிக்கைகள் பற்றிய ஆய்வெல்லை (ToR) வரைவு, சு.தா.ம அறிக்கைகளை மதீப்பீடு செய்தல், மற்றும் பொதுமக்கள் பங்கேற்கும் செயற்பாட்டிற்கு அனுசரணை வழங்குதல் மற்றும் அதனைத் தொடர்ந்து ஒப்புதலளித்தல் மற்றும் கருத்திட்ட கண்காணித்தல் ஆகிய செயற்பாடுகளை உள்ளடக்குகின்றது.

2015ஆம் ஆண்டில், தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரிவு IV சீ யின் கீழ் ஒப்புதல் அவசியமானமொத்த கருத்திட்டங்கள் 79 சு.தா.மஓழுங்குவிதிகளின் பிரகாரம் வகைப்படுத்தப்பட்டன. அதனைத்தொடர்ந்து 13 கருத்திட்டங்களுக்குசுற்றாடல் தாக்கமதிப்பீட்டுப் பிரிவால் ஒப்புதல் அளிக்கப்பட்டதுடன் 02 கருத்திட்டங்களுக்கு ஒப்புதல் நிராகரிக்கப்பட்டது. 64 கருத்திட்டங்களுக்கான ஒப்புதல்கள் நிலுவையில் வைக்கப்பட்டன.

அட்டவணை 4.1: 2015ஆம் ஆண்டில் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு (சு.தா.ம) பிரிவால் ஆரம்ப சுற்றாடல் மதிப்பீடு (சு.தா.ம) /ஆ.சு.ம ஒழுங்குவிதிகளுக்கு அமைய ஒப்புதல் அளிக்கப்பட்ட கருத்திட்டங்களின் பட்டியல்.

| இல | கருத்திட்டப் பெயர் | சு.தா.ம /ஆ.சு.ம |
|---|---|---|
| 1. | அம்பாந்தோட்டை, மிரிஜ்ஜவெலயில் உத்தேச ஏற்றுமதி பதனிடல் வலயம் | சு.தா.ம |
| 2. | கெரவலபிடியவில் நிர்மாண கைத்தொழில் துறைக்கான கடல் மணல் அகழ்வு(ஒப்பபுடல் நீடிப்பு) | சு.தா.ம |
| 3. | துல்கிரிய தொடக்கம் வேயன்கொடை வரையிலான உத்தேச 132 கிலோ வாட்டு மின்கடத்தல் லைன் கருத்திட்டம் | ஆ.சு.ம |
| 4. | கிரிந்திவல ஊடாக வேயாங்கொடை முதல் பாதுக்கை வரையிலான 220/400 கிலோ வாட்டு மின்கடத்தல் லைன் கருத்திட்டம் | ஆ.சு.ம |
| 5. | உத்தேச (பொல்பிடிய முதல் பன்னிபிட்டிய220 கிலோ வாட்டு மின்கடத்தல் லைன் கருத்திட்டம் | ஆ.சு.ம |
| 6. | முன்மொழியப்பட்டுள்ள மனாகொல நுண்நீர் மின் உற்பத்தி கருத்திட்டம் | ஆ.சு.ம |
| 7. | முன்மொழியப்பட்டுள்ள எத்மல எல்ல நுண் நீர் மின் உற்பத்தி கருத்திட்டம் (ஒப்பபுடல் நீடிப்பு) | ஆ.சு.ம |

| | | |
|---|---|---|
| 8. | முன்மொழியப்பட்டுள்ள பொல்பிடிய முதல் புதிய அபரனை வரையிலான132 kV மின்கடத்தல் லைன் கருத்திட்டம் | **ஆ.சு.ம** |
| **நிராகரிக்கப்பட்டவை** | | |
| 9. | முன்மொழியப்பட்டுள்ள கோஹகொடை கழிவு அகற்றல் அமைவிடத்தை புனர்நிர்தபணம் செய்தலும் கண்டி மாநகர சபைக்கான ஒருங்கிணைக்கப்பட்ட திண்மக் கழிவு முகாமைத்துவம் (ISWM) முறைமையை தாபித்தலும் (ஒப்புதல் நீடிப்பு ) | **சு.தா.ம** |

அட்டவனை 4.2: ஏனைய கருத்திட்ட ஒப்புதல் அளிப்பு முகவராண்மைகளால் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் இணக்கப்பாட்டுடன் அங்கீகரிக்கப்பட்ட /அங்கீகாரம் மறுக்கப்பட்ட கருத்திட்ட பட்டியல்.

| **இல** | **கருத்திட்டப் பெயர்** | **சு.தா.ம /ஆ.சு.ம** |
|---|---|---|
| 1. | திக்கல்ல நுண் நீர் மின் உற்பத்தி கருத்திட்டம க.அ.மு– இ.ம.அ | சு.தா.ம |
| 2. | இல.265, காலி வீதி,கொழும்பு-03இல் அமைந்துள்ள செராடன் ஹோட்டல் உத்தேச மாற்று வசதிகள் மற்றும் தரிப்பிட கட்டிடம்க.அ.மு – ந.அ.அ | ஆ.சு.ம |
| 3. | சிலேவ் ஹைலன்ட் கலப்பு அபிவிருத்தி க.அ.மு – ந.அ.அ | ஆ.சு.ம |
| 4. | ஹன்டகிறி எல்ல நுண் நீர்மின் உற்பத்தி கருத்திட்டம்க.அ.மு–வன திணைக்களம் | ஆ.சு.ம |
| 5. | அத்வல்தொட நுண் நீர்மின் உற்பத்தி கருத்திட்டம க.அ.மு - வன திணைக்களம். | ஆ.சு.ம |
| **நிராகரிக்கப்பட்டவை** | | |
| 6. | கட்டம்பேவன திணைக்களம்க.அ.மு– இ.ம.அ | சு.தா.ம |

அட்டவணை4.3:சு.தா.ம. பிரிவால் வகைப்படுத்தப்படும் கருத்திட்டங்களின் பட்டியல்;

| **இல** | உத்தேச கருத்திட்டத்தின் பெயர் | **சு.தா.ம/ஆ.சு.ம** |
|---|---|---|
| 1. | தென் அதிவேக பாதையை கொழும்பு நோக்கி விரிவுபடுத்தும் கருத்திட்டம்-கட்டம்-1 உயர் அதிவேகப்பாதை (பேஸ்லைன் மற்றும் துறைமுக அணுகல் | சு.தா.ம |
| 2. | மோனொரெயில உடன் கொழும்பு ஒருங்கிணைந்த போக்குவரத்து முறைமை-கட்டம் 1 | சு.தா.ம கைவிடப்பட்டது |
| 3. | முன்மொழியப்பட்டுள்ள சப்ரகமுவ (ருவன்புற) அதிவேகப்பாதை | சு.தா.ம |
| 4. | பதுளை மற்றும் கண்டி இடைணிலான புதிய பாதை இணைப்பு | சு.தா.ம |
| 5. | மத்திய அதிவேகப் பாதை கருத்திட்டம் பொதுஹெர-கண்டி) | சு.தா.ம |
| 6. | முன்மொழியப்பட்டுள்ள அதிவேகப் பாதை கருத்திட்டம் (கடுவெல--தம்புள்ள) | சு.தா.ம |
| 7. | முன்மொழியப்பட்ட கடவத்தை இடமாறல் இணைப்பு OCH மற்றும் மத்திய | துணை சு.தா.ம |

| இல | உத்தேச கருத்திட்டத்தின் பெயர் | சு.தா.ம/ஆ.சு.ம |
|---|---|---|
| | அதிவேகபாதை | |
| 8. | முன்மொழியப்பட்டுள்ள நீர் கொழும்பு மாநகர சபை பிரதேசத்திற்கான கழிவு நீர் அகற்றும் வசதி | சு.தா.ம |
| 9. | முன்மொழியப்பட்டுள்ள காலி மாநகர சபை பிரதேசத்திற்கான கழிவு நீர் அகற்றும் வசதி | சு.தா.ம |
| 10. | முன்மொழியப்பட்டுள்ள பேரதெனியா கண்னுவர பாதை கலப்பு அபிவிருத்தி கருத்திட்டம் | சு.தா.ம |
| 11. | முன்மொழியப்பட்டுள்ள களனி கங்கை ஹக்பெலுவ நுண் நீர் மின் உற்பத்தி கருத்திட்டம் | சு.தா.ம |
| 12. | திருகோணமலை சம்பூரில் கனரக கைத்தொழிலுக்கான விசேட கருத்திட்டத்தை நிர்மாணித்தல் | சு.தா.ம கைவிடப்பட்டது |
| 13. | முன்மொழியப்பட்டுள்ள சூரியவெவ முதலீட்டு மேம்பாட்டு வலயம்,ஹம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை | சு.தா.ம |
| 14. | முன்மொழியப்பட்டுள்ள கம்பஹ மாவட்டத்தின் கெரவலபிட்டியவில மாநகர திண்மக்கழிவை சக்தியாக்கும் கருத்திட்டம் | சு.தா.ம |
| 15. | முன்மொழியப்பட்டுள்ள ஹொரனை பேர்த் தோட்டத்தில் ஏற்றுமதி பதணிடல் வலயம்-11 | துணைசு.தா.ம |
| 16. | ஹம்பாந்தோட்டை புதிய குடியிருப்புகளுக்கு உத்தேச கழிவு நீர்சேகரிப்பு,சுத்திகரிப்பு மற்றும் அகற்றும் முறை | சு.தா.ம |
| 17. | முன்மொழியப்பட்டுள்ள தெஹிவலை- மவுன்டலவேனியா மாநகர சபை பிரதேசத்திற்கு குழாய் கழிவு நீர் கட்டமைப்பு | சு.தா.ம |
| 18. | ஸ்ரீ ஜயவர்தன கோட்டேயில் உத்தேச கழிவு நீர் சேகரிப்பு மற்றும் அகற்றல் கருத்திட்டம் | சு.தா.ம |
| 19. | முன்மொழியப்பட்டுள்ள சிறிய பண்ணை உரிமையாளர் சார்ந்த பிபிலை சீனி–சக்தி--பால் பண்ணை வீடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி கருத்திட்டம் | சு.தா.ம |
| 20. | திருகோணமலையில் உத்தேச 2 x 250 மெகா வாட்டு நிலக்கரி மின் உற்பத்தி நிலையம் | சு.தா.ம |
| 21. | முன்மொழியப்பட்டுள்ள கீழ் மல்வத்து ஓயா நீர்தேக்க கருத்திட்டம் | சு.தா.ம |
| 22. | முன்மொழியப்பட்டுள்ள கிவுல் ஓயா நீர்த்தேக்க கருத்திட்டம் | சு.தா.ம |
| 23. | முன்மொழியப்பட்டுள்ள மேல் ஹெலஎர கால்வாய் கருத்திட்டம் | சு.தா.ம |
| 24. | முன்மொழியப்பட்டுள்ள பஸ்னாகல நீர்தேக்க கருத்திட்டம் | சு.தா.ம |
| 25. | போவதென்ன நீர்த் தேக்கத்தில் இருந்து மகாவலி நீரை மேல் மை ஓயா மற்றும் குருணாகலை மாவட்டத்தில் உள்ள ஹக்வடுன ஓயா படுக்கைக்கு திருப்புவதற்கான வட மேல் மாகாண கால்வாய் திருப்பும் நிர்மாணம். | சு.தா.ம |
| 26. | முன்மொழியப்பட்டுள்ள கின்- நில்வலா கங்கை திருப்பும் கருத்திட்டம் | சு.தா.ம |
| 27. | உத்தேச மதுரு ஓயா வலது கறை அபிவிருத்தி கருத்திட்டம்(முறை பீ) | சு.தா.ம |
| 28. | முன்மொழியப்பட்டுள்ள மாத்தறை கட்டம் IV நீர் வழங்கல் கருத்திட்டம | சு.தா.ம |
| 29. | முன்மொழியப்பட்டுள்ள கலுகங்கை அமிலத்தன்மை தடை | சு.தா.ம |

| இல | உத்தேச கருத்திட்டத்தின் பெயர் | சு.தா.ம/ஆ.சு.ம |
|---|---|---|
| 30. | முன்மொழியப்பட்டுள்ள கண்டி குருதெணியாவில் 200 அறைகள் உள்ளடக்கிய ஐந்து நட்சத்திர ஹோட்டல் கிராண்ட பெலஸ்" | சு.தா.ம |
| 31. | நுவரெலியாவில் தேசிய அதி உயர விளையாட்டு தொகுதி நிர்தாண கருத்திட்டம் | சு.தா.ம |
| 32. | முன்மொழியப்பட்டுள்ள பத்தரமுல்லலை வோட்டரஸ் ஹெஜ் ஹோட்டல் மற்றும் வீட்டுத்தொகுதி கருத்திட்டம் | சு.தா.ம |
| 33. | இல.297 கட்டுகஸ்தொட, கண்டியில் ஒரு சுப்பர் சென்றர் மற்றும் கூட்டுதாபன வீட்டுத் தொகுதி கருத்திட்டம் | சு.தா.ம |
| 34. | முன்மொழியப்பட்டுள்ள சர்வதேச யோகா தியானம் மற்றும் ஆயர்வேத நிலையம், ஹன்தான, கண்டி. | சு.தா.ம |
| 35. | முன்மொழியப்பட்டுள்ள யாழ்ப்பாணம் - கிளிநொச்சி நீர் வழங்கள் மற்றும் சுகாதார திட்டம் | சு.தா.ம |
| 36. | மேட்றோ கொழும்பு திண்ம கழிவு முகாமைத்துவ கருத்திட்டம் | சு.தா.ம |
| 37. | மாத்தறையில் முன்மொழியப்பட்டுள்ள கழிவில் இருந்து சக்தி உருவாக்கல் கருத்திட்டம் | சு.தா.ம |
| 38. | முன்மொழியப்பட்டுள்ள ஹொரனை தொடக்கம் கொட்டாவை வரையிலான புகையிரதப் பாதை | சு.தா.ம |
| 39. | முன்மொழியப்பட்டுள்ள குருணாகல், தம்புள்ள, ஹபரண புகையிரதப் பாதை விரிவாக்கல் கருத்திட்டம் | சு.தா.ம |
| 40. | முன்மொழியப்பட்டுள்ள மன்னார் தோல் பயிற்ச்சி மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தி கைத்தொழில் பேட்டை அமைத்தல் கருத்திட்டம் | சு.தா.ம |
| 41. | முன்மொழியப்பட்டுள்ள கண்டி ஹபரனை வீதி வீட்டுத் தொகுதி (நதிபக்கம்-- கண்டி) | சு.தா.ம |
| 42. | கேகாலை தெஹியோவிட ஹின்குராலகந்த சிதாவக கங்கை நீர் மின் உற்பத்தி நிலைய கருத்திட்டம் | சு.தா.ம |
| 43. | கீழ் கொத்மலை நுண் நீர் மின் உற்பத்தி நிலைய கருத்திட்டம் | சு.தா.ம |
| 44. | முன்மொழியப்பட்டுள்ள போகஹஹெென நுண் நீர் மின் உற்பத்தி நிலைய கருத்திட்டம் | சு.தா.ம |
| 45. | முன்மொழியப்பட்டுள்ள திருகோணமலை 1200 மெகா வாட்டு நிலக்கரி மின்நிலைய கருத்திட்டம் | சு.தா.ம |
| 46. | யாழ்ப்பாண தீபகற்பத்தில் மணற் குன்று அகழ்வு கருத்திட்டம் | சு.தா.ம |
| 47. | துறைமுக நகர அபிவிருத்தி கருத்திட்டத்திற்கான கடல் மணல் பிரித்தெடுத்தல் | துணை சு.தா.ம |
| 48. | இரண்டாவது புதிய களனி பாலம் நிர்மாண கருத்திட்டத்தின் கீழ் இலங்கை அணுசக்தி சபையின் கதிரியக்க கழிவு அகற்றல் வசதியை தற்போதைய அமைவிட கட்டமைப்பை மேம்படுத்துவதன் ஊடாக தக்கவைத்துக் கொள்ளல் | துணைசு.தா.ம |
| 49. | முன்மொழியப்பட்டுள்ள ஹம்பாந்தொடை பெலகஸ்வெவ கைத்தொழில் | ஆ.சு.ம |

| இல | உத்தேச கருத்திட்டத்தின் பெயர் | சு.தா.ம/ஆ.சு.ம |
|---|---|---|
| | பேட்டை | |
| 50. | துறைமுக நகர அபிவிருத்தி கருத்திட்டத்திற்கான கடல் மணல் வாரியெடுத்தல் | ஆ.சு.ம கைவிடப்பட்டது |
| 51. | அம்பாந்தோட்டையில் முன்மொழியப்பட்டுள்ள சீனி சுத்திகரிப்பு கருத்திட்டம் | ஆ.சு.ம |
| 52. | முத்துராஜவெலையில் இருந்து பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் வரையில் ஜெட் ஏ- 1 எரிபொருள் பரிமாற்ற குழாய் வழியை நிர்மாணித்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய அபிவிருத்திகள் | ஆ.சு.ம |
| 53. | முன்மொழியப்பட்டுள்ள மாலிபொட நுண் நீர் மின் நிலையக் கருத்திட்டம் | ஆ.சு.ம |
| 54. | முன்மொழியப்பட்டுள்ள கட்டுநாயக்க உயிர் மருத்தவ கழிவு சுத்திகரிப்பு வசதி | ஆ.சு.மகைவிடப் பட்டது |
| 55. | முன்மொழியப்பட்டுள்ள கலுத்தரை மாவட்டத்தின் ஹொரன கழிவில் இருந்து சக்தியை பெறல் கருத்திட்டம் | ஆ.சு.ம |
| 56. | தல்பிடிகல நிர்தேக்கத்தில் முன்மொழியப்பட்டுள்ள கீழ் உமாஓயா பல்நோக்கு அபிவிருத்தி கருத்திட்டம் | ஆ.சு.ம |
| 57. | முன்மொழியப்பட்டுள்ள நாடுக்குடா முதல் மண்ணார் வரையிலான 132 கிலோ வாட்டு மின் பரிமாற்று லைன் கருத்திட்டம் | ஆ.சு.ம |
| 58. | முன்மொழியப்பட்டுள்ள பொல்பிடிய முதல் அம்பாந்தோட்டை வரையிலான 132 கிலோ வாட்டு மின் பரிமாற்று லைன் கருத்திட்டம் | ஆ.சு.ம |
| 59. | உயர் அதிவேகப்பாதை பத்தரமுல்லை- வடக்கு ( பேஸ்லைன்-- ராஜகிரிய) | ஆ.சு.ம |
| 60. | உயர் அதிவேகப்பாதை பத்தரமுல்லை- தெற்கு ( மல்லபொல-கிம்புல்லாவ) | ஆ.சு.ம |
| 61. | காலிங்க நுவர,அன்கமெதில்லவில் முன்மொழியப்பட்டுள்ள வட மத்திய மாகாண கால்வாய் மாகாவலி அபிவிருத்தி திட்டத்தின் இறைத்தல் தொகுதிக் கருத்திட்டம் | ஆ.சு.ம |
| 62. | முன்மொழியப்பட்டுள்ள ரன்வெல ஓயா நுண் நீர் மின் உற்பத்தி நிலை கருத்திட்டம் | ஆ.சு.ம |
| 63. | மரபணு ரீதியில் மேம்படுத்தப்பட்ட தேங்காய் கலப்பினங்களில் இருந்து விதைகளை அதிகரிக்கும் வகையில் தென்னை விதை தோட்டங்களை புனேரியனில் தாபித்தல் | ஆ.சு.ம |
| 64. | குட்டுநாயக்கா ஏற்றமதி பதனிடல் வலயத்தில் முன்மொழியப்பட்டுள்ள விலையுயர்ந்த உலோக சுத்திகரிப்பு நிலையத்தை அமைப்பதந்கான கருத்திட்டம். | ஆ.சு.ம |

மேற்படி கருத்திட்டங்களுக்கு மேலதிகமாக, சிக்கலான சுற்றாடல் பிரச்சினைகளை தோற்றுவிக்காததும் தேர்ந்தெடுக்கப்பட்டதுமான குறித்துரைக்கப்பட்டுள்ள கருத்திட்டங்கள் தொடர்பில் ஆ.சு.ம செயற்பாட்டை நடைமுறையாக்கும் பொறுப்பானது மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் மாகாண அலுவலகங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த கருத்திட்டங்களை வழிமுறையாக்கம் செய்யும் செயற்பாட்டில் சு.தா.ம பிரிவானது நெருக்கமாக பணியாற்றியதுடன், அவசியமான

உதவிகளையும் வழிகாட்டல்களையும் அவசியமான வேளைகளில் வழங்கியது.

மேலும், கருத்திட்ட ஒப்புதல் அளிக்கும் ஏனைய முகவராண்மைகளுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ள கருத்திட்டங்கள் தொடர்பில் சு.தா.ம நடைமுறையை நிறைவேற்றுவதற்கான தொழில்நுட்ப உதவியும் வழங்கப்பட்டது.

### 4.1.1 ஒப்புதல் அளிகக்ப்பட்டுள்ள சு.தா.ம /ஆ.சு.ம கருத்திட்டங்களை கண்காணித்தல்.

அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகளுடன் இணக்கப்பாடு காணப்படுகின்றதா என்பதை உறுதி செய்யும் முகமாக ஏற்கனவே ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள கருத்திட்டங்கள் மீது தொடர்ச்சியான இணக்கப்பாட்டு கண்காணிப்பை சு.தா.ம பிரிவு தொடர்ந்தது. இருமாதத்திற்கு ஒரு முறை இடம்பெற்ற கூட்டங்களில் பங்கேற்பதன் ஊடாகவும் கருத்திட்ட கள விஜயங்களை நேரடியாக மேற்கொண்டும்பின்வரும்கருத்திட்டங்கள் முறையாக கண்காணிக்கப்பட்டன.

அட்டவணை 4.4: 2015 ஆம் ஆண்டில் கண்காணிக்கப்பட்ட கருத்திட்டங்கள் பின்வருமாறு;

| | |
|---|---|
| 1. | கொழும்பு நகர கருத்திட்டத்திற்கான வெளிச்சுற்று நெடுஞ்சாலை(கட்டம் I & II மற்றும் கட்டம் III) |
| 2. | மாத்தரை-கதிர்காமம் புகையிரதப் பாதை விரிவாக்கல் கருத்திட்டம், கட்டம் I மாத்தறை முதல் பெலியத்ததை வரையில் |
| 3. | உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தி கருத்திட்டம |
| 4. | மோரகாகந்த கலு கங்கை கமத்தொழில் விரிவுபடுத்தல் கருத்திட்டம் |
| 5. | தொலுவ கமத்தொழில் அபிவிருத்தி கருத்திட்டம் |
| 6. | கினிகத்தேனையில் பரந்தநில நீர் மின் உற்பத்தி நிலைய கருத்திட்டம் |
| 7. | கொக்கலையில் சூழல் 5 நட்சத்திர விலா ஓய்வுவிடுதி கருத்திட்டம் |
| 8. | நாவலபிடிய ஜெனட் வெலி நுண் நீர் மின் உற்பத்தி நிலைய கருத்திட்டம் |
| 9. | தெரணியகலையில் நாயகங்கை நுண் நீர் மின் உற்பத்தி நிலைய கருத்திட்டம் |
| 10. | கேஹெல்கமு ஓயா நுண் நீர் மின் உற்பத்தி நிலைய கருத்திட்டம – கருத்திட்டம் ஜஜ |
| 11. | அநுராதபுரம் ஒயமடுவயில் பால்மம் வெடிபொருள் உற்பத்தி கைத்தொழில் |
| 12. | துல்கரியாவில் எம்.ஏ.எஸ்.ஆடைப் பார்க் (உயிர்பொருள் கழிவு சுத்திகரிப்பு தாவரத்தின் உலர்ந்த கழிவு இணை-எரித்தல்) |
| 13. | பதுலையில் மொரான நீர்த்தேக்கம் கருத்திட்டம் |
| 14. | பதுலை- ஹாலியெல்லை மற்றும் எல்லை ஒருங்கிணைந்த நீர் வழங்கள் கருத்திட்டம் |
| 15. | கோஹகொட கழிவு அகற்றல் அமைவிடம் புனர்நிர்மாணம் மற்றும் கண்டி மாநகர சபைக்காக ஒருங்கிணை திண்மக்கழிவு முகாமைத்துவம் முறைமை தாபித்தல் |
| 16. | களனிசிரி பாலத்தில் இருந்து களனிமுள்ள முல்லேரியாவ-கொஸ்வத்தை பாதை வரையில் அணுகல் பாதையை நிர்மாணித்தல் |
| 17. | இல 51/2, சீரிமத் குடரத்வத்த மாவத்தை, கண்டியில் கூட்டாதன வகை வீட்டுத்தொகுதியை நிர்மாணிக்கும் கருத்திட்டம் |
| 18. | கண்டி நகர கழிவு நீர் கருத்திட்டம் |
| 19. | மாத்தறை முதல் வத்தலை வரையில் தென் அதிவேக பாதையை விரிபுபடுத்தல் கருத்திட்டம் |

**4.1.2சு.தா.ம /ஆ.சு.ம நடைமுறையை ஒழுங்குபடுத்தல்.**

**பயிற்ச்சி நிகழ்ச்சித்திட்டம்**

**(அ) சுரங்கத் தொழிற்துறை சார்ந்த முக்கியமான அம்சங்களில்சுற்றாடல் தாக்க மதிப்பீடு தொடர்பாக மத்திய சுற்றாடல் அதிகாசபையின் உத்தியோகத்தர்களுக்கான பயிற்ச்சி நிகழ்ச்சித்திட்டம்**

இந்த பயிற்ச்சி நிகழ்ச்சித்திட்டமானது மேற்படி விடயப் பரப்பில் தொழில்நுட்ப அறிவை இற்றைப்படுத்தும் முகமாக கொடிகாகும்புர சுரங்கப் பகுதிக்கான விஜயம் ஒன்றுடன் மனித வள முகாமைத்துவபிரிவின் ஒத்துழைப்புடன் சு.தா.ம பிரிவால் ஒழுங்கமைக்கப்பட்டது. சு.தா.ம பிரிவு மற்றும் சு.தா.ம செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள ம.சு.அ மாகாண அலுவகங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த 50 உத்தியோகத்தர்கள் இந்த பயிற்ச்சித் திட்டத்தில் பங்கேற்றனர்.

(ஆ) **கழிவு நீர் சுத்திகரிப்பு மற்றும் பாதுகாப்பான அகற்றல் முறை ஆகிய செயற்பாடுகளில் ம.சு.அ உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்.**

சு.தா.ம பிரிவானது மனித வள முகாமைத்துவ பிரிவின் ஒத்துழைப்புடன் மேற்படி விடயப் பரப்பில் பயிற்ச்சி நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை நடாத்தியது. சு.தா.ம பிரிவு மற்றும் சு.தா.ம செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள ம.சு.அ மாகாண அலுவகங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த 62 உத்தியோகத்தர்கள் இந்த பயிற்ச்சித் திட்டத்தில் பங்கேற்றனர். வளவாளர்கள் மொறட்டுவை பல்கலைக்கழகத்தில் இருந்து வருகை தந்தனர். கள விஜயத்தை உள்ளடக்கும் இரண்டாவது பயிற்ச்சி திட்டமானது 2016 சனவரியில் இடம்பெறுவுள்ளது.

மேலும் சு.தா.ம செயற்பாடு பற்றிய இரண்டு பயிற்ச்சி நிகழ்ச்சித் திட்டங்கள் ரஜரட்டை பல்கலைக்கழகம் மற்றும் சிலிட் பட்டதாரி மாணர்களுக்கு நடாத்தப்பட்டன.

**4.1.3 சு.தா.ம ஒழுங்குவிதிகளிள் திருத்தங்கள்.**

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் சட்ட வரைஞர் மற்றும் சட்ட ஆலோசகர் ஆகியோருடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பிரகாரம் சு.தா.ம ஒழுங்குவிதிகள், குறித்துரைக்கப்பட்ட கருத்திட்டங்களின் படடியல் மற்றும் கருத்திட்ட ஒப்புதல் அளிக்கும் முகரராண்மைகள் பட்டியல் ஆகியவற்றில் திருத்தங்கள் கொண்டுவருவதற்கு அவசியமான நடவடிகடகைளை சு.தா.ம பிரிவானது எடுத்தது. கருத்திட்ட ஆதரவாளர் சு.மு.தி ஒன்றை சமர்ப்பபித்தல் உட்பட புதிய கண்காணிப்பு நடவடிக்கைகள் சு.தா.ம ஒழுங்குவிதிகளில் உள்ளடக்கப்பட்டன. சம்பந்தப்பட்ட பங்குதாரார்கள் மற்றும் ம.சு.அ மாகாண அலுலர்கள் ஆகியோரின் கரிசனைகள் கூட்டிணைக்கப்பட்டு பரிந்துரைக்கப்பட்ட கருத்திட்டங்களின் பட்டியல் மற்றும் கருத்திட்ட ஒப்புதல் அளிக்கும் முகவராண்மைகள் ஆகியவற்றில் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. இந்த ஆவணங்கள் வெளியிடப்படுவதற்காக சட்டப் பிரிவுக்கு சமர்ப்பிக்கப்பட்டன.

**4.1.4 சுற்றாடல் ஓட்டத்தை தீர்மானித்தல்(சு.ஓ) பற்றிய ஆய்வு**

இலங்கையில் நுண் நீர்மின் உற்பத்தி நிலையங்கள், உட்பட பல நீர் துறைசார் கருத்திட்டங்கள் பற்றிய போக்கொன்று அதிகரித்துச் செல்வதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. ஆகையால் ஒரு ஆற்றின் நீரோட்ட திசையில் ஏதும் மாற்றங்களை கொண்டுவரும் வேளையில் கீழ்மட்ட பயனாளிகள் மற்றும் சுற்றுச்சூழல் தேவைகளை விட்டுக்கொடுக்காத வகையில் நீர் வளங்களின் அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவமானது இடம்பெற வேண்டும் என்பதை சமீப காலங்களில்பலர்

உணர்ந்துள்ளனர். ஆகையால், சு.தா.ம பிரிவானது "சுற்றாடல் ஓட்டம்"; அதாவது ஒரு ஆற்றின் சமூக கலாசார மற்றும் சூழலியல் தேவைகளை நிறைவேற்றுவதற்கு அவசியமான நீரின் போக்கை தீர்மானிக்கும் ஆய்வொன்றை ஆரம்பித்துள்ளது. இலங்கைக்கு பொறுத்தமான முறையில் சுற்றாடல்-ஓட்டத்தை தீர்மானிக்கக்கூடிய புறநிலை திட்ட அளவைகள் மற்றும் வழிகாட்டிகளின் தொகுதியொன்றை வடிவமைத்தப்பதே இந்த ஆய்வின் குறிப்பிடத்தக்க நோக்கமாகவுள்ளது. இந்த ஆய்வுக்கு பேராசிரியர் தேவக வீரகோன் அவர்களால் தலைமை வகிக்கப்பட்ட நிபுணர்கள் குழுவொன்றின் சேவை பெறப்பட்டது. இந்த ஆய்வின் கண்டுபிடிப்புகள் பங்குதாரர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டு அதன் பின்னர் அறிக்கை இறுதியாக்கப்பட்டது. இந்த ஆயவானது வெற்றிகரமாக முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

### 4.1.5 மூலோபாய சுற்றாடல் மதிப்பீட்டை (மூ.சு.ம) நடைமுறைப்படுத்தல்

- மூலோபாய சுற்றாடல் மதிப்பீட்டு ஏற்பாடுகளில் உள்ளடக்கும் முகமாக தே.சு.சட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவருதல்.

தேசிய சுற்றாடல் சட்டத்தில் மூ.சு.ம பற்றிய புதிய ஏற்பாட்டை உள்ளடக்கும் ஒப்புதலை அமைச்சரையிடம் இருந்து பெறுவதற்கு அமைச்சரவை நிறுபமொன்று தயாரிக்கப்பட்டு சுற்றாடல் அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

- வடக்கு மாகாணத்திற்கான மூ.சு.ம

வடக்கு மாகாணத்திற்கான மூ.சு.ம அறிக்கை வெளியிடப்பட்டு சம்பந்தப்பட்ட பங்குதாரர்கள் இடையில் விநியோகிக்கப்பட்டுள்ளது. மூ.சு.ம அறிக்கை மற்றும் எட்லஸ் படம் ஆகியன ம.சு.அ இணையத்தளத்தில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

- மேல் பிராந்திய பெருநகர திட்டத்திற்கான மூ.சு.ம

ம.சு.அ மேற்கு பிராந்திய பெருநகர திட்ட கருத்திட்டத்தின் ஒத்துழைப்புடன் மேற்கு பிராந்திய பெருநகர திட்டத்திற்கு மூலோபாய சுற்றாடல் மதிப்பீட்டை மேற்கொள்ளும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது.

இந்த ஆய்வுக்கான ஆய்வெல்லை வரைவுக்கு சு.தா.ம.பிரிவானது ஒத்துழைப்பை வழங்கியது. தற்போது இந்த மூலோபாய சுற்றாடல் மதிப்பீடானது (மூ.சு.ம) மேற்கு பிராந்திய பெருநகர் திடடமிடல் கருத்திட்டத்தால் முன்னெடுக்கப்படுகின்றது. சு.தா.ம பிரிவின் உத்தியோகத்தர்கள் பங்குதாரர்களுக்கான பல கூட்டங்களில் பங்கேற்று அவசியமான உள்ளீடுகளை வழங்கினர்.

### 4.1.6 ஏனைய நடவடிக்கைகள்

மேற்படி நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக, சு.தா.ம பிரிவானது பல்வேறு கருத்திட்ட பிரச்சினைகளுக்கு உதவியளிக்கும் அல்லது தீர்க்கும் நோக்கில் 2015 ஆம் ஆண்டில் பின்வரும் கூட்டங்கள்/தள பரிசோதனைகள் ஆகியவற்றிலும் கலந்து கொண்டது.

- பிரதம அமைச்சரின் அலுவலகத்தால் அழைப்பு விடுக்கப்பட்ட துறைமுக நகர மீளாய்வு குழுக்கூட்டங்கள்
- மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சினால் அழைப்பு விடுக்கப்பட்ட உமாஓயா மீளாய்வு குழுக்கூட்டங்கள்
- மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சினால் அழைப்பு விடுக்கப்பட்ட தொம்பேயில் முன்மொழியப்பட்டுள்ள ஆயர்வேத கமத்தொழில் காணி அபிவிருத்தி கருத்திட்டம்
- நெடுஞ்சாலை துறை கருத்திட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டங்கள்
- மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சினால் அழைப்பு விடுக்கப்பட்ட

கலின்கநுவர அன்கமெடில்ல இறைத்தல் தொகுதி நிர்மாணம் பற்றிய கூட்டங்கள்

- வடக்கு மாகாண நீர் வளங்கள் அபிவிருத்தி ஒருங்கிணைப்பு கூட்டங்கள்

## 4.2 இயற்கை வளங்கள் முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புப் பிரிவு

சம்பந்தப்பட்ட ஏனைய அரச முகவராண்மைகளின் ஒருங்கிணைப்புடன் நாட்டின் இயற்கை வளங்களை முகாமைத்தவம் செய்தல், ஒழுங்குவிதிகளை வகுத்தல்,தேசிய வளங்கள் முகாமைததுவம் தொடர்பில் வழிகாட்டிகளை தயாரித்தல், சுற்றாடல் பாதுகாப்பு பகுதிகள் என்ற வகையில் பிரகடனம்செய்யப்பட்டுள்ள பிரதேசங்களில்அனுமதி அளிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்கான கருத்திட்ட அங்கீகாரமளிப்பு செயற்பாட்டை நடைமுறைபடுத்தல்,தேசிய ஈரநில செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தல் மற்றும் இயற்கை வளங்கள் முகாமைத்துவம் பற்றிய தகவல்மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசங்கள் சார்ந்த சாதனங்கள் தயாரித்தல்,மற்றும் ஏனைய ஈரநிலசெயற்பாடுகள் ஆகிவை நாட்டின் இயற்கை வளங்கள் முகாமைத்துவம் தொடர்பில் மத்திய சுற்றாடல் அதிகாரசபை கொண்டுள்ள பொறுப்புகள் ஆகும்

2015 ஆம் ஆண்டில், இயற்கை வளங்கள் முகாமைத்துவம் தொடர்பில் பின்வரும் நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டன.

### 4.2.1 இயற்கை வளங்கள் முகாமைத்துவம் பற்றிய முகவராண்மைகளுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு கூட்டங்கள்

2015ஆம் ஆண்டில் இயற்கை வளங்கள் முகாமைத்துவத்தில் ஈடுபட்டுள்ள அனைத்து பங்குதாரர் முகவராண்மைகளின் பங்குபற்றலுடன் இயற்கை வளங்கள் முகாமைத்துவம் பற்றிய நான்குகூட்டங்கள் இடம்பெற்றன. இந்த குழுவானது நீரேந்து பகுதிகளை பாதுகாத்தல், மண் பாதுகாப்பு வழிகாட்டிகள் மற்றும் பொல்கொட வரத்தமானியை திருத்தல் பற்றிய முக்கிய தீர்மானங்களை எடுத்தது. பதுலை மாவட்டத்தில் அமைந்துள்ள தேயிலை தோட்டங்களில் அமைந்துள்ள நீரேந்துப்பகுதிகள் தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசங்களாக அறிவிக்கப்படல் வேண்டும் என்பதேநீரேந்து பகுதிகள் தொடர்பில் மேற்கொண்ட முக்கியமான தீர்மானமாகும்.

### 4.2.2 இயற்கை வளங்கள் முகாமைத்துவம் பற்றிய தகவல் கையேடுகள் துண்டுப் பிரசுரங்கள் மற்றும்வழிகாட்டி முறைகள்.

மேற்படி விடயம் தொடர்பில் நான்கு கையேடுகள் தயாரிக்கப்பட்டன. அதாவது; (அ) சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசங்கள் (சு.பா.பி) (பீ) இலங்கையிலுள்ள இயற்கை வளங்கள் (சீ) பாதை ஓரங்களில் மற்றும் வீட்டு தோட்டங்களில் மரம் நடுகை(டி) ஆதன அபிவிருத்தியில் ஈடுபட்டுள்ள கருத்திட்ட ஆதரவாளர்களுக்கான வழிகாட்டிகள்.

இந்த தகவல் சாதனங்கள் பொது மக்கள் மத்தியில்இயற்கை வளங்கள் பற்றியவிழிப்புணர்வை மேம்படுத்தும் நோக்கில்தயாரிக்கப்பட்டு பொது மக்கள், பாடசாலை சமூகம், பங்தாரர் முகவராண்மைகள் ஆகியோர் மத்தியில் விநியோகிக்கப்பட்டன.

கைவிடப்பட்டிருந்த சுரங்கக் கிடங்குகளை புனர்நிர்மாணம் செய்வதற்கான வழிகாட்டிகளின் தொகுதியொன்றை தயாரிக்கும் செயற்பாடு மொறட்டுவைபல்கலைக்கழகத்தின் வல்லுநர்களின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்பட்டது. நாட்டில் தற்போது

அகழ்வு தொடர்பில் பல பிரச்சினைகள் தோன்றியுள்ளதால் இந்த வழிகாட்டிகள் காலத்தின் தேவையாகவுள்ளன.










உரு4.1:இயற்கை வளங்கள் முகாமைத்துவம் பற்றிய வெளியீடுகள்

### 4.2.3விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்

நிலையான மணல் பாவனை பற்றிய ஐந்து (05) விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் ம.சு.அ மாகாண அலுவலகங்களின் ஒத்துழைப்புடன் குருநாகலை, கேகாலை, காலி, பதுலை மற்றும் மாத்தறை ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கும் வகையில் பங்குதாரர்கள் மற்றும் மணல் அகழ்வோர் ஆகியோருக்கு நடாத்தப்பட்டன. பண்டாரகம பிரதேச செயலக பிரதேசத்தில் பணியாற்றும் உத்தியோகத்தர்களுக்கு நீர் வளங்கள் மற்றும் நீரேந்துப் பகுதிகள் ஆகியவற்றை பேணுதல் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. காணி அபிவிருத்திமற்றும் காணி மீட்பு செயற்பாட்டில் தற்போதைய ஒப்புதல் அளிப்பு நடைமுறை பற்றி உள்ளூர் மட்ட அரசமுகவராண்மைகளுக்கு விழிப்பூட்டும் வகையில் பதுலை, மொனராகலை, காலி, அம்பாந்தோட்டை, மாத்தரை, களுத்தரை மற்றும் கம்பஹ ஆகிய ஏழு மாவட்டங்களில்

ஏழு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

### 4.2.4 இலங்கையில் சுற்றாடல் அல்லது வரலாற்று ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் மற்றும் மரங்களை பாதுகாத்தல்

2011 ஆம் ஆண்டு முதல் முன்னெடுக்கப்பட்டு வரும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் தெரிவு செய்யப்பட்ட இடத்தில்/மரத்தில் அத்தகைய இடங்களை/மரங்களை பேண வேண்டிய முக்கியத்துவத்தை பொதுமக்களுக்கு வழிப்பூட்டும் வகையில் வழிகாட்டிப் பலகைகள் நிறுவப்பட்டன. 2015ஆம் ஆண்டில் பின்வரும் இடங்களில் வழிகாட்டிப் பலகைகள் நிறுவப்பட்டன.

அட்டவணை4.5:பலகைகள் நிறுவப்பட்ட இடங்கள்

| மாகாணம் | மாவட்டம் | கி.சே.பிரிவு மற்றும் கிராமம் | இடம் |
|---|---|---|---|
| மேற்கு | களுத்துறை | 691/ஏ, அலுபோமுல்ல மேற்கு (அலுபோமுல்லகிராமம்) | பழைய நாகமரம்<br>-200 வருடங்களுக்கு மேல் பழமைவாய்ந்தது.<br>-மானிட செயற்பாடுகளால் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது |
| ஊவா | பதுல்லை | மல்வத்தகம (இடமேகம) | இராட்சத புளு மரம் (மருத மரம்)<br>150-200 வருடங்கள் பழமைவாய்ந்தது. உயரம் 35 மீட்டருக்கு அதிகம்- 20 பர்ச்சஸ் நிலப்பரப்பை உள்ளடக்குமாறு பரவியுள்ளது.விட்டமானது 5 மீட்டரை விட அதிகம். உள்நாட்டு மருத்தவ குணம் கொண்டதால் முக்கியத்துமான தாவரமாக கருதப்படுகின்றது. |
| ஊவா | மொனராகல | அம்பேகமுவ கி.சே பிரிவு (அம்பேகமுவ தேவாலை வளவு) | -மதரா மரம் (ஓடாயு மரம்) 70 -வருடங்கள் பழமைவாய்ந்தது<br>-மருத்தவ குணம் கொண்டதால் முக்கியத்துமான தாவரமாக கருதப்படுகின்றது |
| மேல் | கம்பஹா | மேத மினுவங்கொடை கி.சே பிரிவு | -மீகாச(மதுகா லொன்கிபோலியா)<br>150வருடங்களுக்கு மேல் பழமைவாய்ந்தது<br>-800 அடி நிலத்தை பரவியுள்ளது<br>-அனைத்து பாகங்களும் மருத்துவ குணமுடையது |






உரு 4.2: இலங்கையில் சுற்றாடல் அல்லது வரலாற்று ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் மற்றும் மரங்கள்

### 4.2.5 நீர் வளங்கள்/நீரேந்துப்பகுதிகள் பாதுகாப்பு

#### 4.2.5.1 நீர்த்தாரைகள், நீர்த்தேக்கங்கள் மற்றும் நீரேந்துப்பகுதிகள்

நீர்த்தாரைகள், நீர்த்தேக்கங்கள் மற்றும் நீரேந்துப் பகுதிகள் ஆகியவற்றை பாதுகாக்கும் தேசியக் கொள்கையின் பிரகாரம் நீரேந்துப் பகுதிகள் பற்றிய தகவல்களை சேகரிக்கும் செயற்பாட்டை ம.சு.அ ஆரம்பித்தது.பாதுகாப்பான பிரதேசங்கள் என பிரகடனம் செய்யும் நோக்கில் அறிக்கை தயாரிக்கும் செயற்பாட்டையும் ஆரம்பித்தது.

#### 4.2.5.2 ஹொரனை மற்றும் இங்கிரியா பிரிதேச செயளாலர் பிரதேசங்களில் நீர் வளங்கள் பாதுகாப்பு

இனங்காணப்பட்ட நீரோடைகள்,நீர்த்தேக்கங்கள் மற்றும் அன்மையில் அமைந்த நீரேந்துப்பகுதிகள் ஆகியவற்றுக்கான முகாமைத்துவ திட்டங்கள் பற்றி கலந்துரையாடுவதற்கு இரண்டு பங்குதார் கூட்டங்கள் இடம்பெற்றன. அதற்கிணங்க, இரண்டு பிரதேசச் செயலாளர் பிரிவுகளில் பிரதேச செயலாளர்களின் தலைமையில் நீரேந்துப்பகுதிகள் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் பற்றிய குழுக்கள் தாபிக்கப்பட்டன. குழுக்களை தாபித்தல் மற்றும் முகாமைத்துவ திட்டங்கள் தயாரித்தல் பற்றிய வழிகாட்டிகள் பிரதேச செயலக அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டன. இரண்டு பிரிவுகளில் உள்ள நீர் வளங்கள்மற்றும் அவற்றின் நீரேந்துப்பகுதிகள் எதிர்கால சந்ததியினருக்காக பாதுகாக்கப்படுகின்றன என்பதை உறுதிசெய்வதே இந்த குழுக்களை தாபிப்பதில் உள்ள முக்கிய நோக்கமாகும். இந்த நிறுவக பொறிமுறையின் வெற்றியைத் தொடர்ந்து ஏனைய பிரிவுகளிலும் இதனை திரும்பச் செய்யும் வகையில் இந்த நிறுவக பொறிமுறையானது பரீட்ச்சிக்கப்படவுள்ளது.

#### 4.2.5.3 பதுலை மாவட்டத்தில் நீரேந்துப் பகுதிகளின் பாதுகாப்பு

பதுலை மாவட்டத்தில் அமைந்துள்ள தேயிலைத் தோட்டங்களில் காணப்படும் 1148 ஹெக்ரேயர்(1675 காணிப்பகுதிகள்) பரப்பளவில் அமைந்துள்ள நீரேந்துப் பகுதிகள் சுற்றாடல் பாதுகாப்பு பாதுகாப்பு பிரதேசங்களாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளன.முதலாவது கட்டத்தில் ஹாலிஎல்லை பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள நீரேந்துப் பகுதிகள் சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசங்களாக பிரகடனம் செய்வதற்கானபரிசீலனை மேற்கொள்ளப்படும். இந்த நோக்கத்திற்காக

மூன்று பங்குதாரர் கூட்டங்கள் இடம்பெற்று அதனைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் வரைவு செய்யப்பட்டது

### 4.2.6இலங்கையில் நீர்வீழ்ச்சிகளை பாதுகாத்தல்

நீர்வீழ்ச்சிகள் மீதான நேரடி மற்றும் மறைமுக அச்சுறுத்தல் மற்றும் தாக்கங்கள் பரிசீலனைக்கு எடுத்து நீர் வீழ்ச்சிகள் மீது நுண் நீர் மின் உற்பத்தி செய்யும் கருத்திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் இருப்பதற்கு 2011 ஆம் ஆண்டில் மேற்கொண்ட கொள்கைத தீர்மானத்தின் பிரகாரம்பல செயற்பாடுகள் 2015ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்டன.

ம.சு.அ பிரதேச சுற்றாடல் அலுவலகங்களின் சேவையின் ஊடாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டு 512 நீர்வீழ்ச்சிகள் உட்பட நீர் வீழ்ச்சிகளின் பட்டியலொன்று தயாரிக்கப்பட்டதுடன் ம.சு.அ யின் சம்பந்தப்பட்ட மாகாண மற்றும் மாவட்ட உத்தியோகத்தர்கள் மூலம் இடம்பெற்ற ஏழு கூட்டங்களில் தரவு சரிபார்த்தல் மேற்கொள்ளப்பட்டது. பாதுகாப்பு அவசியமான நீர்வீழ்ச்சிகளை தெரிவுசெய்து அவற்றை வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டது.

அட்டவணை4.6:ஆய்வு மூலம் இணங்காணப்பட்ட நீர்வீழ்ச்சிகளின் பட்டியல்

| மாகாணம் | மாவட்டம் | நீர்வீழ்ச்சிகள் |
|---|---|---|
| | | |
| தென் | காலி | 30 |
| | மாத்தறை | 16 |
| | அம்பாந்தோட்டை | 4 |
| மேல் | கொழும்பு | 5 |
| | களுதரை | 21 |
| | கம்பஹ | 2 |
| மத்திய | மாத்தலை | 22 |
| | கண்டி | 38 |
| | நுவரெலியா | 156 |
| சப்ரகமுவ | கேகாலை | 40 |
| | இரத்தினபுரி | 171 |
| ஊவா | பதுலை | 32 |
| | மொனறாகலை | 10 |
| வடமேல் | குருணாகலை | 1 |

| மாகாணம் | மாவட்டம் | நீர்வீழ்ச்சிகள் |
|---|---|---|
| | | |
| தென் | காலி | 30 |
| | மாத்தறை | 16 |
| | அம்பாந்தோட்டை | 4 |
| மேல் | கொழும்பு | 5 |
| | களுதரை | 21 |
| | கம்பஹ | 2 |
| மத்திய | மாத்தலை | 22 |
| | கண்டி | 38 |
| | நுவரெலியா | 156 |
| சப்ரகமுவ | கேகாலை | 40 |
| | இரத்தினபுரி | 171 |
| ஊவா | பதுலை | 32 |
| | மொனறாகலை | 10 |
| வடமேல் | குருணாகலை | 1 |

### 4.2.7 இயற்கைவளங்கள் முகாமைத்துவம் பற்றிய தொழில்நுட்ப வழிகாட்டலை அரச மற்றும் அரசுசாரா முகவராண்மைகளுக்கு வழங்கள்

இந்த குழுவானது இயற்கை வள முகாமைத்துவம் பற்றிய தொழில்நுட்ப உதவியை பின்வரும் அமைப்புகளுக்கு வழங்குகின்றது. அவையாவன:நகர அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனம், புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம்,தேசிய நீரக வள மூளங்கள் அபிவிருத்தி அதிகாரசபை, மகாவலிஅபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு,மற்றும் அபிவிருத்தி,சுற்றாடல், மனித மற்றும் உயிர்கோலம் பற்றியதேசிய விஞ்ஞான மன்றத்தின் குழு மற்றும் பாராளுமன்ற ஆலோசனை குழுக்கள்போன்ற ஏனைய அரச நிறுவனங்களின் திட்டமிடல் குழுக்கள், தொழில்நுட்ப மதிபிபீட்டுக் குழுக்கள், கூட்டங்கள் மற்றும் பயிற்ச்சிப்பட்டறைகள்.

2015ஆம் ஆண்டில் 150 ற்கும் அதிகமான கூட்டங்களில்உத்தியோகத்தர்கள் பங்கு பற்றினர். சுற்றாடல் கரிசனை தொடர்பாக பல்வேறு அமைச்சுகள் மற்றும் நிறுவனங்கள் ஆகியவற்றால் அனுப்பப்பட்டிருந்த அமைச்சரை பத்திரத்திற்கான கருத்துக்கள்/அவதானிப்புகள்,அறிக்கைகள்,முகாமைத்துவ திட்டங்கள் என்பன சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டன.

### 4.2.8 சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசங்களை பிரகடனம் செய்தலும் முகாமைத்துவம்செய்தலும்

அட்டவணை 4.7: பிரகடனம் செய்யப்பட்ட சு.பா.பி களின் முகாமைத்தவம் மற்றும் கண்காணிப்பு

| | **சு.பா.பி வின் பெயர்** | **நிலை** |
|---|---|---|
| 01 | பொல்கொட -(வர்த்தமானி இல.-1634/23 திகதி-2009/12/30) | தற்போதைய வர்த்தமானி அறிவித்தலை திருத்துவதற்கான கலந்துரையாடல் பற்றிய இரண்டு முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. பொல்கொடசு.பா.பி எல்லலைகள் அளவியல் செயற்பாடு முன்னெடுக்கப்படுகின்றதுடன் பண்டாரகமை பிரதேச செயலகப் பிரிவின் அளவியல் செயற்பாடானது95% முடிவடைந்துள்ளது.பொல்கொட சு.பா.பி பிரதேசத்தில் பணியாற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கும் பொல்கொட சு.பா.பி வர்தமானி அறிவித்தல் பற்றிய சனசமூக தாபனங்களுக்கும் மூன்று விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. அனுமதியளிக்கப்பட்ட நடவடிக்கைகள் சம்பந்தமான12 கருத்திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. ஒரு கருத்திட்டம் நிராகரிக்கப்பட்டது.<br>**சட்ட நடவடிக்கைகள்** -நான்கு நீதிமன்ற வழக்குகள் கையாளப்பட்டன. |
| 02 | முத்துராஜவெல– (வர்தமானி இல-1466.̇.26 -திகதி-2006.̇.10.̇.13) | விழிப்பூட்டும் பயன்பாட்டுக்காக ஒரு துண்டுப்பிரசுரம் அச்சிடப்பட்டது. |
| 03 | தலன்கம குளம்- (வர்தமானி இல: -1487.̇.10 -திகத. -2007.̇.03.̇.05) | தலன்கம சு.பா.பி பற்றிய விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டம் பங்தாரர் முகவராண்மை உத்தியோகத்தர்களுக்கு நடாத்தப்பட்டது. முகாமைத்துவ திட்டம் மீதான திருத்தம் செய்துமுடிக்கப்பட்டது. |
| 04 | கிரகரி வாவி(வர்தமானி இல: -1487.̇.10 -திகதி -2007.̇.03.̇.05) | திருவிழாக்கால நிகழ்ச்சிநிரல் பற்றி கலந்துரையாடுவதற்கு் இரண்டு கூட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் திருவிழாக்கால நிகழ்ச்சிநிரலுக்கான ஒருங்கிணைகக்கப்பட்ட நிகழ்ச்சிநிரல் நடாத்தப்பட்டது.கிரகரி வாவி சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசத்தின் முக்கியத்துவம் தொடர்பில் ஹோட்டல் உரிமையாளர்கள்,வாவியின் பயனாளிகள் மற்றும் பாடசாலை பிள்ளைகள் மற்றும் சுற்றாடல் முன்னோடி பிரிகேட்ஸ் ஆகியோருக்குமூன்று விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன. சு.பா.பி திண்மக் கழிவு முகாமைத்துவம் பற்றிய விழிப்பூட்டல் செயற்பாடு நுவரெலியா மாநகரசபையின் ஒத்துழைப்புடன் வசன்த உதானய திருவிழா நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நடதாத்தப்பட்டது. திருவிழா காலத்தில் அனைத்து பங்குதாரர் முகவராண்மைகளுடன் இணைந்து கண்காணிப்பு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. திருவிழா காலத்தித்தின் போது 90,000திற்கும் அதிகமான விழிப்பூட்டும் துண்டுப்பிரசுரங்கள் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுளா பயணிகள் மத்தியில் விநியோகிக்கப்பட்டன. சு.பா.பி மற்றும் திருவிழா காலம் |

| | சு.பா.பி வின் பெயர் | நிலை |
|---|---|---|
| | | தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட முகாமைத்துவம் சம்பந்தமாக சுற்றுளா பயணிகளின் கருத்தை பெறும் வகையில் மூன்று நாள்(3) சுற்றுளா பயணிகள் பற்றிய ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டது.அடுத்த வருடத்தில் நிகழ்ச்சி நிரலை மேம்படுத்தும் நோக்கில் நிகழ்ச்சி நிரலை நடைமுறைபடுத்தும் வேளையில் நிகழ்ந்த குறைபாடுகள் மற்றும் கற்றுக்கொண்ட பாடங்கள் பற்றி கலந்துரையாடும் முகமாக திருவிழா காலத்திற்கு பின்னரான மதிப்பீட்டு கூட்டமொன்று அனைத்து பங்குதாரர் பங்கேற்றலுடன் நடைபெற்றது. |
| 05 | ஹந்தானமலை- (வர்தமானிஇல:-1641.ᐧ.28 -திகதி-2010.ᐧ.02.ᐧ.17) | வர்தமானி அறிவித்தல் திருத்தமானது தற்சமயம் இடம்பெறுகின்றது.இரண்டு ஹந்தானை சு.பா.பி முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடைபெற்றன. சு.பா.பி முகாமைத்துவ திட்டம் தயாரிக்கப்பட்டது.ஹந்தானை சு.பா.பி தொழில் நுட்ப மற்றும் நிர்வாக வழிகாட்டிகள் திருத்தப்பட்டன. என்பத்து எட்டு கருத்திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டதுடன் முற்பத்து இரண்டு விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. பன்னிரண்டு சட்ட விரோத நடவடிக்கைகள் கண்டுபிடிக்கப்பட்டு சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. |
| 06 | மொனராகல மலைத் தொடர் (மொனராகலை)- (வர்தமானி இல:- 1560.ᐧ.26 -திகதி -2008.ᐧ.8.ᐧ.01) | இரண்டு கண்காணிப்பு கூட்டங்கள் இடம்பெற்றதுடன் கண்காணிப்பு பரிசோதனைகளும் நிறைவேற்றப்பட்டன.. மொனராகல மலைத் தொடர் சு.பா.பி தொழில்நுட்ப மற்றும் நிர்வாக வழிகாட்டிகள் வரைவு செய்யப்பட்டு அவ்வரைவு குழு உறுப்பினர்களின் கருத்துக்களை பெறுவதற்காக் அவர்கள் மத்தியில் பகிர்ந்தளிக்கப்பட்டது. பங்குதாரர் முகவராண்மைகளின் பங்கேற்புடன் நீரேந்துப்பகுதிகளை வலுவூட்டுவதற்காக மரநடுகை நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைபடுத்தப்பட்டது. |

அட்டவணை 4.8: முன்மொழியப்பட்டுள்ள சு.பா.பி களின் நிலை

| | | |
|---|---|---|
| 01 | பண்சல்தென்ன உக்குவெல (மாத்தலை) | இறுதியான வரைவு பற்றிய மர்த்தமானி அறிவித்தலானது இரண்டு கூட்டங்களில் அனைத்து பங்குதாரர் மத்தியிலும் கலந்துரையாடப்பட்டதுடன்,ஒப்புதலுக்காக வரைவு சட்ட வரைஞர் திணைக்களத்திற்கும் அனுப்பப்பட்டுள்ளது. |
| 02 | வராதென்ன ஹிக்கடுவை- (கண்டி) | வர்த்தமானி அறிவித்தல் தயாரிப்பு தொடர்பில் ஆசோசனை மற்றும் பங்குதாரர் கூட்டங்கள் இடம்பெற்றன. பிரகடனம் மற்றும் வர்த்தமானி அறிவித்தல் ஆகியவை தொடர்பில் பெறப்பட்ட சபையின் அங்கீகாரம் சட்ட வரைஞர் திணைக்களத்தின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. |
| 03 | நகர ஈரநில சு.பா.பி (நுவரெலியா) | இரண்டு பங்குதாரர் ஆலோசனைக் கூட்டங்கள் இடம்பெற்று வர்த்தமானி அறிவித்தல் வரைவு செய்யப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 04& 5 | கின் ஓயா சு.பா.பி (வென்னப்புவ) | இரண்டு பங்குதாரர் கூட்டங்கள் மற்றும் கின் ஓயாயின் பரிசோதனை ஆகியன இடம்பெற்றது அதனைத் தொடரந்து வர்த்தமானி அறிவித்தல் வரைவு செய்யப்பட்டது |
| 05 | டெடிகோமுவ கண்த சு.பா.பி (குடாவெல) | பிரகடனம் செய்வதற்கான சபையின் அங்கீகாரம் பெறப்பட்டு சட்ட வரைஞர் திணைக்களத்தின் ஒப்புதலுக்காக வர்தமானி அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளது |
| 06 | பிரகடனம் செய்வதற்காக புதிய இடங்கள் இனங்காணல் | பத்திரிகை விளம்பரங்கள் ஊடாக் பிரகடனம் செய்வதற்காக சேகரிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் 500 ற்கு மேற்பட்ட இடங்கள் இனங்காணப்பட்டன. அவை பரிசீலணையில் உள்ளன.அனைத்து தகவல்களும் ஒவ்வொரு மாகாணத்தின் கீழ் அட்டவணைப் படுத்தப்பட்டு அவை மேலும் ஆயவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. |

## 4.2.9 ஈர நிலம் முகாமைத்துவம்

- தேசிய ஈரநில முகாதைத்துவ வழிநடத்தும் குழு(தே.ஈ.மு.வ.கு)

இரண்டு தேசிய ஈரநில முகாதைத்துவ வழிநடத்தல் குழுக் கூட்டங்கள் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளரின் தலைமையில் இடம்பெற்றன. ஒலி முகாமைத்துவம் மற்றும் ஈரநிலங்கள் பேணுகை தொடர்பில் இடம்பெற்றதுடன் தேசிய ஈரநிலக் கொள்ளை மற்றும் மூலோபாயங்களில் குறித்துரைக்கப்பட்டு உள்ளவாறு பல முக்கியமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. தற்போது அமுலில் உள்ள தேசிய ஈரநில கொள்கை மற்றும் மூலோபாயங்களை மீயாள்வு செய்யும் பொறுப்பானது உயிர் பல்வகைத்தன்மை செயலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டது. இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தால் கொழும்பு மாநகர பிரதேசத்திற்கு தயாரிக்கப்பட்ட ஈரநில மூலோபாய திட்டமானது கலந்துரையாடப்பட்டதுடன் தேசிய ஈரநில முகாதைத்துவ வழிநடத்தும் குழுவில் அங்கீகரிக்கப்பட்டது.

- ‘‘தெத்பிம் அசிரிய’’ பற்றிய கைப்புத்தகம்

‘‘தெத்பிம் அசிரிய’’ பற்றிய கைப்புத்தகம் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டு தற்போதைய தகவல்களுடன் வெளியிடப்பட்டது. இந்த புத்தகமானது மாணவர்களின் மேலதிக வாசிப்பு புத்தகமாக கல்வி அமைச்சால் அங்கீகரிக்கப்பட்டது

### 4.2.9.1 உலகஈரநிலத் தினம்

1997 ஆம் ஆண்டின் ரம்சாசர் மறபின் பிரகாரம் அறிவிக்கப்பட்டு பெப்ரவரி 2 ஆம் திகதி கொண்டாடப்படும் உலக ஈரநிலத் தினமானதுஇந்த ஆண்டில்‘‘எமது எதிர்காலத்திற்கான ஈரநிலங்கள்’’ என்ற தொனிப்பொருளின் கீழ் நினைவுகூறப்பட்டது.ம.சு.அ வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் மத்திய சுற்றாடல் அதிகாரசபையுடன் இணைந்து ஈரநிலம் சம்பந்தப்பட்ட குறுக்கெழுத்துப் புதிர் போட்டி, புகைப்பட போட்டி ஆகிய நிகழ்சித்திட்டமொன்றை நாடலாவிய ரீதியில் ஒழுங்கமைத்தது.இவை வரையறுக்கப்பட்ட விஜய பத்திரிகையின் ஆதரவில் நடாத்தப்பட்டன.இந்த போட்டிகள் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் நடாத்தப்பட்டன.

பணப்பரிசு மற்றும் இரண்டு நாட்களுக்கு வனசீவராசிகள் பூங்காவில் பெற்றோர்களுடன் தங்கும் வசதி உட்பட பெறுமதிவாய்ந்த பரிசில்கள் சான்றிதழ்களுடன்

வெற்றியாளர்களுக்கு இவ்விழாவில் வழங்கப்பட்டன.

மேலும், உலக ஈரதினத்தை நினைவு கூறும் 48 நிகழ்ச்சித்திட்டங்கள் மாகாண மற்றும் இப்பரிவின் முக்கிய இலக்காக பின்வரும் விடயங்கள் காணப்படுகின்றன. அவையாவன:ஆராய்ச்சி/ஆய்வுகள்/அளவைகள் ஆகியவற்றை நடாத்தல், மேம்படுத்தல், அனுசரணை வழங்கல், தகவல்களை பரவச்செய்தல் மற்றும் புவியியல் தகவல் முறைமை மற்றும் தொலை உணர்வு தொழில்நுட்பம் ஆகியவற்றை பிரயோகித்தல் ஊடாக இலங்கையின் இயற்கை வழங்களின் நிலையான முகாமைத்துவத்தை உறுதிசெய்து சுற்றாடலை பாதுகாத்தல், மேம்படுத்தல் மற்றும்அளவுருக்களை விருத்தி செய்து சுற்றாடல் சீரழிவை தடுப்பதற்கான தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளை வெற்றிகரமாக நடைமுறைபடுத்தல் மற்றும் அனுசரணை வழங்கள்.

மாவட்ட மட்டங்களிலும் ம.சு.அ யால் நடாத்தப்பட்டது.

## 4.3 ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப்பிரிவு

### 4.3.1ம.சு.அ க்கு பொருத்தமான ஆராய்ச்சி தரவுத்தளத்தை அபிவிருத்தி செய்தல

விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்பு ஆகியவற்றுக்கான ஒருங்கிணைப்பு செயலகத்தால் (COSTI) அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள ஆராய்ச்சி தரவுத்தளத்தில் சுற்றாடல் துறையின் இணையத்தள வாயிலை உள்ளடக்கும் வகையில் பல கலந்துறையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன.இந்த இணையத்தளத்தின் பெயர் “ஸ்ரீலங்கா இன்னோவேசன் டேஸ்போர்ட்ஸ்”




உரு 4.3: ம.சு.அ க்கு பொருத்தமான ஆராய்ச்சி தரவுத்தளம்

### 4.3.2 சுற்றாடலுக்கு பொருத்தமான ஆராய்ச்சி, ஆய்வுகள் மற்றும் அளவைகள் ஆகியவற்றை நடாத்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் மேம்படுத்தல்

**I. ம.சு.அ பணியாட்களுக்கு வழங்கப்படும் சேவைகள் மற்றும் செயற்பாடுகள் பற்றிய மதிப்பீடும் அவற்றின் பயனுறுதித் தன்மையும்**

ம.சு.அ பணியாட்களுக்கு வழங்கப்படும் சேவைகள் மற்றும் செயற்பாடுகள் பற்றிய மதிப்பீடும் அவற்றின் பயனுறுதித் தன்மை ஆகியவற்றை மதிப்பீடு செய்வாதற்காக ஆய்வொன்று நடாத்தப்பட்டது. ஆய்வின் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் பல முகாமைத்துவ தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

## II. தொலை உணர்வு மற்றும் புவியியல் தகவல் முறைமை தொழில் நுட்பத்தினி பிரயோகத்தின் மூலம் கண்டி மாவட்டத்தின் சீரழிந்துள்ள காணிகளை இனங்காணல்

காணிச்சீரழிவானது இலங்கையின் மலைநாடு மற்றும் மத்திய பகுதியில் பாரிய அச்சுறுத்தலாக காணப்படுகின்றது. இச்சீரழிவுக்கு பல காரணிகள் பல மட்டங்களில் வளிசமைக்கின்றன. பாலைவனமயமாதல்/காணிச் சீரழிவு பற்றிய இலங்கையின்அறிக்கை(2000)யானது கனரக மண் இழப்பு, உயர் வண்டல் விளைச்சல், மண் வளம் குறைவடைதல், மற்றும் பயிர் விளைச்சல் குறைவடைதல்,விவசாயக காணிகளின் அளவு குறைவடைதல், உப்பு நீக்கமடைதல்,மண் சறிவு மற்றும் காடழித்தல் மற்றும் காடுகள் சீரழிதல் ஆகியவற்றை முக்கிய காணிச் சீரழிவு சுட்டிகளாக சுட்டிக்காட்டியுள்ளது மலை நாடு மற்றும் மத்திய நாட்டின் நிலமானது மேல் மண்ணிலிருந்து கரைந்து செல்லதற்கு மண் அரிப்பானது மிகவும் தீவிரமாக வழிசமைப்பதுடன் இறுதியில் காணிச்சீரழிவிற்கும் இட்டுச்செல்கின்றது. ஆகையால்,இந்த நிலங்களை இனங்கண்டு எதிர்காலத்தில் முறையான முகாமைத்துவத்துடன் நிலைத்திருக்கக்கூடிய முறையில் பயன்படுத்துவது மிகவும் முக்கியமான தேவையாக கருதப்படுகின்றது.

### நோக்கம்

பல்வேறு நோக்கங்களுக்காக பயன்படுத்தக்கூடிய தற்போதுசீரழிந்துள்ள மற்றும் காலியாகவுள்ள காணிகளை கண்டி மாவட்டத்தில் இனங்கண்டு பாதுகாக்க வேண்டிய அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளல்.

### முறைமை

பொருளாதார ரீதியில் சிக்கனமானதும் நேரத்தை விரயாமாக்காத முறைமையான தொலை உணர்வு முறைமை கண்டி மாவட்டத்தில் சீரழிந்துள்ள காணிகளை இனங்காண்பதற்கு பயன்படுத்தப்பட்டது. இந்த முறைமையானது லேண்ட்செட் ஓ.எல்.ஐ செயற்கைகோள் படங்கள், வீழ்ப்டிவு தரவு, மண் தரவு,சட்டில் ரேடார் டொபோபிராபிக் டிஜிடல் எலிவேசன் மொடல்(SRTM DEM)மற்றும் சமூகவியல் தரவு (சனத்தொகை செறிவு, கமத் தொழில் காணி மற்றும் மனிதன் இடையிலான விகிதம் மற்றும் வறுமை மட்டங்கள்) ஆகிய மேற்படி தரவுகள் பயன்படுத்தப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டது.

- மேற்பரப்பு நீர்வடிவுநீரோடைகள்,ஆறுகள், கடல், ஏறி மற்றும் சமுத்திரம் போன்று இறுதியில் நீர்தொட்டியாக முடிவடையும் வறையில் அதிகளவிலான மழைநீர் நிலத்தில் படிதல்மேற்பரப்பு நீர்வடிவு என வரைவிலக்கனம் தரப்படுகின்றது.
- உலகளாவிய மண் இழப்பு சமன்பாட்டின் மூலம் **மண் இழப்பை** தீர்மானித்தல்
- **தாவர உள்ளடக்கம்,** LANDSAT, OLI என்பன பெறப்பட்டு NDVI கணிக்கப்பட்டுள்ளது அத்துடன் தொலை உணர்வு தொழில்நுட்பத்தின் மூலம் படங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன.

### விளைப்பயன்

இந்த மூன்று தனித்தனியான படிமங்களான நீர்வடிவு,தாவர உள்ளடக்கம் மற்றும் மண் இழப்பு ஆகியவை ஒருங்கிணைக்கப்பட்டு பௌதீக சீரழிவை காட்டும் படம்(உரு.1) பெறப்பட்டுள்ளது.கண்டி மாவட்டத்தில் உலகலாவிய கொள்ளை மற்றும்

முலோபாயம்(GPS)மூலம் பெறப்பட்ட கிட்டத்தட்ட 120அமைவிடங்களின் தரவுகளின் அடிப்படையில் இறுதியான **விளைப்பயன்** சரிபார்க்கப்பட்டது.இந்த ஆய்வில் சமூக-பொருளாதார காரணிகள் ஒருங்கிணைக்கப்பட முடியாதென்பது இனங்காணப்பட்டுள்ளது.

அதற்கிணங்க,நக்கல்ஸ், விக்டோரியா, ரண்தெனிகல, ரன்தெம்பே சரணாலயம், ஹன்தான, கலஹா, தொலுவ மற்றும் தெல்தொட ஓதுக்குப்புற தேயிலை தோட்டங்கள் மற்றும் நாவலபிடிய மலைப் பிரதேசம் போன்ற மலைசார்ந்த பிரதேசங்களில் ஏற்பட்டுள்ள கனிசமான காணிச்சீரழிவுகளை இந்த படமானதுஅவதானித்தது.எதிர்கால காணிப்பயன்பாட்டை திட்டமிடல் மற்றும் நிலையான காணி முகாமைத்துவத்திற்கான பேணல் நடவடிக்கைகள் ஆகியவற்றுக்காக முக்கியமானவொரு கருவியாக இந்த படத்தை பயன்படுத்தலாம்.




**உரு 4.4: கண்டி மாவட்டத்தின் பௌதீக சீரழிவைக் காட்டும் படம்**

**III. பொலன்னறுவை மாவட்டத்தின் காணிப்பயன்பாடு/காணி உள்ளடக்கத்தின் நிலைமாற்றிகள் ஆகியவற்றுடன் சுற்றாடல் மற்றும் சமூக-பொருளாதார பிரச்சினைகள் பற்றிய மதிப்பீட்டு ஆய்வுக் கட்டுரையொன்றை தயாரித்தல்**

பயன்பாட்டு படங்கள் தயாரிக்கப்பட்டன.1985 மற்றும் 2001 ஆம் ஆண்டு படங்கள் முறையே 1: 50,000 மற்றும் 1: 100,000 அளவில் தயாரிக்கப்பட்டன. 2015ஆம் ஆண்டில் படங்கள் கூகுல் புவிப் படங்களின் உதவியுடன் தயாரிக்கப்பட்டன.




1972 முதல் 2015 ஆம் ஆண்டுவரையில் காணிப்பயன்பாட்டின் நிலை மாற்றிகள் கருத்தில் எடுக்கப்பட்டன. காடுகள், வீட்டுத் தோட்டம் மற்றும் வயற்காணி ஆகியற்றின் பயன்பாடுகள் தொடர்பில் விசேட கரிசனை காட்டப்பட்டது. 1972ஆம் ஆண்டில் ஆரம்பப் பட வகையாக வான்வழி புகைப்படங்கள் பயன்படுத்தப்பட்டு நில அளவை திணைக்களத்தால் ஒரு அங்குளமென பெயரிடப்பட்ட 1:63,000 அளவிலான காணிப்

1972 முதல் 1985 ஆண்டு வரையில் காட்டு நிலப்பரப்பளவில் குறைந்து செல்லும் போக்கொண்று அவதானிக்பட்டது. 30-வருட யுத்தம்அதற்கான முக்கிய காரணமாக விளங்கியது. புதிய அபிவிருத்திச் நிகழ்ச்சித் திட்டத்தின் காரணமாக யுத்தத்தின் பின்னர் மீண்டும் காட்டு நிலத்தின் பரப்பளவானது குறைவடைந்தது. வீட்டுத் தோட்டம் மற்றும் வயற்காணிகள் ஆகியவற்றின் பரப்பளவானது படிப்படியாக அதிகரித்தது.

உரு 4.5: 1972முதல2015 வரை காட்டு நிலப்பரப்பளவில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்



உரு 4.6: 1972 முதல் 2015வரையில் வீட்டுத் தோட்ட நில பரப்பளவில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்



உரு 4.7:1972 முதல் 2015வரையில் வயற்காணிப் பரப்பளவில் ஏற்பட்டுள்ள மாற்றம்

### 4.3.3 சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் திட்டமிடல் பற்றிய சர்வதேச மாநாடு – 2015

மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஆணையின் இலக்குகளை அடைவதற்கு சுற்றாடல் துறையில் ஏற்பட்டுள்ள உலகளாவிய புதிய சாதனைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் மிகவும் முக்கியம் ஆகையால் **2015 பெப்ரவரி 23ஆம் திகதி பத்தரமுல்லையில் அமைந்துள்ள**

**“வோட்டர்ஸ் எட்ஜ்ஜில்”**சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் திட்டமிடல் பற்றிய சர்வதேச மாநாடொன்று ஒழுங்கமைக்கப்பட்டு மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் வெற்றிகரமாக நடாத்தப்பட்டது.

தெரிவுசெய்யப்பட்ட நாற்பத்து மூன்று(43) ஆய்வு பற்றிய முன்னிலைப்படுத்தல்கள் பின்வரும் ஆறு பிரதான கருப்பொருள்களில் பதினொரு சுவரொட்டி விளக்கக்காட்சிகளுடன் இடம்பெற்றன.

1. சுற்றாடல் கண்டுபிடுப்புகள்
2. இயற்கை வள முகாமைத்துவம்
3. மாசுக்கட்டுப்பாடு மற்றும் முகாமைத்துவம்
4. சுற்றாடல் மற்றும் நிலையான அபிவிருத்தி
5. சுற்றாடலில்புவிசார்-தகவலியல் பிரயோகங்கள்
6. சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வு

உரு4.8: நடவடிக்கைகளின் அட்டைப்பக்கம்

### 4.3.4 இலங்கையில் நுளம்பு அச்சுறுத்தலை கட்டுப்படுத்தும் புதிய மாற்று வழியை கண்டுபிடித்தல்

நுளம்பால் காவப்படும் நோய்கள் ஒரு பாரிய அச்சுறுத்தலாக காணப்படுவதுடன் சுகாதாரத்துறை சேவைகள் மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றின் மீது அதன் மூலம் சுமத்தப்படும் பாரிய சுமையானது கடந்த தசாப்தங்களில் கனிசமாக அதிகரித்தும் வந்துள்ளது. ஆகையால்,இந்த நிலைமையை கருத்தில் எடுத்த மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது புதிய மாற்றுவழிகள் மற்றும் மூலோபாயங்கள் ஆகியவற்றை ஆய்வுசெய்து பொருத்தமான தீர்வொன்றை காணும் வகையில் பல்கலைக்கழகம் மற்றும் சுகாதாரத் துறை நிறுவனங்களைச் சேர்ந்த விஞ்ஞானிகள்/நிபுணர்களை உள்ளடக்கியமன்றம் ஒன்றை உருவாக்குகின்றது.டெங்கு நோய்க் காவியான நுளம்புகளை கட்டுப்படுத்தும் புதிய

வெளிநாட்டு நிறுவனங்கள்/பல்கலைக்கழகங்கள் மற்றும் உள்நாட்டு நிறுவனங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த பிரதான கருப்பொருள்களில் நிபுணத்தவம் பெற்ற பிரதான பேச்சாளர்களால் அவர்களின் பெறுமதிவாய்ந்த முன்னிலைப்படுத்தல்கள் மாநாட்டு அமர்வுகளில் இடம்பெற்றன. கிட்டத்தட்ட 110 அழைப்பாளர்கள் வருகை தந்திருந்திருந்தனர். 2015 பெப்ரவரி 23ஆம் திகதி மாலையில் இடம்பெற்ற ஆரம்ப அமர்வில் ம.சு.அ பங்கேற்றது.2015 பெப்ரவரி 24ஆம் திகதி இடம்பெற்ற தொழில்நுட்ப அமர்வில் பல்வேறு நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த கிட்டத்தட்ட 250 உத்தியோகத்தர்கள் பங்கேற்றனர். மூன்று சமாந்தர அமர்வுகளில் முன்னிலைப்படுத்தல்கள் நடாத்தப்பட்டன.




கட்டுப்பாட்டு ஊக்கிகள் உட்பட சுற்றாடல் சிநேகபூர்வ மற்றும் வினைத்திறன் மிக்க நோய்க்காவி கட்டுப்பாட்டு

செயல்நுனுக்கங்களை தீர்மானிப்பது இந்த குழுவின் பிரதான கவனமாக இருந்தது.வொல்பாசியா (*Wolbachia*)*பக்டீரியாவை* பயன்படுத்தி மக்களிடையே டெங்கு வைரஸ் பரிமாற்றம் ஏற்படுவதை குறைப்பது தொடர்பில் மேற்கொண்ட கலந்துரையாடல் அவ்வாறான உயிரியல் கட்டுப்பாட்டு ஊக்கிகளில் ஒன்றாகும்.

இருப்பினும், எமது இயற்கை சுற்றுச்சூழலில் உயிருடன் வாழும் பூச்சிகளில் இருந்து வொல்பாசியா (*Wolbachia)* இனப்பிரிவை தனிமைப்படுத்தும் செயற்பாட்டிற்கு மூன்று வருடங்களுக்கு மேற்பட்ட காலம் தேவைப்படல் மற்றும் உயிரியல் கட்டுப்பாட்டு ஊக்கியை இறக்குமதி செய்தல் மற்றும் அத்தகைய உயிரியல் கட்டுப்பாட்டு ஊக்கியை சுற்றாடல் மீது எவ்விதமான எதிர் விளைவுகளையும் தோற்றுவிக்காது மிகவும் கவனமாக அறிமுகம் செய்தல் தொடர்பில் உள்ளடக்கப்பட்டிருந்த பலவிதமான ஒழுங்குவிதிகள் மற்றும் நடைமுறைகள் ஆகியன இந்த செயற்பாடு தொடர்பில் காணப்பட்ட சவால்களாகும்

ஆகையால், இந்த செயற்பாடு தொடர்பில் காணப்படும் மேற்படி சவால்களை தீர்ப்பது சம்பந்தமாக ஆதரவு அளிக்கவும் ஒருங்கிணைப்பை மேற்கொள்ளவும் ம.சு.அ தீர்மானம் மேற்கொண்டது.

- அவுஸ்திரேலியாவில் அமைந்துள்ள மொனாஸ் பல்ககைக்கழகத்தின் கீழ் இயங்கும் டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கருத்திட்ட பணிப்பாளர் டொக்கடர் பீடர் ரைனுடன் ம.சு.அ தொடர்பினை ஏற்படுத்தியது.அவுஸ்திரேலியா மொனாஸ் பல்ககைக்கழகம் டெங்கு நுளம்புகளை கட்டுப்படுத்தும் புதிய அனுகுமுறையாக வொல்பாசியாவை(*Wolbachia)*விருத்தி செய்யும் செய்பாட்டில் வெற்றி பெற்றுள்ளதுடன் அவர்கள் தற்போது அவுஸ்திரேலியா, பிரேசில், கொலம்பியா, இந்தோனேசியா மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளில் பல களப் பரிசோதனைகளையும் வெற்றிகரமாக நடாத்துவதிலும் ஈடுபட்டுள்ளனர். இலங்கையில் டெங்குநோய் கட்டுப்பாட்டிற்கு பொருப்பாக உள்ள முக்கிய அரச முகவராண்மைகளுடன் தகவல்களை பகிர்ந்துகொள்வதற்கும் பங்குடமையுடன் பணியாற்றுவதற்கும் இணங்கியுள்ளனர்
- ஆய்வுக்காக ஆய்வுகூட பரிசோதனையில் ஈடுபடும் நோக்கங்களுக்காக அவுஸ்திரேலியாவில் இருந்து வொல்பாசியாவை(*Wolbachia)* இறக்குமதி செய்வதற்கான அங்கீகாரம் ஒன்றை பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.
- இந்த துறையைச் சேர்ந்த வளவாளர் என்ற வகையில்மொனாஸ் பல்கலைக்கழக டெங்கு ஒழிப்பு நிகழச்சிநிரல் கருத்திட்ட பணிப்பாளர் பேராசிரியர் பீட்டர் ரையன் மற்றும் நிபுணர்கள்/விஞ்ஞானிகள் மற்றும் ஒழுங்கமைப்பாளர்கள் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட பங்குதார்கள் ஆகியோரின் பங்குபற்றலுடன் இந்த முறைமையின் சாத்தியக்கூறு மற்றும் பிரயோகம் பற்றி ஆய்வுசெய்யும் நோக்கில் பயிற்ச்சிப்பட்டறை ஒன்றுஇலங்கையில் அமைந்துள்ள தலவதுகொட கிராண்ட் மொனாக் ஹோட்டலில் 2015 மார்ச் 3ஆம் திகதி ஒழுங்கமைக்கப்பட்டது.பங்குபற்றியவர்களில் 90% டெங்கு ஒழிப்பில் இந்த புதிய உயிரியல் கட்டுப்பாட்டு முறைமையை நடைமுறைபடுத்துவதற்கு இணங்கினர்.

- சுகாதார அமைச்சு, மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபை ஆகியவற்றைச் சேர்ந்த சிரேஸ்ட உத்தியோகத்தர்களின் பங்கேற்புடன் 2016 ஆம் ஆண்டில் நடாத்தப்படவுள்ள கருத்திட்ட திட்டமிடல் கூட்டமொன்று தற்சமயம் அடடவணையிடப்படுகின்றது.

***நுளம்பு முட்டைப் புழுக்களின் பொறித் திறனை பரிசீலனை செய்யும் முன்னோடி கருத்திட்டம்***

மஹாவத்தகமயில் பணியாற்றும் பொது சுகாதார பரிசோதகர் ஒருவரால் அபிவிருத்தி செய்யப்பட்ட நுளம்பு முட்டைப்புழு பொறித்திறனை தீர்மானிக்கும் முன்னோடி கருத்திட்டமொன்று நடைமுறைபடுத்தப்பட்டது.

எட்டு நுளம்பு முட்டைப்புழுப் பொறிகள் ம.சு.அ வளவில் தாபிக்கப்படிருந்தன. நுளம்பு முட்டைப்புழு பொறிகள் இரண்டு மாதங்களுக்கு மேலாக அங்கு இருந்தமை நெருக்கமான அவதானிப்பின் மூலம் தெரியவந்தது. இந்த ஆய்வுக் காலத்தின் போது அவதானிக்கப்பட்ட பலவீனங்கள் காரணமாக உபகரணமானது மேலதிக மேம்பாட்டிற்காக அதன் கண்டுபிடிப்பாளருக்கு அனுப்பப்பட்டது.

### 4.3.5 இடம்சார் குறிப்பீட்டு தரவுத்தளத்தை இற்றைப்படுத்தல்

இலங்கையில் தற்போது பரவலாகியுள்ள சூழலை மாசுபடுத்தும் கைத்தொழில்களின் நிலையை மீளாய்வுக்கு உட்படுத்தி குறித்துரைக்கப்பட்ட கைத்தொழில்கள் பற்றிய புவியியல்-இடம்சார் தரவுத்தளம் தயாரிக்கப்பட்டதுடன் இத்தரவுத்தளமானது




தொடர்ந்தும் இற்றைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுகின்றது. இதற்கிணங்க, இலங்கையில் காணப்படும் உயர்ந்த அளவில் சூழலை மாசுபடுத்தும் கைத்தொழில்களின் மொத்த எண்ணிக்கை கிட்டத்தட்ட 10,441 ஆகவும் மத்திய அளவில் சூழலை மாசுபடுத்தும் கைத்தொழில்களின் எண்ணிக்கை 10,442 ஆகவும் உள்ளது. இந்த தரவுத்தளமானது மாசுக் கட்டுப்பாட்டு பொறிமுறையை நடைடுறைபடுத்துவதிலும் புதிய கைத்தொழிற்சாலைகளை தாபிப்பதிலும் மிகவும் பயனுள்ளதாக உள்ளது.

உரு 4.9: இலங்கையிலுள்ள கைத்தொழில்களின் இடம்-சார்ந்த பரவல் 2015

அட்டவணை 4.9: மாவட்ட-மட்ட கைத்தொழிலகள் பற்றிய தரவுத்தளத்தின் இறுதிச்சுருக்கம்-டிசம்பர், 2015

| | மாகாணம் | மாவட்டம் | மொத்தA, B, C & BOIதொழில்க | மொத்த“A " வகை | மொத்த “B" வகை | மொத்த “C" வகை | மொத்தBOI தொழில்க |
|---|---|---|---|---|---|---|---|

| | | | ள் | | | | ள் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | மேல் | கொழும்பு | 5561 | 1988 | 1470 | 1835 | 268 |
| | | கம்பஹ | 5108 | 1565 | 1347 | 1876 | 320 |
| | | களுத்தரை | 2583 | 666 | 647 | 1138 | 132 |
| 2 | தென் | காலி | 2420 | 467 | 804 | 1113 | 36 |
| | | மாத்தறை | 2118 | 371 | 508 | 1218 | 21 |
| | | ஹம்பாந்தொட | 2237 | 308 | 293 | 1608 | 28 |
| 3 | கிழக்கு | திருகோணமலை | 757 | 211 | 187 | 340 | 19 |
| | | அம்பாறை | 2036 | 300 | 402 | 1318 | 16 |
| | | மட்டக்களப்பு | 1127 | 187 | 332 | 596 | 12 |
| 4 | ஊவா | பதுலை | 1766 | 351 | 289 | 1117 | 9 |
| | | மொனராகலை | 1926 | 281 | 218 | 1415 | 12 |
| 5 | மத்திய | கண்டி | 3584 | 674 | 571 | 2290 | 49 |
| | | மாத்தலை | 1235 | 290 | 256 | 667 | 22 |
| | | நுவரெலியா | 664 | 147 | 131 | 370 | 16 |
| 6 | வடமத்திய | அனுராதபுரம் | 2384 | 550 | 446 | 1363 | 25 |
| | | பொலன்னறுவை | 846 | 201 | 267 | 365 | 13 |
| 7 | சப்பரகமுவ | இரத்தினபுரி | 2816 | 530 | 646 | 1618 | 22 |
| | | கேகாலை | 2197 | 491 | 645 | 1038 | 23 |
| 8 | வட | யாழ்ப்பாணம் | 1775 | 327 | 308 | 1136 | 4 |
| | | மன்னார் | 360 | 89 | 82 | 187 | 2 |
| | | வவுனியா | 392 | 122 | 76 | 186 | 8 |
| | | கிளிநொச்சி | 489 | 50 | 164 | 273 | 2 |
| | | முல்லைத்தீவு | 398 | 71 | 106 | 221 | 0 |
| 9 | வடமேல் | குருநாகல் | 355 | 150 | 205 | 0 | 0 |
| | | புத்தளம் | 96 | 54 | 42 | 0 | 0 |
| | மொத்தம் | | 45,230 | 10,441 | 10,442 | 23,288 | 1,059 |
| | ஒவ்வொரு வகையின் % | | | 23 | 23 | 51 | 2 |

### 4.3.6 மாவட்ட வளங்கள் பற்றிய டிஜிடல் சுருக்கக்குறிப்பு இறுவட்டுக்கள் தயாரித்தலும் அச்சிடலும்

ம.சு.அ வளங்கள் அபிவிருத்தி பிரிவானது இயற்கை வளங்கள், நிருவாக எல்லைகள், சமூக-பொருளாதார, குடிப்பரம்பல், தொல்பொருள் தரவுகள் மற்றும் ஏனைய தகவல்கள் பற்றிய மையப்படுத்தப்பட்ட இடம்-சார் தரவுத்தளத்தை பேணியும் இற்றைப்படுத்தியும் வருகின்றது.இலகுவாக பார்வையிடும் வகையில் காணப்படும் தரவுத்தளத்தை பயன்படுத்தி டிஜிடல் மாவட்ட வளங்கள் சுருக்கக் குறிப்புகள் தயாரிக்கப்பட்டன. அதற்கிணங்க, இறுவட்டுப் படங்கள் பிரதேச செயலகத்தின் மட்டத்தில் அபிவிருத்தி செய்யப்பட்டன. காலி, மாத்தறை, பொலன்னறுவை மற்றும் நுவரெலியா

ஆகியவற்றின் வளங்கள் பற்றிய சுருக்கக்குறிப்புகள் அச்சிடப்பட்டதுடன் கண்டி மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களின் வளங்கள் பற்றிய டிஜிடல் சுருக்கக்குறிப்புகள் அபிவிருத்தி செய்யப்படும் நிலையில் காணப்படுகின்றன.













உரு4.10:பொலன்னறுவை, காலி, மாத்தறை மற்றும் நுவரெலியா மாவட்டங்களின் சுற்றாடல் வளங்கள் பற்றிய சுருக்கக்குறிப்புகளின் முகப்புப் பக்கங்கள்

**4.3.7வள அபிவிருத்திப் பிரிவு, தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகம் ஆகியவற்றில் பணியாற்றும்உத்தியோகத்தர்களின் இயலுமையை கட்டியெடுப்புதல்**

I.வள அபிவிருத்திப் பிரிவின் இரண்டு உத்தியோகத்தர்களுக்கு ARC புவியியல் தகவல் முறை(GIS) மென்பொருள் பயன்பாடு மற்றும் அதன் பியோகங்கள் பற்றி பயிற்ச்சி அளிக்கப்பட்டது- 5 நாள் உள்ள்நாட்டு பயிற்ச்சி.

II.உலகளாவிய இடவாக்கமைவு(GPS)கையாளல், கூகுல் புவி சார்பு பயன்பாடு பற்றிய பயிற்ச்சி நிகழ்ச்சித்திட்டம் இடம்பெற்றதுடன் தலைமை அலுவலகம் மற்றும் கம்பஹ மாவட்ட அலுவலகம் ஆகியவற்றின் உத்தியோகத்தர்களுக்கு புவியியல் தகவல் முறை(GIS)/ தொலை உணர்வு (RS) பற்றிய பயிற்ச்சி இடம்பெற்றது.

### 4.3.7.1 வர்த்தக அடிப்படையிலான புவியியல் தகவல் முறை (GIS)சேவைகள்

அட்டவணை 4.10: வர்த்தக அடிப்படையில் வழங்கப்படும் **புவியியல் தகவல் முறை**(GIS)சேவைகள

| **2015ஆண்டில்ஈட்டிய வருமானம்** | | | |
|---|---|---|---|
| **இல** | **நிறுவகம்/திணைக்களம்** | **பட விபரங்கள்** | **வருமானம்/ருபா** |
| 1 | வரையறுக்கப்பட்ட லலன் றப்பர்ஸ்(தனியார்) | இலங்கை கைத்தொழில் தரவுகள் – 2895 கைத்தொழில்கள் | 65554.38 |
| 2 | களனிப் பல்கலைக்கழகம் | காலி மாவட்ட மாது கங்கை சிற்றாற்றின் காணிப் பயன்பாட்டு படம் | 4,245.75 |
| 3 | மிஸ்.சமன்கி ஹேவாகே | உணர்வுமிக்க பகுதியின் படம் | 5,944.05 |
| 4 | களனிப் பல்கலைக்கழகம் | உணர்வுமிக்க பகுதியின்குறுவட்டு மற்றும் சுருக்கக்குறிப்பு குறுவட்டுக்கள் | 900 |
| 5 | றுகுனு பல்கலைக்கழகம் | உணர்வுமிக்க பரப்பின் குறுவட்டு மற்றும் சுருக்கக்குறிப்பு குறுவட்டுக்கள் | 1,100.00 |
| 6 | வரையறுக்கப்பட்ட மொத்த முகாமைத்துவ தீர்வுகள்(தனியார்) | சுருக்கக்குறிப்பு குறுவட்டுக்கள் | 200 |
| 7 | ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | சுருக்கக்குறிப்பு குறுவட்டுக்கள் | 700 |
| 8 | தேசிய நீர் வழங்கள் வடிகாலடைப்புச்சபை | சுருக்கக்குறிப்பு குறுவட்டுக்கள் எட்டு | 2,100.00 |
| 9 | ஆனந்த ரத்நாயக்க | திண்மக் கழிவு முகாமைத்துவ நிலையங்களின் பரம்பல் பற்றிய படம் | 666 |
| 10 | பேராசிரியர் சின்ஹகுமார | சுருக்கக்குறிப்பு குறுவட்டுக்கள் 4 | 800 |
| 11 | வள அபிவிருத்தி ஆலோசகர்கள் | உணர்வுமிக்க பகுதியின் குறுவட்டு | 500 |
| 12 | எஸ்.ஜ.எஸ். சுபசிங்ஹ | உணர்வுமிக்க பகுதியின் குறுவட்டு | 500 |
| 13 | வரையறுக்கப்பட்ட சீவோட்டர் கொன் தனியார் | உணர்வுமிக்க பகுதியின் குறுவட்டு -கம்பஹ மாவட்டம் | 200 |
| 14 | இலங்கை முதலீட்டுச்சபை | பியகம ஏற்றுமதி பதனிடல் வலயக் கிளைக்கான விஜயத்திற்கான பரிசோதனை கட்டணம் | 12298.8 |
| 15 | மத்திய பொறிமுறை ஆலோசனை பணியகம்(ம.பொ.ஆ.ப) | மாதிவல கிழக்கு இடமாறல் பகுதி மேம்பாடு தொடர்பில் முன்மொழியப்பட்டுள்ள | 5,944.05 |

| 2015ஆண்டில்ஈட்டிய வருமானம் | | | |
|---|---|---|---|
| இல | நிறுவகம்/திணைக்களம் | பட விபரங்கள் | வருமானம்/ருபா |
| | | கருத்திட்டத்திற்கான உணர்வுமிக்க பகுதியின் படத்திற்கான சு.ம ஆய்வு | |
| 16 | களனிப் பல்கலைக்கழகம் | சுருக்கக்குறிப்பு குறுவட்டு | 200 |
| 17 | மத்திய பொறிமுறை ஆலோசனை பணியகம்(ம.பொ.ஆ.ப) | முன்மொழியப்பட்டுள்ள கலின்கநுவர-அங்கமெடில்ல இறைக்கும் தொகுதிக்கான கருத்திட்டம் பற்றிய ஆ.சு.மதிப்பீட்டு உணர்வுமிக்க பகுதியின் படம் | 16983 |
| 18 | ஐமுழூே காஸ்ட்ரல் கமத்தொழில் சேவை | ஹம்பாந்தோட்டை 50-ஏக்கர் காணியின் உணர்வுமிக்க பகுதியின் படம் | 3,679.65 |
| 19 | வள அபிவிருத்தி ஆலோசகர்கள் | ஊணர்வுமிக்க பகுதி குறுவட்டு மற்றும் சுருக்கக்குறிப்பு குறுவட்டு | 700 |
| 20 | நுஆடுஆலோசனை தனியார் லிமிடெட் | உணர்வுமிக்க பகுதி குறுவட்டு | 500 |

**4.3.7.2 ம.சு.அ ஏனைய பிரிவுகளுக்கு புவியியல் தகவல் முறைசேவைகள்**

வேண்டுகோளின் அடிப்படையில் பின்வரும் சேவைகள் வழங்கப்பட்டன.

- தெரிவு செய்த கருத்திட்டப் பகுதில் அல்லது அதைச் சுற்றிவர சுற்றாடல் உணர்வுமிக்க பகுதியை மற்றும் காணிப்பயன்பாடு/காணியின் உள்ளடக்கம் ஆகியவற்றை இனங்காணல்
- தெரிவு செய்த இடங்களின் சுற்றாடல் உணர்வுமிக்க பகுதிகளின் படங்களை தயாரித்தல்
- காணிப் பயன்பாடு/காணி உள்ளடக்கம் பற்றிய படங்கள் தயாரித்தல்
- செயற்கைகோள் உருவங்கள் பகுப்பாய்வு
- GPS இடங்களை பெற்றுக்கொள்ளல்
- படங்களை டிஜிடல் முறையாக்கம் செய்து வகைப்படுத்தல்
- படங்களை ஸ்கானிங் செய்து அச்சிடல்

# 5.0 சட்டப்பிரிவு

***"ஒருவருக்கொருவர் உயிர் வாழ்வதற்காக சுற்றுச் சூழலை மேம்படுத்தும் வகையில் சுற்றாடல் பற்றிய விழிப்புணர்வை ஒழுங்கமைத்து உருவாக்குவதற்காக"***

**தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கை**

சட்டப்பிரிவானது, பணிப்பாளர் நாயத்தின் நேரடியான மேற்பார்வையின் கீழ், 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழான ஏற்பாடுகள் மற்றும் ஒழுங்குவிதிகளை திருத்தப்பட்டவாறு செயற்படுத்துவதற்கு உதவியளிக்கின்றது. இச் சட்டத்தின் கீழ் வழக்காடல் செயற்பாடுகளுக்கு அனுசரனை வழங்குவதே இப்பிரிவின் தன்னிலையான பணியாகும். சட்டப் பிரிவால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பின்வருமாறு;

2015 ஆம் ஆண்டில், சட்டப்பிரிவானது பல எண்ணிக்கையான வழக்குகளை தொடுத்தும், இறுதிப்படுத்தியும் உள்ளது. அதற்கிணங்க, சட்டப் பிரிவால் 293 வழக்குகள் கையாளப்பட்டுள்ளதுடன் அவை ம.சு.அ க்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்குகையும் ம.சு.அ யால் தொடுக்கப்பட்ட வழக்குகளையும உள்ளடக்குகின்றன. 2015 ஆம் ஆண்டில் ஐம்பத்து நான்கு (54) வழக்குகளுக்கு அதிகமான வழக்குகள் புதிதாக தொடுக்கப்பட்டுள்ளன.

இந்த வழக்குகள் மூலம் சேகரிக்கப்பட்ட மொத்த தொகையானது ரூபா 326,999.00. ஆகும்

**தேசிய சுற்றாடல் சட்டத்தை (தே.சு.ச) செயற்படுத்தல் தொடர்பில் மேல் மாகாணத்தின் செயலாற்றுகை.**

2015 ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட நூற்று இருபத்து இரண்டு (122) வழக்குகள்மேல்மாகாணத்தில் நிலுவையில் இருந்தன.

கிட்டத்தட்ட தொன்நூற்று ஒரு (91) வழக்குகள் கொழும்பு மாவட்டத்தில் நிலுவையில் இருந்தன, அவற்றில் ஒன்பது(09) வழக்குகள் மவுட்லெவேனியா நீதிவான் நீதி மன்றத்திலும், பதின் ஏழு (17) வழக்குகள் கெஸ்பேவ நீதிவான் நீதி மன்றத்திலும், பதினொரு வழக்குகள்(11) அவிஸ்சாவலை நீதிவான் நீதி மன்றத்திலும், ஐந்து(05) வழக்குகள் கன்கொடவெல நீதிவான் நீதி மன்றத்திலும், மூன்று(03) வழக்குகள் ஹோமாகமை நீதிவான் நீதி மன்றத்திலும், இரண்டு (02) வழக்குகள் மாளிகாகந்த நீதிவான் நீதி மன்றத்திலும், இருபத்து நான்கு(24) வழக்குகள் கொழும்பு நீதிவான் நீதி மன்றத்திலும் நிலுவையில் இருந்தன. அவற்றுல் முப்பத்து ஏழு(37) வழக்குகள் 2015ஆம் ஆண்டில் முடிவடைந்துள்ளன.

2015ஆம் ஆண்டில், கம்பஹ மாவட்டத்தில் பதினாறு(16) வழக்குகள் நிலுவையில் இருந்தன. அவற்றுள் இரண்டு(02) வழக்குகள் கம்பஹ நீதிவான் நீதி மன்றம், ஐந்து(05) வழக்குகள் நீர்கொழும்பு நீதிவான் நீதி மன்றம், ஒரு (01) வழக்கு அத்தனகல நீதிவான் நீதி மன்றம், ஏழு(07) வழக்குகள் மஹார நீதிவான் நீதி மன்றம் மற்றும் ஒரு(01) வழக்கு மினுவாங்கொடை நீதிவான் நீதிமன்றம் ஆகிய நீதிமன்றங்களில் நிலுவையில் இருந்தன. அவற்றுள் ஏழு(07) வழக்குகள் 2015ஆம் ஆண்டில் முடிவுக்கு வந்துள்ளன.

மேலும், 2015ஆம் ஆண்டில் களுத்தரை மாவட்டத்தில் பதினைந்து (15) வழக்குகள் நிலுவையில் இருந்தன. அவற்றுள் இரண்டு (02) வழக்குகள் களுத்தரை நீதிவான் நீதி மன்றத்திலும்,மூன்று (03) வழக்குகள் மதுகமை நீதிவான் நீதி மன்றத்திலும், ஏழு(07)

வழக்குகள் பானதுறை நீதிவான் நீதி மன்றத்திலும் மற்றும் மூன்று(03) வழக்குகள் ஹொரனை நீதிவான் நீதி மன்றத்திலும் நிலுவையில் இருந்தன. அவற்றுள் ஆறு(06) வழக்குகள் 2015ஆம் ஆண்டில் முடிவுக்கு வந்துள்ளன.

**தேசிய சுற்றாடல் சட்டத்தை (தே.சு.ச) செயற்படுத்தல் தொடர்பில் மத்திய மாகாணத்தின் செயலாற்றுகை**

மத்திய மாகாணத்தில் ஐம்பத்தொரு (51) வழக்குகள் நிலுவையில் இருந்தன.அவற்றுள்பதினேழு (17) வழக்குகள் கண்டி நீதிவான் நீதிமன்றத்திலும், நான்கு (04) வழக்குகள் கம்பொல நீதிவான் நீதிமன்றத்திலும், மூன்று (03) வழக்குகள் நாவலபிடிய நீதிவான் நீதி மன்றத்திலும், ஆறு (06) வழக்குகள் வலப்பனே நீதிவான் நீதி மன்றத்திலும், ஐந்து (05) வழக்குகள் ஹெல்பொட நீதிவான் நீதி மன்றத்திலும், பத்து (10) வழக்குகள் தெல்தெனிய நீதிவான் நீதிமன்றத்திலும், இரண்டு(02) வழக்குகள் பன்வில நீதிவான் நீதி மன்றத்திலும் மற்றும் தலா ஒரு(01) வழக்கு வீதம் கலகெதர, மாத்தலை, சிகிரியா மற்றும் ஹெட்டன் ஆகிய நீதிவான் நீதி மன்றங்களிலும் நிலுவையில் இருந்தன. 2015ஆம் ஆண்டில் இருபத்து இரண்டு(22) வழக்குகள் புதிதாக தொடுக்கப்பட்டன. அவற்றுள் இருபத்தொரு(21) வழக்குகள் முடிவுக்கு வந்துள்ளன.

**தேசிய சுற்றாடல் சட்டத்தை (தே.சு.ச) செயற்படுத்தல் தொடர்பில் வட மத்திய மாகாணத்தின் செயலாற்றுகை**

2015ஆம் ஆண்டில்,வட மத்திய மாகாணத்தின பத்து (10) வழக்குகள் நிலுவையில் இருந்தன. அவை அனுராதபுரம், மதவாச்சி மற்றும் தம்பத்தேகம நீதிவான் நீதி மன்றங்களை உள்ளடக்குகின்றன. அவற்றுள் ஐந்து(05) வழக்குகள் அதே வருடத்தில் முடிவுக்கு வந்தன.

**தேசிய சுற்றாடல் சட்டத்தை (தே.சு.ச) செயற்படுத்தல் தொடர்பில் ஊவா மாகாணத்தின் செயலாற்றுகை**

2015ஆம் ஆண்டில்,ஊவாமாகாணத்தில் எட்டு (08) வழக்குகள் நிலுவையில் இருந்தன. அவற்றுள் ஐந்து (05) வழக்குகள் புதிதாக தொடுக்கப்பட்டவை ஆகும். வெளிமடை நீதிவான் நீதிமன்றம், பண்டாரவளை நீதிவான் நீதிமன்றம் மற்றும் வெல்லவாய நீதிவான் நீதி மன்றம் ஆகியவற்றில் தலா ஒரு(01) வழக்கும் நிலுவையில் இருந்தன. அவற்றுள் ஐந்து (05) வழக்குகள் 2015 ஆம் ஆண்டில் முடிவடைந்கன.

**தேசிய சுற்றாடல் சட்டத்தை (தே.சு.ச) செயற்படுத்தல் தொடர்பில் தென் மாகாணத்தின் செயலாற்றுகை**

2015ஆம் ஆண்டில்,தென்மாகாணத்தில் பதினொறு (11) வழக்குகள் நிலுவையில் இருந்தன. அவை பலபிடியா, ஹம்பாந்தோட்டை, காலி மற்றும் மாத்தறை ஆகிய நீதிவான் நீதி மன்றங்களை உள்ளடக்குகின்றன. அவற்றுள் ஆறு(06) வழக்குகள் புதிதாக தொடுக்கப்பட்டவை. 2015ஆம் ஆண்டில் மூன்று(03) வழக்குகள் முடிவுக்கு வந்தன.

**தேசிய சுற்றாடல் சட்டத்தை (தே.சு.ச) செயற்படுத்தல் தொடர்பில் கிழக்கு மாகாணத்தின் செயலாற்றுகை**

2015ஆம் ஆண்டில் அக்கரைப்பற்று மற்றும் திருகோணமலை ஆகிய நீதிவான் நீதி மன்றங்களில் இரண்டு (02) வழக்குகள் நிலுவையில் இருந்தன.

**தேசிய சுற்றாடல் சட்டத்தை (தே.சு.ச) செயற்படுத்தல் தொடர்பில் சப்ரகமுவ மாகாணத்தின் செயலாற்றுகை**

2015ஆம் ஆண்டில்,சப்ரகமுவமாகாணத்தில் இருபத்தாறு (26) வழக்குகள் நிலுவையில் இருந்தன. அவற்றுள் பத்து (10) வழக்குகள் 2015ஆம் ஆண்டில் புதிதாக தொடுக்கப்பட்டவை. ஒரு(01) வழக்கு மாவத்தேகொட நீதிவான் நீதிமன்றத்திலும், நான்கு (04) வழக்குகள் எம்பிலிபிடிய நீதிவான் நீதிமன்றத்திலும், நான்கு (04) வழக்குகள் கேகாலை நீதிவான் நீதிமன்றத்திலும், மூன்று(03) வழக்குகள் ருவான்வெல்ல நீதிவான் நீதிமன்றத்திலும், ஒரு (01) வழக்கு இரத்தினபுரி நீதிவான் நீதிமன்றத்திலும், மூன்று (03) வழக்குகள் அவிசாவலை நீதிவான் நீதி மன்றத்திலும் நிலுவையில் இருந்தன. அவற்றுள் பதினைந்து(15) வழக்குகள் அதே வருடத்தில் முடிவுக்கு வந்தன.

**தேசிய சுற்றாடல் சட்டத்தை (தே.சு.ச) செயற்படுத்தல் தொடர்பில் வட-மத்திய மாகாணத்தின் செயலாற்றுகை.**

2015ஆம் ஆண்டில்,வட-மத்தியமாகாணத்தில் மூன்று (03) வழக்குகள் நிலுவையில் இருந்தன. ஒரு(01) வழக்கு நிக்கரவெடியா நீதிவான் நீதி மன்றத்திலும், ஒரு(01) வழக்கு புத்தளம் நீதிவான் நீதிமன்றத்திலும், ஒரு(01) வழக்கு குளியாபிடிய நீதிவான் நீதிமன்றத்திலும் நிலுவையில் இருந்தன.

**ம.சு.அ எதிராக தொடக்கப்பட்ட வழக்குகள்**

2015ஆம் ஆண்டில் ம.சு.அ எதிராக அறுபது(60) வழக்குகள் நீதிவான் நீதி மன்றங்கள், மாவட்ட நீதிமன்றங்கள், மேல் நீதி மன்றங்கள், உயர் நீதிமன்றம் மற்றும் மேல்முறையீட்டு நீதி மன்றம் ஆகியவற்றில் நிலுவையில் இருந்தன.

சட்டப் பிரிவைச் சேர்ந்த அலுவலர்கள் உயர்நீதிமன்றம், மேல் முறையீட்டு நீதிமன்றம், மேல் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம் மற்றும் நீதிவான் நீதிமன்றம் ஆகியவற்றில் தொடுக்கப்பட்ட வழக்குகளில் கலந்து கொள்வர்.

மேலும், சட்டப் பிரிவைச் சேர்ந்த அலுவலர்கள் நீதிமன்றங்களுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டியுள்ள ஆவணங்களை வரைவு செய்வதில் ஈடுபட்டதுடன் ஆலோசனைகளிலும் பங்குபற்றினர்.

**தேசிய சுற்றாடல் சட்டத்தை(தே.சு.ச) செயற்படுத்துவதில் ஏற்பட்டள்ள முன்னேற்றம்**

பல கைத்தொழிற்சாலைகள் மத்திய சுற்றாடல் அதிகார சபையால் குறித்துரைக்கப்பட்டுள்ள நியமங்களை உறுதிசெய்யும் வகையில் சுத்திகரிப்பு தொகுதிகளை நிர்மாணம் செய்து முடித்துள்ளன. மேலும், பல கைத்தொழிற்சாலைகள் தே.சு.ச கீழ் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒலி மட்ட நியமங்களுடன் இணங்கி செயற்பட்டதுடன் சட்டத் தேவைகளுடன் இணங்கி செயற்பட்டதன் மூலம் சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை பெற்றுக்கொண்டனர்.

**சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை இரத்துச் செய்தல்,மறுத்தல் மற்றும் இடைநிறுத்தல்/காரணக் கடிதங்களை காண்பித்தல்.**

கைத்தொழில்களால் தோற்றுவிக்கப்படும் சுற்றாடல் தொல்லைகளை கருத்தில் எடுத்த மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது இருபத்தொன்பது (29) கைத்தொழில்களுக்கு வழங்கிய சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதுடன், சு.பா.உ வழங்குவதற்கு மறுப்பு தெரிவித்து என்பத்தொன்பது (89) கடிதங்களை அனுப்பியும் உள்ளது.

மேலும், சட்டப் பிரிவிடமிருந்து அவசியமான அறிவுறுத்தல்களை பெற்று பகுப்பாய்வு அறிக்கைகள், இரைச்சல்(ஒலி) அளவீட்டு பரிசோதனை அறிக்கை, மற்றும் ஆய்வு அறிக்கைகள் ஆகியவற்றை சமர்ப்பிக்கும்வகையில் பல கோவைகள் ம.சு.அ

யின் சுற்றாடல் மாசு கட்டுப்பாட்டு பிரிவு (சு.மா.க), மாகாண அலுவலகங்கள், மாவட்ட அலுவலகங்கள் மற்றும் ம.சு.அ ஆய்வுகூடம் ஆகியவற்றிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

### பிரிவு 24பீ பணிப்புரைகள்

தே.சு.ச ஏற்பாடுகளை மீறிச் செயற்பட்டமை காரணமாக எட்டு(08) பிரிவு 24பீ பணிப்புரைகளை சட்டப்பிரிவு அனுப்பியுள்ளது.

### சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களின் நிபந்தனைகள்

சட்டப் பிரிவின் மாகாண அலுவலகங்கள், மாவட்ட அலுவலகங்கள் ஆகியவற்றை சேர்ந்த சட்ட உத்தியோகத்தர்கள்/ உதவிச் சட்ட உத்தியோகத்தர்கள் ஆகியோரால் புதிய சு.பா.உ வழங்குவது தொடர்பில் சு.பா.உ பற்றிய நிபந்தனைகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.
அட்டவனைப் படுத்தப்பட்ட கழிவு முகாமைத்துவத்திற்கு வழங்கப்படவுள்ள உரிமங்கள் தலைமை அலுவலகத்தின் சட்டப் பிரிவைச் சேர்ந்த அலுவலர்களால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

### மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சில் இடம் பெற்ற மேல் முறையீட்டு விசாரனைகள்

மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளரினால் நடாத்தப்பட்ட மேல் முறையீட்டு விசாரணைகளில் சட்டத்துறை பிரிவின் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### நொத்தாரிசு பணி

கருத்திட்டங்கள் மற்றும்மாகாண மற்றும் மாவட்ட அலுவலகங்களின் குத்தகை ஒப்பந்தங்கள் ஆகியவற்றை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் பல்வேறு விடயங்கள் பற்றிய தொழில்நுட்ப ஆலோசனைகளை ஆலோசகர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளும் வகையில் பத்தொன்பது (19) உடன்படிக்கைகளை தயாரித்து அவற்றின் சட்டத்தன்மையையும் சட்டப்பிரிவு பரிசோதனைக்கு உட்படுத்தி உள்ளது.

### கூட்டங்கள்

சுற்றாடல் விடயங்கள் தொடர்பாக இடம்பெற்ற பல கூட்டங்களில் சட்டப் பிரிவை சேர்ந்த அலுவலர்கள் பங்கேற்றனர்.

### புகார்கள்

பொதுமக்கள், உள்ளூராட்சி அதிகாரசபைகள், பிரதேச செயலக அலுவலகங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்கள் ஆகியவற்றில் இருந்து அனுப்பப்பட்ட மாசுபடுதல் மற்றும் தொல்லைகள் சம்பந்தமான புகார்கள் சட்டப்பிரிவால் கையாளப்பட்டுள்ளது.

### ஆலோசனைகள்.

ம.சு.அ ற்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்குகள் பற்றிய ஆட்சேபனைகள், பதில்கள் மற்றும் ம.சு.அ யால் தொடுக்கப்பட்ட வழக்குகள் சம்பந்தப்பட்ட நீதிமன்ற விசாரனைகள் பற்றிய எழுத்து மூலமான சமர்ப்பனங்கள் ஆகியவற்றை தயாரிக்கும் முகமாக சட்டத்துறை தலைமை அதிபதியின் திணைக்களத்தில் இடம் பெற்ற என்பத்தேழு (87) ஆலோசனை கூட்டங்களில் சட்டப் பிரிவைச் சேர்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ஒழுங்குவிதிகள்

மேலும், 2015.01.02 ஆம் திகதிய 1895/43 ஆம் இலக்க வாகன புகை வெளிவீச்சு நியமங்கள் திருத்தம் வெளியிடப்பட்டது.

### ஆலோசனைகள்.

2015ஆம் ஆண்டில் சுற்றாடல் பற்றிய விடயங்கள் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட விடயங்கள் பற்றிய அறுபத்தொன்பது(69) ஆலோசனைகள் பல உள்ளூராட்சி அதிகாரசபைகள், தனிநபர்கள் மற்றும் ம.சு.அ யின் ஏனைய பிரிவுகள் ஆகியவற்றிற்கு வழங்கப்பட்டன.

**சட்ட அறிவித்தல்கள்.**

சுற்றாடல் மாசடைவதற்கு காரணமாக இருந்த நூற்று என்பத்தேழு (187) கைத்தொழில்களுக்கு சட்ட அறிவித்தல்கள் அனுப்பப்பட்டன.

**பரிசோதனை அறிக்கைகள்**

நீதிமன்ற நடவடிக்கைகளை முன்னெடுக்கும் வகையில், ம.சு.அ அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகள் பற்றியபரிசோதனை அறிக்கைகள் பலவற்றை சட்டப் பிரிவைச் சேர்ந்த அலுவலர்கள் அங்கீகரித்ததுடன் அவை மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சில் இடம் பெறவுள்ள மேல்முறையீட்டு விசாரணைகளுக்காக சமர்ப்பிக்கப்படவுள்ளன.

**விழிப்புணர்வு**

தேசிய சுற்றாடல் சட்டம் மற்றும் சம்பந்தப்பட்ட ஏனைய சட்டங்கள் பற்றி ஏனைய நிறுவனங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக இடம்பெற்ற பதினைந்து(15) விழிப்புணர்வு நிகழ்ச்சிநிரல்களில் ம.சு.அ அலுவலர்கள் கலந்து கொண்டனர்.
சட்ட மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க தேசிய சுற்றாடல் சட்டம் மற்றும் ஒழுங்கு விதிகள் பற்றி சட்டப்பிரிவு அலுவலர்களால் அவர்களுக்கு விழிப்பூட்டப்பட்டது.

**மனித உரிமைகள் பற்றிய விசாரணைகள்**

மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இடம்பெற்ற பன்னிரண்டு (12) விசாரணைகளில் சட்டப்பிரிவை சேர்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டதுடன், சுற்றாடல் விடயங்கள் மற்றும் மனித வளங்கள் பற்றிய பிரச்சினைகள் பற்றிய அறிக்கைகள் உட்பட பல அறிக்கைகளை தயாரித்து சரிபார்த்துடன் அவற்றை இறுதிப்படுத்தினர்.

**தேசிய சுற்றாடல் சட்டத்திற்கான திருத்தங்கள்**

ம.சு.அ யின் சட்டப் பிரிவானது ‘‘மாசுபடுத்துபவர் கொள்கைக்கு விலை கொடுக்கின்றார்’’ போன்ற புதிய எண்ணக்கருவை அறிமுகம் செய்யும் நோக்கில் சுமை அடிப்படையிலான உரிமங்கள் திட்டம் மற்றும் ஈரநிலம் மற்றும் அபாயகர கழிவுகள் பற்றிய அத்தியாயங்களை முன்மொழியப்படவுள்ள தே.சு.ச திருத்தங்களுக்கு அறிமுகம் செய்வதன் ஊடாகதண்டணை ஏற்பாடுகளை மேம்படுத்தல் பற்றிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது. முன்மொழியப்பட்டுள்ள புதிய திருத்தங்கள் உள்ளடங்கிய அமைச்சரவை பத்திரம் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

# 6.0. சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்பூட்டல் பிரிவு (சு.க.வி.பி)

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வு பிரிவானது 1984ஆம் ஆண்டு முதல் சுற்றாடலின் பேண்தகைமையை நிலைநிறுத்தும் வகையில் இலங்கையின் அடிமட்டங்கள் தொடக்கம் பல்வேறு இலக்குக் குழுக்களுக்கு பரந்த அளவிலான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகளை நிறைவேற்றி வருகின்றது. பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி, கல்வியை புகட்டி சுற்றாடலை பேணவும் சுற்றாடல் சிநேகபூர்வ முகாமைத்துவ செயற்பாட்டை ஏற்படுத்தும் முகமாக அவர்களின் முனைப்பான பங்களிப்பை பெற்றுக்கொள்ளும் பொறுப்பானது மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்பூட்டல் பிரிவை சார்ந்ததாகும். அதன் நோக்கத்தை அடையும் முகமாக சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வு பிரிவானது பொது மக்களின் பல்வேறு இலக்கக் குழுக்களுக்கு சுற்றாடல் தொடர்பில் அவர்களின் கரிசனையை மேம்படுத்தி சுற்றாடலை பேணவும் பாதுகாக்கவும் அவர்களின் முனைப்பான பங்களிப்பை பெற்றுக்கொள்ளும் வகையில் பல்வேறு கல்வி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தியது. 2015ஆம் ஆண்டின் செயற்திட்டத்திற்கு அமைய மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வு பிரிவானது அமைச்சு மற்றும் திறைசேரி நிதியத்தை பயன்படுத்தி பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்களை பொது மக்களின் பல்வேறு இலக்கக் குழுக்களுக்கு நடைமுறைப்படுத்தியது. இதற்கு மேலதிகமாக, ஏனைய நிதி மூலங்களை பயன்படுத்தி ஏனைய சில நிகழ்ச்சித் திட்டங்களையும் வெற்றிகரமாக நடாத்தியது.

பொலீஸ் அலுவலர்களுக்கான நிகழ்ச்சித்திட்டம் ஒன்று நடாத்தப்பட்டதுடன் அந்த நிகழ்ச்சித் திட்டத்தில் 200 பங்கேற்பாளர்கள் பங்குபற்றினர்.

### 6.1திறைசேரி நிதியத்தின கீழ் நிறைவேற்றப்பட்ட நடவடிக்கைகள்(மீண்டெழும் மற்றும் மூலதனம்)

### 6.1.1 சுற்றாடல் காலாண்டு செய்திமடல்

2015ஆம் ஆண்டில்,இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை என்ற அடிப்படையில் தேசிய சுற்றாடல் செய்திமடலை ஊடகப் பிரிவு வெளியிட்டது. இந்த செய்திமடல் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை அச்சிடப்பட்டு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு தபாலில் அனுப்பப்படுகின்றது. 2015ஆம் ஆண்டில் ஊடகப் பிரிவினால் இரண்டு தொகுதிகள் வெளியிட்டதுடன் இதன் மூலம் ம.சு.அ யின் செய்தியானது பொதுமக்களுக்கு ஊடுருவச்செல்லும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. சுற்றாடல் செய்திமடலானது ம.சு.அ யின் செயற்பாடுகளை சார்ந்துள்ளதுடன் சுற்றாடல் தொடர்பான சில அறிக்கைகளையும் உள்ளடக்குகின்றது.

### 6.1.2 கிராம சேவையாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கலாசார உத்தியோகத்தர்கள் மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபை உத்தியோகத்தர்கள் ஆகிய அரச அலுவலர்களுக்கான வழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வு பிரிவானது சமகால பிரச்சினைகள் பற்றியவழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை பல்வேறு இலக்குக் குழுக்களுக்கு நடாத்துகின்றது. இந்த செயற்பாடானது பல்வேறு இலக்குக் குழுக்கள் மத்தியில்சுற்றாடல் பற்றிய உணர்வை மேம்படுத்தும் முகமாக நடாத்தப்படுகின்றது.

### 6.1.3 உற்பத்தி மற்றும் ஒழுங்கமைப்பு ஊக்குவிப்பு கண்காட்சிகள்



சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வு பிரிவானது (சு.க.வி.பி) கண்காட்சிகளில் பங்குபற்றுகின்றது. இந்த நடவடிக்கை மூலம் சு.க.வி.பிரிவானது விழிப்புணர்வை ஏற்படுத்தவும் சுற்றாடல் தொடர்பான அறிவை பரப்பவும் சுற்றாடல் பிரச்சினைகளுக்கு மகிழ்ச்சிகரமாக பரிகாரம் காணும் வகையில் சக்கிவாய்ந்த கருவியாக மாதிரிகள், சுவரொட்டிகள் மற்றும் துண்டுப்பிரசுரங்கள் ஆகியவற்றை பயன்படுத்தவும் எண்ணியுள்ளது.

இந்த நடவடிக்கையின் கீழ் சுற்றாடல் கல்விமற்றும் விழிப்புணர்வு பிரிவானது அறிவை பரப்பும் நோக்கில் துண்டுப்பிரசுரங்கள் மற்றும் சுவரொட்டிகளை பாடசாலைகள், உத்தியோகத்தர்கள் மற்றும் அரசு சாரா தாபனங்கள் ஆகியவற்றுக்கு வழங்குகின்றது.

2015ஆம் ஆண்டில், கொழும்பு பல்கலைக்கழகம், கொழும்பு மாநகர சபை, மஹாபாகே பொலீஸ் நிலையம், கம்பஹ தொழில்நுட்பக் கல்லூரி, ஹொரணை தக்சிலா வித்தியாலயம், குருணாகலை மளியதேவ வித்தியாலயம், பண்னிபிட்டிய தர்மபால வித்தியாலயம், நுகேகொடை சுமுந்ராதேவி மகளிர் வித்தியாலயம், கம்பஹ விஹாரமாதேவி வித்தியாலயம், மவுண்ட்லவேனியா புனித தோமையர் கல்லூரி, நுகேகொடை புனித ஜோன் கல்லூரி, பலாங்கொடை மைத்திரி மஹா வித்தியாலயம், பொலன்னறுவை மதிரிகிரிய தேசிய பாடசாலை மற்றும் பானதுறை சுமங்கல மகளிர் வித்தியாலயம் ஆகியவற்றில் இடம்பெற்ற 17 பல்வேறு கண்காட்சி கூடங்களில் பங்குபற்றியது.

**6.1.3.1.நடைமுறைச் சாத்திய நிகழ்ச்சி-த்திட்டங்களை ஏற்றல் அமர்வு-- நேச்சர் பீல்ட் சென்றரில் செயற்படுத்தப்பட்டது**

இயற்கை சுற்றுச்சூழலில் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தவும் நடைமுறைச்சாத்திய நிகழ்ச்சிதிட்டங்களை ஏற்றகவும் சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வு பிரிவால் திட்டமிடப்பட்டது. இந்த நடவடிக்கையின் கீழ் பல்வேறு சுற்றாடல் செயற்பாடுகளை காலாண்டுக்கு ஒருமுறை நடாத்தவும் நேச்சர் பீல்ட் சென்றர் நூலகங்கள் (நே.பீ.செ)மூலம் விழிப்பூட்டவும் அதன் ஊடாக பல்வேறு இலக்குக் குழுக்கள் மத்தியில் சுற்றாடல் பற்றிய உணர்வை மேம்படுத்துவும் சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வு பிரிவானது(சு.க.வி.பி) நேச்சர் பீல்ட் சென்றர்களுக்கு நிதியுதவியை வழங்குகின்றது.

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் கீழ் நான்கு (04) நேச்சர் பீல்ட் சென்றர்கள் காணப்படுகின்றன. அவை ம.சு.அ மாகாண அலுவலகங்களின் கீழ் பல்வேறு மாகாணங்களில் பின்வருமாறு தாபிக்கப்பட்டுள்ளன.

அட்டவணை6.1: நடைமுறைசாத்திய நிகழ்ச்சித்திட்டங்கள்– நேச்சர்ஸ் பீல்ட் நிலையத்தால் நடாத்தப்பட்டவை

| **நேச்சர்ஸ் பீல்ட் நிலையல்** | **மாகாண அலுவலகம்** |
|---|---|
| ரூமாசாலை | தேன் மாகாண அலுவலகம் |
| குண்டசாலைகேகாலை | மத்திய மாகாண அலுவலகம் |

| | |
|---|---|
| கேகாலை | சப்ரகமுவ மாகாண அலுவலகம |
| அத்திட்டிய | ம.சு.அ யின் சு.க.வி.பி |

மரநடுகை நிகழ்ச்சித்திட்டங்கள், கள விஜயங்கள், தலைமைத்துவ பயிற்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள், பதக்கப் பரீட்சைகள் போன்ற பல்வேறு சுற்றாடல் தலைப்புகள் மீதான விரிவுரைகள் மற்றும் சுற்றாடல் மாசு பாதுகாப்புடன் தொடர்புடைய ஏனைய நடவடிக்கைகள் நேச்சர்ஸ் பீல்ட் நிலையத்தால் நடாத்தப்படுகின்றன. மேலும், ஆய்வுப் பணிகளை மேற்கொள்ளவும் அனுசரணை வழங்கப்படுகின்றது.



**6.1.3.2சமகால பிரச்சினைகள் பற்றிய கல்வி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்தல்--ம.சு.அ கேட்போர்கூடம்**

சு.க.வி பிரிவானது சமகால பிரச்சினைகள் பற்றிய பற்றிய கல்வி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை பாடசாலை பிள்ளைகள் மற்றும் பல்வேறு பங்குதாரர்கள் ஆகியோருக்கு ம.சு.அ கேட்போர்கூடத்தில் நடாத்துகின்றது. இந்த நடவடிக்கையானது சுற்றாடல் பற்றிய உணர்வை பல்வேறு இலக்குக் குழுக்கள் மத்தியில் மேம்படுத்தும் நோக்கில் நடாத்தப்படுகின்றது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் பாடசாலைப் பிள்ளைகளே அதிகமாக பங்கேற்கின்றனர்.

சமகால பிரச்சினைகள் பற்றிய இந்த கல்வி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நான்கு விரிவுரைகள், ஒரு வீடியோ மற்றும் ஒரு கள விஜயம் ஆகியவற்றை உள்ளடக்கியிருந்தது. விரிவுரை தலைப்புகள் சுற்றாடலுடன் நேரடியாக தொடர்பு பட்டிருந்ததுடன் அவை பாடசாலை பாடவிதானத்துடனும் ஒத்திசைவாகவும் காணப்பட்டன. இயற்கை வளங்கள் முகாமைத்துவம், திண்மக் கழிவு முகாமைத்துவம், மரங்கள் நடுதல்,உயிர் பல்வகைத்தன்மை,ஈரநிலங்கள்,சுற்றாடல் சிநேகபூரவ கமத்தொழில்,சூழல் அமைப்பு பல்வகைத்தன்மை,கைத்தொழில் கழிவு முகாமைத்துவம்,சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித்திட்டங்கள், கூட்டுப்பசளை,ஓசோன் படலம், வண்ணாத்திப் பூச்சிகள், சதுப்புநிலத் தாவரங்கள்,சுற்றாடல் பேணுகை,நீர் பாதுகாப்பு, வனசீவராசிகள், காலநிலை மாற்றம், பறவைகள், சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு, உலக வெப்பமயமாதல், உலகலாவிய சுற்றாடல் பிரச்சினைகள், ஈரநிலம் முகாமைத்துவம், இலங்கையின் பண்டைய நீர்பாசன முறைமைகள், இயற்கையின் சமநிலை போன்ற சுற்றாடல் தலைப்புக்களே இந்த நிகழ்ச்சியில் எடுத்தக்கொள்ளப்பட்ட தலைப்புகளாகும்.





ENVIRONMENTAL EDUCATION & AWARENESS (EE&A) DIVISION



தலைப்புகளுக்கு பொருத்தமான துண்டுப்பிரசுரங்களின் தொகுதியொன்றும் இந்த நிகழ்ச்சித்திடட்த்தில் விநியோகிக்கப்பட்டன.

2015ஆம் ஆண்டில். ம.சு.அ சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வு பிரிவானது இந்த நிகழ்வின் கீழ் 15 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியுள்ளது.

1274 பாடசாலை பிள்ளைகளை உள்ளடக்கிய 28 பாடசாலைகள் இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றின.

### 6.1.4 தற்போதைய பிரச்சினைகள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்- டெங்கு

டெங்கு நோயானது சுற்றாடலுடன் தொடர்புபட்ட சுகாதாரப் பிரச்சினையாகும். டெங்கு நோய் பரவலை சுற்றாடல் முகாமைத்துவத்தின் மூலம் கட்டுப்படுத்தலாம். ஆகையால், ம.சு.அ சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வு பிரிவானது டெங்கு நோய் தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்களை டென்சில் பத்தரமுல்லை கொப்பேகடுவை மகா வித்தியாலயம், றொபர்ட் குணவர்தன மகா வித்தியாலயம் மற்றும் பல்வேறு மாவட்டங்களில் பல்வேறு பங்குதாரர்களின் பங்குபற்றலுடன் நடாத்தியது. 2015ஆம் ஆண்டில், ம.சு.அ சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வு பிரிவானது ஒன்பது(09) டெங்கு தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்களை பத்தரமுல்லை கொப்பேகடுவை மகா வித்தியாலயம், றொபர்ட் குணவர்தன மகா வித்தியாலயம் ஆகியவற்றில் நடாத்தியுள்ளது.



### 6.1.5 சுற்றாடல் கற்கைகளுக்கான சர்வதேச நிலையத்தின் கீழ் நிகழ்ச்சித்திட்டங்கள் (ICES)

ம.சு.அ சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வு பிரிவானது பல்வேறு தலைப்புகளில் பல்வேறு இலக்குக் குழுக்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துகின்றது. ஆகையால், மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது சுற்றாடல் கற்கைகளுக்கான சர்வதேச நிலையமொன்றை சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வு பிரிவின் கீழ் தாபித்துள்ளதுடன் பல்வேறு இலக்குக்குழுக்களை இலக்காகக் கொண்டு பரந்தளவிலான நிகழ்ச்சித் திட்டங்களையும் நடவடிக்கைகளையும் நிறைவேற்றுகின்றது.

நாட்டின் சுற்றாடலை பாதுகாத்து பேணும் நிலையான அபிவிருத்திப் பாதையில் பொதுமக்களின் முனைப்பான பங்கேற்றலை பெற்றுககொள்ளும் நோக்கில் சுற்றாடலின் முக்கியத்துவம் பற்றிய பொதுமக்களின் விழிபுணர்வையும் அறிவையும் மேம்படுத்ததல் இந்த நிகழ்ச்சித் திட்டத்தத்தின் நோக்கமாகும். இந்த கற்கைநெறியின் காலம் 10 நாட்கள் ஆகும்; வாரத்தில் ஒரு நாள் என்ற அடிப்படையில். இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் பிரகாரம் பல தலைப்புகளின் கீழ் சான்றிதழ் பாடநெறியொன்று நடாத்தப்படும். ஒவ்வொரு கருப்பொருளின் கீழும் 30 தெரிவு செய்யப்பட்ட தலைப்புகளின் அடிப்படையில் விரிவுரைகள் பல்கலைக்கழகம் உட்பட பல்வேறு நிறுவனங்களைச் சேர்ந்த சிறந்த வளவசதி

மிக்கவர்கள் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தகுதிவாய்ந்த வளவாளர்கள் ஆகியோரால் நடாத்தப்பட்டன. இந்த பாடநெறியில் மூன்று கள விஜயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் பரீட்சார்த்திகளின் தகவுத்திறன் எழுத்து மூலமான பரீட்சையொன்றின் மூலம் பரீட்சிக்கப்பட்டது. நிகழ்ச்சித்திட்டத்தின் முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. 2015ஆம் ஆண்டில் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஒரு பாடநெறி நடாத்தப்பட்டுள்ளது.

**அட்டவணை 6.2:சுற்றாடல் கற்கைகளுக்கான சர்வதேச நிலையத்தின் கீழ் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டம்**

| தோ.இல | ஆரம்பிக்கும் திகதி | கருப்பொருள் | பங்கேற்றல் |
|---|---|---|---|
| 01 | 2015.5.9 | சுற்றாடல் மாசு கட்டுப்பாடு மற்றும் சுற்றாடல் முகாமைத்துவம் | 37 |



சுற்றாடல் மாசு கட்டுப்பாடு மற்றும் சுற்றாடல் முகாமைத்துவம் சான்றிதழ் பாடநெறி-2015

**கலாசார நிகழ்வின் போதுசுற்றாடல் விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டம் நடாத்தல்**



**அனுராதபுரத்தில் நிகழ்ச்சித்திட்டம்**



**கண்டியில் நிகழ்ச்சித்திட்டம**

சுற்றாடல் முன்னோடிகள் பல்வேறு கலாசார நிகழ்வுகளில் பங்குபற்றுவதுதன் மூலம் சுற்றாடல் சிநேகபூர்வ திண்மக்கழிவுஅகற்றல்

நடைமுறைகளை பின்பற்றுவதன் ஊடாக சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் பேணுகை பற்றி பொதுமக்களின், விசேடமாக யாத்திரீகளின் விழிப்புணர்வை மேம்படுத்தும் நிகழ்வுகளில் ஈடுபடுகின்றனர்.

சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வு பிரிவானது தலவிலை புனித ஆனா தேவாலயம், கதிர்காம எசல பெரஹெர,கண்டி எசல பெரஹெர மற்றும் அனுராதபுரம் பொசொன் பண்டிகை ஆகிய நிகழ்வுகளில் மக்கள் தொடர்பு நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கான நிதியுதவிகளையும் வழங்குகின்றது.

### 6.1.6உலக சுற்றாடல் தினம்

உலக சுற்றாடல் தினத்தை கொண்டாடும் முகமாக ஒவ்வொரு வருடமும் அந்தந்த வருடத்திற்குரிய சுற்றாடல் தினக் கருப்பொருளில் பல்வேறு நடவடிக்கைகள் ஒழுங்கமைக்கப் படுகின்றன.

2015ஆம் ஆண்டில், இந்த நிகழ்வானது மேதகு சனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் ''ஒரு கோள், ஏழு மில்லியன் கணவுகள், கவனமாக நுகரவும்'' என்ற கருப்பொருளின் கீழ் யூன் 05ஆம் திகதி பொலன்னறுவையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்ச்சித்திட்டம் சுற்றாடல் புதுப்பிக்கத்தக்க அமைச்சால் ம.சு.அ ஒத்துழைப்புடன் ஒழுங்கமைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

1. 1000 தாவரங்கள் பொலன்னறுவை மாவட்டதில் அமைந்துள்ள பாடசாலைகளின் மாணவர்கள் மத்தியில் பகிர்ந்து அளிக்கப்பட்டன.
2. மெதிரிகிரிய றோயல் கல்லூரியில் கண்காட்சியொன்று இடம்பெற்றது.
3. பங்கு பற்றியவர்கள் மத்தியில் சுற்றாடல் சிநேகபூர்வ சுருக்கக்குறிப்பு விநியோகிக்கப்பட்டது.
4. சுற்றாடல் முன்னோடிகளின் பங்குகேற்பை பெற்றுக்கொள்ள பாடசாலை மற்றும் கல்வி அமைச்சு ஆகியவற்றுக்கு இடையில் ஒருங்கிணைப்பு மேற்கொள்ளப்பட்டது.





**6.1.7 தேசிய மர நடுகை நிகழ்ச்சித்திட்டம்**

சுத்தமானதும் பசுமையானதுமான சுற்றுச்சூழல் ஒன்றை நோக்கிய மர நடுகைத் திட்டத்தை ம.சு.அ யினது சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வு பிரிவானது உயர்ந்த மட்டத்தில் ஊக்குவிக்கின்றது.அந்தந்த மாதத்தின் உலக சுற்றாடல் தின தொனிப்பொருளுக்கு இணங்க பல்வேறு நடவடிக்கைகளை மையமாக வைத்து புதிய முறையொன்றில் 2015ஆம் ஆண்டின் தேசிய மரங்கள் நடும் நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது. குறிப்பிட்ட ஒரு மாதமானது "வன ரோபா" மர நடுகை மாதமென பெயரிடப்பட்டு இருந்தது.

கொடுக்கப்பட்ட நிகழ்ச்சிநிரலுக்கு அமைய ம.சு.அ "வன அரன்னாட- சிசுசரண" பாடசாலை மர நடுகை நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்தியது.

"துரு கபகாரு-அபி நிராதுரு"என்ற கருப்பொருளின் கீழ் பின்வரும் மூன்று நிகழ்ச்சித்திட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டு இருந்தன.

- நாடு முழுவதிலும் உள்ள பாடசாலைகள் ஒவ்வொன்றும் தலா மூன்று(03) பழ மரங்கள் வீதம் நாட்டின.இந்த நிகழ்வானது கல்விஅமைச்சால் ம.சு.அ தொழில்நுட்ப ஒத்துழைப்புடன் நடாத்தப்பட்டது.
- ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள ஒவ்வொரு பாடசாலையிலும் 50 தாவரங்களை உள்ளடக்கிய கானக உள்ளடக்கம் உருவாக்கப்பட்டது.
- பொலன்னறுவை மெதிரிகிரிய தேசிய பாடசாலையில் 400 தாவரங்களை உள்ளடக்கிய ஒரு ஏக்கர் கானக உள்ளடக்கம் உருவாக்கப்பட்டது.

**6.1.8இலத்திரனியல் மற்றும் அச்சிடல் ஊடகத்தின் பயனுறுதியான பாவனை (ஊடகப்பிரிவு)**

சுற்றாடல் தொடர்பான செய்திகளை பரவச்செய்யக்கூடிய சக்திவாய்ந்த கருவியே



ஊடகமாகும். ஆகையால், சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வு பிரிவின் கீழ் ஊடகப்பிரிவு என்ற தனியானவொரு பிரிவானது தாபிக்கப்பட்டது.இலத்திரனியல் மற்றும் அச்சிடல் ஊடகத்தின் பயனுறுதியான பாவனையைசுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வு பிரிவின் ஊடகப்பிரிவு கையாளப்படுகின்றது.

2015ஆம் ஆண்டில் ஊடகப் பிரிவில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் பின்வருமாறு.



**6.1.8.1வானொலி நிகழ்ச்சிநிரல்**

சுற்றாடல் பிரச்சினைகள் பற்றிய பொதுமக்கள் விழிப்புணர்வை மேம்படுத்தும் நோக்கில் இலங்கை ஒலி பரப்புக் கூட்டுத்தாபனத்தின் *சோபாகெத (Sobaketha)* வானொலி நிகழ்ச்சி எப்.எம் 94.3/ எப்.எம் 94.5 அலை வரிசையில் ஒலிபரப்பப்பட்டது. இந்த நிகழ்ச்சியானது

ஒவ்வொரு வியாழக்கிழமையும் பி.ப 6.30 மணிக்கு ஒலிபரப்பப்பட்டது.இந்த நிகழ்ச்சியில் சுற்றாடல் தொடர்பான கேள்வியொன்றுக்கான பதிலை கேட்போரிடம் இருந்து பெறுவதன் ஊடாக நிகழ்ச்சி பற்றிய பின்னூட்டல் பெறப்பட்டது. ஒவ்வொரு மாதமும் மூன்று வெற்றியாளர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்ச்சியானது கேட்போரிடையே பெறும் வரவேற்பை பெற்றுள்ளமை பொதுமக்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற பதில்களின் அடிப்படையில் தெரியவந்தது.

2015ஆம் ஆண்டில் 40 *சோபாகெத (Sobaketha)* வானொலி நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகின.

### 6.1.8.2மிஸ்டர் கிரீன் மீள் உற்பத்தியாக்கம்

2015ஆம் ஆண்டில, 800 மிஸ்டர் கிரீன் டி.வி.டி கள் மீள் உற்பத்தியாக்கப்பட்டதுடன் 438 டி.வி.டி கள் விநியோகிக்கப்பட்டன

### 6.1.8.3.நிகழ்ச்சி உள்ளடக்கம்

ஓலி-ஒளிப் பிரிவானது கருத்திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் நிகழ்வுகளை உள்ளடக்ககுவதற்கு விரிவான பங்களிப்பை வழங்குகின்றதுடன் அவை ம.சு.அ யின் நோக்கங்களுக்கு இணங்க பயன்படுத்தப் படுகின்றன. 2015ஆம் ஆண்டில், ஓலி-ஒளிப் பிரிவானது அதன் கடமைக்கு ஏற்ப 59 நிகழ்வுகளை உள்ளடக்கியுள்ளது.

### 6.1.8.4. தினசரி பத்திரிகைகள் ஊடாக சுற்றாடல் பிரச்சினைகளை பரவச்செய்தல்

இது ஊடகப் பிரிவின் மற்றொரு பணியாகும். தினசரி பத்திரிகைகள் மூலம் வெளியிடப்பட்ட சுற்றாடல் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை சேகரித்து அவற்றை சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்கள் ஆகியவற்றுக்கு அனுப்பப்படுகின்றன. 2015ஆம் ஆண்டில், அத்தகைய பத்திரிகை செய்திகள் 1105 பரப்ப்பட்டன.

### 6.1.8.5. செய்தி மற்றும் செய்தி வெளியீடுகள்

ஊடகத்தின் துணையுடன் சமூகத்தின் விரிவானவொரு பகுதியினரை விழிப்பூட்டலாம்.ஆகையால், மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது அதன் செய்தி, ஆய்வுக்கட்டுரைகள் மற்றும் நடவடிக்கைகளை வானொலி, தொலைக்காட்ச்சி, செய்தி ப த்திரிகைகள் மற்றும் அதன் இணையத்தளம் ஆகியவற்றின் ஊடாக விநியோகிக்கின்றது. அதற்கிணங்க, மேற்கொள்ளப்பட்ட செய்தி வெளியீடுகள், இணையத்தள பதிவேற்றங்கள் மற்றும் ஊடக மாநாடுகள் ஆகியவற்றின் எண்ணிக்கை கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

**அட்டவணை6.3:செய்தி மற்றும் செய்தி வெளியீடு**

| செய்தி வெளியீடுகளின் எண்ணிக்கை | ஊடக மாநாடுகள் | இணையத்தள பதிவேற்றங்கள் |
|---|---|---|
| 56 | | 54 |

### 6.1.8.6. அரசு-சாரா தாபனங்களின் பதிவு

அரசு-சாரா தாபனங்களின் பதிவினை மேற்கொள்ளல் ஊடகப்பிரிவின் பணிகளில் ஒன்றாகும். 2015ஆம் ஆண்டில் 21,அரசு-சாரா தாபனங்கள் மீள்பதிவாகியுள்ளன.

### 6.1.8.7விரிது இறுவட்டுக்கள் விநியோகம்

2015ஆம் ஆண்டில் ஊடகப்பிரிவானது சுற்றாடல்-சிநேகபூர்வ விருதுகளை உள்ளடக்கிய விருது இறுவட்டை வெளியிட்டது.

2015ஆம் ஆண்டில் ஊடகப்பிரிவானது அத்தகைய 957 இறுவட்டுக்களை அரச/தனியார் நிறுவனங்கள், பாடசாலைகள் மற்றும் வேண்டுகோள் விடுத்த வெளித்தரப்பினர் ஆகியோருக்கு விநியோகம் செய்தது.

#### 6.1.8.8சன்ஹித புத்தக விநியோகம்

2015ஆம் ஆண்டில் ஊடகப்பிரிவானது சன்ஹித கவிதைகள், சன்ஹித சிறு கதைகள் மற்றும் சன்ஹித சுவரொட்டி புத்தகம் ஆகிய பெயர்களில் மூன்று புத்தகங்களை வெளியிட்டது.

2015ஆம் ஆண்டில் அத்தகைய புத்தகங்கள் அரச/தனியார் நிறுவனங்கள்,பாடசாலைகள்,ஊடாப் பிரிவு நடாத்திய போட்டிகளில் வெற்றியீட்டியோர் ஆகிய பிரிவுகளுக்கு விநியோகம் செய்யப்பட்டன.

748சுவரொட்டி புத்தகங்கள,930 கவிதைப் புத்தகங்கள் மற்றும் 900 சிறுகதைப் புத்தகங்கள் ஆகியவை சுற்றாடல் செய்தியை பரவச்செய்யும் நோக்கில் விநியோகிக்கப்பட்டன.

#### 6.1.8.9நில்வனபெத மற்றும் சோபகெத டி.வி.டி விநியோகம்

2015ஆம் ஆண்டில், நில்வனபெத "சுற்றாடல் பாடல்"ஆரம்பிக்கப்பட்டது. இவ்வாண்டில் அத்தகைய இறுவட்டுக்களைஅரச/தனியார் நிறுவனங்கள், பிராந்திய அமைப்புகள்,பாடசாலைகள் மற்றும் வேண்டுகோள் விடுத்த வெளித்தரப்பினர் மதிதியில் விநியோகம் செய்தல் பிரதான பணியாகக் காணப்பட்டது. 150 நில்வனபெத இறுவட்டுக்களும் 520 டி.வி.டி க்களும் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.உரு

6.1: சோபாகெத டி.வி.டி

### 6.1.9 தேசிய சுற்றாடல் தகவல் நிலையம்

இலங்கையில் சுற்றாடல் தகவல்களை பெற்றுக் கொள்ளும் முக்கிய மையமாக தேசிய சுற்றாடல் தகவல் நிலையம் விளங்குகின்றது.

**குறிக்கோள்கள்**

- பயணாளிகளின் தகவல் தேவையை பூர்த்தி செய்யும் சுற்றாடல் தகவல் மூலங்களை ஏற்படுத்தி விருத்தி செய்தல்.
- சுற்றாடல் தகவல்களை பகுப்பாய்வு செய்து வலுவூட்டல்.
- உள்ளூர் மற்றும் சர்வதேச தகவல் நிலையங்கள் /நூலகங்கள் ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து தகவல்களை பரப்புதல்.

2015 ஆம் ஆண்டில் தேசிய சுற்றாடல் தகவல் நிலையத்தில் ஏற்பட்ட முன்னேற்றம் பின்வருமாறு:

#### 6.1.9.1தேசிய சுற்றாடல் நிலையம் /ம.சு.அ நூலகம் ஆகியவற்றால் மேற்கொள்ளப்பட்ட புத்தக நன்கொடை

சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித்திட்டத்தின் 5-ஆண்டு செயற்திட்டத்தின் கீழ் தேசிய சுற்றாடல் தகவல் நிலையம் /ம.சு.அ யின் நூலகம் ஆகியன பாடசாலைகளின் நூலகங்களில் சுற்றாடல் பிரிவுகளை அபிவிருத்தி செய்வதற்கு தீர்மானித்துள்ளன.

இந்த நிகச்சித்திட்டத்தின் கீழ் சுற்றாடல் தகவல் நிலையமானது குறைந்தளவு வசதிகளைக்கொண்ட பின்வரும் 05 பாடசாலைகளை தெரிவுசெய்து அவற்றின் நூலகங்களை அபிவிருத்தி செய்யும் வகையில் ரூபா 15 இலட்சம் பெறுமதியான புத்தகங்களையும் தளபாடங்களையும் நன்கொடையாக வழங்கியுள்ளது.






- கலத்தேவ மகா வித்தியாலயம்- அனுராதபுரம் மாவட்டம்
- ஒவிலிகந்த மகா வித்தியாலயம்- மாத்தலை மாவட்டம
- தபான கனிஸ்ட வித்தியாலயம் -

- உனுமல்ல மகா வித்தியாலயம்- கம்பஹுமாவட்டம்

மாவட்டம்

- வேலனை மகா வித்தியாலயம் - யாழ்ப்பாணம் மாவட்டம்








உரு 6.2: நில்வனபெத டி.வி.டி

நன்கொடை நிகழ்ச்சிநிரலானது சம்பந்தப்பட்ட பாடசாலை வளவுகளில் 2015யூலை 16, 17, 27 மற்றும் செப்டம்பர் 18, 29திகதிகளில் இடம்பெற்றது

வேலனை மகா வித்தியாலய புத்தக நன்கொடைஉனுமுல்லைமகா வித்தியாலய புத்தக நன்கொடை

**6.1.9.2 சேகரிப்பு அதிகரிப்பு**

71 சுற்றாடல் புத்தகங்கள் மற்றும் 14 சுற்றாடல் பத்திரிகைகள் விலைக்கு வாங்கப்பட்டன.225 புத்தகங்கள் கையகப்படுத்தப்பட்டு வகைப்படுத்தப்பட்டதுடன்

260 சஞ்சிகைகள்நூலக சேகரிப்புடன் சேர்க்கப்பட்டன.

### 6.1.9.3 ஆவணமயமாக்கல் சேவை மற்றும் வழிப்படுத்தல் பணி

#### 6.1.9.3.1தேசிய சுற்றாடல் தகவல் நிலையம் பின்வரும் தரவுத்தளங்களை பேணுவதுடன் 5,410 தரவுகளை பதிவேற்றம் செய்துள்ளது

- நூலக புத்தக பட்டியலுக்கான ம.சு.அ தரவுத்தளம்
- பத்திரிகை மற்றும் சஞ்சிகை ஆக்கங்களுக்கான IND தரவுத்தளம்.
- சு.தா.ம /ஆ.சு.ம அறிக்கைகளுக்கான சு.தா.ம /ஆ.சு.ம தரவுத்தளம்
- ம.சு.அ வெளியீடுகளுக்கான இ.கலஞ்சியம்

#### 6.1.9.3.2நூலக புத்தகங்களுக்கு பார்கோட்டு முறையொன்றை ஒன்றை உருவாக்கல்

- பார்கோட்டு வாசிப்பு முறையை செயற்படுத்தி 41 புதிய உறுப்புரிமை அட்டைகள் வழங்கப்பட்டது.

### 6.1.9.4 நூலக வெளியீடுகள்

சுற்றாடல் சஞ்சிகைகள் பற்றிய "சமகால உள்ளடக்கத்தின்" 06வெளியீடுகள் மற்றும் "சுற்றாடல் செய்தி பத்திரிகை சுட்டிகளின்"06 வெளியீடுகள் தொகுக்கப்பட்டு இணையம் ஊடாக பரப்பப்பட்டன.

### 6.1.9.5 சுற்றாடல் தகவல் பரிமாற்றம்

• பிரதான நூலகத்தில் 7180 பயனாளிகளுக்கு சுற்றாடல் செய்திகளை பெற்றுக்கொள்வாற்கான அனுசரணையை தேசிய சுற்றாடல் தகவல் நிலையம் வழங்கியுள்ளது.

• சர்வதேச மற்றும் உள்ளூர் நூலகங்கள் மற்றும் ஏனைய தாபனங்களுடன் சுற்றாடல் பற்றிய 865 தகவல்கள் பரிமாற்றம் செய்யப்பட்டன.

• பின்வரும் எண்ணிக்கையிலான பயனாளிகள் நூலக வசதிகளை நேச்சர்ஸ் பீல்ட் நிலையங்களில் இருந்து பெற்றுக்கொண்டுள்ளனர்.

அத்திடிய – 1788, ருமசால்ல – 1943,

• 4805புத்தகங்கள் இறவல் கொடுக்கப்பட்டதுடன் ஞாபகமூட்டல் கடிதங்களும் அனுப்பப்பட்டன.

• புத்தக நன்கொடைகள் – கடற்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை33

### 6.1.9.6 நூலக வலையமைப்பின் செயற்பாடுகள்

- தென்கிழக்காசிய (HELLIS) சுதாதார விஞ்ஞான நூலக வலையமைப்பு/இலங்கை நூலகச் சங்கம் (SLLA) /இலங்கை விஞ்ஞான தொழில்நுட்ப தகவல் நிலையம்(SLSTIC)/ கமத்தொழில் தகவல் வலையமைப்பு (AGRINET) நூலக வலையமைப்புகளுடன் தகவல் வேண்டுகோள்களை கையாளல்.
- 10 நூலகக்கூட்டங்கள் மற்றும் பயிற்ச்சிப்பட்டறைகளில் பங்கேற்றல்
- கமத்தொழில் தகவல் வலையமைப்புதரவை (CARP)ஒட்டோவா நூலகத்திற்கும் (UCAT) உயர் கற்பித்தலுக்கான பல்கலைக்கழக நிலையத் தரவை தேசிய நூலகத்திற்கும் அனுப்புதல்

### 6.1.9.7 ஏனைய செயற்பாடுகள்

- 2015/2016 ஆண்டுக்கான பிரிடிஸ் கௌன்சில் நிறுவக உறுப்புரிமையை புதுப்பித்தலும் ம.சு.அ பணியாட்களுக்கான அட்டைகளை விநியோகித்தலும்
- மெதிரிகிரிய மற்றும் வட்டகெதரவில் உலக சுற்றாடல் தினச் செயற்பாடுகள் (3 நாட்கள்)
- சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் திட்டமிடல் பற்றிய சர்வதேச கருத்தரங்குச் செயற்பாடுகள்

- மாதாந்த மற்றும் காலாண்டு அறிக்கைகளை தயாரித்தல்
- புனைக்கதைகள் 140 அட்டவணைப் -படுத்தப்பட்டு அடுக்கப்பட்டன
- 1913புதிய பத்திரிகை செய்தித்தாள் துண்டுகளை நூலக சேகரிப்பில் இணைத்தல்
- 2015 ஆம் ஆண்டு பசுமை விருது செயற்பாடுகள் மற்றும் சனாதிபதி சுற்றாடல் பதக்க காப்பகம் ஆகியவற்றுக்கு பங்களிப்பு செய்தல்
- தேசிய நூலகம் மற்றும் தேசிய காப்பகம் ஆகியவற்றுக்கு ம.சு.அ வெளியீடுகளின் பிரதிகள் விநியோகம் செய்யப்பட்டன.
- நிதிப்பிரிவுக்கான நன்கொடைகள் மற்றும் கொள்வனவுகள் பற்றிய பட்டியல் தயாரித்தல்
- இறுவட்டுக்கள் தயாரிப்பு -11 சு.தா.ம அறிக்கைகள் ரூபா 5,750.00
- தகவல் வேண்டுகோள்களை தென்கிழக்காசிய (HELLIS) சுதாதார விஞ்ஞான நூலக வலையமைப்பு/இலங்கை நூலகச் சங்கம் (SLLA) / இலங்கை விஞ்ஞான தொழில்நுட்ப தகவல் நிலையம்(SLSTIC)/ கமத்தொழில் தகவல் வலையமைப்பு (AGRINET) நூலக வலையமைப்புகளுடன் கையாளல்
- 13 நூலக கூட்டங்கள் மற்றும் பயிற்சிப்பட்டறைளில் பங்கேற்றல்
- 2014/2015 ஆண்டுக்கான பிரிடிஸ் கௌன்சில் நிறுவக உறுப்புரிமையை புதுப்பித்தலும் ம.சு.அ பணியாட்களுக்கான அட்டைகளை விநியோகித்தலும்
- ஸ்ரீபாதை நிகழ்ச்சித்திட்டத்திற்காக துண்டுப்பிரசுரங்கள் தயாரித்தல் – 10,000
- ஸ்ரீபாதை நிகழ்ச்சித்திட்ட செயற்பாடுகள் ஒருங்கிணைப்பு
- இ-கழிவு நிகழ்ச்சித்திட்டம் வழிநடத்தல் மற்றும் அலங்காரங்கள்
- மண்டப ஒழுங்கமைப்பு,ஆசணஒதுக்கம் மற்றும் வரவேற்பு குழாத்திற்கான வழிகாட்டல்
- பிரித் சடங்கிற்கான அழைப்பித்ல் அட்டைகள் தயாரிப்பு
- மாதாந்த மற்றும் காலாண்டு அறிக்கைகளை தயாரித்தல்
- புனைக்கதைகள் 180 அட்டவணைப்படுத்தப்பட்டு அடுக்கப்பட்டன.
- 2072புதிய பத்திரிகை செய்தித்தாள் துண்டுகளை நூலக சேகரிப்பில் இணைத்தல்
- சிவில் பொறியியலாளர் நிறுவக மாணவர்களுக்கு சுற்றாடல் தகவல் சேவைகள் பற்றிய வழிப்புணர்வு நிகழ்ச்சியை நடாத்தல்
- அத்திடிய நிய பீல்ட நூலகம் பொருட் பட்டியல் கணக்கெடுப்பு நடாத்தப்பட்டது
- சமுர்ந்தி உத்தியோகத்தர்களுக்கு வழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் நடாத்ததுவதற்காக 650 குறிப்புச் சீட்டுகள் தயாரிக்கப்பட்டன.
- சட்டப்பிரிவுக்கு 89புத்தகங்கள் கையளிக்கப்பட்டன.
- 30 புத்தகங்களும் 14 துண்டுப் பிரசுரங்களும் சுற்றாடல் அமைச்சுக்கு அனுப்பப்பட்டன.
- ம.சு.அ அதிகாரசபையின் வெளியீடுகளின் பிரதிகள் தேசிய நூலகம் மற்றும் தேசிய காப்பகத்திற்கு அனுப்பப்பட்டன.
- காலாவதியான மற்றும் பொறுத்தமற்ற நூலகப் புத்தகங்களுக்கான கலைத்தல் கொள்கை தயாரிக்கப்பட்டது
- நூலகத்தின் பத்திரிகைகள் மற்றும் புத்தகங்களின் பழைய வெளியீடுகளை ம.சு.அ பணியாளர்களுக்கு விநியோகித்தல்- 1727.

- நூலகத்தின் சேகரிப்பில் இருந்து 903 புத்தகங்களும் பத்திரிகைகளும் நீக்கப்பட்டன.

### 6.1.9.7 வருமானம்

- ம.சு.அ வெளியீடுகளின் விற்பனை - 1122.
- ரூபா. 47,500.00,
- (புத்தகங்கள், சுவரொட்டிகள,துண்டுப்பிரசுரங்கள் மற்றும் இறுவட்டுக்கள்)போட்டோ பிரதி கட்டணம்- 8,961 பக்கங்கள்
- ரூபா. 49,305.00
- ம.சு.அ வெளியீடுகளின் விற்பனை - 99 ரூபா17,315.00 (புத்தகங்கள், சுவரொட்டிகள, துண்டுப்பிரசுரங்கள் மற்றும் இறுவட்டுக்கள்)
- போட்டோ பிரதி கட்டணம் - 14,980 பக்கங்கள் ரூபா 74,900.00

### 6.1.9.8 பல்கலைக்கழக மாணவர்களுக்கு கல்வி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்

பல்கலைக்கழக மாணவர்களை வழிப்பூட்டும் வகையில் ம.சு.அ சுற்றாடல் கல்வி மற்றும் வழிப்பூட்டல் குழுவானது பொறியியல் பீடம்,சிவில் பொறியியல் திணைக்களம் மற்றும் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகம் ஆகியவற்றைச் சேர்ந்த பட்டதாரி



மாணவர்களுக்கு ஒரு நாள் பயிற்ச்சிப்பட்டறை ஒன்றை 80 மாணவர்களின் பங்குபற்றலுடன் நடாத்தியது.

# 7.0 திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு பிரிவு



சம்பந்தப்பட்ட பிரிவுகள், அலகுகள், மாகாண அலுவலகங்கள் ஆகியவற்றின் ஆலோசனைகளை பெற்று தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் அதிகாரமளிக்கப்பட்டுள்ள கடமைகள் மற்றும் பொறுப்புகள் ஆகிவற்றின் வரையறைக்கள் மற்றும் பல்வேறு செயற்பாட்டுத் திட்டங்கள் ஆகியவற்றை வகுப்பதும் அவற்றை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக மத்திய சுற்றாடல் அதிகாரசபை தாபிக்கப்பட்டதன் நோக்கங்களை அடைவதே திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு பிரிவின் முக்கிய பொறுப்புக்களாக உள்ளது. இச்செயற்பாடானது அரசாங்கத்தின் சுற்றாடல் துறைக்கு முன்னுரிமை அளிக்க உதவியதுடன் வரவு செலவு திட்டத்திலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு தனியார் துறையில் முதலீட்டு திட்டங்களை விருத்தி செய்வதற்கும் அல்லது வழிப்படுத்துவதற்கும் வழிசமைத்ததுள்ளது. மேலும் சர்வதேச நிதி மற்றும் அபிவிருத்திசார்ந்த ஆதரவை முறையாக அணிதிரட்டவும் வழிவகுத்ததுள்ளது. வெளித்தரப்பு மூலம் நிதியுதவி அளிக்கப்பட்ட கருத்திட்டங்கள் மற்றும் ம.சு.அ யின் வருடாந்த திட்டங்களின் அடிப்படையில் அமைந்த ஏனைய தலையீடுகள் ஆகியவற்றின்சுற்றாடல் துறைச்சார்ந்த ஒவ்வொரு கருப்பொருற் பரப்பிற்கும் பல்வேறு செயற்திட்டங்கள் விருத்தி செய்யப்பட்டதுடன் அவைதலைமை அலுவலகத்தால் மத்திய அரசாங்கத்தின் அமைப்பென்ற வகையிலும் பிராந்திய மட்டத்தில் மாகாண அலுவலகங்களாலும் நடைமுறை படுத்தப்படுகின்றன.

திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு பிரிவானது ம.சு.அ யின் 2014 – 2018 ஆண்டுக்கானகூட்டிணைந்த திட்டங்களின் அடிப்படையில் அமைந்த பல்வேறு செயற்திட்டங்களை வகுத்தல், கண்காணிப்பு திட்டமிடல் மற்றும் உரிய காலத்திற்குறிய இயக்க செயற்பாடுகள் ஆகிய செயற்பாடுகளுக்கு தலைமை வகித்தது. இப்பிரிவானது மேற்படி திட்டங்களை ஒருங்கிணைத்து அனுசரணை வழங்கிஅவற்றை நடைமுறைபடுத்தல், சம்பந்தப்பட்ட அதிகார சபைகளுக்கு வெளியீடுகளை உரியகாலத்தில் வழங்குதல் மற்றும் இப்பரிவின் செயற்பாடுகள் பற்றிய ஒவ்வொரு அம்சங்களின் முன்னேற்ற அறிக்கையை வெளியிடுதல் ஆகியவற்றுக்கு பொறுப்பாகவுள்ளது.

அதிகாரசபையின் செயற்பாடுகளை ஒருங்கிணைத்து கண்காணிப்பது தொடர்பில் பொருத்தமான முறைமையொன்றுக்கு வழிசமைக்கும் வகையில் பிரதான விடயங்கள் பற்றிய பிரச்சினைகளை பிராந்திய மட்டத்தில் ஒரே மேடையில் கலந்துரையாடும் முகமாக தனித்தனியான கூட்டங்கள் மாதத்தில் ஒருமுறை ம.சு.அ யின் முகாமைத்துவம் மற்றும் மாகாண அலுவலகங்கள் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் ஒழுங்கமைக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து திட்டங்களை நடைமுறை கட்டத்திற்கு கொண்டுவரவும் அவற்றை நடைமுறைபடுத்தும் சாத்தியமான அனுசரணையை இணங்காணவும் எம்மால் முடிந்தது.

## 7.1 மாகாண அலுவலகங்களுடன் ஒருங்கிணைப்பு

மாகாண அலுவலகங்கள் தாபிக்கப்பட்டதைத் தொடர்ந்து, நிர்வாகம் மற்றும் சுற்றாடல் பிரச்சினைகள் தொடர்பில் தலைமையகம் மற்றும் மாகாண அலுவல்கள் ஆகியவற்றுக்கு இடையில் திட்டமிடல் முகாமைத்துவ பிரிவின் அனுரணையை உள்ளடக்கும் பிரச்சினைகளை ஒத்திசைவாக்குவதற்கு நிருவாக ஏற்பாடொன்றின் அடிப்படையிலான ஒருங்கிணைப்புப் பொறிமுறையொன்று இருக்க வேண்டும். மேலும், திட்டமிடல் மற்றும் முகாமைத்துவ பிரிவானது செயற்திட்ட

அபிவிருத்தி, சுற்றாடல் பாதுகாப்பு பற்றிய கருத்திட்ட முன்மொழிவுகளை பெற்றுக்கொள்ளல் மற்றும் அவற்றை நிறைவேற்றல் ஆகியவற்றுடன் தொடர்புடைய விடயங்களை ஒருங்கிணைக்கவும் வேண்டியுள்ளது.

கம்பஹா, கலுத்தறை,மாத்தறை, அம்பாந்தோட்டை,அம்பாறை,மட்டக்களப்பு,நுவரெலியா,மாத்தலை,மொனறாகலை (புத்தல) இரத்தினபுரி,பொலன்னறுவை,மட்டக்களப்பு, அம்பாறை, கிளிநொச்சி,வவுனியா.முல்லைத்தீவு மற்றும் மன்னார் உள்ளடங்களாக 15மாவட்ட அலுவலகங்கள் காணப்படுகின்றதுடன் இவை 2015ஆம் ஆண்டில் செயற்பட்டன.

### 7.2 பாராளுமன்ற ஆலோசனைக்குழு

2015 ஆம் ஆண்டில் பல்வேறு பிரச்சினைகள் பற்றிய ஏராளமான புகார்கள் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் இருந்து மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு கிடைத்தன. அத்தகைய புகார்கள் சம்பந்தப்பட்ட பிரிவுகள்/ மாகாண அலுவலகங்கள் ஆகியவற்றுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டதுடன் அவை பரிசீலனைக்கும் உட்படுத்தப்பட்டன. அறிக்கைகள் சுற்றாடல் அமைச்சின் ஊடாக பாராளுமன்ற ஆலோசனைக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டன.இந்த அறிக்கைகள் கௌரவ சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர் தலைமை வகித்த இந்த பாராமன்ற ஆலோசனைக் குழுவில் பாராளுமன்ற உறுப்பினர்களின் பங்கேற்றலுடன் கலந்துரையாடப்பட்டன.

### 7.3சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்திற்கான தரவுத்தளம் பேணுகை மற்றும் இற்றைபடுத்தல்(பீ வகை)

சுற்றாடல் பாதுகாப்பு உரிமமானது தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் ஒழுங்கமைப்பு கருவியாக செயற்பட்டு கைத்தொழில் நடவடிக்கைகள் காரணமாக ஏற்படும் சுற்றாடல் மாசடைத்தலை கட்டுப்படுத்துகின்றது.2008.01.25 ஆம் திகதிய 1533/ 16 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியின் கீழ் வெளியிடப்பட்டு,‘‘ஏ’’ உயர் மாசடைதல்,‘‘பீ’’ நடுத்தர மாசடைதல் மற்றும் ‘‘சீ’’ குறைந்தளவு மாசடைதல் என்ற வகையில் குறித்துரைக்கப்பட்டு பட்டியலிடப்பட்டள்ள அனைத்து நடவடிக்கைகளுக்கும் சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் வழங்கவேண்டியது கட்டாயமாகும்.

ம.சு.அ யின் சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டு பிரிவானது சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்திற்கான தரவுக்தளம் ஒன்றைபேணிவருகின்றது (ஏ வகை) அவ்வாறான தரவுத்தளம் ஒன்றை (பீ வகை) சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் தொடர்பிலும் பேணவேண்டியது அவசியமாகும். ஆகையால்,திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு பிரிவானது ம.சு.அ யின் மாகாண அலுவலகத்தால் வழங்கப்பட்ட ‘‘பீ’’ வகையின் கீழ் பரிந்துரைக்கப்பட்ட சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் (பி வகை) ஒன்றின் பிரதியை சேகரித்து (பீ வகை) சு.பா.உ ற்கான தரவுக்தளத்தை பேணுவதுடன்அதனை மாதாந்தம் இற்றைப்படுத்தியும் உள்ளது.மேலும், சுருக்க புள்ளிவிபர அறிக்கைகளை தேவைக்கேற்பவாறு மாதாந்தம், காலாண்டுக்கு ஒருமுறை மற்றும் வருடாந்தம் என்ற அடிப்படையில் உருவாக்குகின்றது. இந்த தரவுத்தளமானது சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்கள் வழங்குதல் மற்றும் புதுப்பித்தல் பற்றிய எதிர்கால தீர்மானங்களை மேற்கொள்ளவும் எதிர்வுகூறல்களை விடுக்கவும் மிகவும் அவசியமாகவுள்ளது. 2015ஆம் ஆண்டின் இறுதிவரையில் 11,100 (ஏ வகை) சு.பா.உ தரவுகள் மற்றும் 2,866,(பீ வகை) சு.பா.உ தரவுகளும் 2014ஆம் ஆண்டின் தரவுத்தளத்திற்கு பதியப்பட்டுள்ளன.

## 7.4 மேற்பார்வை குழு

சுற்றாடல் தாக்க மதிப்பீட்டை (சு.தா.ம) நடைமுறைபடுத்துவன் ஊடாகவும் கைத்தொழில்களுக்கு சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை (சு.பா.உ) வழங்குவதன் ஊடாகவும்தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் தனது ஒழுங்கமைப்பு அதிகாரத்தைம.சு.அ பயன்படுத்துகின்றது. மேலும், சு.தா.ம அல்லது ஆ.சு.ம ஆகியன அவசியமற்ற புதிய கைத்தொழில் அமைவிடங்கள் மற்றும் இயற்கை வளங்கள் சம்பந்தப்பட்ட கருத்திட்டங்களை புதிய அமைவிடங்கள் பற்றிய பரிந்துரை செயற்பாட்டின் ஊடாக ம.சு.அ விடுவித்தது. பாரிய கருத்திட்டங்கள் தொடர்பான சு.தா.ம செயல்முறை மற்றும் ''ஏ'' வகைக் கைத்தொழில் கருத் திட்டங்களுக்கான சு.பா.உ தவிர்ந்த மேற்குறிப்பிட்ட நடைமுறைகள் அனைத்தும் சம்பந்தப்பட்ட மாகாண மற்றும் மாவட்ட அலுவலகங்களால் முன்னெடுக்கப்படுகின்றன.

தலைமையகம், மாகாண அலுவலகங்கள் மற்றும் மாவட்ட அலுவலகங்கள் ஆகியவை அனைத்தும் ஒரே சீரான நடைமுறையை பின்பற்ற வேண்டும் என்ற முக்கிய விடயம் புரிந்து கொள்ளப்பட்டுள்ளது. தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமையவே சு.தா.ம மற்றும் சு.பா.உ பற்றிய நடைமுறைகள் பின்பற்றப்படுவதால் விண்ணப்பங்களை வகைப்படுத்துவதற்கான நேரகாலம், கருத்திட்ட உரிமையாளர்களால் சமர்ப்பிக்கப்படவேண்டிய ஆவணங்களின் தேவை, கருத்திட்ட உரிமையாளர்களால் செலுத்தப்படவேண்டிய கட்டணம் ஆகியவை நாடு பூராகவும் ஒரே விதமாக அமையவேண்டும்.

இதனை கருத்திற் கொண்டு, தலைவர் ஒருவரால் வழிநடத்தப்படும் மேற்பார்வைக் குழவொன்று தாபிக்கப்பட்டது. இந்த குழுவானது பணிப்பாளர் நாயகம் மற்றும் சு.மா.க மற்றும் சு.மு.ம பிரிவுகளின் பிரதி பணிப்பாளர் நாயகங்கள் மற்றும் சு.மா.க,தே.வ.மு,சு.தா.ம, சட்டம், க.மு பிரிவுகளின் பணிப்பாளர்கள் மேல், மத்திய, சப்ரகமுவ, தென், கிழக்கு ஆகிய மாகாணங்களின் மாகாண பணிப்பாளர்கள்/ஊவா, வடமத்திய மற்றும் வட மாகாணங்களுக்கு பொறுப்பான அதிகாரிகள் ஆகியோரை உள்ளடக்கியுள்ளது.

இக்குழுவானது இரண்டு கிழமைகளுக்கு ஒருமுறை கூடியதுடன் அனைத்து சு.தா.ம,ஆ.சு.ம அங்கீகாரங்கள்,'ஏ' வகை கைத்தொழில்களை தாபிப்பதற்கான புதிய அமைவிட பரிந்துரைகள், புதிய'ஏ' வகை சு.பா.உ கள் முதலீட்டுச் சபைக்கான புதிய சு.பா.உ கள் மற்றும் அமைவிட பரிந்துரைகள் ஆகியவை பிரதி பணிப்பாளர் நாயகத்தால் அல்லது தலைமை அலுவலகத்தின் பணிப்பாளர்கள் அல்லது சம்பந்தப்பட்ட மாகாண அலுவலகங்களின் பொறுப்பதிகாரிகள் ஆகியோரின் ஒப்புதல் பெறப்படுவதற்கு முன்னர் இந்த குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டன.

இந்த ஆணடில் அவ்வாறான கூட்டங்கள் 12 இடம்பெற்றதுடன் திட்டமிடல் கண்காணிப்பு பிரிவானது இப்பணியின் ஒருங்கிணைப்பு மற்றும் செயவகப் பணி ஆகிவை அனைத்தையும் மேற்கொண்டது.

## 7.5கூட்டங்கள்

திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு குழுவானது பல்வேறு கூட்டங்களை ஒருங்கிணைப்பு செய்ததுடன் முக்கிய வகிபாகத்தையும் வழங்கியது.

## 7.6 கருத்திட்ட ஒருங்கிணைப்பு, கண்காணிப்பு,மதிப்பீடு மற்றும் அறிக்கையிடல்

நிகழ்ச்சித் திட்ட இலக்குகளை அடைதல் மற்றும் நிகழ்ச்சித்திட்ட நிதியின் உச்ச பயனை பெறுதல் ஆகிய நோக்கங்களின் அடிப்படையில் திரைசேரி நிதி உதவியுடனான நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பின்வரும் இயக்கச் செயற்பாடுகள் ஒருங்கிணைக்கப்பட்டு அனுசரணையும் இப்பிரிவால் வழங்கப்பட்டது.

### 7.6.1திரைசேரிநிதி உதவியுடனானநிகழ்ச்சித்திட்டங்கள்

- பிலிசறு நிகழ்ச்சித்திட்டம்(ரூபா279 மில்லியன்)
- நுகர்வுக்கு பின்னரான பிலாஸ்டிக் முகாமைத்துவம் நிகழ்ச்சித்திட்டம் (ரூபா50மில்லியன்)
- ம.சு.அ ஆய்வுகூடங்களின் மேம்பாடு(ரூபா30 மில்லியன்)
- பாடசாலை முன்னோடி நிகழ்ச்சித்திட்டம்(ரூபா 30 மில்லியன்)

### 7.6.2 வெளிநாட்டு நிதியுதவி திட்டம்

- பாரிய நீர் அமைப்புகளின் நீரின் தரத்தை கண்காணித்தல் (ஜெய்கா கருத்திட்டம்) (இலங்கை அரசு – 5 மில்லியன், ஜெய்கா – 26.5 மில்லியன்)
- பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியளிப்பு (EDCF) கழிவு அகற்றல் இடவசதிகளை நிர்மாணிக்கும் கருத்திட்டம்(இலங்கை அரசு – 92 மில்லியன்/கொரியா – 300 மில்லியன்)
- EDCF விளக்கம்: பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியத்தின் நிதியுதவி. இந்த நிதியின் ஒதுக்கீடானது ரூபா 392 மில்லியனாகும், இக்கருத்திட்டத்திற்கு(300 மில்லியன் – வெளிநாடு, 92மில்லியன–உள்ளூர்)

# 8.0.முறைப்பாட்டு பிரிவு

செயற்பாடு அல்லது செயற்பாடின்மை அல்லது மத்திய சுற்றாடல் அதிகார சபையால் வழங்கும் சேவையின் தரம் பற்றி சமதாயத்தைச் சேர்ந்த உறுப்பினரின்/ உறுப்பினர்களின் அதிருப்தியை வெளிப்படுத்தும் கூற்றொன்றே புகார் எனப்படுகின்றது. ஆகையால் புகார்களை கையாலும் அதிகாரசபையினது நடைமுறையை மேம்படுத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

2015 ஆம் ஆண்டில் புகார்களை கையாலும் மென்பொருள் முறைமை மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபைக்குக் கிடைக்கப் பெற்ற பொதுமக்கள் புகார்களை தீர்ப்பதிலுள்ள பயனுறுதித்தன்மையை மேம்படுத்தல் தொடர்பான பிரச்சிகைள் ம.சு.அ யால் ஆய்வுக்கு எடுக்கப்பட்டது.

இந்த ஆய்வின் கண்டுபிடிப்புகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது தேசிய சுற்றாடல் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டதை “புனாருத்தய” முன்னெடுக்கும் இணைய அடிப்படையிலான புகார் முகாமைத்துவ முறைமையொன்றை வடிவமைத்து புகார்களை கையாளும் திறன், பயனுறுதித் தன்மை மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவற்றை மேம்படுத்தவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டது: 2016-2018. முறையிடுகின்றவர்களிடம் இருந்து பெறும் புகார்கள் மற்றும் தகவல்களை முகாமைத்துவ மற்றும் திட்டமிடல் கருவியாக பிரயோகிப்பது இணைய அடிப்படையிலான புகார் முகாமைத்துவ முறைமை வடிவமைப்பின் மற்றொரு முக்கிய அம்சமாகும்.

2015ஆம் ஆண்டு முழுவதும் ம.சு.அ பிரிவுகள்,தலைமை அலுவலகங்களின் பிரிவுகள் மற்றும் மாவட்ட அலுவலகங்கள் ஆகியவை காட்டிய குழுப்பணி மீதான ஆர்வமானது பொது மக்களின் புகார்களை கையாள்வதில் பெற்ற வெற்றியை பகிர்ந்து கொள்கின்றது.

மத்திய அதிகார சபையுடன் தொடர்புபடாத புகார்கள், அவற்றுடன் தொடர்புபட்ட பிரச்சினைகளை தீர்க்கும் வகையில் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன. (உதாரணம், புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கப்பணியகம், தொலைதொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழு, உள்ளூராட்ச்சி அதிகார சபைகள்)

2015ஆம் ஆண்டு ம.சு.அ மொத்தமாக 2,722 புகார்களைப் பெற்றதுடன் அவற்றுள் 64% மான 1,747 புகார்களுக்கு பரிகாரம் காணப்பட்டன. விஞ்சியவற்றுக்கான தீர்வுகள் காணப்படும் நிலையில் உள்ளன. கீழே கொடுக்கப்பட்டுள்ள வட்ட விளக்கப்படம் புகார்களின் பரம்பலை காட்டுகின்றதுடன் தரப்பட்டுள்ள அட்டவணையானது 2015ஆம் ஆண்டில் ம.சு.அ க்கு கிடைக்கப்பெற்ற புகார்களை தீர்ப்பது தொடர்பில் பொருப்புகள் எவ்வாறு பிரிவுகள், மாகாண அலுவலகங்கள் மற்றும் மாவட்ட அலுவலகங்கள் ஆகியவற்றுக்கு இடையில் பங்கிடப்பட்டுள்ளன என்பதை காட்டுகின்றது.

அட்டவணை 8.1: புகார்களை தீர்ப்பது தொடர்பில் பொருப்புகள் எவ்வாறு பிரிவுகள், மாகாண அலுவலகங்கள் மற்றும் மாவட்ட அலுவலகங்கள் ஆகியவற்றுக்கு இடையில் பங்கிடப்பட்டுள்ள விதம் பற்றிய சுருக்கம்- 2015ஆம் ஆண்டு

| | பிரிவு / அலுவலகம் | | கிடைக்கப்பெற்ற புகார்கள் | | தீர்க்கப்பட்ட புகார்கள் | |
|---|---|---|---|---|---|---|
| | | | இல | % | இல | % |
| 1. | மேல் மாகாணம் | கொழும்பு மாவட்டம் | 496 | 45.9 | 262 | 52.8 |
| | | கம்பஹ மாவட்டம | 362 | | 182 | 50.2 |
| | | களுத்தரை மாவட்டம் | 393 | | 242 | 61.5 |
| 2. | தென் மாகாணம் | காலி மாவட்டம் | 151 | 10.5 | 136 | 90.0 |
| | | மாத்தறை மாவட்டம் | 79 | | 50 | 63.2 |
| | | ஆம்பாந்தோட்டை மாவட்டம் | 57 | | 38 | 66.7 |
| 3. | ஊவாமாகாணம் | பதுளை மாவட்டம் | 75 | 5.3 | 54 | 72.0 |

| | பிரிவு / அலுவலகம் | | கிடைக்கப்பெற்ற புகார்கள் | | தீர்க்கப்பட்ட புகார்கள் | |
|---|---|---|---|---|---|---|
| | | | இல | % | இல | % |
| | | மோனராகலை மாவட்டம் | 68 | | 48 | 70.6 |
| 4. | வடமேல்மாகாணம் | | 152 | 5.6 | 88 | 57.9 |
| 5. | சப்ரபமுவ மாகாணம் | இரத்தினபுரி மாவட்டம் | 278 | 18.3 | 232 | 83.4 |
| | | கேகாலை மாவட்டம் | 218 | | 170 | 78.0 |
| 6. | வட மத்திய மாகாணம் | அனுராதபுரம் மாவட்டம் | 62 | 3.7 | 50 | 80.6 |
| | | பொலன்னறுவை மாவட்டம் | 39 | | 19 | 48.7 |
| 7. | மத்திய மாகாணம் | | 137 | 5.0 | 87 | 63.5 |
| 8. | கிழக்குமாகாணம் | திருகோணமலை மாவட்டம் | 6 | 1.1 | 4 | 66.7 |
| | | அம்பாறை மாவட்டம் | 11 | | 7 | 63.6 |
| | | மட்டக்களப்பு மாவட்டம் | 15 | | 6 | 40.0 |
| 9. | வட மாகாணம் | | 27 | 1.0 | 17 | 63.0 |
| 10. | சுற்றாடல் மாசு கட்டுப்பாட்டு பிரிவு | | 44 | 1.6 | 26 | 59.1 |
| 11. | கழிவு முகாமைத்துவ பிரிவு | | 13 | 0.5 | 7 | 53.8 |
| 12. | சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு பிரிவு | | 30 | 1.1 | 17 | 56.7 |
| 13. | இயற்கை வளங்கள் முகாமைத்துவ பிரிவு | | 9 | 0.3 | 5 | 55.6 |
| | மொத்தம் | | 2,722 | 100.0 | 1,747 | 64.2 |




குறிப்பு- 1. மொத்த புகார்களின் எண்ணிக்கை: 2722

2.சுராசரி பெறுமதிகள் முழு எண்ணுக்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

3. 2016.01.18 இல் உள்ளவாறு ம.சு.அ யின் சம்பந்தப்பட்ட பிரிவுகள் மற்றும் அலுவலகங்களால் தரவேற்றம் செய்யப்பட்ட மேற்படி அட்டவணையின் தரவுகள்மற்றும் விளக்கப்படத்தில் குறிக்கப்பட்டுள்ள தரவுகள் என்பன புகார் கையாளும் மென்பொருளால் அட்டவணைப்படுத்தப்பட்டன.

***வழி காட்டி;***

| | | | |
|---|---|---|---|
| WP | : மேல் மாகாணம் | EPC | : சுற்றாடல் மாசு கட்டுப்பாட்டு பிரிவு |
| SUP | : தென் மாகாணம் | WM | : கழிவு முகாமைத்துவ பிரிவு |
| NCP | : வட மத்தியமாகாணம் | NRM | : இயற்கை வளங்கள் முகாமைத்துவபிரிவு |
| NW | : வடமேல்மாகாணம் | EIA | : சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு பிரிவு |
| SAP | : சப்ரபமுவ மாகாணம் | CP | : மத்திய மாகாணம் |
| EP | : கிழக்குமாகாணம் | NP | : வட மாகாணம் |

உரு 8.1பிரிவுகள் மற்றும் மாகாண அலுவலகங்கள் மத்தியில் புகார்களின் பகிர்வு




உரு 8.2: ம.சு.அ பிரிவுகள்,மாகாண அலுவலகங்கள் பெற்ற புகார்கள் மற்றும் தீர்வு காணப்பட்ட புகார்கள்







Received
Resolved
In progress
160
140
120
100
80
60
40
20
0
143
71%
29%
pogress of complaints -Uva Province


Received
Resolved
In progress
160
140
120
100
80
60
40
20
0
152
58%
42%
progress of complaints -North Western Province


Received
Resolved
In progress
600
500
400
300
200
100
0
496
81%
19%
progres of complaints -Sabaragamuwa Province


Received
Resolved
In progress
120
100
80
60
40
20
0
101
68%
32%
progress of complaints -North Central Province


Received
Resolved
In progress
150
100
50
0
137
64%
36%
progres of complaints - Central Province


Received
Resolved
In progress
35
30
25
20
15
10
5
0
32
53%
47%
progress of complaints -Eastern Province


Received
Rsolved
In progress
30
25
20
15
10
5
0
27
63%
37%
progress of complaints -Nothern Province


Received
Resolved
In progress
50
40
30
20
10
0
44
59%
41%
progress of complaints -Environmental Pollution Control unit


Received
Resolved
In progress
35
30
25
20
15
10
5
0
30
57%
43%
progress of complaints -Environmental Impact Assessment unit


Received
Resolved
In progress
14
12
10
8
6
4
2
0
13
54%
46%
progress of complaints -Waste Management unit


Received
Resolved
In progress
10
8
6
4
2
0
9
56%
44%
progress of complaints -Natural Resources Mgt. unit

# 9.0 தகவல் தொழில் நுட்ப பிரிவு(த.தொ.பி)

இணையத்தளம், மின்னஞ்சல் சேவை, உள்ளூர் வலையமைப்பு, தரவுத்தளம் மற்றும் கணனி வன்பொருள் மற்றும் மென்பொருள் உள்ளிட்ட தகவல் தொழில்நுட்ப வளங்களின் இயக்கச்செயற்பாடு மற்றும் பேணுகை ஆகியவற்றிக்கு பொறுப்பாக தகவல் தொழில்நுட்பபப் பிரிவு செயற்படுகினறது.

### பணிகள்

- சேவர்கள் மற்றும் உள்ளூர் வலையமைப்பு உட்பட தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பை பேணல்.
- அதிகாரசபையின் தகவல் தொழில்நுட்ப பாதுகாப்பை முகாமைத்துவம் செய்தல்
- ம.சு.அ இணையத்தளத்தை அபிவிருத்தி செய்து அதனைப் பேணல்.
- ம.சு.அ தேவைகளை ஈடுசெய்யும் தனிப்பயனாக்கப்பட்ட தகவல் முறைமையை அபிவிருத்தி செய்தல்
- மென்பொருள் மற்றும் வன்பொருள் வர்த்தகர்களின் தொடர்பை ஏற்படுத்தல்/ ஒருங்கிணைப்பு செய்தல் தகவல் தொழில்நுட்ப கருத்திட்ட முகாமைத்துவமும்
- மத்திய சுந்நாடல் அதிகார சபைக்கான நீறுவக மின்னஞ்சல் சேவையை முகாமைத்துவம் செய்தல்
- வன்பொருள் மற்றும் மென்பொருள் பிரயோகம் மற்றும் பயனாளி மட்ட இயக்க முறைமை முகாதைத்துவம்
- ம.சு.அ பணியாட்களுக்கு செயலமர்வு பயிற்சப்பட்டறை ஆகிவற்றை நடாத்தல்

### சாதனைகள்

ஜாவா ஈ.ஈநிறுவக பிரயோகத்தைபயன்படுத்தி உள்ளக முறைமையை அபிவிருத்திசெய்தல்

- வைத்திய காப்புறுதி உரிமைகோரல் முறைமை
- உத்தியோகத்தர்களின் தொலைபேசி கொடப்பனவு முறைமை
- EIASYS:சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு முறைமை
- சு.பா.உ முறைமை – சுற்றாடல் பாதுகாப்பு உரிமம்(செயற்பாட்டில் உள்ளது)

இந்த முறைமையானது முழுமையாக செயற்படும் இணைய-சார் முறைமையை வழங்குகின்றது. இது உள்ளக தேவைகளுக்காக நடைமுறைபடுத்தப்பட்டது. பயன்படுத்தப்பட்ட பிரதான தொழில்நுட்பம் பின்வருவனவற்றை உள்ளடக்ககின்றது. அவையாவன: J2EE நிறுவக பிரயோகம்,நெட்பீன்ஸ் 7.0 உடன் MY SQL-சேர்வர், ப்ரைம்பேசஸ்3.4 மற்றும் Adobeபொட்டோசொப் CS 8.0

- வைத்திய காப்புறுதி உரிமைகோரல் முறைமை

ம.சு.அ பணியாட்களுக்கு பயனர்-சிநேகபூர்வ மற்றும் பயனுறுதியான வைத்திய காப்புறுதி உரிமைகோரல் முறைமையொன்றுக்கு அனுசரணை வழங்குவது இந்த முறைமையின் பிரதான நோக்கங்கள் ஆகும். தலைமை அலுவலக ஊழியர்கள் மற்றும் மாகாண மற்றும் மாவட்ட பணியாட்கள் ஆகிய இரண்டு தரப்பினரும் இணைய பிரயோகமொன்றை பயன்படுத்தி இந்த முறைமைறை முகாமைத்துவம் செய்கின்றனர்.ஊழியர்களுக்குஅவர்களதுத னிப்பட்ட வைத்திய காப்புறுதி விபரங்களை பெற்றுக்கொள்ள முடியுமாக உள்ளது.

- உத்தியோகத்தர்களின் தொலைபேசி கொடுப்பணவு முறைமை

மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் நிறைவேற்று அதிகாரிகளின் தொலைபேசி பட்டியல்களை பேணவும் அவர்களின் மாதாந்த கொடுப்பனவுகளை முகாமைத்துவம் செய்வதற்குமான இணைய அடிப்படையிலான முறைமை.

- EIASYS:சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு முறைமை

இந்த முறைமையானது மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் (ம.சு.அ) நிறைவேற்றப்படும் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு செயல்முறையுடன் தொடர்புடைய தகவல் முகாமைத்துவம் மீது கவனத்தை செலுத்துகின்றது. இதனை ம.சு.அ யின் அனைத்து மாகாண அலுவலகங்கள் மற்றும் மாவட்ட அலுவலகங்கள் ஊடாக அணுகலாம்

- சு.தா.ம முறைமை –சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் முறைமை (செயல் வடிவம் பெறும் நிலையில் உள்ளது)

இந்த முறைமையானதுமத்திய சுற்றாடல் அதிகாரசபையால் (ம.சு.அ) நிறைவேற்றப்படும் சுற்றாடல் தாக்க உரிமம் (சு.தா.உ) நடைமுறையை முகாமைத்துவம் செய்யக்கூடிய இணைய அடிப்படையிலான முறைமையை வழங்குகின்றது. இதனை ம.சு.அ யின் அனைத்து மாகாண அலுவலகங்கள் மற்றும் மாவட்ட அலுவலகங்கள் ஊடாக அணுகலாம்.

வரையறுத்த சீராக்கிய செயல்முறையானது(RUP) அபிவிருத்தி முறையொன்றாக பயன்படுத்தப்படுகின்றதுடன் மேற்படி முறைமைக்குJ2EE, நெட்பீன்ஸ்IDE 7.0, MYSQL, ப்ரைம்பேசஸ் 3.4 மற்றும் எடோப் பொடோசொப்CS8.0 ஆகிய தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டன.

இந்த முறைமையானது அபிவிருத்தி ஆயுள் வட்டத்தின் அனைத்து கட்டங்களிலும் முனைப்புடன் ஈடுபட்டது.

- மு.சு.அ இணையத்தளம் இற்றைப்படுத்தல்

ம.சு.அ இணையத்தள நிர்வாக பணியை செயற்படுத்தல்

ம.சு.அ இணையத்தள முகாமைத்துவம் செய்வதுடன்
செய்திகள்,நிகழிவுகள்,தகவல்கள் மற்றும் தொடர்புடைய வேறேதும் பணிகள் ஆகியவற்றை இற்றைபடுத்தி அதனை தொடரச்சியான பேணலை முன்னெடுத்தல்.

- சேன்ட் இயக்க முறைமை மீதான ZIMBRA கட்டமைப்பு சேவரை (கொமியுனிடி எடிசன்) தாபித்து கட்டமைத்தல் மற்றும் ம.சு.அ மின்னஞ்சல் சேவையை பேணல்
- வன்பொருள மற்றும் மென்பொருள் முறைமையை தாபித்தல்
- உபகரணங்களை பேணல் அல்லது பழுதுபார்த்தல்(கணனி, பிரின்டர், போட்டோ கொப்பியர், பீ.எஸ்))
- பல்வேறு கணனிப் பிரச்சினைகளை இனங்காணல்
- கணனி பாதுகாப்பு நடவடிக்கைகளை வடிவமைத்தல்
- கணனி வலை அமைப்புகளை கட்டடைத்தல்
- அமைவிடம் அல்லது தொலைபேசி அல்லது மின்னஞ்சல் மூலம் தொழில்நுட்ட உதவிகளை வழங்குதல்

# 10.0 உள்ளக கணக்காய்வு பிரிவு

உள்ளக கணக்காய்வுப் பிரவானது மத்திய சுற்றாடல் அதிகாரசபை தலைவரின் தலைமையின் கீழ் தாபிக்கப்பட்டுள்ளதுடன் அதன் கடமைகள் மற்றும் பணிகள் அதிகாரசபையின் தலைவரால் தீர்மானிக்கப்படுகின்றன. கணக்காய்வு பிரிவால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு விசாரணைகளில் இருந்து பெறப்பட்ட நிதிசார் மற்றும் நிதி-சாரா செயற்பாடுகள் பற்றிய அவதானிப்புகள் மற்றும் கண்டுபிடிப்புகள் நேரடியாக தலைவருக்கு அறிக்கையிடப்படுவதுடன் ஒட்டு மொத்த மேற்பார்வையும் தலைவராலேயே கையாளப்படுகின்றன.

1971 ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரிவு 13(5) டி யின் ஏற்பாடுகளுக்கு அமைய 2015ஆம் ஆண்டின் உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டமானது கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் மேற்பார்வை மற்றும் ஒப்புதலின் கீழ் தயாரிக்கப்பட்டது. இந்த ஆண்டின் போது உள்ளக கணக்காய்வின் அறிக்கைகள் தொடர்பான பிரதிகள் கணக் காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டன.

**உள்ளக கணக்காய்வு பிரிவின் கடமைகளும் அவற்றின் பரப்பெல்லையும்**

i. தவறுகள் மோசடிகள் ஆகியவற்றை தடுப்பதற்காக மத்திய சுற்றாடல் அதிகாரசபையிடம் இருந்து பெற்றுக்கொண்ட உள்ளக பரிசீலனை மற்றும் கட்டுப்பாடு முறைமை பயனுறுதியான முறையில் வடிவமைக்கப்பட்டு உள்ளதா என்பதையும் அவை உண்மையில் செயற்படுகின்றனவா என்பதையும் உறுதிசெய்தல்.

ii. கணக்கீட்டு மற்றும் ஏனைய அறிக்கைகள் ஆகியவற்றின் நம்பகத்தன்மையை உறுதிசெயவதுடன்பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறைமையானது சரியான நிதிசார் கூற்றுக்களை தயாரிப்பதற்கு அவசியமான தகவலை வழங்குகின்றதா என்பதையும் உறுதிசெய்தல்.

iii. பணியாட்களுக்கு வழங்கப்பட்ட பொறுப்புகளை நிறைவேற்றுவதில் காணப்பட்ட செயலாற்றுத் தரத்தை மதிப்பீடு செய்தல்

iv. மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு உரித்தான ஆதனங்கள் அனைத்து விதமான இழப்புகளில் இருந்தும் எந்த அளிவிற்கு பாதுகாக்கப்படுகின்றன என்பதை உறுதிசெய்தல்

v. தாபனக்கோவை, அரச நிதிசார் ஒழுங்குவிதிகள் மற்றும் பொது நிர்வாக் விடயத்திற்கு பொறுப்பாகவுள்ள அமைச்சு மந்நும் திறைசேரி ஆகியவற்றால் காலத்திற்கு காலம் வெளியிடப்படும் ஏனைய துணை அறிவுறுத்தல்கள் பின்பற்றப்படுகின்றனவா என்பதை உறுதிசெய்தல்.

vi. கழிவு, பயன்படுத்தப்படாத திறன் மற்றும் உதாரித்தனம் ஆகியவற்றை தவிர்ப்பதற்கு கையான்ட உள்ளக கட்டுப்பாட்டு முறையின் பயனுறுதித்தன்மையை உறுதிசெய்தல்.

vii. மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் கணக்கீட்டு வழிமுறை மற்றும் அதன் நிதிசார் தாக்கங்கள் இருக்கக்கூடிய செற்பாடுகள் ஆகியவற்றை பரிசோதனைக்கு உட்படுத்தி மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் ஆதனங்கள் மற்றும் சொத்துக்களின் பாதுகாப்பு, பொருளாதாரம் மற்றும் முறையான பாவனை ஆகியவற்றை சரிபார்த்தல்

viii. முகாமைத்துவத்தின் வேண்டுகோள்களுக்கு இணங்க விசேட விசாரணைகளை தேவைக்கேற்றாவாறு நிறைவேற்றல்

**கணக்காய்வு முகாமைத்துவ குழுக் கூட்டங்கள்**

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின்கணக்காய்வு முகாமைத்துவ குழுவானது 1999 நவம்பர் 19ஆம் திகதிய PF/PE 3 இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க தாபிக்கப்பட்டது. இந்த குழு திறைசேரியின் பிரதிநிதிகளால் தலைமை வகிகப்படுவதுடன் காலாண்டுக்கு முறைமுறை என்ற அடிப்படையில் கூடுகின்றது.

2015ஆம் ஆண்டில் நிதி திட்டமிடல் அமைச்சின் உதவிப் பணிப்பாளரான திருமதி அனுசியாநாதன் தலைமையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நான்கு இடம்பெற்றன.

# 11.0. மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அதிகாரப் பரவலாக்கல்

## 11.1. ம.சு.அ யின் மாகாண அலுவலகங்களுக்கு அதிகாரங்கள் பரவலாக்கம்

எல்லா முகவராண்மைகளுக்கும் தாபனங்களுக்கும் தேசிய நியமங்கள் (தரங்கள்), தகவுதிறன்கள் மற்றும் வழிகாட்டல்கள் ஆகியவற்றை வழங்கும் தேசிய மட்டத்திலான மத்திய முகவராண்மையாக மத்திய சுற்றாடல் அதிகாரசபை (ம.சு.அ) காணப்படுவதால் பிராந்திய மட்டத்தில் அதன் செயற்பாடுகளை முன்னெடுக்க சுற்றாடல் பிராந்திமயமாக்கல் நிகழ்ச்சித்திட்டமானது மத்திய மாகாணம் மற்றும் தென் மாகாணம் ஆகியவற்றில் இரண்டு பிராந்திய அலுவலகங்களுடன் 2002 ஆம் ஆண்டில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மேற்படி பிராந்திய அலுவலகங்களை தாபித்ததன் பின்னர், மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் செயற்பாடுகள் மற்றும் செயலாற்றுகை தொடர்பில் சிறந்தவொரு ஏற்பாடு, சுற்றாடல் முகாமைத்துவம்,மற்றும் பாதுகாப்பு ஆகியவை சம்பந்தமான பணிகளை உறுதிசெய்யும் முகமாக ஒவ்வொரு மாகாணத்திலும் பிராந்திய அலுவலகங்களை தாபித்து இந்த பிராந்திய மயமாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தை விஸ்தரிக்க மத்திய சுற்றாடல் அதிகாரசபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. மத்திய சுற்றாடல் அதிகாரசபை மாகாண அலுவலகங்களின் தலைவர்கள் மத்திய சுற்றாடல் அதிகாரசபை சார்பில் நிறைவேற்றல் செயற்பாடுபளில் ஈடுபடுவதற்காக தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் அவர்களுக்கு சில அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

## 11.2.உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கு அதிகாரங்கள் பரவலாக்கம்

1980 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் சட்ட ஏற்பாடுகள் மத்திய சுற்றாடல் அதிகாரசகைக்குள்ளஅதிகார பரவலாக்கம் மூலோபாயத்தை உபயோகித்து அதனது சில அதிகாரங்களையும் பணிகளையும் ஏனைய முகவராண்மைகளிடம் ஒப்படைப்பதற்கும் அதனூடாக உப-தேசிய மட்டத்தில் அதன் சேவைகளை ஒழுங்கமைக்குமான அதிகாரத்தைம.சு.அ க்கு வழங்குகின்றன.

தேசிய சுற்றாடல் சட்டத்தின் (தே.சு.ச) 26ஆம் பிரிவானது மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு உரித்தான அதிகாரங்களில் எந்தவொரு அதிகாரத்தையோ பணியையோ ஏதேனும் அரசாங்கத் திணைக்களம், கூட்டுத்தாபனம், நியதிச் சபை, உள்ளுர் அதிகாரசபை அல்லது ஏதேனும் அரசாங்க அதிகாரியிடம் ஒப்படைப்பதற்கான அதிகாரததை மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு வழங்குகின்றது. 1993 ஆம் அண்டில் மேற்படி பிரிவின் கீழ் ம.சு.அ யின் சில அதிகாரங்கள் மற்றும் பணிகளை உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கு ஒப்படைப்பதற்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

1994.01.01 ஆம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வருமாறு இந்த அதிகாரப் பரவலாக்க கட்டளை பிறப்பிக்கப்பட்டதுடன் அனைத்து மாநகர சபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகள் ஆகியவற்றுக்கு 45 குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கான சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களைவழங்கள் உட்பட சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் பாதுகாப்பு பணிகள் பன்னிரெண்டின் (12) அதிகாரங்கள்தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டன.

2000.11.22 ஆம் திகதிய 1159/22 ஆம் இலக்க வர்த்தமானி பத்திரிகையை இரத்துச் செய்வதற்கென 2008 ஆம் ஆண்டில் 2008.01.25 ஆம் திகதிய 1533/16 ஆம் இலக்க வர்த்தமானி பத்திரிகையொன்று வெளியிடப்பட்டது. இந்த புதிய வர்த்தமானி ஒழுங்குவிதியின் கீழ்,சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்கள் (சு.பா.உ) பெறவேண்டிய மூன்று

வகைகள் காணப்பட்டன, அவற்றுள் குறித்துரைக்கப்பட்ட 25 நடவடிக்கைகள் ஒப்பீட்டு ரீதியில் குறைந்தளவு மாசுபடுத்தல் “சீ” வகையைச் சேர்ந்த கைத்தொழில்களாகும் என்பதால் சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை(சு.பா.உ) ம.சு.அ சார்பில் வழங்கும் அதிகாரம் உள்ளூர் அதிகாரசபைகளுக்கு 2008 ஆம் ஆண்டில் மீண்டும் வழங்கப்பட்டது.

## 11.3. மாவட்ட சுற்றாடல் சட்டத்தை அமுல்படுத்தும் குழு (DELEC)

சுற்றாடல் விடயங்களை ஒருங்கிணைப்பதற்கென ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட மட்டத்தில்மாவட்ட சுற்றாடல் சட்ட அமுலாக்கல் குழு என்று அழைக்கப்படும் நிருவாக ஒழுங்கமைப்பு ஒன்று 1995 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது. இக்குழுவின் தலைவராக மாவட்டச் செயலாளர் பணியாற்றியதுடன் மாவட்ட சுற்றாடல் சட்டத்தை அமுல்படுத்தும் குழுவின் ஏனைய உறுப்பினர்களாக பின்வருவோர் செணற்பட்டனர்;

- மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்
- சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்
- மாவட்ட வன பரிபாலன அதிகாரி
- மாகாண உள்ளூராட்சி ஆணையாளர்
- மாவட்ட வனசீவராசிகள் திணைக்களத் தலைவர்
- மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலாளர்கள்
- மாவட்டத்தில் உள்ள உள்ளூர் அதிகாரசபைகளின் தலைவர்கள்
- மாவட்டத்தில் உள்ள அரச சார்பற்ற தாபனத்தின் பிரதிநிதி
- செயலாளராக மாவட்ட சுற்றாடல் அதிகாரி
- வேறு பிரதிநிதிகளன் ஒத்துழைப்பையும் குழுவிற்கு பெற்றுக்கொள்ள முடியும்

பொலீஸ், சுகாதார சேவைகள் திணைக்களம், வன பரிபாலன திணைக்களம் மற்றும் உள்ளூர் அதிகாரசபைகள் ஆகிய சம்பந்தப்பட்ட முகவராண்மைகள் சுற்றாடல் குற்றங்களுடன் தொடர்புடைய சட்டத்தை அமுல்படுத்துவதற்கான அனுசரணையை வழங்கும்விடயங்களை ஒருங்கிணைப்பதே மாவட்ட சுற்றாடல் சட்ட அமுல்படுத்தல் குழுவினது பிரதான பணியாகும்.

சுற்றாடல் விடயங்கள் பற்றி பொது மக்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளைப் பரிசீலிப்பது மாவட்ட சுற்றாடல் சட்டத்தை அமுல்படுத்தும் குழுவின் மற்றுமொரு பணியாகும் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட செயலாளரின் தலைமையின் கீழ் இந்த குழுக்கள் மாதாந்தம் இடம்பெற்றன.

# 12.0.ம.சு. அதிகாரசபையின் பிராந்திய மயமாக்கல் நிகழ்ச்சித்திட்டம்

## 12.1 அறிமுகம்

**மாகாண அலுவலகங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் பற்றிய செயன்முறை நடைமுறையாக்கமானது சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பில் காணப்படும் பிரதான ஒழுங்கமைப்பு நிகழ்ச்சித்திட்டமாகும்.**

சுற்றாடல் பாதுகாப்பின் பிரதான ஒழுங்கமைப்பானது சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் வழங்கும் செயள்முறையாகும். இந்த பணியானது மாகாண அலுவகங்களிடம் ஒப்படைக்பபட்டுள்ளது.

கழிவு அகற்றல், வளி வெளிவீசுகள், இரைச்சல், மற்றும் அதிர்வு ஆகியவை மீதான நியமங்கள் மற்றும் விதிகள் பொதுவாக குறித்துரைக்கப்பட்ட செயற்பாடுகள் பற்றிய சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தின் ஊடாக விதிக்கப்படுகின்றன.

கைத்தொழில் கழிவுகள் தொடர்பில் இலங்கையின் தற்போதைய நிலைமையை மீளாய்வு செய்வோமாயின், தற்போதைய சுற்றாடல் ஒழுங்குவிதிகள் அமுலுக்கு வருவதற்கு முன்னர் அதாவது இரண்டு அல்லது மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் தாபிக்கப்பட்ட கைத்தொழில்களில் இருந்தே பெரும்பாலும் பாரிய மாசடைதல் பிரச்சினைகள் எழுகின்றன என்ற உண்மை தெளிவாகின்றது.
கைத்தொழில் கழிவுகள் பொதுவாக ஆறுகள், குளங்கள் மற்றும் கடல் போன்ற அன்மையில் காணப்படும் நீர் நிலைகளில் தான் (சுத்திகரிக்கப்பட்ட முறையில் அல்லது சுத்திகரிக்கப்படாது) அகற்றப்படுகின்றன.தேசிய நீர் வழங்கள் மற்றும் வடிகாலமைப்பு சபையானதுபொதுவாக ஆற்று நீரையே பொது மக்களின் நீர் தேவைக்கு ஈடுகொடுக்கும் வகையில் பயன்படுத்தப்படுகின்றது. ஆகையால், கழிவை நீர் நிலைகள் மீது அகற்றுவது பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.மேற்பரப்பு நீர் மாசடைதல் ஒரு புறமிருக்க நிலத்தடி நீர் மாசானது பொது மக்களின் குடிநீர் வளங்களை வெகுவாக பாதிக்கின்றது.
சுற்றாடலுக்கு கழிவை அகற்றுதல் தொடர்பில் காணப்படும் நியமங்கள் நிலத்தடி நீர் நிரப்புதல் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றை உள்ளடக்குவது இல்லை. வழங்கப்பட்டுள்ள சு.பா.உ களின் கீழ் வரும் குறித்துரைக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் சட்டரீதியில் கட்டுப்பட்டுப்பாட்டிற்கு உட்பட்டுள்ளன. ஆகையால், ஏதும் குற்றங்கள் அல்லது மீறல்கள் இடம்பெறுமாயின் அவைசுற்றாடல்சட்டத்தின்பிரகாரம் தேசிய தண்டணைக்கு உட்பட்டதாகும். குறித்துரைக்கப்பட்ட பெரும்பாலான செயற்பாடுகள் மேல் மாகாணத்தின் புவியியல் எல்லைக்கு உள்ளேயே தாபிக்கப்பட்டுள்ளன. ம.சு.அ யில் கிடைக்க்கூடியதாக உள்ள புள்ளிவிபரங்களின் படி குறித்துரைக்கப்பட்ட செயற்பாடுகளில் 37% (உயர் மற்றும் நடுத்தர மாசுபடுத்தும்) மேல் மாகாணத்தில் தாபிக்கப்பட்டுள்ளன. இந்த நிலைமை மத்திய மாகாணத்தில் 10% ஆகவும் தென் மாகாணத்தில் 13% ஆகவும் காணப்படுகின்றது. விஞ்சிய 40% மான குறித்துரைக்கப்பட்ட செயற்பாடுகள் ஏனைய மாகாணங்களில் தாபிக்கப்பட்டுள்ளன. அவையாவன; சபரகமுவ, கிழக்கு, வட மத்திய, ஊவா, வடக்கு மற்றும் வட மேல் மாகாணம்.
ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவின் வழிகாட்டலுடன் மாவட்ட சுற்றாடல் அலுவலகங்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் கைத்தொழில்கள் பற்றிய ஆய்வானது ஒவ்வொரு மாகாணத்திலும் தாபிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளின் சரியான எண்ணிக்கையை காட்டும்.

ஒரு செயற்பாட்டிற்கு வழங்கப்பட்ட சுற்றாடல் பாதுகாப்பு உரிமமானது புதுப்பிக்கத்தக்கது. செயற்பாடொன்று உரிமத்தில் காணப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக காணப்படவில்லை என்பது கண்டுபிடிக்கப்பட்டால் வழமையாக உரிமத்தை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் மேல் முறையீட்டுவிசாரணை முடிவடைந்ததும் சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சின் செயலாளரின் தீர்மானத்திற்கு அமையவாக சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

### 12.2சு.தா.ம செயள்முறை

சு.தா.ம செயள்முறையின் நடைமுறையாக்கம் பற்றிய முன்னேற்றத்தை பின்வருமாறு விளக்கலாம்:
அட்டவணை12.1: சு.தா.ம செயள்முறையின் பிராந்திய மட்ட நடைமுறையாக்கம்

| மாகாணம் | மாவட்டம் | வழங்கிய சு.பா.உ எண்ணிக்கை | | | | | | புதுப்பித்த சு.பா.உ எண்ணிக்கை | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2013 | | 2014 | | 2015 | | 2013 | | 2014 | | 2015 | |
| | | "A” | "B" | "A” | "B" | "A” | "B" | "A” | "B" | "A” | "B" | "A” | "B" |
| மே.மா | கொழும்பு | 123 | 91 | 525 | 341 | 311 | 218 | 530 | 116 | 932 | 226 | 834 | 181 |
| | கம்பஹா | 88 | 82 | 305 | 315 | 231 | 161 | 208 | 94 | 407 | 40 | 716 | 115 |
| | களுத்தரை | 42 | 43 | 168 | 112 | 147 | 91 | 230 | 57 | 350 | 102 | 282 | 65 |
| ம.மா | கண்டி | 86 | 60 | 195 | 146 | 80 | 44 | 132 | 38 | 186 | 66 | 404 | 71 |
| | மாத்தலை | 25 | 41 | 118 | 29 | 46 | 24 | 102 | 29 | 77 | 20 | 204 | 52 |
| | நுவரெலியா | 12 | 0 | 25 | 38 | 06 | 10 | 12 | 2 | 54 | 9 | 41 | 04 |
| தெ.மா | காலி | 42 | 55 | 125 | 135 | 50 | 60 | 114 | 73 | 178 | 56 | 161 | 74 |
| | மாத்தறை | 49 | 40 | 131 | 77 | 15 | 17 | 110 | 49 | 156 | 36 | 167 | 101 |
| | அ.தோட்டை | 36 | 30 | 95 | 68 | 19 | 36 | 79 | 16 | 92 | 26 | 184 | 30 |
| ச.மா | கேகாலை | 65 | 46 | 108 | 202 | 109 | 101 | 124 | 51 | 76 | 50 | 348 | 95 |
| | இரத்தினபுரி | 88 | 46 | 141 | 199 | 107 | 99 | 120 | 32 | 61 | 49 | 267 | 73 |
| வ.ம.மா | அ.புரம் | 90 | 59 | 169 | 51 | 119 | 16 | 129 | 62 | 167 | 62 | 181 | 19 |
| | பொலன்னறுவை | 9 | 32 | 119 | 105 | 09 | 08 | 36 | 11 | 26 | 8 | 99 | 14 |
| கி.மா | திருகோணமலை | 49 | 34 | 104 | 45 | 08 | 22 | 71 | 41 | 29 | 11 | 127 | 49 |
| | அம்பாறை | 66 | 88 | 170 | 140 | 10 | 15 | 67 | 61 | 25 | 39 | 110 | 54 |
| | மட்டக்களப்பு | 26 | 102 | 116 | 117 | 13 | 19 | 42 | 41 | 27 | 26 | 98 | 42 |
| | வவுனியா | 16 | 10 | 57 | 15 | 0 | 0 | 15 | 0 | 33 | 11 | 0 | 0 |
| | மன்னார் | 1 | 1 | 67 | 106 | 59 | 80 | 1 | 0 | 3 | 1 | 31 | 05 |

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஊ.மா | பதுளை | 31 | 23 | 145 | 50 | 21 | 31 | 29 | 8 | 62 | 19 | 151 | 34 |
| | மொனராகலை | 22 | 26 | 90 | 74 | 14 | 19 | 10 | 7 | 35 | 17 | 99 | 23 |
| வ.மா | யாழ்ப்பாணம் | 30 | 18 | 138 | 76 | 25 | 11 | 22 | 5 | 73 | 30 | 106 | 11 |
| | கிளிநொச்சி | 1 | 7 | 27 | 125 | 16 | 14 | 0 | 0 | 1 | 0 | 15 | 0 |
| | முல்லைதீவு | 9 | 4 | 31 | 40 | 0 | 18 | 5 | 0 | 11 | 0 | 11 | 0 |
| வ.மே | குருணாகல் | | | 5 | 7 | 107 | 136 | | | 0 | | 0 | 01 |
| | புத்தளம் | | | 1 | 2 | 27 | 24 | | | 0 | | 01 | 01 |
| மொத்தம் | | 1006 | 938 | 3175 | 2615 | 1549 | 1274 | 2188 | 793 | 3061 | 904 | 4637 | 1114 |

2015 ஆம் ஆண்டு காலப்பகுதியின்போது 1,549 "ஏ" வகுதிக்குரிய சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களும் (சு.பா.உ.), 1,274 "பீ" வகுதிக்குரிய (சு.பா.உ) உரிமங்களும் புதிதாக வழங்கப்பட்டன. அதேவேளையில் 4,637 "ஏ" வகுதிக்குரிய சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களும் (சு.பா.உ.) 1114"பீ" வகுதிக்குரிய சு.பா. உரிமங்களும் புதுப்பிக்கப்பட்டன.

## 12.3 புதிய கைத்தொழில்களுக்கென சுற்றாடல் விதப்புரைகளை (சிபாரிசுகளை) வழங்குதல்.

ம.சு.அ புதிய கைத்தொழில் அமைவிடங்களை ஆய்வுசெய்கின்றதுடன் அதனூடாக பல நன்மைகளையும் அடைகின்றது. இச்செயற்பாட்டின் மூலம் மத்திய சுற்றாடல் அதிகார சபையானது அத்தகைய கைத்தொழில் அமைவிடங்கள் பொருத்தமற்ற இடங்களில் தாபிபக்கப்படுவதில்லை என்பதை உறுதிசெய்கின்றது. இருப்பினும் கடந்த காலங்களில் கைத்தொழில்கள் பொருத்தமே இல்லாத இடங்களில் தாபிக்கப்பட்டிருந்ததுடன் அத்தகைய கைத்தொழில்கள் அண்டைய குடியிருப்பாளர்களுக்கும் பாரிய பிரச்சினைகளை தோற்றுவித்தன. இருப்பினும் 2000ஆண்டில் இருந்து ம.சு.அ வரையறுக்கப்பட்ட எணணிக்கையிலான(80) உயர் மாசுபடுத்தும் செயற்பாடுகளுக்கே அமைவிட தடைநீக்கத்தை வழங்குகின்றது. ஆயினும்,இந்த எண்ணிக்கையானது 2015ஆம் ஆண்டளவில் வழங்கப்பட்ட பரிந்துரைகளுடன் மொத்தமாக 1,323 வரை உயர்ந்தது. (1,278ஒப்புதல்கள் மற்றும் 45நிராகரிப்புகள்). மாகாண அலுவலகங்கள் தாபிக்கப்பட்டதைத் தொடர்ந்து புதிய அமைவிடங்களுக்கான பரிந்துரைகள் மாகாண அலுவலகங்களால் வழங்கப்படுகின்றன.

பின்வரும் அட்டவனை 2013முதல் 2015ஆம் ஆண்டுவரையில் வழங்கப்பட்ட புதிய கைத்தொழில்களுக்கான சுற்றாடல் பரிந்துரைகளை காட்டுகின்றது. அதற்கமைய பெரும்பான்மையான வேண்டுகோள்கள் மேல் மாகாணம், கண்டி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்கள் ஆகியவற்றிவ் இருந்து கிடைக்கப்பெற்றன.

அட்டவணை 12.2:புதிய கைத்தொழில்களுக்கான அமைவிட பரிந்துரைகள்

| மாகாணம் | மாவட்டம் | கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை | | | வழங்கப்பட்ட ஒப்புதல்களின் எண்ணிக்கை | | | நிராகரிக்கப்பட்டவைகளின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | **2013** | **2014** | **2015** | **2013** | **2014** | **2015** | **2013** | **2014** | **2015** |
| மே.மா | கொழும்பு | 144 | 141 | 163 | 125 | 94 | 175 | 0 | 0 | 0 |
| | கம்பஹ | 149 | 199 | 176 | 12 | 11 | 45 | 1 | 0 | 01 |
| | களுத்தரை | 97 | 97 | 169 | 69 | 72 | 82 | 4 | 4 | 06 |
| ம.மா | கண்டி | 126 | 76 | 86 | 57 | 49 | 46 | 11 | 6 | 04 |
| | மாத்தலை | 69 | 51 | 81 | 74 | 54 | 48 | 3 | 3 | 0 |
| | நுவரெலியா | 19 | 12 | 05 | 7 | 9 | 03 | 1 | 0 | 0 |
| தே.மா | காலி | 68 | 98 | 76 | 56 | 75 | 67 | 3 | 6 | 06 |
| | மாத்தறை | 70 | 65 | 40 | 55 | 64 | 29 | 3 | 8 | 07 |
| | அம்பாந்தோட்டை | 34 | 35 | 33 | 19 | 20 | 17 | 0 | 0 | 03 |
| ச.மா | கேகாலை | 78 | 73 | 98 | 57 | 60 | 59 | 0 | 1 | 01 |
| | இரத்தினபுரி | 67 | 40 | 77 | 45 | 53 | 44 | 1 | 0 | 0 |
| வ.ம. மா | அனுராதபுரம் | 105 | 78 | 79 | 78 | 25 | 26 | 0 | 4 | 01 |
| | பொலன்னறுவை | 28 | 34 | 29 | 6 | 9 | 13 | 0 | 0 | 0 |
| கி.மா | திருகோணமலை | 74 | 18 | 14 | 62 | 17 | 14 | 0 | 3 | 0 |
| | அம்பாறை | 67 | 18 | 33 | 51 | 23 | 38 | 4 | 5 | 01 |
| | மட்டக்களப்பு | 118 | 69 | 72 | 109 | 82 | 49 | 0 | 0 | 02 |
| | மன்னார் | 12 | 17 | 16 | 6 | 16 | 16 | 0 | 0 | 0 |
| | வவுனியா | 28 | 40 | 34 | 8 | 27 | 17 | 0 | 1 | 0 |
| ஊ.மா | பதுளை | 92 | 63 | 37 | 58 | 32 | 32 | 19 | 7 | 05 |
| | மொனறாகலை | 52 | 32 | 42 | 37 | 28 | 25 | 0 | 0 | 01 |
| வ.மா | யாழ்ப்பாணம் | 81 | 72 | 74 | 72 | 47 | 35 | 2 | 0 | 02 |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கிளிநொச்சி | 97 | 66 | 124 | 87 | 60 | 110 | 1 | 0 | 04 |
| | முல்லைத்தீவு | 100 | 145 | 67 | 68 | 136 | 66 | 0 | 0 | 0 |
| வ.மே.மா | குருணாகல் | 14 | 23 | 214 | 4 | 10 | 194 | 3 | 0 | 01 |
| | புத்தளம் | 12 | 22 | 38 | 2 | 7 | 28 | 0 | 0 | 0 |
| மொத்தம் | | 2217 | 1584 | 1877 | 1395 | 1080 | 1278 | 128 | 48 | 45 |

2015ஆம்ஆண்டின் போது, 1877புதிய கைத்தொழில்கள் அவர்களின் புதிய தொழில் முனைப்புக்கு ஒப்புதலை கேட்டு விண்ணப்பித்தன. அவற்றுள் 1278 விண்ணப்பங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டதுடன் 45 விண்ணப்பங்கள் ஒப்புதலை பெறுவதற்கான தேவைகளை கொண்டிராத காரணத்தால் நிராகர்க்கப்பட்டன.

**12.4சுற்றாடல்மாசு தொல்லைகள் மற்றும் இயற்கை வளங்கள் அதிகளவில் பயன்படுத்தல் பற்றிய பொதுமக்களின் புகார்களைளுக்கு தீர்வுகாணல்**

2015ஆம் அண்டில் கைத்தொழில்கள் பற்றிய புகார்கள் 1,802 மற்றும் இயங்கை வளங்கள முகாமைத்துவம் பற்றிய 589 புகார்களுமாக மொத்தமாக 2,391 புகார்கள் மாகாண அலுவலகங்களால் கையாளப்பட்டன.

கைத்தொழில் இயக்கச்செயற்பாடுகள் மற்றும் ஏனைய அபிவிருத்திச் செயற்பாடுகள், மற்றும் இயற்கை வளங்களை சுரண்டல் ஆகியவை மூலம் பொதுமக்களுக்கு தோற்றுவிக்ப்பட்ட மாசடைதல்/தொல்லைகள் பற்றிய புகார்களுக்கும் மாகாண அலுவலகங்கள் நிவாரணமளித்தன. கிடைக்கப்பெற்ற புகார்கள் ஒழுங்காக விசாரணை செய்யப்பட்டதுடன் தணிப்பு நடவடிகடகைகளும் பரிந்துரைக்கப்பட்டன. சில விடயங்கள் பற்றிய புகார்கள் அவசியமான நடவடிககைகள் எடுக்கும் வகையில் அத்தகைய நடவடிக்கைக்கு பொறுப்பாக உள்ள நிறுவனங்களுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

ட்டவணை12.3:2015ஆம் ஆண்டில் கையாளப்பட்ட புகார்களை காட்டுகின்றது.

| மாவட்டம் | கிடைக்கப்பெற்ற புகார்களின் எண்ணிக்கை | | தீர்வு காணப்பட்ட புகார்களின் எண்ணிக்கை | | ஏனைய நிறுவனங்களுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டவை |
|---|---|---|---|---|---|
| | சு.மா.க | இ.வ.மு | சு.மா.க | இ.வ.மு | |
| கொழும்பு | 453 | 42 | 07 | 03 | 0 |
| கம்பஹா | 281 | 60 | 09 | 01 | 15 |
| களுத்தரை | 286 | 44 | 03 | 01 | 42 |
| கண்டி | 88 | 52 | 31 | 25 | 37 |
| மாத்தலை | 16 | 06 | 06 | 0 | 01 |
| நுவரெலியா | 03 | 01 | 02 | 0 | 10 |
| காலி | 79 | 93 | 34 | 29 | 23 |
| மாத்தறை | 65 | 27 | 01 | 0 | 10 |
| அம்பாந்தோட்டை | 40 | 06 | 09 | 01 | 03 |
| கேகாலை | 113 | 66 | 59 | 39 | 02 |
| இரத்தினபுரி | 49 | 77 | 12 | 33 | 05 |
| அனுராதபுரம | 64 | 01 | 11 | 0 | 01 |
| பொலன்னறுலை | 06 | 0 | 0 | 0 | 0 |
| திருகோணமலை | 06 | 0 | 0 | 0 | 0 |
| அம்பாறை | 01 | 0 | 0 | 0 | 0 |
| மட்டக்களப்பு | 11 | 0 | 09 | 0 | 0 |
| மன்னார் | 0 | 01 | 0 | 01 | 0 |
| வவுனியா | 0 | 0 | 0 | 0 | 0 |
| பதுளை | 37 | 44 | 01 | 0 | 03 |
| மொனறாகலை | 26 | 26 | 08 | 04 | 01 |
| யாழ்ப்பாணம் | 22 | 02 | 18 | 01 | 07 |
| கிளிநொச்சி | 10 | 07 | 06 | 0 | 09 |
| முல்லைத்தீவு | 02 | 0 | 02 | 0 | 0 |
| குருணாகல் | 94 | 15 | 47 | 05 | 02 |
| புத்தளம் | 50 | 19 | 31 | 08 | 0 |
| மொத்தம் | 1802 | 589 | 306 | 150 | 180 |

## 12.5ISO 14000 நியமங்களின் கீழ் கைத்தொழில்களுக்கான சான்றிதழளிப்புக்கு WPO பங்களிப்பு

தொழில் நுட்ப மற்றும் சட்ட விடயங்களில் நிபுணத்துவ அறிவை வழங்கி கைத்தொழில்களுக்குISOசான்றிதழ்கள் 14000 வழங்குவதற்கு SLSIவிற்கு WPO உதவியளிக்கின்றது.

இந்த செயற்பாட்டில் ISO 14000 சான்றிதழ்கள் தொழில் நுட்ப மற்றும் சட்ட ஆலோசனைவிகளுடன் கைத்தொழில்களுக்குSLSIவினால் வழங்கப்பட்டன.

### 12.6.சுற்றாடல் முகாமைத்துவம்

### 12.6.1.ஆரம்ப சுற்றாடல் மதிப்பீடு(ஆ.சு.ம)

1993 ஆம் ஆண்டில் இருந்து அனைத்து பாரிய அபிவிருத்தி கருத்திட்டங்களும் அவற்றின் நடைமுறையாக்கத்திற்கு முன்னர் சுற்றாடல் தாக்க மதிப்பீடுகளுக்கு உட்படுத்தப்படுகின்றன. சு.தா.ம/ஆ.சு.ம ஆகியன அவசியப்படும் “குறித்துரைக்கப்பட்ட கருத்திட்டங்கள்”என்பனகுறித்துரைக்கப்பட்ட அளவுக்கு மேற்பட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் கைத்தொழில் பேட்டை அபிவிருத்தி ஆகியவற்றை உள்ளடக்கும் கருத்திட்டங்களாகும்.சு.தா.ம/ஆ.சு.ம மதிப்பீட்டு செயன்முறையானது பாரிய கருத்திட்டங்களால் அபிவிருத்தி மீது செலுத்தப்படும் தாக்கங்களை இனங்காண்பதையும் ஆரம்பக்கட்டத்திலேயே அவற்றுக்கு எதிரான தணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதையும் உறுதிசெய்கின்றது. கருத்திட்ட திட்டமிடல் காலத்தின் ஆரம்ப கட்டத்தில் அவ்வாறான நடவடிக்கைகளைகருத்திட்ட உரிமையாளர்கள் திட்டமிட்டு கருத்திட்டங்களில் கூட்டிணைப்பதற்கான வாய்ப்பை இந்தசெயற்பாடானது இலகுவாக்குகின்றது.

கருத்திட்டங்களின் குறிப்பிடத்தக்க சுற்றாடல் தாக்கங்களை தணிப்பதன் நோக்கில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் மாகாண அலுவலகங்கள் ஆரம்ப சுற்றாடல் பரிசோதனைகளை(ஆ.சு.ப) மேற்கொள்ளும் அதேவேளையில் ம.சு.அ யின் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு பிரிவானது சுற்றாடல் தாக்க மதிப்பீட்டையும்(சு.தா.ம) மேற்கொள்கின்றது.

ஆ.சு.ம செயன்முறையின் கீழ் வகைப்படுத்தப்பட்டகருத்திட்டங்களை கீழே தரப்பட்டுள்ளன.

அட்டவணை 12.4: 2015ஆம் ஆண்டில் சு.தா.ம/ஆ.சு.ப ஒழுங்குவதிகளின் கீழ் சு.தா.ம பிரிவால் அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டங்களின்பட்டியல்

| மாகாணம் | மாவட்டம் | கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை | | | ஓப்புதல் வழங்கப்பட்டவை | | | நிராகரிப்புகளின் எண்ணிககை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 20 | 2014 | 2015 | 2013 | 2014 | 2015 | 2013 | 2014 | 2015 |
| மே.மா | கொழும்பு | 0 | 1 | 03 | 0 | 0 | 0 | 0 | | 0 |
| | கம்பஹ | 1 | 0 | 38 | 0 | 0 | 04 | 0 | | 01 |
| | களுத்தரை | 6 | 3 | 19 | 2 | 2 | 02 | 0 | | 0 |
| தெ.மா | காலி | 6 | 10 | 04 | 0 | 2 | 07 | 0 | 1 | 01 |
| | மாத்தறை | 0 | 0 | 02 | 0 | 4 | 02 | 0 | | 0 |

| மாகாணம் | மாவட்டம் | கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை | | | ஒப்புதல் வழங்கப்பட்டவை | | | நிராகரிப்புகளின் எண்ணிகை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 20 | 2014 | 2015 | 2013 | 2014 | 2015 | 2013 | 2014 | 2015 |
| | அம்பாந்தோட்டை | 8 | 1 | 03 | 0 | 2 | 03 | 0 | | 0 |
| ம.மா | கண்டி | 89 | 81 | 78 | 73 | 70 | 67 | 2 | 5 | 02 |
| | மாத்தலை | 3 | 7 | 5 | 7 | 15 | 14 | 0 | | 0 |
| | நுவரெலியா | 51 | 78 | 64 | 153 | 89 | 76 | 4 | | 17 |
| ச.மா | கேகாலை | 6 | 7 | 1 | 4 | 4 | 06 | 0 | | 0 |
| | இரத்தினபுரி | 3 | 4 | 4 | 3 | 3 | 04 | 0 | | 0 |
| ஊ.மா | பதுளை | 18 | 99 | 103 | 37 | 69 | 135 | 0 | | 02 |
| | மொனறாகலை | 5 | 6 | 02 | 1 | 5 | 02 | 0 | | 0 |
| கி.மா | திருகோணமலை | 51 | 8 | 0 | 13 | 9 | 02 | 0 | | 0 |
| | அம்பாறை | 10 | 0 | 1 | 2 | 0 | 0 | 0 | | 0 |
| | மட்டக்களப்பு | 8 | 0 | 4 | 1 | 0 | 02 | 0 | | 0 |
| | மன்னனார் | 3 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | | 0 |
| | வவுனியா | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | | 0 |
| வ.ம.மா | அனுராதபுரம் | 5 | 2 | 3 | 0 | 0 | 0 | 0 | | 0 |
| | பொலன்னறுவை | 2 | 2 | 6 | 0 | 0 | 0 | 0 | | 0 |
| வ.மா | யாழ்ப்பாணம் | 1 | 0 | 2 | 0 | 0 | 02 | 0 | | 0 |
| | கிளிநொச்சி | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | | 0 |
| | முல்லைத்தீவு | 3 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | | 0 |
| மொத்தம் | | 33 | 309 | 342 | 342 | 272 | 328 | 15 | 6 | 23 |

2015ஆம் ஆண்டில், 342 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றன.சென்ற வருட விண்ணப்பங்கள் உட்பட 328விண்ணப்பங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட அதேவேளை 23 விண்ணப்பங்கள் நியமங்களுக்கு இசைவாக காணப்படாமையினால் நிராகரிக்கப்பட்டன.(சென்ற வருட விண்ணப்பங்கள் உட்பட)

### 12.6.2 குறித்துரைக்கப்படாத செயற்பாடுகளு -க்கு சுற்றாடல் பரிந்துரைகள் வழங்கள்

தேசிய சுற்றாடல் சட்டத்தின் (NEA) கீழ் குறித்துரைக்கப்படாத கருத்திட்டங்களுக்கான சுற்றாடல் தடை-நீக்க ஏற்பாடுகள் மாகாண அலுவலகங்களுக்கு வழங்கப்படுகின்றமையால் அவற்றுக்கு ஆ.சு.ம/சு.தா.ம அவசியம் இல்லை. மேம்பாட்டாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க பல்வேறு குறித்துரைக்கப்படாத கருத்திட்டங்களின் பாதகமான சுற்றாடல்தாக்கங்களைக் தணிக்கும் நோக்கில் நிபந்தனைகளுடனான சுற்றாடல் தடை நீக்கங்கள் வழங்கப்படுகின்றன.அதன் பிரகாரம், இவ்வருடத்தின் போது ஹோட்டல் கருத்திட்டங்கள், காணி நிரப்பல், தொலைத்தொடர்பு கோபுரங்கள், அகழ்வு நடவடிக்கைகள், நிலங்களைத் துண்டாக்கல் போன்ற இதர கருத்திட்டங்களுக்கான 5,276 (சென்ற வருட விண்ணப்பங்கள் உட்பட) கைத்தொழில்களுக்கு அமைவிட தடைநீக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட அபிவிருத்தியின் ஆரம்பக் கட்ட திட்டமிடல் செயற்பாட்டின் போது கருத்திட்டங்களின் சாத்தியமான சுற்றாடல் தாக்கங்களுக்கு மேம்பாட்டாளர்கள் தீர்வை முன்வைக்கின்றனர் என்பதை உறுதிசெய்யும் வகையில் இந்த செயன்முறைக்கு அனுசரணை வழங்கலாம்.

அட்டவணை12.5: 2015ஆம் ஆண்டில் குறித்துரைக்காத- செயற்பாடுகளுகான பரிந்துரைகளின் பட்டியல்

| மாகாணம் | மாவட்டம் | கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை | ஓப்புதல் வழங்கப்பட்டவை | நிராகரிப்புகளின் எண்ணிகை | இணக்கப்பாட்டு கண்காணிப்பு |
|---|---|---|---|---|---|
| மே.மா | கொழும்பு | 102 | 105 | 02 | 0 |
| | கம்பஹ | 351 | 243 | 05 | 0 |
| | களுத்தரை | 404 | 403 | 14 | 0 |
| தெ.மா | காலி | 73 | 95 | 03 | 08 |
| | மாத்தறை | 49 | 69 | 03 | 03 |
| | அம்பாந்தோட்டை | 47 | 47 | 03 | 02 |
| ம.மா | கண்டி | 304 | 564 | 01 | 22 |
| | மாத்தலை | 164 | 620 | 0 | 0 |
| | நுவரெலியா | 58 | 135 | 0 | 03 |
| ச.மா | கேகாலை | 0 | 149 | 02 | 05 |
| | இரத்தினபுரி | 0 | 304 | 0 | 0 |
| ஊ.மா | பதுளை | 516 | 517 | 0 | 01 |
| | மொனறாகலை | 517 | 370 | 01 | 03 |
| கி.மா | திருகோணமலை | 380 | 380 | 0 | 0 |
| | அம்பாறை | 102 | 114 | 0 | 0 |
| | மட்டக்களப்பு | 118 | 185 | 0 | 09 |
| | மன்னனார் | 0 | 163 | 04 | 01 |
| | வவுனியா | 0 | 33 | 0 | 0 |
| வ.ம.மா | அனுராதபுரம் | 164 | 75 | 01 | 06 |
| | பொலன்னறுவை | 18 | 32 | 0 | 0 |
| வ.மா | யாழ்ப்பாணம் | 06 | 20 | 0 | 03 |
| | கிளிநொச்சி | 20 | 13 | 0 | 0 |
| | முல்லைத்தீவு | 192 | 164 | 0 | 0 |
| வ.மே.மா | குருணாகலை | 80 | 328 | 04 | 03 |
| | புத்தளம் | 25 | 148 | 02 | 03 |
| மொத்தம் | | 3690 | 5276 | 45 | 72 |

மேற்படி அட்டவணை 2014 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட அவ்வாறான பரிந்துரைகளின் விபரங்களை காட்டுகின்றது.

# 13.0.ம.சு.அ அமுல்படுத்தப்படும் திறைசேரி நிதியிடப்பட்ட விசேட கருத்திட்டங்கள்

## 13.1 தேசிய திண்மக் கழிவு முகாமைத்துவ கருத்திட்டம் ‘‘பிலிசறு’’

### 13.1.1 அறிமுகம்

முறையற்ற திண்மக்கழிவு முகாமைத்துவம் இலங்கையில் காணப்படும் பாரிய முக்கிய சுற்றாடல் பிரச்சினைகளில் ஒன்றாகும். கழிவு சேகரிப்பு, கழிவு போக்குவரத்து, இடைக்கால சுத்திகரிப்பு முறைமைகள், மற்றும் பொருத்தமான கழிவு அகற்றல் ஆகிய செயற்பாடுகளுக்கு முறையான அமைப்புகள் காணப்படாமை இலங்கையில் திண்மக் கழிவு பிரச்சினையை தீவிரமடையச் செய்கின்றன. இலங்கையில் காணப்படும் தற்போதைய ஏடாகூடமான திட்டமற்ற கழிவு அகற்றல் நடவடிக்கைகள் பொது மக்கள் மீது பல சுற்றாடல் பிரச்சினைகள் மற்றும் எண்ணிக்கையற்ற தொல்லைகளையும் தோற்றுவித்துள்ளது. இந்த நடவடிக்கையின் விளைவாக ஒட்டு மொத்த சமுதாயமும் வருந்துகின்றதுடன் இப்பிரச்சினையால் பலவகையான சுகாதார,சமூக, பொருளாதார மற்றும் கலாசார பிரச்சினைகளும் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

கழிவு சேகரிப்பு மற்றும் கழிவு அகற்றல் செயல்பாடுகளுக்கான உட்கட்டமைப்பு மற்றும் வளங்கள் நாட்டில் பல பாகங்களில் மிகவும் அரிதாக காணப்படுவதால் உணர்வுமிக்க பகுதிகளில் குப்பை கூளங்கள் சிதறிக்கிடக்கின்றவாறு குப்பைகள் கொட்டப்படும் செயற்பாடானது கட்டுப்படுத்த முடியாதவாறு இடம்பெறுகின்றது.

வீடுகள் மற்றும் கைத்தொழில்கள் ஆகியவற்றால் உற்பத்தியாக்கப்படும் அநேகமான திண்மக்கழிவை இறுதியாக அகற்றுவதற்கான முறையான வசதிகள் காணப்படவில்லை. முறையற்ற விதமாக அகற்றப்படும் கழிவானது நீர் கால்வாய்களில் நீரோட்டத்திற்கு இடையூறு விளைவித்து மோசமான சுகாதார பிரச்சினைகளுக்கு வழிசமைக்கால்.

இலங்கையில் திண்மக் கழிவு முகாமைத்துவம் (தி.க.மு) தொடர்பான ஒட்டு மொத்த பொறுப்பும் சட்டரீதியாக இயற்றப்பட்ட சட்டங்களின் கீழ் உள்ளூராட்ச்சி (உ.அ) அதிகாரசபைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. தி.க.மு தொடர்பான அதிகாரங்கள் மாநகர கட்டளைச் சட்டம், நகரசபை கட்டளைச்சட்டம் மற்றும் பிரேதேச சபைச்சட்டம் ஆகியவற்றின் மூலம் வழங்கப்பட்டுள்ளன. அநேகமான உள்ளூராட்ச்சி (உ.அ) அதிகாரசபைகள் அவற்றின் ஆளுகையின் கீழ் வரும் பௌதீக வளங்களை மேம்படுத்துவதற்கான கவனத்தைஅதிகளவு செலுத்தும் அதேவேளையில் தி.க.மு பிரச்சினை தொடர்பான அவற்றின் கரிசனை ஒப்பீட்டளவில் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. தி.க.மு தொடர்பில் பயன்படுத்தப்படும் வளங்களின் அளவும் ஒப்பீட்டளவில் மிகவும் குறைவாகவே காணப்படகின்றது.

### 13.1.2 பிலிசறு கருத்திட்டத்தை நடைமுறையாக்கல்

இலங்கையில் அநேகமான உள்ளுராட்சி சபைகள் கழிவு முகாமைத்துவம் தொடர்பில் ஒப்பீட்டளவில் குறைந்த கவனத்தை செலுத்துவதன் காரணமாக பொது மக்கள் தி.க.மு பிரச்சினையுடன் தொடர்புடைய பல்வேறு அபாயங்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய துர்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளதுடன் இப்பிரச்சினைகளை தீர்ப்பது தொடர்பில் உள்ளுராட்சி அதிகாரசபைகள் மீது

பொதுமக்கள் வைத்திருந்த நம்பிக்கையானது கடந்த சில வருடங்களாக கணிசமான அளவு குறைவடைந்துள்ளது. ஆகையால் உள்ளூராட்சி அதிகார சபைகளின்கழிவு முகாமைத்துவம் பற்றிய கரிசனை தொடர்பில் பொதுமக்கள் உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கு எதிரான பல்வேறு புகார்களை மத்திய சுற்றாடல் அதிகாரசபை (ம.சு.அ) மற்றும் சுற்றாடல் அமைச்சு(சு.அ) ஆகியவற்றில் அடிக்கடி முன்னைக்கின்றனர். மேற்படி சூழ்நிலையை கருதத்தில் எடுத்த சுற்றாடல் அமைச்சர் (சுற்றாடல் அமைச்சு) 'பிலிசறு' என்ற பெயரிடப்பட்ட தேசிய மட்டத்திலான திண்மகழிவு முகாமைத்துவ நிதழிச்சித்திட்டத்தை சுற்றாடல் அமைச்சு மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபை ஆகியவற்றின் வழிகாட்டலின் கீழ் ஏனைய அரசாங்க நிறுவனங்கள்,தனியார் நிறுவனங்கள், அரசு-சாரா நிறுவனங்கள் மற்றும் இத்துறையைச் சேர்ந்த வல்லுநர்கள் ஆகியோாரின் பங்கேற்றலுடன் ஆரம்பித்தார்.

'பிலிசறு' என்ற சொற்பதமானது சிங்கள மொழியில் மீள்-வளமாக்கல் என்ற பொருளை குறிக்கின்றது. இந்த திட்டமானது நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான இலக்காகவே மாற்றமடைந்துள்ளது. கழிவாக அகற்றப்படும் வளங்களின் மீள்-பயன்பாட்டின் உச்ச பயனை பெறுவதுடன் உபயோகிக்கப்படுத்த இயலாத எச்சத்தை சுற்றாடல் ரீதியாக ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் அகற்றுவதே நிகழ்ச்சித்திட்டத்தின் எண்ணக்கருவாகும். தேசிய ரீதியில் ஒருங்கிணைக்கப்பட்ட அனுகுமுறையின் கீழ் இப்பிரச்சினையை அனுக வேண்டியதன் முக்கியத்துவத்தை கருத்திற்கொண்டு, சுற்றாடல் அமைச்சு (சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சு என முன்னர் அழைக்கப்பட்டது) 'பிலிசறு' கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தைநடைமுறைத்தும் நோக்கில் அமைச்சரவை பத்திரமொன்றை சமர்ப்பித்தது. அமைச்சரவை அதற்கு கொள்கையளவில் அங்கீகாரத்தை 2007 யூலை 25 ஆம் திகதி வழங்கியது

இந்நிகழ்ச்சித்திட்டம்,ஏனையவற்றுக்கிடையில் பின்வருவனவற்றையும் உள்ளடக்குகின்றது:

- தேசிய கழிவு முகாமைத்துவ கொள்கையொன்றை தயாரித்தல்.
- கழிவு முகாமைத்துவத்தில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு இயலுமை விருத்தியையும் விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
- நடைமுறையில் உள்ள கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தை மேம்படுத்தும் முகமாக உள்ளுர் அதிகார சபைகளுக்கு தொழில்நுட்ப உதவி மற்றும் வளங்களை ஏற்பாடு செய்து புதிய முன்னெடுப்புக்களை ஆரம்பிக்க வழிசமைத்தலும்.
- வளங்களை நகர்த்தி அவற்றின் உச்ச பயனை பெறுவதன் மூலம் கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அனுசரனை வழங்கள்.
- கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தை கண்காணித்தல்.
- பொறுப்புள்ள தரப்பினரின் இணக்கப்பாடற்ற நடவடிக்கைகளுக்கு பரிகாரம் காணும் வகையில் நீண்ட கால சட்ட நடவடிக்கைகள் மூலமான அனுகுமுறை. *'பிலிசறு' நிகழ்ச்சித்திட்டம்- இலங்கையில் திண்ம கழிவை முகாமைத்துவம் செய்வதற்கான தேசிய அனுகுமுறையொன்று,பிலிசறு கருத்திட்டத்தை தாபித்தல்'*

என தலைப்பிடப்பட்ட சுற்றாடல் இயற்கை மற்றும் வளங்கள் அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை நிருபத்திற்கிணங்க அமைச்சரவையால் 2008 டிசம்பர் 19 ஆம் திகதி வழங்கப்பட்ட அங்கீகாரத்தை தொடர்ந்து 2008, சனவரி 1 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு 'பிலிசறு' தேசிய திண்ம கழிவு முகாமைத்துவ

கருத்திட்டம் (பி.சு) ம.சு.அ யில் தாபிக்கப்பட்டது.

பிலிசறு நிகழ்ச்சித்திட்டத்தின் நடைமுறையாக்கலுக்கான ஒட்டு மொத்த வழிகாட்டலானது திண்மக்கழிவு முகாமைத்துவம் பற்றிய (தேசிய பிலிசறு மேடை என அழைக்கப்படும்) உயர்மட்ட குழுவொன்றால், சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சு, உள்ளூராட்சி அதிகார சபைகள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சு ஆகியவற்றின் செயலாளர்களின் இணை-தலைமைத்துவத்தின் அடிப்படையில் வழங்கப்படுகின்றது, ஆரம்பத்தில் பிலிசறு நிகழ்ச்சித்திட்டமானது, மத்திய சுற்றாடல் அதிகார சபையில் 'பிலிசறு' கருத்திட்டம் என தலைப்பிடப்பட்ட கருத்திட்ட வடிவில் தாபிக்கப்பட்டு 2008 ஆம்ஆண்டிலிருந்து 3 வருடங்களுக்கு நடைமுறைபடுத்தப்பட்டது. இதற்கான ரூபாய் 5.675 பில்லியன் நிதி ஏற்பாடுகள் பிரதானமாக பொது திறைசேரியிடமிருந்து பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது

சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சானது (சு.இ.வ.அ) 2008- 2010 காலகட்டத்தில் திட்டமிடப்பட்டு நிறைவேற்றப்படவிருந்த பணியின் நோக்கெல்லையின் பரிமாணம் மற்றும் வியக்கத்தக்க அளவையும் கருத்திற் கொண்டு, பிலிசறு நிகழ்ச்சித்திட்டத்தின் கருத்திட்ட அறிக்கையின் கீழ் இனங்காணப்பட்ட கருத்திட்ட செயற்பாடுகளை உரிய காலத்திற்குள் நிறைவேற்றுவதை உறுதி செய்யும் முகமாக விஷேட பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்ட அர்ப்பணிப்புள்ள கருத்திட்ட பணியாற்களுடன் மத்திய சுற்றாடல் அதிகாரசபையில் " பிலிசறு கருத்திட்டம்" தாபிப்பதற்கான ஏற்பாடுகளை செய்தது. இத்திட்டத்தின் முக்கியத்துவம் மற்றும் காலத்தின் தேவையையும் கருத்திற் கொண்டு, அமைச்சரவையானது இக்கருத்திட்டத்தை 2011 சனவரி 1ஆம் திகதியில் இருந்து 2013ஆம் ஆண்டுவரை மேலும் மூன்று வருடங்களுக்கு நீட்டிப்பதற்கான அங்கீகாரத்தை வழங்கியது.

2013 யூலை 21ஆம் திகிதிய அமைச்சரவை தீர்மானத்ததைதொடர்ந்து பிலிசறு கருத்திட்டத்தின்IIஆம் கட்டத்திற்காக 2014ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையிலான ஐந்து வருட கருத்திட்ட நீடிப்பு அமைச்சரவையால் வழங்கப்பட்டது. அதற்கமைய,2015ஆம் ஆண்டிற்கான நிகழ்ச்சித்திட்டம் ஒன்று வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் புதிய செயற்பாடுகள் மற்றும் முன்னைய கருத்திட்டத்தின் முடிக்கப்படாத தொடர்ச்சியான செயற்பாடுகள் ஆகியவையும் கூட்டிணைக்கப்பட்டன.

### 13.1.3 தேசிய திண்மக் கழிவு முகாமைத்துவ கொள்கை

பிலிசறு முன்னெடுப்பின் ஓர் பகுதியாக, சுற்றாடல் இயற்கை வளங்கள் அமைச்சானது திண்ம கழிவு முகாமைத்துவம் பற்றிய தேசிய கொள்கையொன்றை ஒக்டோபர் 2007 இல் வடிவமைக்க நடவடிக்கை எடுத்துள்ளதுடன் திண்மக் கழிவு முகாமைத்துவம் பற்றிய தேசிய கொள்கையை நடைமுறைபடுத்தும் வகையில் புதிய தேசிய கழிவு முகாமைத்துவ மூலோபாயங்களை வரைவு செய்துள்ளது. தற்சமயம், சம்பந்தப்பட்ட பிரதேசங்களில் பொருத்தமான கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறை படுத்துத்தும் வகையில் மூலோபாயங்களை செயற்பாடுகளாக பரிமாற்றம் செய்ய வேண்டிய தேவையும் அதனைத்தொடர்ந்து அவற்றை நடைமுறைபடுத்துவதற்கு உள்ளூராட்சி அதிகாரசபைகளின் முழுமையான ஈடுபாட்டையும் ஒத்துழைப்பையும் பெறவேண்டிய அவசரமான தேவையொன்றும் எழுந்துள்ளது. பிலிசறு நிகழ்ச்சித்திட்டமானது மூலோபாயங்களை செயற்பாடாக பரிமாற்றம் செய்வதில் சவால்களை எதிர்கொள்கின்றது.

### 13.1.4 நோக்கங்கள்

பிலிசறு நிகழ்ச்சித்திட்டத்தில் ஐந்து பிரதான நோக்கங்கள் காணப்படுகின்றன

- திண்மக் கழிவு முகாமைத்துவம் பற்றிய தேசிய கொள்கையொன்றை விருத்தி செய்தல்
- தி.க.மு பற்றிய தேசிய மூலோபாயம் ஒன்றை விருத்தி செய்தல்.
- அனைத்து பங்குதாரர்களுக்கும் பயிற்சி மற்றும் இயலுமை கட்டியெழுப்பல் உள்ளடங்கலான தி.க.மு பற்றிய பயனுறுதியான கல்வியும் விழிப்புணர்வையும் வழங்கள்.
- திண்மக் கழிவு முகாமைத்துவம் பற்றிய கருத்திட்டங்கள்/நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறையாக்கம் செய்வாற்கான அனுசரணையை உள்ளூராட்சி அதிகாரசபைக்களுக்கு வழங்கள்
- பயனுறுதியான சட்ட அமுலாக்களை மேம்படுத்துவதற்கான சட்ட மறுசீரமைப்பை மேற்கொள்ளல்.

பங்குதாரர்கள் முகம் கொடுக்கும் தற்போதைய திண்ம கழிவு பிரச்சினைகள் மற்றும் சிக்கல்கள், நாட்டின் ஒட்டுமொத்த திண்மக் கழிவு மேம்பாடு, துரிதமான சுத்திகரிப்பு மற்றும் எச்சங்களை சுற்றாடல் சிநேக-பூர்வ முறையில் அகற்றல் போன்ற பாரிய சிக்கல்கள் கருத்திற் கொண்டே இந்த நோக்கங்கள் வடிவமைக்கப்பட்டன.

### 13.1.5 கருத்திட்டத்தின் நோக்கெல்லை

இதன் அடிப்படையில் திண்மக்கழிவு என்பது வீட்டுக் கழிவுகள், வர்த்தகக் கழிவுகள், சந்தைக கழிவுகள்,நிறுவனங்களின் கழிவுகள் மற்றும் சில கைததொழில் கழிவுகள் மற்றும் உள்ளூராட்ச்சி அதிகாரசபையின் ஆளுகையின் கீழ் வரும் இடங்களில் இருந்து தோற்றுவிக்கப்படும் கழிவுகள் ஆகியவற்றையும் உள்ளடக்குகின்றது. பிலிசறு கருத்திட்டத்தின் பரப்பெல்லையானது பொதுவாக பின்வரும் முக்கிய நடவடிக்கைகளை உள்ளடக்குகின்றது.

**i.** உள்ளூராட்சி அதிகாரசபைகளினால் திண்மக்கழிவு அகற்றல் பற்றிய தகவல்கள் சேகரிப்பு

தற்போதைய கழிவு அகற்றல் முறைகள், உ.அ களால் கைவிடப்பட்ட கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கிடைக்கக் கூடியதாகவுள்ள வளங்கள் பற்றிய தகவல்கள் திட்டமிடல் நோக்கங்களுக்காக சேகரிக்கபடுகின்றன. இத் தரவுகளை சேகரிக்கும் செயற்பாட்டில், ம.சு.அ யின் பிரதேச சுற்றாடல் உத்தியோகத்தர்களின் உதவியானது ம.சு.அ யின் மாகாண மற்றும் மாவட்ட அலுவலகங்களின் வலைப்பின்னல் மூலம் பெறப்படுகின்றது.

**ii.** கருத்திட்ட முன்மொழிவுகள் மதிப்பீடுஉள்ளூர் அதிகாரசபைகளால் அனுப்பப்படும் முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டு, அவற்றை நடைமுறைபடுத்துவதற்கு தேவையான நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகள் வழங்கப்படுகின்றன. முன்மொழிவுகளை வெற்றிகரமான நடைமுறைபடுத்தும் வகையில் மதிப்பீட்டு செயல்முறையொன்று வகுக்ககப்பட்டு பல்வேறு தொழில்நுட்ப நிபுணத்துவர்களின் உதவியும் பெறப்படுகின்றது.

**iii.** கல்வி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டமானது ஊடக பிரச்சாரங்கள் மூலம் உள்ளூராட்ச்சி அதிகாரசபை மட்டங்களில் நடாத்தப்படுகின்றதுடன் தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகை மற்றும் துண்டுப்பிரசுரங்கள் ஆகியவற்றை உபயோகித்து விசேடமாக கழிவு வகைப்படுத்தல் மற்றும் சுற்றாடல்-சிநேபூர்வ முறையிலான கழிவு அகற்றல் பற்றிய வழிப்பூட்டும் நிகழ்ச்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. .

**iv.**தொழில்நுட்ப ஆதரவு, நிறுவன மேம்பாடு மற்றும் திறன் கட்டியெழுப்பல்.

**v.**உலோகம், பிலாஸ்டிக், கண்ணாடி, மற்றும் காகித கழிவுகள், ஆகியவற்றுக்கான சேகர்ப்பு வலையமைப்பை தாபித்து மீள்சுழற்சியை மேம்படுத்தல். பிலாஸடிக் கழிவு, உலோகம், கண்ணாடி, மற்றும் காகிதம் என்பன மீள்சுழற்சிக்கு பயன்படுத்தப்படும் விரும்பத்தக்க பொருட்களாகும். தற்போது அதிகரித்துவரும் தனியார்துறை நிறுவனங்கள் பிலாஸ்டிக் மற்றும் காகித சேகரிப்பு சேவைகளை வழங்கிவருகின்றன. காகிதம் மற்றும் பிலாஸ்டிக் ஆகியவற்றை சேகரிக்கும் முறையான வலையமைப்பை தாபித்தல் பிலிசறு நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கிய பணிகளில் ஒன்றாகும். கல்வி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களாவன விஷேடமாக பாடசாலைகள், சமூக நிறுவனங்கள் மற்றும் மகளிர் சங்கங்கள் ஊடாக ஆரம்பிக்கப்படுகின்றன. கழிவுப் பொருட்களை அதிகளவில் மீள்சுழற்சிக்கு உட்படுத்துமாறு உள்ளூராட்சி அதிகாரசபைகள் ஊக்குவிக்கப்படுகின்றன.

**vi.**உள்ளூராட்சி அதிகார சபை மட்டத்தில் செயற்கைப் பசளை பொறித் தொகுதிகளை தாபித்தல்.

திறந்த வெளிகள் மற்றும் நீர் நிலைகளில் திண்மக் கழிவுகளை முறையற்ற விதத்தில் கொட்டுவதால் ஏற்படும் பிரச்சினைகளுக்கு விஞ்ஞான ரீதியாக ஏற்றுக் கொள்ளத்தக்க நியாயமான தீர்மாணமொன்றை காணும் முயற்சியாக தி.க.மு பற்றிய தேசிய குழவினால் தாபிக்கப்பட்ட தொழில்நுட்ப குழு உறுப்பினர்களின் நிபுணத்துவ அறிவின் மூலம் சேதனப்பசளை பொறித் தொகுதியொன்றையும் சுற்றாடல் நேயமிக்க கழிவு அகற்றல் முறையொன்றையும் தாபிப்பதற்கான முன்னெடுப்பை பிலிசறு கருத்திட்டம் எடுத்துவருகின்றது.

**vii.**கழிவு எச்சங்களை அகற்றுவதற்கான சுகாதாரமான குப்பை நிரப்பு அமைவிடங்களை குறைந்த செலவில் நிர்மாணித்தல்.

சுற்றாடலுக்கு உகந்த முறையில் இறுதிக் கழிவை அகற்றுவதற்காக வடிவமைக்கப்பட்ட அமைவிடமே சுகாதார குப்பை நிரப்பு அமைவிடமாகும். இவ்வடிவமைப்பானது எண்ணெய் கசிவு, கழிவுத் திரவம் மற்றும் எரிவாயு, தினசரி கழிவகற்றல் பரப்பிற்கான பாதுகாப்பு (மூடி), வழிந்தோடும் மற்றும் இயக்க நீர் மாற்றுவழி ஆகியவற்றால் ஏற்படும் மேற்பரப்பு மற்றும் நிலத்தடி நீர் மாசடைதளையும் குறைககின்றது பிலிசுறு கருத்திட்டமானது பல சுகாதாரமான குப்பை கொட்டும் அமைவிடங்களை தாபிக்க திட்டமிட்டுள்ளதால் உள்ளூராட்சி அதிகாரசபைகள் அவற்றை பயன்படுத்தி கொத்தனி முறையிலான கழிவு எச்சங்கள் அகற்றும் முறைமைக்கு செல்லலாம்.

**viii.**வீட்டில் சேதனப்பசளை தயாரிப்பை ஊக்குவித்தல்.

வீட்டு சேதனப்பசளை தயாரிப்பானது பொதுவாக சமையல் அறை மற்றும் வீட்டுத் தோட்டத்தில் இருந்து தோற்றுவிக்கப்படும் ஒப்பீட்டளவில் சிறிய அளவிலான சேதனப் பொருட்களை உள்ளடக்குகின்றது. திறந்த சிறிய குவியல் ஒன்றில் இழக்கப்படும் வெப்பம் மற்றும் ஈரப்பதத்தை் ஓர் தொட்டியை அல்லது குழியொன்றை உபயோகிப்பதன மூலம் தக்கவைத்துக் கொள்ளலாம். கொள்கலன் ஒன்றானது சுத்தமாக இருப்பதால் வதிவிடப் பிரதேசம் ஒன்றிலும் பயன்படுத்தவதற்குறிய வசதியை கொண்டுள்ளது. எனவே பிலிசறு கருத்திட்டமானது உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கு மானிய முறையில் தொட்டிகளை வழங்கி வீட்டு சேதனப் பசளை தயாரிப்பை ஊக்குவிப்பதற்கு ஏற்பாடுகளை செய்கின்றது.

**ix.**முறையற்ற திண்மக் கழிவு முகாமைத்துவ (தி.க.மு) நடைமுறைகளை தொடர்ந்தும் பின்பற்றும் உள்ளூராட்சி அதிகார சபைகளை

கண்காணித்தலும் சட்ட நடவடிக்கை எடுத்தலும்.

பிலிசறு கருத்திட்டமானது முறையான தி.க.மு நடைமுறைகளை பின்பற்றாத உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கு எதிராகஅதன் இறுதி நடவடிக்கையான சட்ட நடவடிக்கை எடுக்கும் நடவடிக்கையை ஆரம்பிக்கும், பிலிசறு கருத்திட்டத்தின் நிதியுதவியுடன் உள்ளூராட்சி அதிகாரசபைகளால் நடைமுறைபடுத்தப்படும் தி.க.மு நிகழ்ச்சித்திட்டத்தின் முறையான மதிப்பீடு மற்றும் கண்காணிப்பானது, உள்ளூராட்சி அதிகார சபை உறுப்பினர்கள், ம.சு.அ யின் மாவட்ட சுற்றாடல் உத்தியோகத்தர், பொது சுகாதார பரிசோதகர் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட பணியாட்களை உள்ளடக்கிய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு குழவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

## 13.1.6 பிலிசறு செயற்திட்டம்.

பிலிசறு கருத்திட்டத்தில் இதுவரையில் நிறைவேற்றப்பட்ட பல செயற்திட்டங்களுக்கு (2008-2010 மற்றும் 2011-2013) மேலதிகமாக, சம்பந்தப்பட்ட வருடங்களுக்கான வருடாந்த செயற்திட்டங்களும் தயாரிக்கப்படுகின்றன. அதற்கிணங்க, சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளை எதிர்கொள்ளும் வகையில் வரவு செலவுத் திட்டத்தின் அனைத்து செயற்பாடுகளும் நிறைவேற்றப்படும் வகையில் 2015 ஆம் ஆண்டின் பிலிசறு செயற்திட்டம் தயாரிக்கப்பட்டது. அதன் நடைமுறையாக்கத்தின் வேளையில் எதிர்கொள்ளப்பட்ட மாற்றங்களை அவ்வப்போது சீராக்கும் முகமாக பல திருத்தங்களுக்கு உட்பட்டது. அவ்வாறான மாற்றங்களுக்கு தேவைக்கிணங்க, தேசிய பிலிசறு பீடம்/ ம.சு.அ முகாமைத்துவ சபை ஆகியவற்றின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.(2015 ஆண்டு திட்டத்திற்கான இணைப்பு 1)

## 13.1.7 பிலிசறு கருத்தட்டத்தின் முன்னேற்றம்

பிலிசறு கருத்திட்டத்தின் முன்னேற்றமானது 2012 ஆம் ஆண்டின் செயற்திட்டத்தில் திட்டமிட்ட செயற்பாடுகள் மற்றும் அவற்றின் இலக்குகள் ஆகியவற்றுக்கு இணங்க தெளிவுக்காகவும் எளிதில் புரிந்துக்கொள்ளும் விதமாகவும் கொடுக்கப்பட்டுள்ளன. இருப்பினும் பல்வேறு கருத்திட்டங்களின் அபிவிருத்தி அம்சங்களில், போதுமான தொழில்நுட்ப பணியாளர்களின் குறைபாடு மற்றும் தேசியத் திட்டத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் உள்ளிட்ட பல்வேறு வகையான காரணங்களால் வித்தியாசமான முன்னேற்றங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன. (“தேசத்துக்கு மகுடம்” தேசிய நிகழ்வுத்திட்டம் பின்வாங்கப்பட்டது)

### 13.1.7.1 முறையான கழிவு முகாமைத்துவ வசதிகளுக்கான ஏற்பாடுகள்- உள்ளூராட்ச்சி அதிகாசரசபைக்கள் கூட்டுப்பசளை தொகுதிகளை தாபித்தல்

திண்மக் கழிவு முகாமைத்துவத்திற்கான தொழில் நுட்ப மற்றும் நிதி உதவிகளை நாடிவரும் உள்ளூர் அதிகாரசபைகள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களின்( இராணுவத்தளம் மற்றும் கல்வி நிறுவனங்கள் போன்ற) கருத்திட்ட முன்மொழிவுகளை பிலிசறு கருத்திட்டம் மதிப்பீட்டுக்கு உட்படுத்துகின்றது. கழிவு சுத்திகரிப்பு மற்றும் வகைப்படுத்தல் ஆகியவற்றுக்கு இட்டுச்செல்லும் ஒரு இடைக்கால வழிமுறையாக சிறிய மற்றும் நடுத்தர கூட்டுப்பசளை கருத்திட்டங்களை நிர்மாணித்து நடைமுறைபடுத்து பிலிசறு கருத்திட்டத்தின் முதன்மையானவொரு செயற்பாடாகும்.உதவிக்கான வேண்டுகோள்கள் கழிவின் அளவு மற்றும் உட்கட்டமைப்பு வசதி தேவைகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படுவதுடன் அவசியமான ஆவணங்கள் மற்றும் ஒப்புதல்கள் என்பன உத்தரவாதம் அளித்தவருக்கு உதவியை அளிக்கும் முகமாக பெற்றுக்கொள்ளப்படுகின்றன.

### 13.1.7.2 , 2015.12.31 உள்ளவாறு அனைத்து கூட்டுப்பசளை அமைவிடங்களின் நிலை

2008 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இருந்து 2015ஆம் ஆண்டின் இறுதி வரையில் பிலிசறு கருத்திட்டத்தால்136 உள்ளூராட்ச்சி அதிகாரசபைகள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களை (இராணுவத் தளங்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள்) உள்ளடக்கியவாறு 126சேதனப்பசளை அமைவிடங்கள் தாபிக்கப்பட்டுள்ளன. சிலசேதனப்பசளை அமைவிடங்களின் நிர்மாணப் பணிகள் 2009,2010,2011,மற்றும் 2012ஆம் ஆண்டுகளில் ஆரம்பித்து வைக்கப்பட்டாலும் பிலிசறு கருத்திட்டமானது அதன் தொழில் நுட்ப மற்றும் நிதி உதவிகளை தற்போதைய வசதிகளை பேணும் வகையில் அல்லது மேம்படுத்தும் வகையில் தொடர்ந்தும் வழங்கியது.

அனைத்து சேதனப்பசளை அமைவிடங்களும் கீழுள்ள கண்காணிப்பு அட்டவணையில் காட்டப்பட்டதைப் போல வகைப்படுத்தப்பட்டு உள்ளதுடன் அவை 2015ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் மற்றும் இறுதியில் அவற்றின் இயக்கச்செயற்பாட்டை ஒப்பீட்டளவில் காட்டுகின்றன. சேதனப்பசளை உற்பத்தியானது இடம்பெறும் வகையில் வெற்றிகரமான சூழலொன்றை தோற்றுவிக்கவும் அவை முகம் கொடுத்த பிரச்சினைகளை தீர்ப்பதற்கான ஆதரவை வழங்கவும் பிலிசறு கருத்திட்ட குழுவால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளே வெற்றிக்கு வழிசமைத்துள்ளன.

அட்டவணை13.1: கூட்டுப்பசளை அமைவிடங்களின் கண்காணிப்பு- 2015

| மாகாணம் | மாவட்டம் | 2015ஆம் ஆண்டு | கூட்டுப்பசளைஉற்பத்தியிருப்திகரம் | கூட்டுப்பசரண உற்பத்தி பொதுவாக இடம்பெறுகின்றத | நிர்மாணம் முடிநடதது ஆனால் கூட்டுப்பசளை | நிர்மாணப்பணி முடியவில்லை | பாரதூரமான பிரச்சினைகளால் செயலழப்பு | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| வ.ம.மா | அனுராதபுரம் | 2015ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் | 2 | 6 | 4 | 4 | 1 | 17 |
| | | 2015ஆம் ஆண்டின் இறுதியில் | 7 | 2 | 4 | 3 | 1 | 17 |
| | | | | | | | | |
| | பொலன்னறுவை | 2015ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் | | 1 | | | | 1 |
| | | 2015ஆம் ஆண்டின் இறுதியில | 1 | | | 1 | | 2 |
| | | | | | | | | |
| தெ.மா | காலி | 2015ஆம் ஆண்டின் | 5 | 3 | | 1 | | 9 |

| மாகாணம் | மாவட்டம் | 2015ஆம் ஆண்டு | ட்டுப்பசளைஉற்பத்தியி ருப்திகரம் | கூட்டுப்பசரண உற்பத்தி பொதுவாக இடம்பெறுகின்றத | நிர்மாணம் முடிநடத்து ஆனால் கூட்டுப்பசளை | நிர்மாணப்பணி முடியவில்லை | பாரதூரமான பிரச்சினைகளால் செயலழப்பு | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஆரம்பத்தில | | | | | | |
| | | 2015ஆம் ஆண்டின் இறுதியில் | 6 | 3 | | | | 9 |
| | | | | | | | | |
| | மாத்தறை | 2015ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் | 6 | 1 | | | | 7 |
| | | 2015ஆம் ஆண்டின் இறுதியில் | 7 | | 1 | 1 | | 7 |
| | | | | | | | | |
| 5.1 கழிவு முகாமைத்துவ முறைமைகளின் நிதிசார் பகுப்பாய்வை நடாத்தல், கூட்டுப்பசளைக்கான சந்தையை அபிவிருத்தி செய்தல், கழிவு சேகரிப்பு மற்றும் அகற்றல் கட்டணம் ஆகியவற்றை நடைமுறை | 500 | 600.00 |

TREASURY FUNDED SPECIAL PROJECTS IMPLEMENTED BY THE CEA

| | | |
|---|---|---|
| படுத்துவதற்கான மாதிரிகளை விருத்தி செய்தல் மற்றும் ஆய்வு மற்றும் அபிவிருத்திகளை மேற்கொள்ளல் | | |
| 5.2 கூட்டுப்பசளையின் தரத்தை மேம்படுத்தும் வகையில் உள்ளூர் அதிகார சபைகளுக்கு அனுசரணை வழங்கள் | 500 | - |
| **6. கொள்ளை, ஒழுங்கமைப்பு நடவடிக்கைகள் மற்றும் கண்காணிப்பு ஆகியவற்சை மேம்படுத்துவதற்கு** | **3,200** | 2,559.16 |
| 6.1 சம்பந்தப்பட்ட அரச முகவராண்மைகளின் ஒத்துழைபுடன் கழிவு முகாமைத்தவ கொள்கைகள், ஒழுங்குவிதிகள் மற்றும் கண்காணிப்பு செயற்பாடு ஆகியவற்றை மேம்படுத்தல் | 200 | 173.92 |
| 6.2 சம்பந்தப்பட்ட அரச முகவராண்மைகளுடன் கூட்டுமுயற்ச்சியில் ஈடுபட்டு ஒருங்கிணைக்கப்பட்ட திண்ம கழிவு முகாமைத்துவத்தை ஒருங்கிணைத்தல்,நடைமுறைபடுத்தல் மற்றும் கண்காணித்தல் | 3,000 | 2,385.24 |
| **7. தேசத்துக்கு மகுடம் 2015** | **62,000** | |
| **8. கருத்திட்ட ஒருங்கிணைப்பு, இயக்கம் மற்றும் முகாமைத்துவம்** | **30,300** | **26,049.88** |
| 8.1 **. கருத்திட்ட ஒருங்கிணைப்பு, இயக்கம் மற்றும் முகாமைத்துவம** | 30,300 | 26,049.88 |
| **9. கொய்கா கருத்திட்டத்திற்கு நிதி பரிமாற்றம்- FR66 *** | | **18,025.00** |
| **மொத்தம்** | **297,500** | **191,243.00** |

### 13.2 தேசியநுகர்வுக்கு பின்னரான பிலாஸ்டிக் கழிவு முகாமைத்துவம் கருத்திட்டம்

நாட்டில் பசுமையான சுற்றாடல் ஒன்றை உருவாக்கும் நோக்கில் இலங்கையில்பிலாஸ்டிக் கழிவு முகாமைத்துவத்தை நடைமுறைபடுத்தவதற்காக தேசிய நுகர்வுக்கு பின்னரான பிலாஸ்டிக் கழிவு முகாமைத்துவமானது சுற்றாடல் அமைச்சால்2017 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டது. இந்த கருத்திட்டமானது மூன்று முக்கிய நோக்கங்களின் அடிப்படையில் செயற்படுகின்றது. அவையாவன,

- கிராமிய பிரதேசங்களில் முறையான கழிவு முகாமைத்தவத்தை அறிமுகம் செய்து அபிவிருத்தி செய்தல்.
- பிலாஸ்டிக் கழிவு மீள்சுழற்ச்சி வலையமைப்பு ஒன்றை நிர்மாணித்தல்
- பிலாஸ்டிக் கழிவு தொடர்பில் ஒழுங்கான முறைமையொன்று பற்றி பொதுமக்களை விழிப்பூட்டல்

ஒழுங்கான பிலாஸ்டிக் கழிவு முறைமை தொடர்பில் பொது மக்களின் அணுகுமுறையில் மாற்றத்தை ஏற்படுத்தவதே இந்த கருத்திட்டத்தின் பிரதான எதிர்பார்ப்பாகும். இதன் அடிப்படையில்,சுற்றாடலில் சேரும் கழிவுகளை குறைத்தல், பிலாஸ்டிக் மூலப் பொருட்களின் இறக்குமதியை குறைத்தல் மற்றும் இதன் மூலம் கணிசமான அளவு வெளிநாட்டு செலாவனியை சேமித்தல ஆகியவற்றை இலக்காகக்கொண்டு இந்த கருத்திட்டம் செயற்படுகின்றது.

ஆகையால், 2015ஆம் ஆண்டில் பொதுச் திறைசேரியால் வழங்கப்பட்ட நிதியை உபயோகித்து பயனுறுதியான கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தை கருத்திட்டம் நடாத்தியுள்ளது.

#### 13.2.1 பிலாஸ்டிக் கழிவு மீள்சுழற்சி மாதிரி பொறித் தொகுதிகள் நிர்மாணம்

கருததிட்டமானது மாவட்ட மட்டத்தில் பிலாஸ்டிக் கழிவு மீள்சுழற்சி மாதிரி பொறித்

தொகுதிகளை செயற்படுத்தியுள்ளது. பொதுவாக பலாங்கொடை ந.ச மற்றும் குருநாகலை ந.ச ஆகியன மீள்சுழற்சி மாதிரி பொறித் தொகுதிகளாக அபிவிருத்தி செய்யப்பட்டன. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றத்தின் அடிப்படையில் அனுராதபுரம் மா.ந.ச மாத்தறை மா.ந.ச மற்றும் கடுவெல மா.ந.ச ஆகிய ஏனைய உள்ளூர் அதிகார சபைகளிலும் இந்த நிகழ்ச்சித்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

2014ஆம் ஆண்டில் கண்டி மா.ந.ச தேர்ந்தெடுக்கப்பட்டு மீள்சுழற்சி மாதிரி பொறித்தொகுதியாக அபிவிருத்தி செய்யப்பட்டது.





கண்டி மா.ந.ச மீள்சுழற்சி மாதிரி பொறித்தொகுதி ஆரம்ப வைபவம்

2015 ஆம் ஆண்டில் நுவலெியா மா.ந.ச மற்றும் யாழ்ப்பாணம் மா.ந.ச ஆகியன மீள்சுழற்சி மாதிரி பொறித்தொகுதிகள் நிர்மாணத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்டன. இரண்டு நிலையங்களிலும் நிர்மாணப் பணிகள் இடம்பெறுவதுடன் யாழ்ப்பாண மா.ந.ச மற்றும் நுவரெலியா மா.ந.ச ஆகியவற்றில் 90% நிர்மாணப் பணிகள் முடிவடைந்தும் உள்ளது. யாழ்ப்பாண மா.ந.ச மற்றும் நுவரெலியா மா.ந.ச ஆகியவற்றுக்கு வழங்கப்பட்ட பிலாஸ்டிக் கழிவு நொறுக்கி இயந்திரங்கள் மற்றும் பொலிதீன் கழிவு இறுக்கி இயந்திரங்கள் ஆகியன பிலாஸ்டிக் கழிவு மீள்சுழற்சி பொறித்தொகுதிகளுக்கு உரித்தானவை. மேற்படி நிலையங்கள் 2016ஆம் ஆண்டின் முதற் காலாண்டில் செயற்படுமாறு திட்டமிடப்பட்டன.





பிலாஸ்டிக் கழிவு மீள்சுழற்சி மாதிரி தொகுதியின் நிர்மாணம்-நுவரெலியா மா.ந.ச

பிலாஸ்டிக் கழிவு மீள்சுழற்சி மாதிரி தொகுதியின் நிர்மாணம்- யாழ்பாணம் மா.ந.ச

### 13.2.2 மீள்சுழற்சி கழிவு கலஞ்சிய நிலையங்கள் நிர்மாணித்தல்

உள்ளூராட்சிஅதிகார சபைகள் அவற்றின் வளாகத்திற்குள் மீள்சுழற்சி கலஞ்சிய நிலையங்களை பெற்றுக்கொள்ள முடியாமல் இருப்பது அவை முகம் கொடுத்துவரும் பாரிய பிரச்சினை ஒன்றாக காணப்படுகின்றது. புணித பிரதேசங்களில் அதிக அளவிலான மக்கள் ஒரே வேளையில ஒன்று கூடுவதால் தோன்றும் கழிவுகளை மீள்சுழற்சிக்கு அனுப்பும் வரையில் கலஞ்சியப் படுத்துவதற்கான கலஞ்சிய வசதிகள் காணப்படாததால் இதே பிரச்சினை அப்பிரதேசங்களிலும் எழுகின்றது. இதற்கு பரிகாரம் காணும் வகையில் கழிவு கலஞ்சிய நிலையமொன்று அம்பேகமுவ பிரதேச சபையின் ஒத்துழைப்புடன் நல்லதன்னி “ஸ்ரீபாதையில்” தாபிக்கப்பட்டது.

கருத்திட்டமானது உள்ளூராட்சி அதிகாரசபைகளை மீள்சுழற்சி கழிவு முகாமைத்துவத்தை கையாளும் அளவுக்குமேம்படுத்தும் நோக்கில் ஆரம்பத்தில்கல்கமுவ பிரதேச சபைக்கு கலஞ்சிய வசதியை தாபிப்பதறகான ஆதரவை அளித்தது. அதனைத் தொடர்ந்து வாரியபொல பி.ச மற்றும் தமன்கடுவ பி.ச ஆகியவற்றிலும் கலஞ்சிய வசதிகள் தாபிக்கப்பட்டன. 2015ஆம் ஆண்டில் இப்பொலாகம பிரதேச சயையிலும் கலஞ்சிய நிலையம் தாபிக்கப்பட்டது. I



இப்பொலாகம பி.ச மீள்சுழற்சி கலஞ்சிய நிலையம் தாபிக்கப்பட்டது.

ஜா-எலை ந.ச மற்றும் களனிய பி.ச ஆகியவற்றுக்கு மீள்சுழற்சி கழிவை நன்கு முகாமைத்தவம் செய்வதற்காக இரண்டு மீள்சுழற்சி அழுத்து இயந்திரங்கள் அன்பளிப்பு செய்யப்பட்டன.



தேர்தெடுக்கப்பட்ட உள்ளூராட்சி அதிகாரசபைகள் மத்தியில் விநியோகிக்கப்பட்வுள்ள மீள்சுழற்சி அழுத்து இயந்திரங்கள்

### 13.2.3 தனியார் துறை மீள்சுழற்சியாளர் நிகழ்ச்சித் திட்டத்தை மேம்படுத்தல்.

இந்த கருத்திட்டத்தின் கீழ் சேகரிப்பாளர்கள் மற்றும் மீள்சுழற்சியாளர்கள் பதிவு செய்யப்படுகின்றனர்,இதன் ஆரம்பத்தில் அவர்களின் ஆள் அடையாளத்தை உறுதிசெய்யயும் நோக்கில் அவர்களுக்குஅடையாள அட்டையொன்றும் சான்றிதழ் ஒன்றும் வழங்கப்பட்டன.

விசேடமாக,மேல் மாகாணத்தில் இருந்து மூன்று பெரிய மீள்சுழற்சியாளர்களை கருத்திட்டம் தேர்ந்தெடுத்ததுடன் அவர்களின் மீள்சுழற்சி திறனை அதிகரிக்கும் நோக்கில் மூன்று கழிவு இயந்திரங்களை அவர்களுக்கு அன்பளிப்புச் செய்தது.

தற்சமயம் அவர்களின் மீள்சுழற்சி திறன் பல மடங்கு அதிகரித்துள்ளதுடன் நாட்டில் மீள்சுழற்சிளை அதிகரிக்கவும்வழிசமைத்துள்ளது.மேலும், இந்த கருத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள ஏழு (07) பிலாஸ்டிக் கழிவு மீள்சுழற்சியாளர்கள் கருத்திட்டத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டு மீள்சுழற்சி கைத்தொழிலின் நன்மைக்காக ஏழு (07) பிலாஸ்டிக் நொறுக்கி இயந்திரங்கள் அன்பளிப்பு செய்யப்பட்டன.



தேர்தெடுக்கப்பட்ட மீள்சிற்சியாளர்கள் மத்தியில் விநியோகிக்கப்பட்வுள்ள பிலாஸ்டிக் நொறுக்கி இயந்திரங்கள்

### 13.2.4 பயிற்சி அபிவிருத்தி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள்

நிகழ்சித்திட்டத்தின் ஆரம்பத்தில், மக்களின் அணுகுமுறையில் மாற்றத்தை கொண்டுவரும் நோக்கில் பல விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டு உள்ளன. விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தின் இலக்குக் குழுக்களாக மாணவர்கள்,ஆசிரியர்கள்,முன்பள்ளி ஆசிரியர்கள், அரச உத்தியோகத்தர்கள், உள்ளூராட்சி அதிகாரசபை தொழிலாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள், சீ.பி.ஓ, அரசு-சாரா தாபனங்கள் மற்றும் சமுதாயத்தில் உள்ள வரத்தகர்கள் ஆகியோர் செயலமர்வின் மூலம் கூட்டிணைக்கப்பட்டனர். கருத்திட்டத்தால் 72 பயிற்சி விழிப்பூட்டல் நிகழ்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.





பிலாஸ்டிக் கழிவு சேகரிப்பாளர்கள் மற்றும் மீள்சுழற்சியாளர்கள் ஆகியோருக்கான விழிப்பூட்டல் செயலமர்வு



தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளூராட்சி அதிபாரசபை



பாடசரலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்



முன்பள்ளி ஆசிரியர்கள்விழிப்புணர்வு செயலமர்வு



தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளூரதிகால சபைபணியாட்களுக்கு பயிற்சி செயலமர்வு

அட்டவணை13.12: 2015ஆம் ஆண்டில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் பயிற்சி செயலமர்வு

| **இலக்குக் குழு** | **நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை** |
|---|---|
| மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் | 25 |
| முன்பள்ளி ஆசிரியர்கள | 04 |
| பிலாஸ்டிக் கழிவு சேகரிபாளர்கள் மற்றும் மீள்சுழற்சியாளர்கள் | 02 |
| அரச உத்தியோகத்தர்கள் | 17 |

| இலக்குக் குழு | நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| உள்ளூராட்சி அதிகாரசபை உத்தியோகத்தர்கள் மற்றும் பணியாளர்கள் | 03 |
| அரசு-சாரா தாபனங்கள்,சீ.பீ.ஓ,வீட்டு உரிமையாளர்கள, வர்த்தகர்கள மற்றும ஏனைய ஆர்வமுடைய தரப்பினர் | 21 |
| **மொத்தம்** | **72** |

துண்டுப்பிரசுரங்கள், சுவரொட்டிகள்,சிறுகுறிப்புகள் என்பன மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளும் வகையில் அவர்கள் மத்தியில் விநியோகம் செய்யப்பட்டன.




உரு13.2:விநியோகிக்கப்பட்ட துண்டுப்பிரசுரங்கள்,சுவரொட்டிகள் மற்றும் குறிப்புகள்

### 13.2.5 ஊக்குவித்தல் நிகழ்ச்சித்திட்டங்கள்

கழிவு வகைப்படுத்தல் தொட்டிகளை வைத்தல்,பதாதைகளை காட்சிப்படுத்தல் மற்றும் கழிவு முகாமைத்துவம் பற்றிய விளம்பர அனுசரணையாளரின் பெயரை காட்சிப்படுத்தல் போன்ற பல ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் புனிதப் பிரதேசங்கள், தேசிய நிகழ்வுகள் மற்றும் பிரதேச விழாக்கள் ஆகியவற்றில் கருத்திட்டத்தின் நோக்கங்களை அடையும் வகையில் நடாத்தப்பட்டன. முறையான கழிவு அகற்றல் முறைமையை அறிமுகப்படுத்துவதன் ஊடாக சுற்றாடலில் சேரும் கழிவை குறைத்தல் பற்றிய விசேட கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் ஒன்று நடாத்தப்பட்டது. ஊக்குவிப்பு நடவடிக்கைகளை ஸ்ரீபாதை விழாக்காலம், தலவிலை தேவாலய திருவழா, கதிர்காமம் எசல விழா மற்றும் கண்டி எசல விழா போன்ற விழாக்களிலும் ஒழுங்கமைக்க உத்தேசிக்கப்பட்டது.



கழிவு சேகரிப்பு ஸ்ரீபாதை பருவகாலத்தில்



கழிவு சேகரிப்பு முன்னேஸ்வரம் திருவிழாவில்



கழிவு சேகரிப்பு நிகழ்ச்சித்திட்டம் தலவிலை தேவாலய திருவிழாவில்

### 13.2.6 கழிவு வபைப்படுத்தல் தொட்டிகள் விநியோக நிகழ்ச்சித்திட்டம்

கருத்திட்டமானது இலங்கை புகையிரதப் பகுதியுடன் ஒருங்கிணைந்து முறையான கழிவு அகற்றல் மற்றும் சேகரிப்பு பொறிமுறையொன்றை கட்டியெழுப்பும் நோக்கில் கழிவு வகைப்படுத்தல்தொட்டிகளை விநியோகிக்க விருப்புகின்றது.

நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்பத்தில் கழிவு தொட்டிகள் கொழும்பு முதல் கண்டி வரையில் புகையிரத நிலையங்களுக்கு விநியோகம் செய்யப்பட்டன. கழிவு தொட்டி விநியோக நிகழ்ச்சித்திட்டத்தை ஒத்த விசேட திட்டமொன்று சேகரிக்கப்பட்ட கழிவுகளை மீள்சுழற்சி செயற்பாட்டிற்கு வழங்கும் வகையில்வகுக்கப்படுகின்றது.



புகையிரத நிலையங்களுக்கு கழிவு வகைப்படுத்தல் தொட்டிகள் விநியோகிக்கும் நிகழ்ச்சித்திட்டம்

மேற்படி ஏற்பாட்டிற்கு பதிலாக கழிவு வகைப்படுத்தல் தொட்டிகள் பிரதேச செயலாலர் அலுவலகம், கொழும்பு, கம்பஹ மாவட்ட பொது சுகாதார மருத்தவர் அலுவலகங்கள் ஆகியவற்றுக்கு விநியோகிக்கப்பட்டன. இதே நிகழ்ச்சித்திட்டம் அனுராதபுரம் மாவட்டம் பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் முன்னெடுக்கப்பட்டது.

விசேடமாக, கழிவு சேகரிக்கும் பைகள் உள்ளூராட்சி சபைகள், மற்றும் தனியார் துறையைச் சேர்ந்த பிலாஸ்டிக் கழிவு சேகரிப்பாளர்கள் மற்றும் மீள்சுழற்சியாளர்கள் மத்தியிலும் விநியோகிக்கப்பட்டன.

இந்த ஒட்டு மொத்த நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாகவும் பிலாஸ்டிக் கழிவை மீள்சுழற்சி செயன்முறைக்கு உட்படுத்தும் நோக்கில் கருத்திட்டம் செயற்பட்டது. கருத்திட்ட நோக்கங்களை அடையும் நோக்கில் 2015 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

### 13.3. பாடசாலை முன்னோடி நிகழ்ச்சித்திட்டம்

ம.சு.அ சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வு பிரிவால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தேசிய சுற்றாடல் முன்னோடி(NEPP) நிகழ்ச்சித்திட்டமானது கல்வி அமைச்சின் ஒத்துழைப்புடன் மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் பாடசாலை முறைமையில் இளைய தலைமுறையினருக்காக முன்னெடுக்கப்படும் நவீன சுற்றாடல் பேணுகை முன்னோடி முன்னெடுப்பாகும். சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித்திட்டமானது (சு.மு.நி)பாடசாலை மாணர்களுக்கு பயிற்சியளித்து அவர்களை சுற்றாடல் பேணுகை மற்றும் பாதுகாப்பு பற்றிய செய்தியை காவிச்செலலும்முக்கிய செய்தியாளர்களாக பயன்படுத்துவதை இலக்காகக் கொண்டுள்ளது. சுற்றாடல் பற்றிய அறிவு மற்றும் திறன்களை மேம்படுத்தவும் சுற்றாடல் பேணுகை மற்றும் பாதுகாப்பு தொடர்பில் அவசியமான மக்களின் மனப்பாங்கை மாற்றவும்சு.மு.நி வழிசமைக்கின்றது. இவ்விதமான மனப்பாங்கு மற்றும் அணுகுமுறை மாற்றங்களை ஒன்று திரட்டி அதன் ஊடாகசுற்றாலைநேசிக்கும் சமுதாயம் ஒன்றைகாலப்போக்கில்சுற்றாடல் முன்னோடிகளால் கட்டியெழுப்பலாம் என்ற எதிர்பார்பபு ஏற்பட்டுள்ளது.இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பிரசைகளின் மனப்பாங்கு மற்றும் நடத்தைகளில் மாற்றத்தை கொண்டுவருவதற்குசுற்றாடல்முன்னோடிகள் வினையூக்கி வகிபாகத்தையுடைய தலைமைத்துவத்தை வழங்குவர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இருப்பினும்,எதிர்காலத்தில்பாடசாலை மாணவர்கள் வளர்ந்ததும் நாட்டின் அபிவிருத்தி செயற்பாட்டின் நிலைத்திருக்கும் தன்மையை உறுதிசெய்யும்நியாயமான முடிவுகளை எடுப்பதற்கான அவர்களின் அறிவு, திறன் மற்றும் விசேடமாக மனப்பாங்கு மற்றும் நடத்தை ஆகியவற்றில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான நன்மைகள் இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் காணப்படுவதை உணர்ந்த அமைச்சரவையானது தேசியசுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித்திட்டத்தை நாடு முழுவதும் அமைந்துள்ள பாடசாலைகளில் 2015-2019 வரையிலான ஐந்து வருட காலத்திற்கு நீடிக்க வேண்டுமெனம.சு.அ யால் சமர்ப்பித்த முன்மொழிவுக்கு ஒப்புதல் அளித்தது. அமைச்சின் நிதியுதவியின் கீழ் நிறைவேற்றப்பட்ட மேற்படி செயற்பாடுகள் சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வு பிரிவால் சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித்திட்டத்தை மேம்பமுத்தும் நோக்கில் நடாத்தப்பட்டன.

ஐந்து(05) வருட செயற்திட்டத்திற்கு அமைய 2015ஆம் ஆண்டின் முன்னேற்றம் பின்வருமாறு

அட்டவணை13.13: நாட்டிலுள்ள பாடசாலைகளின் மொத்த எண்ணிக்கை( தமிழ் மற்றும் சிங்களம் உட்பட)

| நிகழ்ச்சித்திட்டம் | | நாட்டிலுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை | 2015ஆம் ஆண்டில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகள் | பாடசாலைகளின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| சூழல்-மன்ற நிகழ்ச்சித்திட்டம் | சிங்களம் | 784 | 609 | 1357 |
| | தமிழ் | 588 | 303 | 891 |
| சு.மு.நிநிகழ்ச்சித்திட்டம | சிங்களம் | 1932 | 544 | 2476 |

| | | | | |
|---|---|---|---|---|
| | தமிழ் | 717 | 31 | 748 |

2015ஆம் ஆண்டில் ம.சு.அ சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வு பிரிவால்(சு.க.வி.பி) நடாத்தப்பட்ட நடவடிக்கைகள் பின்வருமாறு.

### 13.3.1 ஆரம்பத்தர ஆசிரியர்களுக்கு ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித்திட்டத்தின் விரிவுபடுத்தல் மற்றும் மேம்படுத்தல் செயற்பாட்டிற்கு ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைபடுத்தல் மிகவும் முக்கியமாகின்றது. ஆகையால், வலயக் கல்வி மட்டத்தில் இனங்காணப்பட்ட பரிதேசங்களில் ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

2015ஆம் ஆண்டில், ஆரம்பப்பிரிவு ஆசிரியர்களுக்கான ஆசிரியர் பயிற்சிநிகழ்ச்சித்திட்டங்கள் பத்தை(10) நடாத்துவதற்குசு.க.வி.பி திட்டமிட்டதுடன் அவை இரத்தினபுரி,கோகாலை, அனுராதபுரம்,பொரன்னறுவை, முலலைத்தீவு, யாழ்ப்பாணம், மன்னார்,காலி,மாத்தறை மற்றும் நுவரேலியா மாவட்டங்களில் வெற்றிகரமாக நடாத்தப்பட்டன.

அட்டவணை13.14: ஆரம்பபிரிவு ஆசிரியர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் பட்டியல்

| தொ. இல | திகதி | இடம் | பங்குபற்றியோரின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | 2015. 5.15. | கேகாலை | 75 |
| 02 | 2015.5.19 | மன்னார் | 75 |
| 03 | 2015.5.21 | மாத்தறை | 75 |
| 04 | 2015.5.22 | அனுராதபுரம் | 75 |
| 05 | 2015.5.29 | இரத்தினபுரி | 75 |
| 06 | 2015.6.09 | முல்லைத்தீவு | 81 |
| 07 | 2015.6.12 | யாழ்ப்பாணம் | 67 |
| 08 | 2015.7.28 | நுவரேலியா | 75 |
| 09 | 2015.10.23 | பொலன்னுறுவை | 75 |
| 10 | 2015.11.15 | காலி | 75 |

### 13.3.2 தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலை பிள்ளைகளுக்கான தலைமைத்துவ பயிற்ச்சித்திட்டம்

சுற்றாடல் முன்னோடி மாணவர்களின் தலைமைத்துவ பண்புகளை மேம்படுத்தும் வகையில் ம.சு.அ யின் சு.க.வி.பி தேர்ந்தெடுக்கப்பட்ட சு.மு.நி மாணவத் தலைவர்களுக்கு தலைமைத்துவ பயிற்ச்சித்திட்டங்களை நடாத்தியது. தலைமைத்துவ பயிற்ச்சித்திட்டங்களை நடாத்துவதன் ஊடாக எதிர்காலத்தில் சுற்றாடல் நிலைத்திருக்கும் சரியான தீர்மானங்களை மேற்கொள்ளும் சுற்றாடல்-நேயமுள்ள தலைவர்களை தோற்றுவித்தல் சு.க.வி.பிரிவின் எதிர்பார்ப்பாகும்.

2015ஆம் ஆண்டில் தலைமைத்துவ பயிற்சிநிகழ்ச்சித்திட்டங்கள் பத்தை (10) நடாத்துவதற்குசு.க.வி.பி திட்டமிட்டதுடன் அவற்றை தெண்,மத்தியஈ வட மத்திய,ஊவா, மற்றும் கிழக்கு மாகாணங்களில் வெற்றிகரமாகவும் நடாத்தியுள்ளது.

அட்டவணை13.15: தலைமைத்துவநிகழ்ச்சித் திட்டங்களின் பட்டியல்

| தொ. இல | திகதி | இடம் | பங்குபற்றியோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | 2015. 5.30. | திருகோணமலை | 72 |
| 02 | 2015.6.19 | அனுராதபுரம் | 100 |
| 03 | 2015.7.9 | காலி | 100 |
| 04 | 2015.7.3 | மாத்தலை | 100 |
| 05 | 2015.7.24 | பதுலை | 100 |

**13.3.3 பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் முன்பள்ளி பாடசாலைகளுக்கு பொறுப்பாக உள்ள ஆசிரியர்களுக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்**

முன்-பள்ளிகல்வி நிகழ்ச்சித்திட்டமானது முன்-பள்ளி சிறார்களைசுற்றாடல் பற்றியபல்வேறு அம்சங்களில் விழிப்பூட்டுவதற்காக நடைமுறைபடுத்தப்படுகின்றது.சமூகத்தின் குறிப்பிட்ட பிரிவினரான முன்-பள்ளி ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக முன்பள்ளி ஆசிரியர் வழிகாட்டிகள் அச்சிடப்பட்டு நாட்டிலுள்ள முன்-பள்ளிகள் மத்தியில் விநியோகிக்கப்பட்டன. ஆசிரியர் வழிகாட்டிகளை பயன்படுத்தும் விதம் பற்றிய முன்-பள்ளி சுற்றாடல் கல்வி தொடர்பில் பிரதேச சுற்றாடல் உத்தியோகத்தர்களுக்கு பயிற்ச்சியாசிரியர் பயிற்சியானது சு.க.வி.பிரிவால் நடாத்தப்பட்டதுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட முன்-பள்ளி ஆசிரியர் குழுவுக்கு அவசியமான பயிற்சி மற்றும் விழிப்பூட்டல் என்பன பயிற்றப்பட்ட வளவாளர்கள் மற்றும் பிரதேச சுற்றாடல் உத்தியோகத்தர்கள் ஊடாக மாகாண மட்டத்தில் வழங்கப்பட்டன.

2015ஆம் ஆண்டில் முன்-பள்ளி ஆசிரியர் களுக்கான பயிற்சிநிகழ்ச்சித் திட்டங்கள் பத்தை (10) நடாத்துவதற்குசு.க.வி.பி திட்டமிட்டதுடன் அவற்றை மாத்தலை,நுவரேலியா,கிளிநொச்சி,கம்பஹ, களுத்தரை,குருணாகலை, புத்தளம்,மொனராகலை,மற்றும் இரத்தினபுரி ஆகியமாவட்டங்களில் வெற்றிகரமாகவும் நடாத்தியுள்ளது

அட்டவணை13.16:முன்-பள்ளி ஆசிரியர்களுக்கு நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் பட்டியல்

| தொ. இல | திகதி | இடம் | பங்குபற்றியோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | 2015. 5.8. | இரத்தினபுரி | 55 |
| 02 | 2015.5.25 | மொனராகலை | 47 |
| 03 | 2015.5.26 | கம்பஹ, | 55 |
| 04 | 2015.7.14 | குருணாகலை | 55 |
| 05 | 2015.7.24 | மாத்தலை | 55 |
| 06 | 2015.7.09 | களுத்தரை | 55 |
| 07 | 2015.7.23 | புத்தளம் | 55 |

| | | | |
|---|---|---|---|
| 08 | 2015.7.24 | நுவரேலியா | 55 |
| 09 | 2015.7.23 | திருகோணமலை | 55 |
| 10 | 2015.3.10 | கிளிநொச்சி | 60 |

**13.3.4 வலய மட்டங்களில் சு.மு.நி பொறுப்பாக உள்ள ஆசிரியர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்**

2015ஆம் ஆண்டில் சு.மு.நி க்கு பொறுப்பான ஆசியர்களுக்கு பயிற்சிநிகழ்ச்சித் திட்டங்கள் பத்தை (10) நடாத்துவதற்குசு.க.வி.பி திட்டமிட்டதுடன் அவற்றைமொனராகலை(விசேட நிகழ்ச்சித்திட்டம்), மன்னார், மாத்தலை,குருணாகலை, அனுராதபுரம், பதுளை, திருகோணமலை, வவுனியா,கிளிநொச்சி, கண்டி(கம்பொல), கண்டி ஆகிய மாவட்டங்களில் வெற்றிகரமாகவும் நடாத்திளுள்ளது.

அட்டவணை13.17:சு.மு.நி பொறுப்பாக உள்ள ஆசிரியர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் பட்டியல்

| தொ. இல | திகதி | இடம் | பங்குபற்றியோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | 2015.2.18 மூன்று நாள் | மொனராகலை(விசேட நிகழ்ச்சித்திட்டம்) | 100 |
| 02 | 2015.4.28 | மன்னார | 75 |
| 03 | 2015.5.12 | குருணாகலை | 100 |
| 04 | 2015.5.14 | அனுராதபுரம் | 100 |
| 05 | 2015.5.14 | திருகோணமலை | 75 |
| 06 | 2015.5.20 | பதுளை | 100 |
| 07 | 2015.5.29 | வவுனியா | 56 |
| 08 | 2015.5.30 | கிளிநொச்சி | 68 |
| 09 | 2015.6.29 | கண்டி (கம்பொல), | 100 |
| 10 | 2015.7.10 | கண்டி | 100 |
| 11 | 2015.9.4 | மொனராகலை | 100 |

**13.3.5 வலய மட்டத்தில் அதிபர்களுக்காக பயிற்சிநிகழ்சிகள்**

2015ஆம் ஆண்டில் அதிபர்களுக்கு ஒரு நாள் பயிற்சிநிகழ்ச்சித் திட்டத்தை நடாத்துவதற்கு சு.க.வி.பி திட்டமிட்டதுடன் அவற்றைஐந்து (05) மாகாணங்களில்வெற்றிகரமாகவும் நடாத்தியுள்ளது.(மேல், மத்திய, ஊவா, வட-மத்திய மற்றும் வட மாகாணம்)

அட்டவணை13.18: வலய மட்டத்தில் அதிபர்களுக்காக நடாத்தப்பட்ட பயிற்சிநிகழ்சிகளின் பட்டியல்

| **தொ.இல** | **திகதி** | **இடம்** | **பங்குபற்றியோர் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 01 | 2015. 3.16 | மன்னார் | 104 |
| 02 | 2015.5.07 | அனுராதபுரம் | 100 |
| 03 | 2015.5.19 | பதுளை | 100 |

| தொ.இல | திகதி | இடம் | பங்குபற்றியோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 04 | 2015.7.17 | மாத்தலை | 100 |
| 05 | 2015.10.13 | கொழும்பு | 100 |




**13.3.6 சு.மு.நி ஒருங்கிணைப்பாளர்களுக்கான இரண்டு நாள் வதிவிட பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்**

2015ஆம் ஆண்டில் சு.மு.நிஒருங்கிணைப்பாளர்களுக்கானபயிற்சிநிகழ்ச்சித் திட்டத்தை நடாத்துவதற்குசு.க.வி.பி திட்டமிட்டதுடன் அதனை ஊவா முகாமைத்துவ அபிவிருத்தி நிறுவகம், பசறையில் 2015 செப்டெம்பர் 17,18 மற்றும் 19ஆம் திகதிகளில் வெற்றிகரமாகவும் நடாத்தியுள்ளது.

**13.3.7 சு.மு.நி ஆணையாளர்களுக்கான இரண்டு நாள் வதிவிட பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்;**

2015ஆம் ஆண்டில் சு.மு.நிஆணையாளர்களுக்கான இரண்டு நாள் வதிவிட பயிற்சிநிகழ்ச்சித் திட்டத்தை (தமிழ் மொழி) நடாத்துவதற்குசு.க.வி.பி திட்டமிட்டதுடன் அதனை ஒத்துழைப்பு அபிவிருத்திக்கான தேசிய நிறுவகம், பொல்கொல்லையில் 2015 ஒக்டோபர் 1, 2 மற்றும் 3 ஆம் திகதிகளில்வெற்றிகரமாகவும் நடாத்தியுள்ளது.

**13.3.8 சு.மு.நி சிறப்பாக செயலாற்றும் பொறுப்பு ஆசிரியர்களுக்கான இரண்டு நாள் வதிவிட பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்**

2015ஆம் ஆண்டில்சு.மு.நி தில்சிறப்பாக செயலாற்றும் பொறுப்பு ஆசிரியர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் ஒன்றைநடாத்துவதற்குசு.க.வி.பி திட்டமிட்டதுடன் அதனை தேசிய நீர்வாழ் நிறுவகம், கலாவெவயில் சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித்திட்டத்தில் சிறப்பாக செயலாற்றும் 42 ஆசிரியர்களின் பங்குபற்றுதலுடன் 2015 ஏப்பிரல் 1,2 மற்றும் 3ஆம் திகதிகளில் வெற்றிகரமாக நடாத்தியது.




### 13.3.9. தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கான பயிற்சித்திட்டம்

2015ஆம் ஆண்டில் ஆசிரியர்களுக்கானஆறு (06) பயிற்சிநிகழ்ச்சித் திட்டங்களை தேசிய கல்வி கல்விக் கல்லூரியில் நடாத்துவதற்குசு.க.வி.பி திட்டமிட்டது. ஆயினும் எட்டு (08) பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களே நடாத்தப்பட்டன. அந்த நிகழ்ச்சித்திட்டங்களின் விபரங்கள் பின்வருமாறு.

அட்டவணை13.19: தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கான பயிற்சித்திட்டங்களின் பட்டடியல்

| தொ. இல | திகதி | இடம் | பங்குபற்றியோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | 2015. 2.28 | ஊவா ( பண்டாரவளை) தே.க.க | 185 |
| 2 | 2015. 3.22 | பொலன்னறுவை (புலதிசிபுர) தே.க.க | 182 |
| 3 | 2015. 3.28 | ருவன்புர தே.க.க | 160 |
| 4 | 2015. 4.26 | பொல்கொல்லதே.க.க | 218 |
| 5 | 2015.7.18 | நில்வலாதே.க.க | 197 |
| 6 | 2015.7.25 | வவுனியாதே.க.க | 185 |
| 7 | 2015.8.05 | நுவரெலியா (ஸ்ரீபாத) தே.க.க | 183 |
| 8 | 201510.17 | மஹரகமதே.க.க | 372 |

### 13.3.10 சு.மு.நி சாதனங்கள் உற்பத்தி

2015ஆம் ஆண்டில் சு.மு.நி சாதனங்கள் உற்பத்தி பற்றிய முன்னேற்றமானது பின்வருமாறு அறிக்கையிடப்பட்டுள்ளது.

அட்டவணை 13.20: சு.மு.நி சாதனங்கள் உற்பத்தி

| தொ.இ | சாதனங்களை | சிங்கள மொழி | தமிழ் மொழி | ஆங்கிள மொழி |
|---|---|---|---|---|
| 01 | சுற்றாடல் முன்னோடி குறிப்பு புத்தகங்கள் | 2700 | 6500 | - |
| 02 | சுற்றாடல் முன்னோடிதொப்பிகள் | 2700 | 6500 | - |
| 04 | சுற்றாடல் முன்னோடி பதக்கங்கள் | 2700 | 6500 | - |
| 05 | ஹரிதா சான்றிதழ் | 8000 | 2000 | - |
| 06 | ஹரிதா பதக்கங்கள் | 8000 | 2000 | - |
| 07 | ராஜதா சான்றிதழ் | 6000 | 1000 | - |
| 08 | ராஜதாபதக்கங்கள் | 6000 | 1000 | - |
| 09 | சுவர்ணா சான்றிதழ் | 1800 | 200 | - |
| 10 | சுவர்ணாபதக்கங்கள் | 1800 | 200 | - |
| 11 | சு.மு.நி ஆசிரியர் வழிசாட்டி நூல் | 3000 | 1500 | 500 |
| 12 | கொடிகள் | 1000 | | |

பதிவுகளுக்காக புதய சுற்றாடல் முன்னோடி குழுக்கள் வரவேற்கப்பட்டன. மாகாண அலுவலகங்கள் மற்றும் மாவட்ட அலுவலகங்கள் ஆகியவற்றில் இருந்துபதக்கங்கள் வழங்கும் நோக்கில் புள்ளிப் பட்டியல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன. சு.மு.நி சாதனங்கள் விநியோகிப்பதற்காக மாவட்ட அலுவலகங்கள் பிரதேச அலுவலகங்களுடன்ஒருங்கிணைக்கப்பட்டன.

### 13.3.11. சூழல் குழாம் சாதனங்கள் தயாரிபபு

1 முதல் 5 ஆம் தரங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு சந்தர்ப்பங்களை வழங்கி தூய்மையானதும் பசுமையானதுமான சுற்றாடலொன்றைநோக்கிவாறு அவர்களின் விழுமியங்கள், நடத்தை மற்றும் அணுகுமுறை ஆகியவற்றில் மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் அவர்களின் பங்களிப்பை பெறுவதற்காகவே சூழல் குழாம்கள் உருவாக்கப்படுகின்றன்.
சிறார்கள்இந்தநடவடிக்கைகளின்ஊடாக குழந்தைப் பருவத்தில் இருந்தே சூழல்-சிநேகபூர்வநடத்தைக்கு பயிற்றப்படுவார்கள். அவர்கள் ஆறாம் வகுப்பில் இருந்து சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித்திட்டத்திற்கு உள்வாங்கப்படுவார்கள்.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பின்வரும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

- சூழல் குழாம்களை பதிவுசெய்தல்
- சின்னங்கள் மற்றும் சான்றிதழ்கள் தயாரிப்பும் விநியோகமும்
- நிகழ்ச்சித்திட்ட மதிப்பீடு
- ஆசிரியர்கள் மற்றும் மா.சு.உ களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்
- ஆசிரியர் வழிகாட்டி நூல்களை விநியோகித்தல்

2015ஆம் ஆண்டில்சூழல் குழாம் சாதனங்களின் உற்பத்தி பற்றிய முன்னேற்றமானது பின்வருமாறு அறிக்கையிடப்பட்டுள்ளது.

**அட்டவணை13.20: சூழல் குழாம் சாதனங்களின் உற்பத்தி**

| தொ.இ | சாதனங்கள் | சிங்கள மொழி | தமிழ் மொழி |
|---|---|---|---|
| 01 | சோபா பதக்கங்கள் | 11000 | 3000 |
| 02 | துருலதா சான்றிதழ் | 25000 | 5000 |
| 03 | விஹாக சான்றிதழ் | 25000 | 5000 |
| 04 | சோபா சான்றிதழ் | 11000 | 3000 |
| 05 | சூழல் குழாம் ஆசிரியர் வழிகாட்டி நூல் | 7000 | 2000 |

### அட்டவணை13.3.12. முன்பள்ளி ஆசிரியர் வழிகாட்டி நூல்கள் அச்சிடல்

2015ஆம் ஆண்டில், முன்பள்ளி ஆசிரியர் வழிகாட்டி நூல்கள் உற்பத்தி பற்றிய முன்னேற்றமானது பின்வருமாறு அறிக்கையிடப்பட்டுள்ளது.

அட்டவணை13.21: முன்பள்ளி ஆசிரியர் வழிகாட்டி நூல்கள் அச்சிடல்

| தொ.இ | சாதனங்கள் | சிங்கள மொழி | தமிழ் மொழி |
|---|---|---|---|
| 01 | முன்பள்ளி ஆசிரியர் வழிகாட்டி நூல்கள் | 1500 | 500 |

**13.3.13.** மாவட்ட சுற்றாடல் முன்னோடி செய்திமடல் (மாவட்டத்திற்கு ஒரு செய்திமடல் வீதம்)

மாவட்டங்களில் இடம்பெறும் சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய செயற்பாடுகள் தொடர்பில் அந்தந்த மாவட்ட மக்களை வழிப்பூட்டும் வகையில் மாவட்ட சுற்றாடல் முன்னோடி செய்தி மடல்களை வெளியிடுவதற்கு ம.சு.அ சுற்றாடல் கல்வி மற்றும் வழிப்புணர்வு பிரிவானது நிதி ஒதுக்கீட்டை செய்துள்ளது. இந்த செய்தி மடலை வெளியிடுவதன் ஊடாக இவ்வகையான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள நபர்களின் மத்தியில் சுற்றாடல் பற்றிய அனுபவங்கள் மற்றும் அறிவை பெருக்கவும் பகிர்ந்து கொள்ளவும் முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது.

2015ஆம் ஆண்டில், மாவட்ட சுற்றாடல் செய்தி மடல்கள் 25 மாவட்டங்களில் அச்சிடப்பட்டதுடன் (ஒரு மாவட்டத்திற்கு ஒரு மடல் வீதம்) அவை மாவட்டத்திற்குள் விநியோகமும் செய்யப்பட்டன.

**13.3.14.மாவட்டசுற்றாடல் முகாம்களை நடாத்தல்**

சுற்றாடல் முன்னோடிகள் தமது அறிவு மற்றும் அனுபவங்களை முகாம் சூழலொன்றில் பகிர்ந்து கொள்வதற்கான சந்தர்ப்பம் ஒன்றை அவர்களுக்கு வழங்கும் வகையில் ம.சு.அ யின் சுற்றாடல் கல்வி மற்றும் விழ்ப்புணர்வு பிரிவானதுதேசிய சுற்றாடல் முகாம் நிகழ்வை ஒவ்வொரு வருடமும் ஒழுங்கமைத்து நடாத்துகின்றது.

2013ஆம் ஆண்டு முதல் ஒரு தேசிய சுற்றாடல் முகாமுக்கு பதிலாக மாவட்ட சுற்றாடல் முகாம்களை பத்து (10) மாவட்டங்களில் நடாத்துவதற்கான நிதியை ம.சு.அ யின் சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வு பிரிவு வழங்கியது.

2015ஆம் ஆண்டில், நுவரெலியா,கேகாலை,பொலன்னறுவை,கம்பஹ,பதுலை,காலி,மட்டக்களப்பு, மாத்தறை,மொனராகலை மற்றும் வவுனியா ஆகிய பிரதேசங்களில் 10 (இரண்டு நாள்) மாவட்ட சுற்றாடல் முகாம்கள் இடம்பெற்றன. ஒவ்வொரு முகாமிலும் 125 சுற்றாடல் முன்னோடிகள் பங்குபற்றினர்.



### 13.3.15. சனாதிபதி பதக்கங்கள் வழங்கும் விழா

சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித் திட்டத்தின் அதியுயர்ந்த விருதாக சனாதிபதி பதக்கம் வகைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த உயர் விருதை அடையும் சந்தர்ப்பத்தை பெறுவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட நேர்காணல் குழுவொன்றால் நடாத்தப்படும் ஐந்து நேர்காணல்களில்முன்னோடி மாணவர்கள் சித்தியடைய வேண்டும்.

2015ஆம் ஆண்டில்,சனாதிபதி பதக்கம் வழங்கும் விழா அதிமேதகு சனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் சனாதிபதி மாளிகையில் 2015 ஒக்டோபர் 22ஆம் திகதி இடம்பெற்றது. அனைத்து செய்பாடுகளையும் நேர்காணல்களையும் வெற்றிகரமாக முடித்திருந்த 71 சுற்றாடல் முன்னோடிகளுக்கு சனாதிபதி பதக்கங்கள் வழங்கப்பட்டன. இந்த வைபவத்தில் 33 அதிபர்கள், 33பாடசாலைகளை சேர்ந்த 33 சு.மு.நி ஆசிரியர்கள் மற்றும் ம.சு.அ மாகாண மட்ட மா.சு.உ ஆகியோர் பங்குபற்றினர்




### 13.3.16. தூய்மையானதும் பசுமையானதுமான சுற்றாடலைக் கொண்ட சிறந்த பாடசாலைகளை தெரிவுசெய்தல்

**(சுவதார தக்சலா)**

இந்த நிகழ்ச்சித்திட்டமானதுபாடசாலை வளாகத்தில் தூய்மையானதும் பசுமையானதுமான சுற்றாடலை கட்டியெழுப்பும் நோக்கில் செயற்படுகின்றது. பாடசாலைகளுக்கு இடையிலான போட்டிகளை நடாத்துவதன் ஊடாக மாணவர்களை சுற்றாடல் நடவடிக்கைகளில் வழிநடத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

2015ஆம் ஆண்டில், இந்த நிகழ்ச்சித்திட்டம் நாடளாவிய ரீதியில் நடாத்தப்பட்டு (25 மாவட்டங்களில்) ஒவ்வொரு மாவட்டத்தில் இருந்தும் 3 பாடசாலைகளை சிறந்த பசுமை நடைமுறைகளை பின்பற்றும் பாடசாலைகளாக தெரிவு செய்தது. எழுபத்தைந்து பாடசாலைகளுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

### 13.3.7. மாகாண மட்ட முன்னேற்ற மீளாய்வும் பொ.ஏ.ஊ.பே மற்றும் பி.சு.உ(EEPC & DEO's) ஆகியோருடனான கூட்டம்

சு.மு.நி திட்டத்தின் உத்தேச இலக்குகள் அடைந்துள்ள முன்னேற்றத்தை கண்காணிப்பதற்காக ஒன்பது மாகாணங்களிலும் ஒன்பது மாகாண முன்னேற்ற மீளாய்வு மற்றும் கண்காணிப்பு கூட்டங்கள்2015ஆம் ஆண்டில் இடம்பெற்றன.

### 13.3.18 சு.மு.நி ஆணையாளர்கள் மற்றும் மாவட்ட ஆலோசகர்களுக்கான வருடாந்த பிரயாணப்படி

சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித்திட்டத்தைச் சேர்ந்த 47 ஆணையாளர்கள் மற்றும் மாவட்ட

ஆலோசகர்களுக்கான வருடாந்த பிரயாணப்படி வழங்கப்பட்டது.

### 13.3.19 சிறப்பான செயலாற்றுகை உடைய பாடசாலைகளுக்கு நூலக சாதனங்களை வழங்குதல்

கம்பஹ,மாத்தலை,,அனுராதபுரம் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் இருந்து சிறப்பாக செயற்படும் ஐந்து பாடசாலை நூலகங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. புத்தகங்கள், சஞ்சிகைகள், சுவரொட்டிகள், துண்டுப்பிசுரங்கள் போன்ற நூலக சாதனங்களும் ஏனைய சாதனங்களும் அவற்றுக்கு இடையில் விநியோகிக்கப்பட்டன.

### 13.3.20 பிராந்தியஅலுவலகத்தின்சு.மு.நி தரவுத்தளம் பேணுகைக்காக 9 கணனிகள் கொள்வனவு

ஒன்பது கணனிகள் சு.மு.நி தரவுத்தளத்தை பேணும் வகையில் ஓன்பது பிராந்திய அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டன

### 13.3.21 சபாதிபதி பதக்கங்களை வென்ற சிறந்த செயற்திறன் கொண்டோருக்கு வெளிநாட்டு பயணம் மற்றும்பயிற்சி

ஐந்து வருட செயற்திட்டத்திற்கு இணங்க,சுற்றாடல் முன்னோடி சனாதிபதி பதக்கம் வென்றோர், அவ்வெற்றிக்கு பொறுப்பாக இருந்த பொறுப்பாசிரியர்கள், கல்வி அமைச்சின் உத்தியோகத்தர்கள் மற்றும் சு.மு.நி திட்டத்திட்டத்தை நடைமுறையாக்கும் ம.சு.அ உத்தியோகத்தர்கள் ஆகியோரை வெளிநாட்டு விஜயத்திற்கு உட்படுத்தி அவர்களின் அறிவை மேம்படுத்தி அந்த நாடுகளில் சுற்றாடல் பேணுகை மற்றும் விழப்புணர்வு நடவடிக்கைகள் பற்றி கற்றுக்கொண்டு நாடு திரும்பியதும் அவர்களிடம் இருந்து சிறந்த சேவையை நாட்டிற்கு பெற்றுக்கொள்ளும் நோக்கில் இந்தியாவுக்கான குறுகிய கற்கை விஜயமொன்று ஒழுங்கமைப்பட்டுள்ளது.

2015ஆம் ஆண்டில் கல்வி அமைச்சில் இருந்து ஒரு உத்தியோகத்தர்,சு.மு.ந திட்டத்தைச் சேர்ந்த 4 பொறுப்பாசிரியர்கள், மாகாண மற்றும் மாவட்ட அலுவலகங்களில் இருந்து 5 உத்தியோகத்தர்கள், ம.சு.அ தலைமை அலுவலகத்தில் இருந்து 4 உத்தியோகத்தர்கள் மற்றும்16 சனாதிபதி பதக்கம் வென்றவர்கள் ஆகியோர் 2015 நவம்பர் 28 முதல் 2015 டிசம்பர் 04 வரை சுற்றாடல் மற்றும் விஞ்ஞாநிலையம், புதுடில்லி, இந்தியாவில் இடம்பெற்ற இந்த கற்கை விஜயத்தில் பங்குபற்றினர்.







TREASURY FUNDED SPECIAL PROJECTS IMPLEMENTED BY THE CEA

### 13.3.22. தேசிய வழிநடத்தல் குழு

சுற்றாடல் பற்றிய கல்வி மற்றும்விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் ஆகியவற்றை பாடசாலை மாணவர்கள் மத்தியில் விரிவுபடுத்தல் செயற்பாட்டில் சு.மு.நி திட்டமானது குறிப்பிடத்தக்க வெற்றியை அடைந்திருப்பினும் சில நிறுவன மற்றும் தாபன பிரச்சினைகள் காரணமாக அதன் உச்ச பயனை அடைய முடியாதுள்ளது என்பதை சு.மு.நி தாக்கத்தை மதிப்பீடு செய்யும் நோக்கில் 2014 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சுயாதீன மதிப்பீடொன்றானது அவதானித்துள்ளது. ஆகையால், முன்னோடி நிகழ்ச்சித் திட்டத்தை நெறிப்படுத்தம் வகையில் சு.மு.நி வழிநடத்தல் குழுவொன்றை தாபிப்பதற்குமாறு பரிந்துரைசெய்துள்ளது. 2015 ஆம் ஆண்டில் தேசிய வழிநடத்தல் குழுக்கூட்டம் ஒன்றும் உபகுழுக்கூட்டம் ஒன்றும் இடம்பெற்றன

**13.4.இலங்கையில் ம.சு.அ ஆய்வுகூடங்களை வலுப்படுத்தலும் கண்காணிப்பு திறனை மேம்படுத்தலும்**

2014ஆம் ஆண்டில், வடக்கு, வட-மேற்கு, வட-மத்திய, ஊவா, சபரகமுவ மற்றும் தென் மாகாணங்களில் ஆறு மாகாண ஆய்வுகூடங்களையும் கம்பஹ மாவட்டத்தில் ஒரு ஆய்வுகூடத்ததையும் தாபிப்பதற்கு ம.சு.அ திட்டமிட்டு இருந்தது. அ.சு.அ சபையால் அந்தஆய்வுகூடங்களுக்கு அவசியமான சில ஆய்வுகூட உபகரணங்கள், கண்ணாடிப் பொருட்கள் மற்றும் இரசாயணப் பொருட்கள் அகியவற்றை கொள்வனவு செய்வதற்கும் முடிந்தது. 2014ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்படாத பல ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் அவசியமான நுகர்வுப் பொருட்கள் ஆகியவற்றை 2015 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யவும் திட்டமிடப்பட்டது. 2015 ஆம் ஆண்டில் ஆய்வுகூடத்தின்பணியை ஆரம்பிக்கவும் இயலுமாகியது.

2015ஆம் ஆண்டில் ம.சு.அ சபையை வலுவூட்டவென 30 மில்லியபன் ஒதுக்கப்பட்டு இருந்தது. 2014ஆம் ஆண்டில் முடிவடைந்த கொள்வனவுக்காகரூபா 7.0 மில்லியன் செலவளிக்க வேண்டியிருந்தது. ஆய்வுகூட உபகரணங்கள் கொள்வனவுகளுக்காக செலவளிக்கப்பட்ட மொத்த செலவினமானது கிட்டத்தட்ட ரூபா 17 மில்லியன் ஆகும். கண்ணாடி மற்றும் இரசாயணப் பொருட்கள் கொள்வனவுக்காகவும் ஏனைய அனைத்து ஆய்வுகூடங்களின் உட்கட்டமைப்பு தேவைகளுக்கு அனுசரணை வழங்க கிட்டத்தட்ட ரூபா 4 மில்லியன் செலவழிக்க நேரிட்டது.

தாபிக்கப்பட்ட ஆய்வுகூடங்களால் பகுப்பாய்வு பணியை ஆரம்பிக்கவும் படிப்படியாக ஒழுங்கமைப்பு பணியை அதிகரிக்கவும் முடிந்தது. சபரகமுவ மாகாண ஆய்வுகூடத்தின் ஆய்வுகூட பணியை பணியாள் பற்றாக்குறையால் ஆரம்பிக்க முடியாத நிலை ஏற்பட்டதுடன் கம்பஹ மாவட்ட ஆய்வுகூடமானது ஒழுங்கான அமைவிடமொன்று இல்லாத காரணத்தினால் தாபிக்க முடியாத நிலை ஏற்பட்டது. இது தொம்பே கிரீன் பார்க்கில் 2016 ஆம் ஆண்டில் ஆரம்ப்பிக்கப்படும்

அட்டவணை13.22: 2015ஆம் ஆண்டில் மாகாண ஆய்வுக்கூடத்தால் மேற்கொள்ளப்பட்ட நீர் தரம் பற்றிய கண்காணிப்பின் முன்னேற்றம்

| மாகாண ஆய்வுகூடம் | சு.பா.உ | புகார் | வர்த்தகம் | சட்டம் | கண்காணிப்பு | ஏனைய | ஈட்டிய வருமானம் ரூபா |
|---|---|---|---|---|---|---|---|
| மத்திய ஆய்வுகூடம் | 181 | 123 | 127 | 51 | 128 | 395 | |
| தென் | 41 | 07 | 39 | - | - | - | 2,46,885.10 |
| வட | - | 01 | 73 | | 40 | | 388,054.89 |
| கிழக்கு | 4 | 6 | 78 | 1 | - | - | 420,965.34 |
| வடமேற்கு | 21 | 2 | 12 | 0 | 0 | 1 | 213,992.20 |
| வட மத்திய | 62 | - | 07 | - | - | - | 407,037.80 |
| ஊவா மாகாணம் | - | - | 49 | - | 19 | - | 354,933.46 |
| மத்திய | 176** | 1 | 6 | 2 | 77 | | 1,076,732.40 |

| **மாகாண ஆய்வுகூடம்** | **சு.பா.உ** | **புகார்** | **வர்த்தகம்** | **சட்டம்** | **கண்காணிப்பு** | **ஏனைய** | **ஈட்டிய வருமானம் ரூபா** |
|---|---|---|---|---|---|---|---|
| மானாணம் | | | | | | | |

** சு.பா.உ திற்காக பரிசோதணைக்கு எடுக்கப்பட்ட எல்லா மாதிரிகளும் மத்திய மாகாண ஆய்வுகூடத்தில் வர்த்தக அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன.

**13.4.1**மேற்பரப்பு நீர் தரத்தின் கண்காணிப்பு

பல நீர் தரம் கண்காணிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவை மஹஓயா மற்றும் பென்தொட ஆறு ஆகியவற்றை உள்ளடக்குகின்றது.2015ஆம் ஆண்டில் இந்த கருத்திட்டத்தின் கீழ் மேற்பரப்பு நீரின் பௌதீக, இரசாயண நுண்ணுயிரியல் அளவுருக்கல் முன்னரே தேர்ந்தெடுக்கப்பட்ட மாதரி அமைவிடங்களில் இருந்து வழமைப்போல் கண்காணிக்கப்பட்டன.

அட்டவணை13.23:மேற்பரப்பு நீர் தரத்தின் கண்காணிப்பு

| நீர் நிலையின் பெயர் | 2015ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை |
|---|---|
| மாஓயா | 74 |
| தடுகம்ஓயா | 71 |
| பென்தொட | 70 |

**13.4.1.12015ஆம் ஆண்டில் மாஓயா நீரின் தரம்**

. மாஓயாவின் நீர் தரத்தை மதிப்பீட்டுக்கு உட்படுத்தும் வகையில்2015 சனவரி முதல் டிசம்பர் வரையில் எட்டு மாதரி அமைவிடங்கள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன. மோசமான காலநிலை காரணங்களால்(வெள்ளம்) மாதரி எடுத்தல் செயற்பாட்டை 2015 சனவரி முதல் டிசம்பர் வரையில் மேற்கொள்ள முடியவில்லை.

அட்டவணை13.24:மாதிரி அமைவிடங்களின் உளகலாவிய நிலைப்படுத்தல் அமைப்பு(உ.நி.அ)ஆள்கூறுகள்

| **மாதிரி அமைவிடங்கள்** | உ.நி.அஆள்கூறுகள்**:** |
|---|---|
| கொச்சிகடை பாலம் | (79 51 51 E, 7 16 14 N) |
| படல்கமபாலம் | (80 11 39 E, 7 18 07 N) |
| கொடதெனியாவ பாலம் | (80 03 41 E, 7 17 07 N) |
| கிரியுள்ள பாலம் | (80 07 23 E, 7 19 45 N) |
| அலவ்வ பாலம் | (80 14 26 E, 7 17 34 N) |
| கரடாண பாலம் | (80 18 55 E, 7 19 17 N) |
| ஹிரிவடுன பாலம் | ( 80 23 04 E, 7 17 17 N) |
| மாவனெல்ல பாலம் | ( 80 26 20 E, 7 15 10 N) |

2015ஆம் ஆண்டின் போது மாஓயாவின் நீர் தரமானது உத்தேச சூற்றுச்சூழல் நீர்த்தர நியமங்களின் பௌதீக, இரசாயண மற்றும் நுண்ணுயிரியல் அளவுருக்களின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டது.

**13.4.1.2 தடுகம்ஓயா நீரின் தரம்**

தடுகம் ஓயாவின் நீர்த்தரத்தை மதிப்பீடு செய்யும் வகையில் சனவரி முதல் டிசம்பர் வரையில் ஆறு மாதிரி சேகரிப்பு அமைவிடங்கள் தேர்ந்தெடுக்கப்டுள்ளது. சில நீர்த்தர அளவுருக்களின் வேறுபாடு பற்றிய வரைபட விளக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை13.25:தடுகம்ஓயா மாதரியெடுத்தல் அமைவிடத்தின் உளகலாவிய நிலைப்படுத்தல் அமைப்பு (GPS) ஆள்கூறுகள்

| மாதரி எடுத்தல் இடம் | GPS ஆள்கூறுகள்: |
|---|---|
| மாதரியெடுப்பு நிலை.1 (கிரின்திவிட பாலம்) | (44386380E, 0784148N) |
| மாதரியெடுப்பு நிலை.2(கொடுகொட பாலம்) | (44381229E, 0787535N) |
| மாதரியெடுப்பு நிலை.3 (ஓபத்த பாலம்) | (44380612E, 0789277N) |
| மாதரியெடுப்பு நிலை.4 (முத்துவாடியா பாலம்) | (44377962E, 0791871N) |
| மாதரியெடுப்பு நிலை.5 (பல்லிய சந்தி பாலம்) | (44377454E, 0788598N) |
| மாதரியெடுப்பு நிலை.6(கின்டிகொட பாலம்) | (44376592E, 0786017N) |




உரு13.3:தடுகம்ஓயா மாதிரியெடுத்தல் அமைவிடங்களின் படம்

நீரோட்டத்தின் எதிர்த்திசையிலிருந்து நீரோட்டத்தின் திசை வரையுள்ள நீரின் தரமானது தரம்குறைந்து செல்லும் போக்கானது இடப்பெயர்சியாகின்ற முறை தடுகம் ஓயாவில் பதிவு செய்யப்பட்டுள்ளது. தடுகம் ஓயாவின் நீர்த்தரமானது 2015 ஆம் ஆண்டில் அளவிடப்பட்ட பல அளவுருக்களுக்கு அமைய திருப்திகரமாக இல்லையென்பது வெளிப்படுத்தப்பட்டது.

சில நீர்த்தர அளவுருக்களின் வேறுபாடு பற்றிய வரைபட விளக்கம் கீழே தரப்பட்டுள்ளது.




உரு13.4:தடுகம் ஓயா நீரின் pH வேறுபாடு




உரு13.5:தடுகம் ஓயா நீரின் EC வேறுபாடு




உரு13.6:தடுகம் ஓயா நீரின் கரைந்துள்ள ஒட்சிசன் வேறுபாடு




உரு13.7:தடுகம் ஓயா நீரின் COD வேறுபாடு




உரு13.8:தடுகம் ஓயா நீரின் குளோரைட்வேறுபாடு




உரு13.9:தடுகம் ஓயா நீரின் நைத்திரேட்வேறுபாடு

### 13.4.1.3பென்தொட ஆற்று நீரின் தரம்

2015ஆம் ஆண்டில்பென்தொட ஆற்று நீரின் தரமானது பௌதீக, இரசாயண மற்றும் நுண்ணுயிரியல் அளவுருக்களின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டது. இந்த கண்காணிப்பானது முன்னரே தெரிவுசெய்யப்பட்ட ஆறு மாதிரியெடுத்தல் அமைவிடங்களில் மாதாந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது

மாதிரி சேகரிப்பின் வேளையில் pH மின் கடத்துத்திறன், கலங்கல் தன்மை மற்றும் வெப்பநிலை என்பன அளவிடப்பட்டன. பென்தொட ஆற்றின் வழியில் அமைந்திருந்த அனைத்து தெரிவுசெய்யப்பட்ட அமைவிடங்களில் இருந்து சேகரிக்கப்பட்ட நீரில் காணப்பட்ட நுண்ணுயிரியல் மாசு அந்நீரானது கழிவுநீரால் மிகவும் அசுத்தம் அடைந்திருந்ததை காட்டியது. அதனை வருடம் முழுவதும் அவதானிக்கக் கூடியதாகவும் இருந்தது. ஒப்பீட்டளவில்ஏனைய நீர் நிலைகள் இரசாயண மாசுபடுத்திகளால் பெரிதும் அசுத்தம் அடைந்திருக்கவில்லை, ஆயினும் வீட்டு மற்றும் நகர கழிவுகளை மாத்திரம் கொண்டிருந்தன.




உரு13.10: 2014ஆண்டில்pH மற்றும் ECவேறுபாடு

2014 ஆண்டில் தெரிவுசெய்யப்பட்ட அமைவிடங்களின் நீரின் pHபெறுமதியானது கருதப்பட்ட சுற்றுச்சூழல் நீர்த்தர நியமங்களின் உயர் மட்டங்களில் இருந்து பெப்பரவரி மாதத்தில் விலகிச் செல்லதில்லை. மின் கடத்தும் திறனானது குறிப்பிடத்தக்க மாற்றத்தை காட்டுவதில்லை. ஒரு அமைவிடத்தில் மாத்திரம் உயர் பெறுமதியான மின் கடத்துத்திறன் அறிக்கையிடப்பட்டது.




**உரு13.11: 2014ஆம் ஆண்டில் கலங்கல் நிலை மற்றும் கரைந்துள்ள ஒட்சிசன்**

அனைத்து அமைவிடங்களிலும் நீரின் கலங்கல் நிலையானது எப்போதும் உயர்வாகவும் கருதப்பட்ட சுற்றுச்சூழல் நீர்த்தரத்தின் நியமங்களை விட எப்போதும் அதிகரித்தும் காணப்படுகின்றது. ஏனைய நீர் நிலைகளுடன் ஒப்பிடுகையில் கலங்கல் நிலை தொடர்பில் அறிக்கையிடப்பட்ட பெறுமதியானது பெப்ரவரி மாதத்தில் கருதப்பட்ட சுற்றுச்சூழல் நீர்த்தர நியமங்களையும் விட ஒரு அமைவிடத்தைத் தவிர மற்றெல்லா அமைவிடங்களிலும் குறைவாக அறிக்கையிடப்பட்டது. ஏனைய பெறுமதிகள் ம.சு.அ ஆய்வுகூடத்தால் கண்காணிக்கப்பட்ட வற்றாத நீர் நிலைகளுடன் ஒப்பிடுகையில் அவ்வளவு உயர்வாக காணப்படவில்லை.

நீர் நிலையின் சுகாதார நிலையை அதில் கரைந்துள்ள ஒட்சிசனின் மட்டமானது குறிப்பிடுகின்றது. அது உயர்வாக காணப்பட்டால் நீரின் தரமானது சிறந்தது. பென்தொட ஆற்றின் ஒட்சிசன் மட்டமானது ம.சு.அ யால் கண்காணிக்கப்பட்ட ஏனைய வற்றாத நீர் நிலைகளுடன் ஒப்பீட்டளவில் குறைவாக உள்ளது. மே மாதத்தில் மேற்படி நிலையானது நியம பெறுமதியைவிட குறைவாக உள்ளது. அதேவேளையில் பருவகால மேறுபாடுகளை அவதானிக்க முடிகின்றதுடன் அவ்வப்போது இந்நிலை மாறக்கூடியதாகவும் உள்ளது.




உரு13.12:2014ஆம் ஆண்டில் COD மற்றும் BOD வேறுபாடு

பென்தொட ஆற்று நீரின் இரசாயண ஒட்சிசன் மாறுபாட்டின் கேள்வியானது பல்வேறு அமைவிடங்களில் சிக் செக் வடிவமொன்றை காட்டுகின்றது. சில தருனங்களில் உயர் மட்டத்தில் (வகை.3 (குடிநீர்) மற்றும் வகை.4 (குளித்தல்) இருந்து விலகிச் செல்லுதலைஒட்டு மொத்த கண்காணிப்புகாலத்திலும் அவதானிக்க முடிந்தது. அநேகமான வேளைகளில் பெறுமதிகள் கருதப்பட்ட சுற்றுச்சூழல் நீர்த்தரத்தின் நியமங்களைவிடவும் (வகை.3 குடிநீர்) குறைவாக காணப்பட்டது. ஒரு சில தருனங்களில் மாத்திரம் கருதப்பட்டசுற்றுச்சூழல் நீர்த்தரத்தின் நியமங்களின் உயர்ந்த மட்டத்தைவிடவும் பெறுமதிகள் உயர்வாக காணப்பட்டன.

## 13.5இலங்கையில் திண்ம கழிவு அகற்றல் வசதிகள் நிர்மாணம் கருத்திட்டம் (EDCF கருத்திட்டம்)

### 13.5.1 அறிமுகம்

#### 13.5.1.1 மேலோட்டப் பார்வை

பல்வேறு சுற்றாடல் மற்றும் சுகாதாரப் பிரச்சினைகளுக்கு காரணமாய் அமைந்துள்ள தற்போதைய முறையற்ற நகராட்சிதிண்மக் கழிவு அகற்றல் முறைமைக்கு பரிகாரம் காணும் வகையில் விஞ்ஞான ரீதியில் நிரூபிக்கப்பட்டதும் சுகாதார சீர்கேடற்றதுமான கழிவுப் பொருட்கள் அகற்றும் அமைவிடங்கள் பலவற்றை ஒன்றிணைந்த கழிவுப் பொருள் முகாமைத்துவத்துவ தீர்வுகளாக நிர்மாணிப்பதற்கு ம.சு.அ திட்டமிட்டுள்ளது

இலங்கை அரசாங்கத்தினால் குறித்துரைக்கப்பட்ட பல்வேறு வழிமுறைகளைப் பின்பற்றியதன் பின்னர், இலங்கையில் தெரிவு செய்யப்பட்ட நகரங்களில் 04 சுகாதார சீர்கேடற்ற கழிவுப் பொருட்கள் அகற்றப்படும் அமைவிடங்களை நிர்மாணிக்கும் நோக்கில் மத்திய சுற்றாடல் அதிகார சபையானது ஏற்றுமதி அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதி கடன் வசதியின் (EDFC) கீழ் கொரிய அரசாங்கத்தின் ஏற்றுமதி-இறக்குமதி (Eximbank) வங்கி இடமிருந்துநிதி உதவியை பெற்றுத்தருமாறு திறைசேரிக்கு கோரிக்கை விடுத்தது. மேற்படி சுதார முறையிலான கழிவு அகற்றல் அமைவிடங்கள் அநுராதபுரத்தில் அமைந்துள்ள கீரிகுக்குலம, கிக்கடுவயில் அமைந்துள்ள மொன்ரோவியாவத்த, பாணந்துறையில் அமைந்துள்ள பல்முல்ல, உடுநுவரவில் அமைந்துள்ள கோணாடிகாவத்த ஆகிய இடங்களில் நிர்மாணிக்கப்படும். இறுதியில் இவை சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி அதிகாரசபை பிரதேசங்களில் தோற்றுவிக்கப்படும் எஞ்சிய கழிவுகளை அகற்றும் பொதுவான கொத்தனி கழிவு அகற்றல் அமைவிடமாக செயற்படும்.

இக்கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த செலவு அமெரிக்க டொலர் 41.886 மில்லியனாகும். இத்தொகையில் 33.536 மில்லியன் அமெரிக்கடொலர்EDCF இலிருந்து பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்கப்படுகின்றது. எஞ்சிய 8.350 மில்லியன் அமெரிக்க டொலர் இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படும். EDCF கடன்களுக்கு பிரயோகிக்கக்கூடிய நியமங்களும் நிபந்தனைகளும் உதவி பெறும் நாடுகளின் பிரிவுகள் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றன.

#### 13.5.1.2 கருத்திட்டத்தின் நோக்கெல்லை

- 04 அமைவிடங்களிலும் ஒவ்வொரு சுகாதார சீர்கேடற்ற கழிவு அகற்றல் அமைவிடங்களை வடிவமைத்து நிர்மாணித்தல்:
  - உடுகண்ணாவ, மெதிரிகிரியா
  - கீரிகுளம, அனுராதபுரம்
  - கீரிமலை, யாழ்ப்பாணம்
  - மொனோரியாவத்தை, ஹிக்கடுவை
- கழிவு நீர் முகாமைத்துவ முறைமைக்கான திட்டங்களைதாபித்தல்
- கழிவகற்றல் அமைவிடத்தில் இருந்து வெளியேறும் வாயுவை முகாமைத்தவம் செய்வதற்கான திட்டங்கள் தாபித்தல்
- கழிவுகளை மதிபீடு செய்தல்
- தாபித்தலகழிவு அகற்றல் முறைமை மதிப்பீடு மற்றும் திறன்/பரிமாணங்கள் வசதிகள்

எதிர்பார்க்கப்படும் நன்மைகள் மற்றும் விளைவுகள்

இந்த கருத்திட்டத்தின் திண்மக் கழிவு முகாமைத்துவ வசதிகளின் மூலம் சம்பந்தப்பட்ட நகரங்களைத் தூய்மையாக

வைத்திருப்பதற்குரிய உட்கட்டமைப்பு வசதியை இலங்கையில் கட்டியெழுப்ப முடிகின்றது. இந்த கருத்திட்டமானது நிறைவேற்றப்படுவதன் ஊடாக தேசிய அபிப்பிராயம், தொழில் வாய்ப்புக்கள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி ஆகிவை ஊக்குவிக்கப்படும். இந்த கருத்திட்டமானது முறையாக கழிவுகளை அகற்றி, மாநகர திண்மக் கழிவுகளை முகாமைத்துவம் செய்வதன் மூலம் சிறப்பான பொதுச் சுகாதாரம் மற்றும் உடல் நலம ஆகியவற்றை உறுதிசெய்வதுடன் அதனூடாக நோய்கள் ஏற்படுதலை குறைத்து வருமானத்தை சேமிக்கவும் வழிசமைக்கின்றது.

இறுதியாக கருத்திட்டத்தின் எதிர்பார்பாக உள்ளது யாதெனில்:

- கருத்திட்டப் பகுதியைச் சூழவுள்ள சுற்றாடல் நிலைமையை மேம்படுத்துதல்
- பிரதேச வாழ் மக்களின் பொதுச் சுகாதாரம், உடல் நலம் ஆகியவற்றை அதிகரித்தல்
- கழிவு நீர் பரிகரித்தல் முறைகளின் சுகாதார நிலைமையை மேம்படுத்துதல்
- மண், நீர் மற்றும் காற்று மாசடைதலைக் குறைத்தல், ஏனைய சுற்றாடல், சமூக-பொருளாதார பிரச்சினைகை குறைத்தல்.
- ஒன்றிணைந்த திண்மக் கழிவு பரிகரிப்பு வசதிக்கான செயற்பாடுகளில் தொழில்நுட்ப அறிவைப் பிரயோகித்தல்

இக்கருத்திட்ட அமுலாக்கத்தின் ஊடாக எதிர்பார்க்கப்படும் குறிப்பிடத்தக்க சுற்றாடல், தொழில்நுட்ப, சமூக பொருளாதார நன்மைகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன:

- சுற்றாடல் நன்மைகள்:
  - ○ மீள்சுழற்சி செய்யக்கூடிய மூலவளங்களின் பாவணையை அதிகரித்தல்
  - ○ சுகாதார முறையில் பரிகரிக்கும் முறையினூடாக பிரதேச வாழ் மக்களுக்கு இன்பகரமான வாழ்க்கைச் சூழலை வழங்குதல்
  - ○ சுகாதார முறையில் பரிகரிக்கும் முறையினூடாக பிரதேச வாழ் மக்களின் பொதுச் சுகாதார நிபந்தனைகளுக்கு உதவியளித்து பங்களிப்புச் செய்தல்
  - ○ விஞ்ஞான ரீதியான சுத்திகரிப்பு செயன்முறையைப் பின்பற்றுவதன் மூலம் இரண்டாம் தர சுற்றாடல் பிரச்சினைகளை குறைந்து முறையான நிலத்தோற்ற அழகுகூட்டு முயற்சிக்கு வழிசமைத்தல்
  - ○ சீரற்ற மற்றும் அதிகாரமளிக்கப்படாத கழிவுகற்றல் முயைால் ஏற்படும் மாசடைதல் பிரச்சினைகளில் இருந்து ஆளுகைப் பிரதேசத்தைப் பாதுகாத்தல்
  - ○ சிவில் முறைப்பாடுகள் பற்றிய பல்வேறு பிரச்சினைகளைத் தடுத்தல்/ தீர்த்துவைத்தல் மூலம் சுற்றாடலைப் பாதுகாத்தல், பிரசைகளின் பொதுச் சுகாதாரத்தைப் பாதுகாத்தல்
  - ○ அரசாங்கத்தினது தேசிய காணிப் பயன்பாட்டுத் திட்டத்தில் உள்ளவாறுகளியாட்ட நடவடிக்கைகள், ஓய்வெடுத்தல் ஆகியவற்றுக்கென போதியளவு இடவசதியை ஏற்படுத்திக் கெடுத்தலை உறுதி செய்தல்
- தொழில்நுட்ப நன்மைகள்:
  - ○ விரிவான முகாமைத்துவத்தினூடாக நம்பத்தகு மற்றும் சிக்கனமான கழிவு முகாமைத்துவ முறையை ஏற்படுத்துதல்
  - ○ நீண்டகால அடிப்படையில் சுகாதார முறையிலமைந்த கழிவுப் பொருள் அகற்றுகை.
  - ○ கழிவுப் பொருள் இடப்படும் பகுதியின் நடவடிக்கைகள் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றில் தொழில்நுட்ப அறிவு அதிகரித்தல்

- ○ கழிவு நீர் சுத்திகரிப்பு மற்றும் முகாமைத்துவ தொழில்நுட்பத்தை அதிகரித்தல்

- பொருளாதார நன்மைகள:
  - ○ யதார்த்தமான நிலப் பயன்பாடு
  - ○ பிரதேச வாழ் மக்களுக்கான கழிவுப் பொருள் சுத்திகரிப்பு செலவைக் குறைத்தல்
  - ○ நிர்மாணித்தல், இயக்கச் செயற்பாடுகள் பற்றிய பணிகள் தொடர்பான வேலை வாய்ப்புகளை அதிகரித்தல்
  - ○ கழிவு அகற்றல் அமைவிடங்கள் மேம்பாட்டு பணியின் ஊடாக சுற்றாடல் பற்றிய பிரசைகளின் விழிப்புணர்வை மேம்படுத்தல்
  - ○ சூழவுள்ள சுற்றாடல்-நேய வசதிகளுடன் இணக்கமான செயற்பாடுகளை தாபித்துக்கொள்வதன் ஊடாக பொருளாதார நன்மைகளைப் பெறல்

    வீட்டுக் கழிவுப் பொருட்களை முகாமைத்துவம் மற்றும் அகற்றுதல் தொடர்பான நடவடிக்கைகளில் செலவைக் குறைத்தல்
  - ○ மூலப் பொருட்களின் மீள் சுழற்சி மூலம் செலவினைத்திறனை ஏற்படுத்துதல

- சமூக நன்மைகள்:
  - ○ நம்பிக்கையுடைய சுகாதார ரீதியான கழிவுப்பொருள் பரிகரிப்பு வசதிகளை வழங்குதல்
  - ○ சூழவுள்ளநிபந்தனைகளுக்கு மிகப் பொருத்தமானதொரு கழிவுப்பொருள் இடப்படும் பகுதியை அமைப்பதன் மூலும் அபாயகரமான வசதிகளுக்கெதிரான அனுகூலமான மனப்பாங்கை அதிகரித்தல்
  - ○ சுற்றாடல் நேய எண்ணக்கருவின் பிரயோகத்தின் மூலம் சுற்றாடல் மற்றும் பிரயோசனமற்ற கழிவுப் பொருள் பற்றிய விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்துவதற்கு உதவுதல்
  - ○ கழிவுப் பொருள் சுத்திகரிப்பு வசதிகளை ஏற்படுத்துவதன் மூலம் கழிவுப் பொருள் அகற்றப்படும் நிலப் பகுதிக்கான இடப் பற்றாக்குறையை பிரச்சினையை தீர்த்து வைத்தல
    - ○ நீண்டகாலப் போக்கில் சுகாதார முறையிலான கழிவுப் பொருள் இடப்படும் பகுதியை ஏற்படுத்துதல்
    - ○ பிராந்திய அபிவிருத்திக்கு தொடர்ச்சியாக பங்களிப்புச் செய்தல்

**13.5.1.3 கருத்திட்ட அமைவிடங்கள்**




**உரு13.13**:கருத்திட்ட அமைவிடங்கள்

### 13.5.2 அனுராதபுரம் கீரத்திகுலம மற்றும் ஹிக்கடுவை மொன்ரோவியவத்தை

மேற்படி இரண்டு அமைவிடங்களின் கருத்தமைவு வடிவ அறிக்கைகள் கருத்திட்ட உத்தியோகத்தரால் கிடைக்கப்பெற்று அவை ஏனைய உள்ளூர் பங்குதார்ர்களின் முன்நிலையில தொழில்நுட்ப நிபுணத்துவ குழுவால் மதிப்பீடு செய்யப்பட்டன.









கருத்தமைவு வடிவ அறிக்கை மதிப்பீடு – கீரிகுலம 06.11.2015

கருத்தமைவு வடிவ அறிக்கை மதிப்பீடு – மொனோரியாவத்ததை 12.11.2015

தொழில் நுட்ப குழுவின் கருத்துக்கள் மற்றும் பரிந்துரைகளின் நிபந்தனைகளுக்கு அமைய விபரிக்கப்பட்ட வடிவத்தை தொடர்வதற்கான ஒப்புதல் 2015 நவம்பர் 17ஆம் திகதி வழங்கப்பட்டது..

### 13.5.3 மலமுல்லை, பானதுறை/பயாகல, பேருவளை

ஆலோசகர்கள்;பேருவளை பாணதுறையில் அமைந்துள்ள மலமுல்லை கருத்திட்ட அமைவிடமானது தொழில்நுட்ப மற்றும் சமூகவியல் பிரச்சினைகள் காரணமாக பொருத்தமற்றது என்பதை வரையறுக்கப்பட்டKunhwa பொறியியல்&ஆலோசனை கம்பனி ல கருத்திட்டத்திற்கு தெரிவித்துள்ளது. ஆகையால் நாம் இதற்கு மேலும் அனுசரணை வழங்கும் முகமாக பேருவலை பயாகலையில்அமைந்குள்ள புதிய அமைவிடமொன்றை இனங்கண்டோம்.

Kunhwaபுதிய பேருவலை, பயாகலையில் அமைந்துள்ள புதிய அமைவிடம் பற்றிய சாத்தியக்கூறு ஆய்வினை மேற்கொண்டு அவ்விடமானது பொருளாதார ரீதியில் சாத்தியமற்றது என்பதை கண்டுபிடித்தது. இருப்பினும். தற்போது மெகா போலிஸ்(பெருநகரங்கள்) மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி என்ற பெயரில் புதிய அமைச்சொன்று உருவாக்கப் பட்டுள்ளது. இதன் பின்னர் அனைத்து அபிவிருத்தி மற்றும் கழிவு முகாமைத்துவ செயற்பாடுகளும் மேற்படி புதிய அமைச்சின் கீழ் உள்ளடங்குமென மாகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். ஆகையால், மேல் மாகாணத்திற்கு வெளியில் பொருத்தமான அமைவிடத்தை இனங்காணுமாறு செயலாளர் அறிவிருத்தல் விடுத்துள்ளார்

### 13.5.4 மெதிரிகிகிரிய உடகன்னாவ (பயாகலவிற்கான மாற்று அமைவிடம்)

நேரம் மற்றும் காணிவரையறை மற்றும் கருத்திட்டத்தின் அளவு ஆகியவை காரணமாக வனத் திணைக்களத்திற்கு உரித்தானதும் பொலொன்னறுவை மாட்டத்தைத் சேர்ந்த உடகன்னாவ மெதிரிகிரியாவில்(சரளை குழி)

காணியொன்று இனங்காணப்பட்டது. ஆரம்ப கள ஆய்வானது ஆலோசகர்கள்:Kunhwa, சம்பந்தப்பட்ட மெதிரிகிரயா பிரதேச சபை அலுவலர்கள் மற்றும் வன அலுவலக அலுவலர்கள் ஆகியோரால் மேற்கொள்ளப்பட்டது. முன்மொழியப்பட்ட அமைவிடமானது பிலிசறு கருத்திட்டால் நிர்மாணிக்கப்பட்ட பசளையாக்கல் அமைவிடத்திற்கு அருகில் அமைந்துள்ளது. இந்த அமைவிடத்தின் அடிப்படை அம்சங்கள் சுகாதாரமான கழிவு அகற்றும் அமைவிடமொன்றைதாபிப்பதற்கு உகந்ததாக இருந்தன. இதனைத் தொடர்ந்து நாம் கருத்திட்டத்தை முன்னெடுப்பதற்கான விருப்பத்தை வனத் திணைக்களத்திடம் இருந்து பெற்றுக் கொண்டோம். இவ்விடத்திற்கான சாத்தியக்கூறு ஆய்வு ஆரம்பிக்கப்பட்டது. காணியை விடுவித்தக் கொள்ளவும் சுற்றாடல் பரிந்துரைகளை பெற்றுக்கொள்ளவும் சமாந்தரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.



**கோனாடிக்காவத்த, உடுன்நுவர**

வடிவமைப்பு கட்டத்தில்கோனாடிக்காவத்த, உடுன்நுவர அமைவிடமானது மண்சரிவு அபாயம் மிக்க வலயத்தில் அமைந்துள்ளதாக அவதானிக்கப்பட்டது. ஆகையால் மண் படமெடுத்தல் உட்பட விரிவான புவியியல் ஆய்வொன்றை மேற்கொள்ள வேண்டுமென்ற யோசனையை தேசிய கட்டடிடங்கள் ஆராட்சி தாபனம் (NBRO) முன்வைத்தது இச்செயற்பாடுகளை முடுவுக்கு கொண்டுவர கிட்டத்தட்ட 06 மாத காலம் எடுக்கும்.கருத்திட்டத்தின் நேர மற்றும் பாதீட்டுவரையறை ஆகியவற்றை பின்பற்ற வேண்டுமாயின் எல்லா அமைவிடங்களையும் சமாந்தரமாகவே நியைவேற்ற வேண்டியது அவசியமாகின்றது. ஆகையால் அதே அளவான மாற்று அமைவிடம் ஒன்றை இனங்காணுமாறு கருத்திட்டத்திற்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

### 13.5.5 கீரிமலை யாழ்ப்பாணம் (கோணடிகாவத்தைக்கு பதிலாக மாற்று அமைவிடம்)

யாழ்பாணத்தில் அவ்விதமான வசதியொன்றை தாபிக்க வேண்டிய அவசியத்தை வலியுறுதிய கோரிக்கையொன்று யாழ்பாண அலுவலகத்தினால் முன்வைக்கப்பட்டது. அந்த அமைவிடமானது வலிகாமம் வடக்கு பிரதேச சபை பிரதேசத்தின் கீரிமலையில் அமைந்துள்ளது. ஆரம்ப சாத்தியக்கூறு ஆய்வானது ஆலோசகர்கள்:Kunhwa, சம்பந்தப்பட்ட வலிகாமம் வடக்கு பிரதேச சபை அலுவலர்கள், ம.சு.அ யாழ்பான அலுவலக உத்தியோகத்தர்கள் ஆகியோரால்



மேற்கொள்ளப்பட்டது. மேலும்,யாழ்ப்பானம் பிரதேச செயலாளருடன் கூட்டமொன்று ஒழுங்கமைக்கப்பட்டு காணியை விடுவிப்பதற்கான ஆரம்ப கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது. உத்தேச காணியானது விடப்பட்ட சுண்ணாம்புக்கல் குழியொன்றில்

அமைந்திருந்ததுடன் அதன் அடிப்படை அம்சங்கள் சுகாதாரமான கழிவு அகற்றல் அமைவிடமொன்றை தாபிப்பதற்கு உகந்ததாக இருந்தது. ஆகையால், அந்த அமைவிடத்தை விடுவிப்பது தொடர்பில் சாத்தியக்கூறு ஆய்வும் அளவையும் ஆரம்பிக்கப்பட்டன.

மல்முல்லை அமைவிடத்தில் பொது மக்கள் ஆர்ப்பாட்டம்

### 13.5.6 விரிவான வடிவமைப்பு பற்றிய ஆலோசனை சேவை

விரிவான வடிவமைப்பு பற்றியஆலோசனை சேவையை பெற்றுக் கொள்ளும் வகையில் ஆர்வ வெளிப்பாட்டை(EOIs) கோரி விடுக்கப்பட்ட அழைப்பானது 2012 ஆம் ஆண்டில் முடிவடைந்தது. ஆர்வ வெளிப்பாட்டை தெரிவித்த 07 கொரிய கம்பனிகளில் 03 கம்பனிகள் தேர்ந்தெடுக்கப்பட்டன. தேர்ந்தெடுக்கப்பட்ட கம்பனிகளுக்கு எக்ஸ்ஸிம்(EximBank) வங்கி ஒப்புதல் அளித்தது.

கொள்வனவை மேற்கொள்வது தொடர்பில் முக்மொழிகளை(RFP) கோரல் பொது திறைசேரியின் வெளிவள திணைக்களத்தின் ஆலோசனையுடன் அமைச்சரவை நியமித்த ஆலோசகர்கள் கொள்வனவு குழுவால் இறுதியாக்கப்பட்டது.மத்திய மாகாண வர்த்தக பேரவை தலைவரின் பரிந்துரைக்கு அமையகொள்வனவை மேற்கொள்வது தொடர்பில் முக்மொழிகளை(RFP) கோரல் விடயத்தில் மதிப்பீட்டு நியமங்களை விருத்தி செய்வதில்மத்திய மாகாண வர்த்தக(CPCC)பேரவைக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையிலும் ஆலோசனை கம்பனிகளால் சமர்ப்பிக்கப்படும் தொழில்நுட்ப/நிதி முன்மொழிவுகள் பற்றிய மதிப்பீட்டை நிறைவேற்றவும்பொது திறைசேரியின் அரசநிதி திணைக்களத்தால் தொழில்நுட்ப குழு நியமிக்கப்பட்டது.

இறுதி கொள்வனவுக்கான (RFP) முன்மொழிவு ஆவணங்கள் தொடர்பில் கொரிய எக்ஸ்ஸிம் வங்கியின் இணக்கப்பாட்டுடன் தெரிவு செய்யப்பட்டுள்ள மூன்று கம்பனிகளிடம் இருந்தும் கொள்வனவு முன்மொழிவு ஆசணங்கள் கோரப்பட்டது. அவர்களின் விலை மனுக்கள் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதியானது 2013 செப்டெம்பர் 18 ஆகும்.

திண்மக்கழிவு அகற்றல் வசதி நிர்மாணக்கருத்திட்டம் தொடர்பில் கொரியாவின் நாணயமான கொரிய வன்(Korean Won) தொகையொன்றில் முப்பத்து மூன்று மில்லியன் ஐநூற்று முப்பத்தாறு அமெரிக்க டொலருக்கு (US $ 33,536,000) மேற்படாதவாறு கடன் பெற்றுக்கொள்ளும் ஏற்பாடு ஒன்றுக்கான உடன்படிக்கை கைச்சாத்திடல் நிகழ்வு நிதித் திட்டமிடல் அமைச்சில் 2013 யூலை 23 ஆம் திகதி இடம்பெற்றது. ஏற்றுமதி அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியத்தின்(EDCF)நிறைவேற்று பணிப்பாளரான திரு.Seong-Hyeog Yimமற்றும் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் செயலாளரான கலாநிதி பீ.பி. ஜயசுன்தர ஆகியோர் முறையே கொரிய ஏற்றுமதி-இறக்குமதி வங்கி மற்றும் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் உடன்படிக்கையில் கையொப்பம் இட்டனர். அதனைத் தொடர்ந்து கடன் உடன்படிக்கை 2013 நவம்பர் 19 ஆம் திகதியில் இருந்து அமுலுக்கு வருமென கொரிய எக்ஸிம் வங்கி குறிப்பிட்டது.

ஒப்பந்தத்தை வழங்கிதிண்மக் கழிவு வசதிகள் நிர்மாணம் பற்றிய ஆலோசனை சேவைகளை வரையறுக்கப்பட்டKunhwa பொறியியல் மற்றும் ஆலோசனை கம்பனியுடன் மொத்த தொகையான 2,844,156 /= அமெரிக்க மொலர்ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுதல் தொடர்பில் திண்மக்கழிவு அகற்றல் வசதிகள் நிர்மாணமத்திற்கான ஆலோசனை சேவைகள் பெறுவதற்கான அமைச்சரவை அங்கீகாரம் 2014 ஏப்பிரல் 23ஆம் திகதி வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து கொரியன் எக்ஸிம்

வங்கியின் இணக்கப்பாட்டுடன் 2014 ஏப்பிரல் 24ஆம் திகதி ஒப்பந்தம் வழங்கப்பட்டது.

இந்த ஒப்பந்தமானது வரையறுக்கப்பட்டKunhwa பொறியியல் மற்றும் ஆலோசனை கம்பனி மற்றும் சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு ஆகியவற்றுக்கு இடையில் 2014 ஏப்பிரல் 30 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டதுடன் ஒப்பந்தத்தை நிறைவேற்றுமாறு எக்ஸிம் வங்கிய்ன் ஒப்புதல் 2014 மே 23ஆம் திகதி பெறப்பட்டது. ஆலோசகர்களுடன் ஆரம்பக் கூட்டம் 2014 யூன் 2ஆம் திகதி இடம்பெற்று திண்மக்கழிவு அகற்றல் வசதிகளை நிர்மாணிப்பது தொடர்பில்ஆலோசனை சேவைகளை பொறுப்பேற்பதற்கான ஆலோசர்களின் ஒருங்கிணைப்பானது 2014 யூன் 30 ஆம் திகதி இடம்பெற்றது.

அவர்கள் நான்கு அமைவிடங்களுக்கான பூர்வாங்க விஜயங்களை மேற்கொண்டு ஆய்வினை நிறைவேற்றியுள்ளதுடன் பணியை 2014ஆம் ஆண்டில் ஆரம்பிப்பதற்கான முன்மொழிவையும் முன்வைத்துள்ளனர்.

இருப்பினும், ஒப்பந்தத்திற்கு இணங்க ஆலோசனை சேவைகளை நிறைவேற்றுவதற்கு ஆலோசகர்களால் முடியவில்லை என்பதுடன் பின்வரும் ஒப்பந்த பின்னடைவுகள் அவதானிக்கப்பட்டன;

அ. முக்கிய நிபுனர்களை ஒன்று திரட்டல் (உள்ளூர் மற்றும் வெளிநாடு)

அவர்கள் ஒப்பந்தத்திற்கு இணங்க முக்கிய நிபுணர்களை திரட்டவில்லை. இவ்விடயமானது ஒவ்வொரு முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களிலும் கருத்திட்ட வழிநடத்தல் குழுக் கூட்டங்களிலும் கலந்துரையாடப்படுகின்றது.ஆயினும்,Kunhwa ஆலோசகர்களால் இப்பிரச்சினை முறையாக கையாளப்படவில்லை.

மேலும், அவர்கள் ஒப்பந்தத்தில் குறித்துரைக்கப்படாத உப-ஆலோசகர்களின் சேவையை ம.சு.அ யின் முன்-அங் கீகாரமின்றி பெற்றுள்ளனர்.

ஆ. சேவை வழங்கள் காலக்கெடுவுக்கு இணங்காமை

அவர்களால் கருத்துரு வடிவ அறிக்கையை உரிய காலத்திற்குள் சமர்ப்பிக்க முடியவில்லை. அவற்றின் குறைபாடுகள் காரணமாக பல முறை மீண்டும் மீண்டும் சமர்ப்பிக்க வேண்டியிருந்ததுடன் இறுதியாக 2015 யூன் 03ஆம் திகதியே அதனை சமர்ப்பித்தனர்(உரிய தினம் 2014 செப்டெம்பர்)

முன்னேற்றம் பற்றிய கலந்துரையாடல் இடம்பெற்ற வேளைகளிலும் கருத்திட்டம் பற்றிய பிரச்சினைகள் எழுப்பட்ட வேளையிலும் Kunhwa ஆலோசகர்களால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளில் முன்மொழியப்பட்ட கருத்திட்ட அமைவிடங்கள் பற்றிய ஆயட்காலம் தொடர்பான நிலைத்தன்மையும் காணப்படவில்லை.

மேற்படி குறைபாடுகள் தொடர்பில் தொடர்ச்சியாக கருத்திட்ட வழிநடத்தல் குழுவில் கலந்துரையாடப்பட்டது. கருத்திட்ட வழிநடத்தல் குழுவால் வழங்கப்பட்ட அறிவுருத்தல்களுக்கு ஆலோசகர்களால் இணங்க முடியவில்லை.

இதன் விளைவாக,மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளர் இந்த நிலைமையை சீர்செய்வதற்கான “இறுதி சந்தர்ப்பத்தை” வழங்கியுள்ளார். இதற் கிணங்க 2015 ஒக்டோபர் 12ஆம் திகதி கூட்டமொன்று இடம்பெற்றதுடன் கூட்ட அறிக்கையொன்றும்மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளர், மத்திய சுற்றாடல் அதிகாரசபை தலைவர், எக்ஸிம் வங்கிவதிவிட பிரதிநிதி மற்றும் Kunhwa பொறியியல் மற்றும் ஆலோசனை கம்பனி உப-தலைவர் ஆகியோரால் கைச்தாத்திடப்பட்டது.

கருத்திட்டத்தின் முன்நோக்கிய பாதை தொதடர்பில் தீர்மானத்தை மேற்கொண்டு இணக்கத்திற்கு வரும் நோக்கில் பின்தொடர் கூட்டம் ஒன்று 2015 ஒக்டோபர் 26ஆம் திகதி இடம்பெற்றது.

கூட்டத்தின் போது திருத்தி அமைக்கப்பட்ட வேலைத்திட்டம் மற்றும் நிபுணத்துவ திரட்டல் திட்டமொன்று கீரிகுலம, அபுராதபுரம் மற்றும் மோன்ரோவியாவத்ததை, ஹிக்கடுவை ஆகிய இரண்டு கருத்திட்டங்களுக்கு வரையறைசெய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது. இரண்டு அமைவிடங்களின் பணியை ஆரம்பிக்க இணக்கம் ஏற்பட்டது.

அ. அசல் கருத்திட்டத்துடன்ஒப்பீட்டளவில் திருத்தி அமைக்கப்பட்ட திட்டத்தின் பிரதான அம்சங்கள்

அட்டவணை13.26: அசல் கருத்திட்டத்துடன்ஒப்பீட்டளவில் திருத்தி அமைக்கப்பட்ட திட்டத்தின் பிரதான அம்சங்கள்

| | **முடிக்கவேண்டிய பிரதான சேலைகள்** | **அசல்** | **திருத்தி அமைக்கப்பட்டது** |
|---|---|---|---|
| 01 | கருத்துவ வடிவம் அறிக்கை இறுதியாக்கம் | 30செப்டெம்பர் 2014 | 15நவம்பர் 2015 |
| 02 | வரைவு வடிவத்தை சமர்ப்பித்தல் | 30சனவரி 2015 | 15பெப்ரவரி 2016 |
| 03 | இறுதி வடிவத்தின் அறிக்கை | 30யூன் 2015 | 15மார்ச் 2016 |
| 04 | கொள்வனவு செயலாக்கம் | யூலை-செப்டெப்பர் 2015 | மார்ச்- யூன் 2016 |

ம.சு.அ யின் திருப்திக்கு இணங்க ஆலோசகர்களின் பணி அமைந்திருக்கும் பட்சத்தில் எஞ்சிய இரண்டு அமைவிடங்களின் பணியை 2016 ஆம் ஆண்டுசனவரியில் வடிவமைக்கும் பொறுப்பை வழங்குவது தொடர்பில் கருத்திட்ட வழிநடத்தல் குழு தீர்மானம் மேற்கொள்ளும்.

அ. புதியவொரு தொழில்நுட்ப நிபுணத்தவ குழுவை 03 தகுதிவாய்ந்த பொறியியலாளர்களை உள்ளடக்கி நியமிக்குமாறு கருத்திட்ட வழிநடத்தல் குழு ம.சு.அ க்கு ஆலோசனை வழங்கியது. அதற்கிணங்க மொக்ரோவயாவத்ததை அமைவிடம் மற்றும் கீரிக்குலம அமைவிடம் பற்றிய கருத்துரு வடிவ அறிக்கைகளை மதிப்பீடு செய்வதற்காக பின்வரும் உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர்.

TREASURY FUNDED SPECIAL PROJECTS IMPLEMENTED BY THE CEA

**தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் தலைவர்**

01. திரு. ஜே.எம்.யூ இந்திரத்ன,முகாமையாளர் திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு/SDF கருத்திட்டம்,பிரதி பணிப்பாளர் நாயகம்-ம.வ.அ/நிதி/நிர்வாகம், மத்திய சுற்றாடல் அதிகாரசபை

**உறுப்பினர்கள்**

02. பொறியியலாளர் ஏ.பி இலங்கசிங்ஹ, பணிப்பாளர்,தேசிய திண்மக் கழிவு முகாமைத்துவ உதவி நிலையம்--உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சு

03. திரு.பிரசாத்அமரசூரிய,பொறியியலாளர், உள்ளூராட்சி திணைக்களம்,தென் மாகாணம்--மொன்ரோவியவத்மை அமைவிடத்திற்கு மட்டும் சேவையாற்றுவார்

04. திரு ஜே.கே. அலஸ், பொறியியலாளர,உள்ளூராட்சி திணைக்களம்-வட மத்திய மாகாணம்- கீரிகுலம அமைவிடத்துக்கு மாத்திரம் பணியாற்றுவார்

**கருத்திட்ட பணியாளர்**

மிஸ். ருவனி தர்மசிறி கருத்திட்டப் பணிப்பாளர், SDF கருத்திட்டம், 2015 ஒக்டோபர் 07 ஆம் திகதியில் அலுவலகத்தில் இருந்து விலகியுள்ளார் என்பதுடன் 2015 டிசம்பர் 01ஆம் திகதி முதல் அவரின் கடமைகளை பொறுப்பேற்கும் வகையில் திருமதி சரோஜினி ஜயசேகர, பிரதி கருத்திட்டப் பணிப்பாளர், SDF கருத்திட்டம், நியமிக்கப்பட்டுள்ளார்.

அட்டவணை13.27: கருத்திட்டப் பணியாளர்

| | **பதவி** | **பெயர்** | **நியமனத்திகதி** | |
|---|---|---|---|---|
| 01 | கருத்திட்ட பணிப்பாளர் | மிஸ்.ருவனி தர்மசிறி | 2014.10.07 | 06.10.2015 |
| | | பதில் கடமை | 01.12.2015- | இன்று வரை |
| 02 | பிரதி கருத்திட்ட பணிப்பாளர் | திருமதி. சரோஜினி ஜயசேகர | 01.06.2012- | இன்று வரை |
| 03 | (பகுதி நேரம்)திட்டமிடல் வடிவமைப்பு முகாமையாளர் | திரு.ஜே.எம்.யூ. இந்திரரத்ன | 01.09.2012 | இன்று வரை |
| 04 | கொள்முதல் மற்றும் ஏற்பாட்டியல் முகைாமையாளர் | வெற்றிடமாகவுள்ளது | | |
| 05 | கருத்திட்ட கணக்காளர் | திரு.அனுருத்த கல்லொலுவ | 05.11.2012 | 31.01.2015 |
| | பதில் கடமை | திரு.டி.பீ.எஸ். பிரியதர்ஸனி | 16.02.2015 | 06.09.2015 |
| | | திரு. விமலவன்ச லியனஆராச்சி | 06.09.2015 | இன்று வரை |
| 06 | கருத்திட்ட உத்தியோகத்தர் | திரு.டி.டீ.என்.குணதிலக | 23.07.2014 | 11.05.2015 |

| | **பதவி** | **பெயர்** | **நியமனத்திகதி** | |
|---|---|---|---|---|
| | | திரு.கே.டபிள்யூ.குணவர்தன | 11.07.2014 | இன்று வரை |
| 07 | கருத்திட்ட பொறியியலாளர் | திரு.எச்.என.ஹிக்கடுவ | 27.10.2014 | 30.09.2015 |
| 07 | நிர்வாக உத்தியோகத்தர் | திருமதி.ஜீ.எம்.லியனகே | 17.03.2014- | இன்று வரை |
| 08 | கொள்வனவு உத்தியோகத்தர் | வெற்றிடமாகவுள்ளது | | |
| 09 | கணக்கியல் எழுதுவினைஞர் | மிஸ்.கே.எல்.ஏ.பிமானி வத்சலா | 03.12.2012 | இன்று வரை |
| 10 | பொது எழுதுவினைஞர் | திரு.எச்.எச.டி.சன்தருவன் | 01.08.2013 | இன்று வரை |
| 11 | அலுவலக உதவியாளர் | திரு.வை.ஜீ.என்.குணரத்ன | 14.11.2014 | இன்று வரை |

சட்ட உத்தியோகத்தர் மற்றும பிரதி முகாமையாளர்-சட்டம் ஆகிய பதிவிகளுக்குப் பதிலாக சட்ட ஆலோசகர் ஒருவர் 2015 மார்ச் 27 ஆம் திகதி முதல் பணிக்கு அமர்த்தப்பட்டு இன்று வரையில் பணியாற்றுகின்றார்

அட்டவணை13.28: நிதிசார் முன்னேற்றம்-ஆண்டு 2015

| **சுருக்கம்** | | | |
|---|---|---|---|
| வெளிநாட்டு பாகம் | 100,000,000.00 | | |
| சட்டப் பாகம் | 92,000,000 00 | 14,953,000.00 | 15,688,667.00 |
| **மொத்தம்** | 192,000,000.00 | 14,953,000.00 | 15,688,667.00 |

குறிப்பு: ஆலோசகர்களுக்கு செலுத்தப்பட்ட முற்பன கொடுப்பனவு தொகைUSD 568,831மற்றும் சேவை கட்டணம் USD 568.83.ஆகியவற்றைவெளிநாட்டுப் பாகம் பிரிதிநிதித்துவம் செய்கின்றது.

அட்டவணை13.29 : செலவின் விபரங்கள்

| | **உண்மையான செலவினம் (ரூபா)** | **திருத்தியமைக்கப்பட்ட ஒதுக்கீடு (ரூபா)** |
|---|---|---|
| **செலவின வகை** | | |
| அமைவிட விடுவிப்பு மற்றும் உட்கட்டமைப்பு | 587,644.00 | 62,500,000.00 |
| போக்குவரத்து | 1,476,059.25 | 2,800,000.00 |
| அலுவலக உபகரணம் | 0 .00 | 300,000.00 |
| அலுவலக பொருட்கள் | 177,291.68 | 300,000.00 |
| கருத்திட்ட பணியாளர் சம்பளங்கள் | 9,126,359.83 | 16,800,000.00 |
| தொடர்பாடல்/தபால் செலவு | 188,946.68. | 400,000.00 |
| பயிற்சி மற்றும் திறன் விருத்தி | 40,000.00 | 300,000.00 |

| | | |
|---|---|---|
| வாடகை /குத்தகை | 3,675,000.00 | 3,300,000.00 |
| கருத்திட்ட ஒருங்கிணைப்பு மற்றும் முகாமைத்துவம் | 293,879.58 | 3,000,000.00 |
| எதிர்பாரா செலவினம் | 123,486.20 | 2,300,000.00 |
| **மொத்தம்** | **15,688,667.22** | **92,000,000.00** |

**13.6. ஜய்கா**

**இலங்கையில் பிரதான நீர்நிலைகளின் நீர்த்தரத்தை கண்காணித்தல் , ம.சு.அ ஆய்வுகூடங்கள் மற்றும் அமுலாக்கல் உத்தியோகத்தர்களின் திறனை மேம்படுத்தல் கருத்திட்டம்**

மேற்படி கருத்திட்டமானது தொழில்நுட்ப ஒத்துழைப்பு கருத்திட்டத்தின் கீழ் பரிசீலனைக்கு எடுத்தக் கொள்ளப்பட்டுள்ளதுடன் ஜெய்கா நிபுணர்கள் குழுவானது கருத்திட்ட செயற்பாடுகள் பற்றிய நேர அட்டவணையை அவர்களின் பணிக்கால அட்டவணைக்கு இணங்க தயாரிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். இந்த கருத்திட்டத்தின் சகாவாக ம.சு.அ யின் உத்தியோகத்தர்கள் செயற்படுகின்றனர். ஜெய்க்கா குழுவின் பணிச் செயலாளரைத் தவிர வேறு கருத்திட்ட பணியாளர் எவரும் ஆட்சேர்ப்புச் செய்யப்படவில்லை. ஜெய்கா இந்த தொழில்நுட்ப மானிய கருத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு இரண்டு ஆலோசனை நிறுவனங்களை வாடகைக்கு அமரத்தியுள்ளது. அவையாவன: வரையறுக்கப்பட்டCTIபொறியியல் சர்வதேச கம்பனி மற்றும்வரையறுக்கப்பட்ட ஒரியன்டல் ஆலோசகர்கள் குளோபல் கம்பனி ஆகியவையாகும். இந்த கருத்திட்டத்தின் கீழ் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அமுலாக்கல் திறன் மற்றும் களனி ஆற்றப் படுக்கையில் அதன் பிராந்திய கிளை அலுவலகங்களின் நீர்த்தர முகாமைத்தவ திறன் ஆகியவை மேம்படுத்தப்படுமென எதிர்பார்கப்படுகிறது. இந்த கருத்திட்டமானது 2015 மார்ச் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டதுடன் மூன்று வருடங்களுக்கு தொடர்ந்து செயற்படும்.

இந்த தொழில்நுட்ப மானிய கருத்திட்டத்தின் கீழ் நான்கு பாரிய வெளியீடுகள் எதிர்பார்கப்படுகின்றன.

இந்தகருத்திட்டத்தின் கீழ்:

- இலங்கையின் சுற்றுச்சூழல் நீர்த்தரத்தின் நியமங்களின் அடிப்படையில் நீர் நிலைகளின் வகைப்படுத்தலை அறிமுகம் செய்யும் செயற்பாடு அமைக்கப்படுகின்றது.
- ஆய்வுகூட பணியாளரின் நீர்த்தரம் பற்றிய பகுப்பாய்வுத் திறன் மேம்படுத்தப்படுகின்றது.
- பரிசோதனை உற்பட நீர்த்தர கண்காணிப்பு பற்றிய இலக்கு எதிரப்பிரதி தாபனங்களின் அமுலாக்கல் திறன் மேம்படுத்தப்படுகின்றது, மாசுபடுத்தும் மூலங்களின் பட்டியல்(PSI) உருவாகின்றது. சுற்றாடல் பாதுகாப்பு உரிமம்

பெற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் ஊக்குவிக்ப்படுகின்றது.

- நாட்டின் மேற்பரப்பு நீர் நிலைகள் பற்றிய பரிசோதனை,சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் பற்றிய தரவு, மற்றும் மாசுபடுத்தும் மூலங்களின் பட்டியல் உட்பட்நீர்த்தர கண்காணிப்பு தரவு முகாமைத்தவத் தகவல் அபிவிருத்தி அடைகின்றதுடன் பயனுறுதியாகவும் பயன்படுத்தப்படுகின்றது.

கருத்திட்ட நடவடிக்கைகளின் பெரும்பாலானவை ஒவ்வொரு கருத்திட்ட வெளியீடுகளுக்கும் பொறுப்பாக தாபிக்கப்பட்டுள்ள பணியாற்றும் குழுக்களை வரவழைப்பதன் ஊடாக முன்னெடுக்கப்படுகின்றன.பணியாற்றும்குழுக்களின் உறுப்பினர்கள் வகைப்படுத்தல்,மாதிரியெடுத்தல் மற்றும் பரிசோதனை பற்றிய வரைவு வழிகாட்டிகளை வடிவமைத்தல் மற்றும் ஆய்வுகூடதிற்கான சர்வதேச தரநிர்ணய தாபனத்தின் (ISO)அங்கீகாரத்தை பெறல் மற்றும்மாசுபடுத்தும் மூலங்களின் பட்டியல் (PSI) தரவுத் தளத்தை அபிவிருத்திசெய்தல் ஆகியவற்றில் முனைப்புடன் ஈடுபட்டுள்ளதுடனர். கடந்த காலத்தில் அடைந்த முக்கிய சாதனைகள் கீழே சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன:

### 13.6.1 வகைப்படுத்தல் பற்றிய வழிகாட்டிகள் மற்றும் ஏனைய பொருத்தமான ஆவணங்கள் அபிவிருத்தி

பணியாற்றுக் குழுவின்முதற்குழு உறுப்பினர்கள் எல்லா அளவுருக்களின் பெறுமதி மற்றும் நியமப் பெறுமதி ஆகியவற்றை மதிப்பிடுவதன் ஊடாகசுற்றுச்சூழல் நீர்த்தரத்தின் நியமங்கள் பற்றியமீளாய்வை நடாத்தும் பொறுப்பை ஏற்றுக்கொண்டனர். ஏனெனில்சுற்றுச்சூழல் நீர்தர நியமங்கள் 1992 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டதில் இருந்து அவை முறைசார்ந்த மீயாய்வு மற்றும் அங்கீகார செயற்பாடின்றி நிலுவையில் விடப்பட்ட நிலையில் இருந்து வருகின்றது. இதன் விளைவாக, மொத்தமாக நூற்று ஐம்பத்து எட்டு நியமங்களில்(158) அறுபத்து ஐந்து(65) நியமங்களுக்கு திருத்தம் கொண்டுவரப்பட்டது. அவர்கள் மேலும் கலந்துரையாடி ‘‘நீர் நிலைகளால் பயக்கும் நன்மைகளின் அடிப்படையில் அவை வகைப்படுத்தப்படல் வேண்டும்’’ என்பதன் அடிப்படையில் வகைப்படுத்தல் பற்றிய வரைவு வழிகாட்டிகளை அபிவிருத்தி செய்தனர். கள ஒப்பாய்வு ஒன்றை சார்ந்து சம்பந்தப்பட்ட தரவுகளை சேகரித்துபகுப்பாய்வொன்றை மேற்கொண்டு அதன் ஊடாக களனி ஆற்றின் பூர்வாங்க வகைப்படுத்தலொன்று முன்மொழியப்பட்டது. தற்போதைய கண்காணிப்பு அமைவிடங்கள் பற்றிய செம்மை மதிபீட்டை மேற்கொண்டும் துணை கண்காணிப்பு மையங்களை இனங்கண்டும் களனி ஆற்றை கண்காணிப்பதற்கான வருடாந்த திட்டமொன்று

அபிவிருத்தி செய்யப்பட்டது. கண்காணிப்பு திட்டத்தின் பிரகாரம் முன்மொழியப்பட்டுள்ள ஆற்றின் வகைப்படுத்தல் செயற்பாடடை செம்மை பார்க்கும் வகையில் சுற்றுச்சூழல் நீர்தரத்தின் கண்காணிப்பை ம.சு.அ ஒரு வருடத்திற்கு மேலதாக பொறுப்பேற்று நடாத்தும்.

**13.6.2 சர்வதேச தரநிர்ணய தாபனம் (ISO)/சர்வதேச எலக்ட்ரானிக்ஸ் ஆணைக்குழு (IEC) 17025அங்கீகாரத்திற்கான நியம இயக்க செயன்முறைகள்,தரம் பற்றிய கையேடுகள் மற்றும் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டன:**

சரியான முடிவுகளை வெளியிடுதல் பற்றிய ஆற்றலை நிருபித்தல் முறைசார்ந்த ஆய்வுகூட அங்கீகாரமாகும். இச்செயற்பாடு பாதுகாப்கை சட்ட ரிதியாகவும் அதிகரிக்கும். ம.சு.அ ஆய்வுக்கூடமானதுசர்வதேச தரநிர்ணய தாபனம் (ISO)/ சர்வதேச எலக்ட்ரானிக்ஸ் ஆணைக்குழு (IEC) 17025 அங்கீகாரத்திற்கானநியம இயக்க செயன்முறைகள், தரம் பற்றிய கையேடுகள் மற்றும் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் அபிவிருத்தி செய்துள்ளன. அளவீடுகள் மற்றும் பகுப்பாய்வு பற்றிய ஆய்வுகூடங்களுக்கு இடையிலான பரிசோதனையிலும் ம.சு.அ ஆய்வுகூடம் ஈடுபட்டுள்ளது. இதில் மொத்தமாக பதினெட்டு(18) ஆய்வுகூடங்கள் பங்குபற்றின. சர்வதேசதரநிர்ணய தாபனம்(ISO)/சர்வதேச எலக்ட்ரானிக்ஸ் ஆணைக்குழுவின் (IEC) 17025 அங்கீகாரத்திற்கான முன்மொழியப்பட்ட அட்டவணையானது உத்தேச நேர வரம்பு பற்றிய மீளாய்வொன்றை கொண்டிருக்க வேண்டும் என்பதை பணியின் முன்னேற்றம் பற்றிய விரிவாக்கம் குறிப்பிட்டுள்ளது. ஆய்வுக்கூடம்அதனை கீழ்வருமாறு மீள் அட்டவணைப் படுத்தியுள்ளது: 1) உள்ளக கணக்காய்வு ஒன்று 2016 மார்ச் மாதத்தில் முடிக்கப்படவுள்ளது, 2) விண்ணப்பமொன்று 2016 ஏப்பிரல் மாதத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிம் 3)விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டவுடன்ISO/IEC17025செயற்பாடு ஆரம்பிக்கப்பட வேண்டும் 4)முகாமைத்துவ மீயாய்வு ஒன்று 2016 யூன் மாதத்தில் முடிக்கப்பட வேண்டியுள்ளது. மற்றும் 5) அங்கீகாரத்ததை பெற்றுக்கொள்ளல் 2016 ஆகஸ்ட் மாத்தில்

**13.6.3 பரிசோதனை மற்றும் மாதிரியெடுத்தல் வழிகாட்டிகள் வரைவு செய்யப்படும் நிலையில் உள்ளன:**

பரிசோதனை மற்றும் மாதிரியெடுத்தல் ஆகியவற்றுக்கான வழிகாட்டிகள் பயனுறுதியான திட்டமிடல் மற்றும் பரிசோதனை மற்றும் மாதிரியெடுத்தல் ஆகியவற்றுக்கான நியமங்கள் மற்றும் விபரமான செயன்முறைகள் மற்றும் தகவுத்திறன் ஆகியவற்றை வழங்குகின்றன.

மீறல்கள் மற்றும் சிறந்த நடைமுறைகள் ஆகியவற்றை இனங்காணுதலே ம.சு.அ யின் திறனை மேம்படுத்துதல் இச்செயற்பாட்டின் நோக்கமாக உள்ளதுடன்; அதன் மூலம் சுற்றாடலை பேணிப் பாதுகாப்பதற்கான சுற்றாடல் நியமங்கள்,சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள், விசேடமாக கழிவுகள் பற்றிய நியமங்கள் ஆகியவற்றை பயனுறுதியான முறையில் அமுலாக்கம் செய்யலாம். வழிகாட்டிகளின் பூர்வாங்க வரைவை முடித்ததன் பின்னர் அவை மேம்பாட்டிற்கான அம்சங்களை இனங்காணும் வகையில் முன்னோடிப் பரீட்சைக்கு உட்படுத்தப்படும். வழிகாடடிகளின் இறுதியான வடிவம் தயாரிக்கப்பட்டு ஒப்புதலும் கிடைத்ததன் பின்னர் சம்பந்தப்பட்ட பயிற்சி கையேடுகள் தயாரிக்கப்படும். அதனைத் தொடர்ந்து பயனுறுதியான பரிசோதனை மற்றும் மாதிரியெடுத்தல் நடவடிக்கைகள் பற்றிய அவசியமான பொருத்தமான அறிவு மற்றும் திறன்களை ம.சு.அ பணியாளர் பெறுகின்றனர் என்பதை உறுதிசெய்யும் முகமாக அவர்களுக்கு களம் மற்றும் வேலையுடனான பயிற்சி உட்பட்ட உண்மையான பயிற்சி வழங்கப்படும்.

### 13.6.4 தரவுத்ளம் அபிவிருத்திச் செயற்பாடு ஆரம்பமாகியது

வெளியீடுகள் 4 இன் கீழான பெரும்பான்மையான பணிகள் மாசு மூலாதார பட்டியலின் செயற்பாடு 3-2 கீழ் இணைந்த வகையில் நிறைவேற்றப்படுகின்றன. அதற்கமைய அவை ஒருங்கிணைந்த செயற்பாடுகளாக சுருக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. பணிக் குழு 3-2 இன் உறுப்பினர்கள் தற்போதுள்ள தரவுத் தளத்தை மத்திய சுற்றாடல் அதிகார சபைக்குள் மீளாய் வு ஒன்றை செய்ததுடன்மாசுபடுத்தும் மூலங்களின் பட்டியல் (PSI)தரவுத் தளத்தை அபிவிருத்தி செய்வதற்கான அடிப்படையாக ம.சு.அ யின் தகவல் தொழில்நுட்ப பிரிவால் பேணப்படும் சு.பா.உ தரவுத் தளத்தை கையாள்வதற்கு தீர்மானித்தது. இந்த தெரிவானது தொடரறா செயற்பாடுகளை உயோகித்து தரவுப் பதிவை மத்திய மயப்படுத்துவதற்கு வழிசமைக்கின்றது. இச்செயற்பாடானது சு.பா.உ தரவை சம்பந்தப்பட்ட அதிகார எல்லைக்குள் முகாமைத்துவம் செய்வதற்கானவலுவூட்டலை மாகாண அலுவலகங்களுக்கு வழங்குகின்றது. அதனைத் தொடர்ந்து அவர்கள் தரவுத்தளத்தில் ஒருங்கிணைக்கப்பட்ட விடயங்கள்/அளவுருக்கள் ஆகியவற்றை அய்வு செய்வதற்கு ஆரம்பித்ததுடன் பின்வருவன வற்றையும் உள்ளடக்குவதற்கு தீர்மானித்தனர்:சுற்றாடல் கண்காணிப்பு தரவு, தற்போதைய சு.பா.உ விண்ணப்ப படிவத்தில் கிடைக்கக்கூடியதாக உள்ள முக்கிய தகவல்கள்

மற்றும் ஏனைய தகவல்கள்.மாசுபடுத்தும் மூலங்கள் பட்டியல்(PSI) வடிவத்தின் தயாரிப்பானது தற்போதைய தரவுத்தளத்தை மாற்றுவதற்காக ம.சு.அ தகவல் தொழில்நுட்ப பிரிவால், பணிக்குழு உறுப்பினர்களின் ஆலோசனையுடன்பொறுப்பேற்கப்பட்டு தொடர்ந்து இடம்பெற்றுவரும் செயற்பாடாகும். காணப்படும் தரவுகளை சேகரித்தல்,(அதாவது, கழிவு நீர் பற்றிய பகுப்பாய்வு அறிக்கை, மாசுபடுத்தல் மூலாதாரங்களின் புவியியல் தரவுகள்) மற்றும் மாசுபடுத்தும் மூலங்களின் பட்டியல்(PSI)/சுற்றாடல் பாதுகாப்பு உரிம தரவுத் தளம் ஆகியவற்றுக்கான தரவு மூலாதாரத்தை தயாரித்தல் ஆகியன 2016ஆம் ஆண்டின் சனவரி முடிவில் முடிவடையும் என எதிர்பார்கப்படுகிறது.

### 13.6.5 சு.பா.உ ஊக்குவிப்புக்கான வழிகாட்டிகள் வரைவு செய்யப்படும் நிலையில் உள்ளன.

சு.பா.உ ஊக்குவிப்புக்கான வழிகாட்டிகள் சுற்றாடலில் இருந்து பெறப்படும் நன்மைகள், சேவைகள் மற்றும் சுற்றாடலை சீரழிவுக்கு இட்டுச்செல்லும் மாசுபடுத்திகள் பற்றிய விழிப்பூட்டும் சாதனங்களை வழங்குவதுடன் பொது மக்கள், அரசாங்க நிறுவனங்கள், தனியார் வர்த்தக துறை ஆகியவை மத்தியில் பொது அபிப்பிராயத்தை கட்டியெழுப்பி சுற்றாடலை பேணிப் பாதுகாக்கும் வகையில் வழங்கப்படும் சேவைகளின் இழப்பு போன்ற அச்சுருத்தல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தம் சாதனங்களையும் வழங்குகின்றன. கைத்தொழில்கள் சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தை(சு.பா.உ) பெற்றுக் கொள்வது தொடர்பில் காணப்படும் இடையூறுகளுக்கு பரிகாரம் காண்பதற்கும்சு.பா.உ ஊக்குவிப்புக்கான வழிகாட்டிகள் வழிசமைக்கின்றது.

கருத்திட்ட குழுவானது உபகரணங்களை கொள்முதல் செய்யும் செயற்பாட்டை பொறுப்பேற்றுள்ளதுடன் ஜப்பானில் முதற்கட்ட எதிர்நிலை பயிற்சியையும் முடித்துள்ளது.

### 13.6.6 உபகரணங்களின் கொள்முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஆய்வுகூட உபகரணங்கள் கொள்முதலானது ஜெய்காவின் ஏற்புடைய வழிகாட்டலின் அடிப்படையில் நிறைவேற்றப்பட்டு வருகின்றது. மொத்தமாக இருபத்து மூன்று(23) உபகரண வகைகள் இனங்காணப்பட்டுள்ளன; அவற்றுள் பதின் மூன்று (13) கொள்முதல் செய்யப்பட்டு ம.சு.அ ஆய்வுகூடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பத்து(10) உபகரண வகைகளின் கொள்முதல் 2016 ஆம் ஆண்டின் நடுப்பகுதிக்கு முன்னர் இடம்பெறும்.

### 13.6.7 முதற்கட்ட எதிர்நிலை பயிற்சிஜப்பானில் முடித்துள்ளது:

முதற்கட்ட எதிர்நிலை பயிற்சியானது ஜப்பானில் 2015 ஆம் ஆண்டின் டிசம்பர் மாதத்தில் முடிவடைந்தது. 2015 நவம்பர்30 ஆம் திகதி முதல் 2015 டிசம்பர் 10ஆம் திகதி வரை இடம்பெற்ற பயிற்சியில் சட்ட கட்டமைப்பு மற்றும் நீரின் தரத்தை முகாமைத்துவம் செய்வதில் ஜப்பானின் மத்திய மற்றும் உள்ளூராட்சி அமைப்புகள் வகிக்கும் வகிபாகங்கள் ஆகியவற்றின் தெளிவான விளக்கத்தை பெற்றுக் கொள்ளும் வகையில் பதினொரு(11)உத்தியோகத்தர்கள் பங்குபற்றினர். ம.சு.அ தலைவரும் அவரது பணிச்சுமை நிறைந்த நிகழ்ச்சிநிரலின் மத்தியிலும் Minamata மற்றும் Kitakyushu பற்றிய அனுபவத்தை பெற்றுக்கொள்ளும் வகையில் 2015 டிசம்பர் 5ஆம் திகதியில் இருந்து நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றினார்.

TREASURY FUNDED SPECIAL PROJECTS IMPLEMENTED BY THE CEA

### 13.7 பசுமை பூங்கா கழிவு முகாமைத்துவ நிலையம்-ம.சு.அ

முறையற்ற திண்மக்கழிவு முகாமைத்துவமானது இக்கட்டான சுற்றாடல் மற்றும் சுகாதார பிரச்சிளையாக இலங்கையின் மேல் மாகாணத்தில் உருவெடுத்துள்ளதுடன் இப்பிராந்தியத்தில் ஏற்பட்டு வரும் துரித பொருளாதார மற்றும் நகர அபிவிருத்தியின் காரணமாக முறையான திண்மக் கழிவு முகாமைத்தவ முறைமையை தேர்ந்தெடுக்க வேண்டிய முக்கியத்துவம் அதிகரித்து வரும் நிலையில் உள்ளது. இருப்பினும், கட்டுப்படுத்த முடியாத திண்மக் கழிவு அகற்றல் முறைமையால் தோன்றும் கழிவு நீரானது மேற்பரப்பு மற்றும் நிலத்தடி நீர் மாசடைதல்ஊக்குவித்து புலப்படக்கூடிய மற்றும் புலப்படா சுற்றாடல் சேதங்களுக்கு வழிசமைக்கின்றது. முறையான கழிவு அகற்றல் முறைமை ஒன்றில் கழிவு உற்பத்திக்கு செலுத்தப்படும் அதே அளவான கவனம் கழிவு அகற்றல் முறைமை ஒன்றுக்கும்இறுதியில் செலுத்த வேண்டிய கட்டாயம் காணப்படுகின்றது. இடைநிலை சுத்திகரிப்பானது கழிவின் அளவை குறைக்கவும் கழிவின் நச்சுத் தன்மையை குறைக்கவும் உதவுகின்ற அதே வேளையில் செயற்கை பசளையாக்கம் மற்றும் மீள் சுழற்சி முறையானது இலங்கையின் கழிவு முகாமைதத்துவ முறையில் மிகவும் முக்கியமான இடைநிலை சுத்திகரிப்பாகவும் விளங்குகின்றது.




பசளையாக்க செயற்பாட்டிற்கு உட்படுத்த முடியாத விஞ்சய கழிவு அகற்றலுக்கான முறையான கழிவு முகாமைத்துவ முறைமையில் சுகாதார முறையிலான கழிவு அகற்றல்அமைவிடங்கள் (குப்பை கொட்டும் இடங்கள்) முக்கிய இடத்தை வகிக்கின்றன.

ஆயினும், துரதிருஸ்டவசமாக, இலங்கையில் அநேகமான மக்கள் சுகாதாரமான கழிவு அகற்றல் அமைவிடங்கள் பற்றிய எந்த விதமான அனுபவத்தையும் கொண்டிருக்க வில்லை. இதன் விளைவாக கழிவு அகற்றல் அமைவிடங்கள் நிர்மாணம் செய்வதற்கு எதிரான பொது மக்கள் ஆர்ப்பாட்டங்கள் பொதுவாக இடம்பெறுகின்றன. ஆகையால், இலங்கையில் கழிவு அகற்றல் அமைவிட வசதிகளை கவனமாக கையாளுதல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் மிகவும் முக்கியமாக விடயமாக உள்ளது.

ஆகையால், மத்திய சுற்றாடல் அதிகார சபையானது இலங்கையில் சுகாதார முறையிலான கழிவு அகற்றல் அமைவிடங்களை தாபிக்கும் நோக்கில் நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிக்கான வேண்டுகோளை முன்வைத்து கொரிய சர்வதேச ஒத்தழைப்பு முகவராண்மைக்கு (கொய்கா) கருத்திட்ட முன்மொழிவொன்றை 2007 மே 16 ஆம் திகதி அனுப்பியது. அதன் படி பசுமை பூங்கா கழிவு அகற்றல் அமைவிடமானது கிரிந்தவெல, மாளிகாவத்தையில் கொய்காவினால் தாபிக்கப்பட்டது.இந்த கழிவு அகற்றல்அமைவிடமானது நாளாந்தம் 5-90தொன் கழிவை முகாமைத்துவம் செய்யும் திறனைக் கொண்ட தொம்பே பிரதேச சபைக்கான இறுதியான கழிவு அகற்றல் அமைவிடமாக திட்டமிடப்பட்டுள்ளது.மேலும், இந்த சுகாதாரமான கழிவு அகற்றல் அமைவிடத்திற்கு மேலதிகமாக பசயையாக்கல் பொறித் தொகுதி ஒன்றும் அதே அமைவித்தில் பிலிசறு கருத்திட்டத்தின் ஒத்துழைப்புடன் நிர்மாணிக்கப்பட்டுள்ளது




தோம்பே பிரதேச சபையானது சந்தை,பிரதான வீதிகள் மற்றும் வர்த்தக கட்டிடங்கள் ஆகியவற்றில் தினசரி உற்பத்தியாகும் கிட்டத்ததட்ட 10 தொன் கழிவுகளை சேமிக்கின்றது.பசுமை பூங்கா கழிவு அகற்றல் அமைவிடம் மற்றும் கூட்டுப்பசளை உற்பத்தியிடம் ஆகியன் ஆரம்பிக்கப்படுதற்கு முன்னர் அவ்வாறு சேகரிப்கப்பட்ட மாநகர கழிவுகளை அகற்றுவதற்கு ஒதுக்கப்பட்ட பிரத்தியேக இடமொன்று காணப்படாததன் காராணத்தினால் அவை விளையாட்டு மைதானம் ஒன்றுக்கு அருகில் கொட்டப்பட்டன. இந்த நடவடிக்கையானது மக்கள் மற்றும் அவர்களின் சுற்றுச்சூழல் உட்பட ஒட்டுமொத்த பிரதேசம் மீதும் அதிகரித்த அளவிலானசுகாதார தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய பல சுற்றாடல் பிரச்சினைகளுக்கும் வழிசமைத்தது. பசுமை பூங்கா கழிவு அகற்றல் அமைவிடமானது அதன் இயக்கச் செயற்பாடுகளை ஆரம்பிக்கும் வகையில் மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு 2014.03.25ஆம் திகதியும் டோசர்கள் மற்றும் டரக்ஸ் போன்ற கனரக இயந்திரப் பொறித்தொகுதிகள் மற்றும் வாகனங்கள் 2014.11.27 ஆம் திகதியும் கொய்காவினால்ஒப்படைக்கப்பட்டதுடன். ஆகையால், பசுமை பூங்கா கழிவு முகாமைத்துவ வசதியானது தொம்பே பிரதேசத்தில் காணப்படும் மேற்படி பிரச்சினைகளுக்கு பரிகாரம் காண்பதற்கு உதவியளிக்கின்றது. இவ்வகையான கருத்திட்ட வகைகளில் முதலாவது கருத்திட்டம் இதுவென்பதால், கல்வி/ஆராய்ச்சி நிலையமாக பயன்படுத்தக்கூடிய மாதரி கருத்திட்டமொன்றாக இது செயற்படுகின்றது. கழிவு அகற்றல் அமைவிட இயக்கச் செயற்பாடுகளுக்கு அவசியமான இயந்திர பொறித் தொகுதிகளை பெற்றுக் கொண்டதன் பின்னர் ம.சு.அ அவசியமான வேலைப் படையை ஆட்சேர்ப்பு செய்யவதற்குஅவசியமான நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன் கூட்டுப்பசளை அமைவிடம் மற்றும் கழிவு அகற்றல் அமைவிடம் ஆகியவற்றின் இயக்கச் செயற்பாடுகள் 2015.04.20 ஆம் திகதி ஆரம்பித்தன. பசுமை பூங்கா இயக்கச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர், தொம்பே பிரதேச சபையால் சேகரிக்கும் ஒட்டு மொத்த கழிவும் பசுமை பூங்கா வளாகத்திற்கு ஏற்றுக்கொள்ளப் படுகின்றதுடன் தொம்பே பிரதேசத்தில் இயங்கிவந்த பழைய குப்பை கொட்டும் அமைவிடங்கள் மூடப்பட்டுள்ளன. அழிவடையக்கூடிய கழிவுகளின் அளவானது கூட்டுப்பசளை உற்பத்திக்கு அனுப்பப்படுவதுடன் எஞ்சிய கழிவானது கழிவு அகற்றல் அமைவிடத்தில் கொட்டப்படுகின்றது. பசயையாக்க பெறித்தொகுதியில் தோன்றும் கழிவு நீரானது சுத்திகரிப்பு பொறியால் சுத்திகரிக்கப்பட்டு சுற்றாடலுக்கு எவ்விதமான சீர்கேட்டையும் ஏற்படுத்தாக முறையில் அகற்றப்படுகின்றது.

2015ஆம் ஆண்டில் பல பல்கலைக்கழக மாணவர் குழுக்கள், பாடசாலை மாணவர்கள், அசசாங்க மற்றும் அரசு-சாரா உத்தியோகத்தர்கள் இந்த பசுமை பூங்காவிற்கு விஜயத்தை மேற்கொண்டு பசுமை பூங்கா பணியாளர்களால் மேற்கொண்ட விரிவுரைகளிலும் பங்கு பற்றியுள்ளனர். மேலும்,செயற்கை பசளையாக்கம் பற்றிபசுமை பூங்கா உத்தியோகத்தர்களால் நடாத்தப்பட்ட நேரடியான பயிற்சியில் உள்ளூராட்சி அதிகார சபையைச் சேர்ந்த குழுக்கள் மற்றும் பணியாளர் பங்கு பற்றினர்.

ருகுனு பல்கலைக்கழக மாணவர்களால் ஆரம்பிக்கப்பட்ட செயற்கை பசளையாக்கம் பற்றிய இரண்டு பெறுதியான ஆராய்ச்சிகள் 2015ஆம் ஆண்டில் முடிவுக்கு வந்தன.ஆகையால், சுகாதாரமான கழிவு அகற்றல் மற்றும் கழிவு முகாமைத்துவம் பற்றிய கல்வி மற்றும் ஆய்வு ஆகியவற்றுக்கான பல வாய்ப்புக்கள் பசுமை பூங்கா செயற்திட்டத்தால் தோற்றுவிக்கப்பட்டு உள்ளன.

2015 மே மாத்தின் ஆரம்பத்தில இருந்து 2015 டிசம்பர் மாதம் வரையில் கிட்டத்தட்ட 1500 தொன் கழிவானது பசுமை பூங்காவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு உள்ளதுடன் தொம்பே பிரதேச சபையானது அதன் அதிகார எல்லைக்குள் இடம்பெற்ற திட்டமற்ற கழிவு அகற்றல் செயற்பாட்டை நிறுத்தியும் உள்ளது. ஆகையால், பசுமை பூங்கா இயக்கச் செயற்பாடானது தொம்பே-கிரிந்திவெல பிரதேசத்தில் ஏற்பட்ட சுற்றாடல் மாசடைதல் செய்ற்பாட்டைவரையறை செய்வதற்கு உதவியளித்தள்ளது.

TREASURY FUNDED SPECIAL PROJECTS IMPLEMENTED BY THE CEA

# 14.0.கூட்டாண்மை ஆட்சி அறிக்கை

மத்திய சுற்றாடல் அதிகார சபையானது 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் அதன் ஓழுங்கமைப்பு சேவைகள் மீதான செலவினங்களை ஈடுசெய்யும் வகையில் திறைசேரியால் வருடாந்தம் மானியமாக வழங்கப்படும் மீண்டெழும் (சம்பளங்கள்) மற்றும் மூலதன செலவினங்கள் ஆகியவற்றுடன்1981 ஆம் ஆண்டுதாபிக்கப்பட்டது.

2015.12.31 ஆம் திகதியில் உள்ளவாறு, மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 1159 ஆகவும், சேவையில் உள்ள பணியாட்களின் தொகை 874 ஆகவும் இருந்தது.

## 14.1 சபை உறுப்பினர்கள்

இச்சபையானது சுற்றாடல் அமைச்சரின் ஆலோசனையுடன் அதிமேதகு சனாதிபதியால் நியமிக்கப்பட்ட மூன்று உறுப்பினர்களை உள்ளடக்குகின்றது.

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் கூட்டங்கள் உயர் தீர்மானங்களை மேற்கொள்ளும்பொறிமுறையைஉடையதாக அமைக்கப்பட்டுள்ளது.இச்சபையானது அதிகாரசபையின் அலுவல்கள் மற்றும் செயலாற்றுகை பற்றிய இறுதிப் பொறுப்பை சபை ஏற்கின்றதால், அவற்றின் செயற்பாடுகளை சபை உறுப்பினர்கள் மிகவும் நுண்ணாய்வுடன் கண்காணிக்கின்றனர்

இச் சபையானது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடுவதுடன் அதனைத் தொடர்ந்து மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் சுற்றாடல் முகாமைத்துவம் பற்றிய மிக முக்கியமான பிரச்சினைகளுக்கு வழிகாட்டல்கள் மற்றும்பணிப்புரைகளை வழங்கும் வகையில் 10 கூட்டங்களை நடாத்தியதுடன் சிரேஷ்ட முகாமையாளர்கள் மத்தியில் வலுப்பிரிவினை மற்றும் சமநிலை கோட்பாட்டின் அடிப்படையில்பொறுப்புக்களை பகிர்ந்து கொண்டு பயனுறுதியானகட்டுப்பாட்டு முறைமையை தாபித்து ம.சு.அ யின் ஒட்டு மொத்த முகாமைத்துவத்திற்குமான பொறுப்பையும் ஏற்றுக்கொண்டது.

## 14.2 கணக்காய்வுக் குழு கூட்டங்கள்

கணக்காய்வுக் குழுவானது 1999 நவம்பர 19 ஆம் திகதிய PF/PE 03 ஆம் இலக்க அரசாங்க நிதிசார் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைய தாபிக்கப்பட்டது. பொது திறைசேறியின் பிரதிநிதி குழுவுக்கு தலைமை வகிப்பார். இக்குழு காலாண்டுக்கு ஒரு முறையென்ற அடிப்படையில் கூடும்.

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் உதவிப் பணிப்பாளர் திருமதி. அனுசியாநாதன் தலைமையில் 2015 ஆம் ஆண்டிற்குறிய நிதியாண்டில் அதிகார சபை சார்பில் நான்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டு உள்ளன.

ம.சு.அ தலைவர், பணிப்பாளர் நாயகம், பிரதி பணிப்பாளர் நாயகம் (ம.வ.அ, நிர்வாகம் மற்றும் நிதி) பணிப்பாளர் (நிதி) பணிப்பாளர் (இயக்கச் செயற்பாடுகள் மற்றும் திட்டமிடல்), கலந்துரையாடப்படும் விடயத்துடன் தொடர்புடைய பணிப்பாளர்கள், கருத்திட்ட பணிப்பாளர்கள், கணக்காய்வு தலைமை அதிபதி திணைக்களத்தின் கணக்காய்வு மேற்பார்வையாளர் மற்றும் ம.சு.அ உள்ளகக் கணக்காய்வாளர் ஆகியோர் இந்த கூட்டங்களில் பங்குபற்றினர். இந்த குழுவின் கூட்டங்களை ஏற்பாடு செய்பவராகம.சு.அ உள்ளகக் கணக்காய்வாளர் செய்படுகின்றார். கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் அவதானிப்புகள் அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் அதிகார சபையின் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. 2015ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் இருந்து எழுந்த பின்வரும் விடயங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

1. பிரதேச சுற்றாடல் உத்தியோகததர்களின் உற்பத்தி மற்றும் கடமை ஒதுக்கீடு பற்றிய ஆய்வு
2. அதிகார சபைக்கு அனுப்பப்பட்ட புகார்கள் தொடர்பில் மாகாண அலுவலகங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் மற்றும் சுற்றாடல் பற்றிய புகார்களை பதிவுசெய்வதற்காக மாகாண அலுவலகங்களில் தாபிக்கப்பட்ட கணனி தரவுத் தளத்தின் செயற்பாடு.
3. அதிகாரசபையின் சுற்றாடல் உரிமங்கள் வழுங்குதல் மற்றும் கைத்தொழில்கள் பற்றிய தரவுகள் இற்றைபடுத்தல் செயற்பாட்டை ஆய்வுசெய்தல்
4. பிலிசறு கருத்திட்டத்தால் நிதியுதவி அளிக்கப்பட்ட கழிவு முகாமைத்துவ கருத்திட்டங்களின்பயனுறுதித் தன்மைமற்றும் உற்பத்தித்திறன் ஆகியவற்றை ஆய்வுசெய்தல்
5. நுகர்வோர் பிளாஸ்டிக் கழிவு முகாமைத்துவ கருத்திட்டத்தின் மீள்சுழற்ச்சி செயற்பாட்டை ஆய்வுசெய்தல்
6. நுகர்வோர் பிளாஸ்டிக் கழிவு முகாமைத்துவ கருத்திட்டத்தால் நிதியுதவி அளிக்கப்பட்ட நுகர்வோர் பிளாஸ்டிக் கலஞ்சிய நிலையங்களின் பயனுறுதிதி தன்மை மற்றும் உற்பத்தித்திறனை ஆய்வுசெய்தல்
7. அதிகார சபையின் கொள்முதல் செயன்முறையின் குறைபாடுகள் தொடர்பில் கவனம் செலுத்துதல்.
8. விசேட விசாரணைகள் மூலம் உள்ளக கட்டுப்பாட்டு முறைகளை இனங்காணல்

## 14.3ம.சு.அ இன் செயலாற்றுகை கண்காணிப்பும் மதீப்பீடும்.

கூட்டிணைத் திட்டத்தின் அடிப்படையில் வரவு செலவுத் திட்டத்துடன் தயாரிக்கப்பட்ட வருடாந்த செயற்திட்டமானது அவற்றின் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளின் நம்பகத்தன்மையை கண்டறிந்து அவற்றின் உச்ச திறனை அடைய முடியும் என்பதை உறுதி செய்துஅதனைத்தொடர்ந்து நடைமுறை செய்வது தொடர்பில்சபையின்அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளும் வகையில் வருடாந்த செயற்திட்டம் மற்றும் வரவுசெலவுத்திட்டம் சபையின் மதிப்பீட்டிற்கு சமர்ப்பிக்கப்பட்டன.

சபையின் அங்கீகாரத்தை பெற்றுக் கொண்டதை தொடர்ந்து உண்மையான செயலாற்றுயானதுசெயற்திட்டத்துடன் இணங்குகின்றதா என்பதை உறுதிசெய்வதற்கும் தேவைப்படும் பட்சத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான ஆலோசனைகளை பெற்றுக்கொள்வதற்கும் செயற்றிட்டத்தின் பிரிவுவாரியான முன்னேற்றங்கள்சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டன.இவ்வாறே, சிரேஸ்ட முகாமையாளர்களுக்கு ஒப்படைக்கப்பற்ற பணிகளுக்கான பொறுப்பை அவர்கள் ஏற்றுக்கொள்வதற்கு வழிசமைக்கவும் வெளிப்படைத்தன்மையை உறுதிசெய்யவும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட சாதனங்களின் விபரங்கள் மற்றும் பதவியணித் தரங்கள் உட்பட்ட மனித வளங்கள் பற்றிய கூற்று, புதிய ஆட்சேர்ப்புக்கள் உட்பட்ட மாதாந்த காலாண்டு மற்றும் வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகள் ஆகியன ஒழுங்கான நேர இடைவெளிகளில் சபைக்கு சமர்ப்பிக்கப்படுகின்றன.

ம.சு.அ. இன் ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள் பற்றிய ஒழுங்கான முறைமை ஒன்றை ஏற்படுத்தும் முகமாக சுற்றாடல் அமைச்சின் கௌரவ அமைச்சர் தலைமையில், அமைச்சின் கீழ்வரும் ஏனைய முகவராண்மைகளின் பங்கேற்புடன் செயலாற்றுகை இடம்பெற்றதை உறுதி செய்வதுடன் முக்கிய விடயங்கள் தொடர்பான சிக்கல்கள் மற்றும் பிரச்சினைகளை கலந்துரையாடி, அதிகார சபையால் நடைமுறை

படுத்தப்பட்ட அபிவிருத்தி செயற்பாடுகளை மீளாய்வு செய்யும் முகமாக தனித்தனியான முன்னேற்ற மீளாய்வு கூட்டங்கள் ஒவ்வொரு மாதமும் ஒழுங்கு செய்யப்பட்டன.

இலக்குகள் சார்பான உண்மையான செயலாற்றுகை, அவை விலகியிருப்பின் அதற்கான காரணங்களை இனங்காணல், மூலதன செலவினங்களின் முன்னேற்றம் மற்றும் கொள்முதல் தாமதங்கள் ஆகியவற்றை மீளாய்வு செய்யும் நோக்கிலும் நிர்வாகம் மற்றும் தாபனம் தொடர்பான அனைத்து விடயங்கள் பற்றிய பிரச்சினைளை கலந்தாலோசிக்கவும் ம.சு.அ முகாமைத்துவ குழுக் கூட்டம் மாதாந்தம் இடம்பெற்றது. இக்குழுக் கூட்டம், ம.சு.அ. தலைவரின் தலைமையில் சிரேஷ்ட முகாமைத்துவ அலுவலர்களுடன் இடம்பெற்றது. இக்குழுக் கூட்டமானது ம.சு.அ. தலைவரின் தலைமையில் சிரேஷ்ட முகாமைத்துவத்தின் பங்களிப்புடன் இடம்பெற்றது.

## 14.4 செயலாற்றுகை மதிப்பீடு

அனைத்து பணியாளர் செயலாற்றுகையையும் மதிப்பீடு செய்வதற்காக ம.சு.அ. பயன்படுத்தும் செயலாற்றுகை மதிப்பீட்டு முறைமையானது ஒவ்வொரு பணியாளின் வருடாந்த சம்பள அதிகரிப்பை உரிய திகதியில் வழங்குவதற்கான அங்கீகாரத்தை வழங்கும் நோக்கத்தை முக்கியமாக கொண்டுள்ளது.ஒவ்வொரு பிரிவுகளுக்கும் பொறுப்பாக இருக்கும் பணிப்பாளர்கள் வருடாந்த சம்பள அதிகரிப்பை அங்கீகரிப்பதற்கு அவசியமான அறிவு, திறன்கள்,மனப்பாங்கு, இலக்கு சாதனைகள், துல்லியம், மக்கள் தொடர்பாடல், நேர்மை, வருவு, எடுக்கப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கை மற்றும் ஏனைய விடயங்களை உள்ளடக்கிய விபரமான அறிக்கை ஒன்றை தயாரிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

நிறுவனத்தின் வினைத்திறன் மற்றும் பயனுறுதி ஆகியவற்றை நிறுவனத்தின் மனிதவள அபிவிருத்தியுடன் மேம்படுத்துதல்செயலாற்றுகை மதிப்பீட்டு முறைமையை பிரயோகிக்கும் பிரதான நோக்கம் ஆகும்.

## 14.5 கூட்டாண்மை திட்டம்

கூட்டாண்மை திட்டமானது அதிகாரசபையின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பான மூலோபாயங்களை கூட்டிணைக்கின்றது. மேலும், இந்த கூட்டாண்மை திட்டமானது சபையின் எதிர்கால வாய்ப்புக்கள் தொடர்பில் பணிப்பாளர்சபை மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவம் கொண்டுள்ள அர்ப்பணிப்பையும் பிரதிபளிக்கின்றது.மேலும்,கூட்டாண்மை திட்டமொன்றானது, தூர நோக்கு, செயற்பணிக்கூற்று மற்றும் நோக்கங்கள், அதிகாரசபையில் தற்போது கிடைக்கக்கூடியதாகவுள்ள வளங்கள், தாபனக்கட்டமைப்பு, தாபனத்தின் பலம் மற்றும் பலவீனங்கள், வெளி அச்சுறுத்தல் மற்றும் வாய்ப்புக்கள் (SWOT), முன்னைய மூன்று வருடங்களின் இயக்கச் சாதனைகள் பற்றிய மீளாய்வு, மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்தின் மூலோபாய திட்டங்கள் ஆகியவை போன்ற விடயங்களுடன் இடம்பெறுகின்றது.

வரவு செலவு திட்டமானது மீண்டெழும் மற்றும் மூலதன வருமானங்கள் மற்றும் செலவினங்கள் பற்றிய உண்மையான கணிப்பை, அவற்றின் செயற்பாடுகள் மீது செல்வாக்கை செலுத்தும் வெளியக மற்றும் உள்ளக காரணிகள் பற்றிய கரிசனைகளுடன் உள்ளடக்குகின்றது.படிவம் மற்றும் உள்ளடக்கமானது வருடாந்த கணக்குகளை சமர்ப்பிக்க பயன்படுத்தும் வடிவமைப்புடன் ஒருங்கிணைகின்றன.

இதற்கிணங்க 2015 ஆண்டில், நிறுவனத்தின் கூட்டாண்மை திட்டமானது 2016—2020 ஆண்டு வரையிலான காலத்திற்கு தயாரிக்கப்பட்டு உள்ளதுடன் இந்த அறிக்கையின் அடிப்படையில் 2016ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயற்திட்டங்கள்

தயாரிக்கப்படுகின்றன. இந்த திட்டமானது ஏனைய திட்டங்களுக்கிடையில் சூழ்நிலை பகுப்பாய்வு,நடவடிக்கைகள் மற்றும் வருடாந்த செயற்றிட்டங்கள் தொடர்பான மூலோபாயங்கள், மனித மற்றும் நிதிசார் வளங்கள் ஆகியவற்றை கூட்டிணைக்கின்றது. இந்த காலத்தில் நிறைவேற்றுவதற்காக திட்டமிடப்பட்டுள்ள பாரிய கருத்திட்டங்களை இந்த கூட்டாண்மைதிட்டமானது வழங்குகின்றது.

## 14.6 ஆண்டறிக்கை

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் ஆண்டறிக்கையானது அதன் செயற்பாடுகள் மற்றும் நிதிசார் நிலையேற்றுத் தன்மை தொடர்பில் பயனுள்ள தீர்மானங்களை மேற்கொள்ளும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. ஆண்டறிக்கையின் வரைவு மற்றும் கணக்குகள் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படுகின்றன.கணக்குகள் பற்றிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையானது அதனை தொடர்ந்து, 30 நாட்களுக்குள், பரிசீலணைக்காக பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்படும் கணக்காய்வாய்க்கு உட்பட்ட கணக்குகள் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை ஆகியவற்றை உள்ளடக்கிய இறுதி அறிக்கையானது, மூன்று மொழிகளிலும் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# 15.0. மனிதவள அபிவிருத்தி, நிர்வாகம் மற்றும் நிதிப்பிரிவு

## 15.1 மனிதவளங்கள் அபிவிருத்திப் பிரிவு

பணியாளருக்கு பயிற்சியளித்து அவர்களை அபிவிருத்தி அடையச்செய்வது மனிதவள அபிவிருத்திப் பிரிவின்முக்கிய பணிகளில் ஒன்றாகும். அதைத்தவிர இப்பிரிவானதுஒழுக்காற்று நடவடிக்கைகளை கையாளும் பணியையும் மேற்கொள்கின்றது. 2015 ஆண்டில்,பணியாட்களுக்கு பின்வரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி வாய்ப்புகள் வழங்கப்பட்டன.

### 15.1.1 உள்ளூர் பயிற்சி:

(1) சிரேஷ்ட முகாமையாளர்கள், மத்தியதர முகாமையாளர்கள், சிரேஷ்ட சுற்றாடல் உத்தியோகத்தர்கள், சுற்றாடல் உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள் மற்றும் நூலகம், சட்ட மற்றும் உள்ளக கணக்காய்வு பிரிவு பணியாளர்கள் மற்றும் கீழ் மட்ட ஊழியர்கள் உள்ளடங்களாக ம.சு.அ யின் பணியாளர்களுக்கு 40 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 2015 ஆம் ஆண்டில் ஒருங்கமைத்து அவற்றுக்கான அனுசரணையும் வழங்கப்பட்டன.

(2) மேற்படி நிகழ்ச்சிநிரலுக்கு மத்தியில் பின்வரும் பயிற்சிகள் மற்றும் பயிற்சிப்பட்டறைகள் உள்ளடக்கப்பட்டன:

அட்டவணை15.1: 2015ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட உள்ளூர் பயிற்சிகள்

| | பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | பங்குபற்றிய உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01. | புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட சுற்றாடல் உத்தியோகத்தர்களுக்கு மூன்று-நாள் தூண்டல் பயிற்சி | 85 |
| 02. | சிரேஸ்ட சுற்றாடல் உத்தியோகத்தர்களுக்கு இரண்டு-நாள் பயிற்சிப்பட்டறை | 99 |
| 03. | விஞ்ஞானம் மற்றும் சுற்றாடலுக்கான நிலையம்(CSE), இந்தியா ஒத்துழைப்புடன் ஒழுங்கமைக்கப்பட்ட கழிவு முகாமைத்துவம் பற்றிய நான்கு-நாள் பயிற்சிப்பட்டறை | 55 |
| 04. | "நவீன நிறுவனமொன்றை கட்டியெழுப்பல்" பற்றிய மத்திய முகாமைத்தவத்திற்கான ஒரு நாள் பயிற்சிப்பட்டறை | 75 |
| 05. | அகழ்வுத் துறையுடன் சம்பந்தப்பட்ட சு.தா.ம முக்கிய அம்சங்கள் மற்றிய பயிற்சிப்பட்டறை (சு.தா.ம பிரிவின் ஒத்துழைப்புடன்) | 55 |
| 06. | தொலைதொடர்பு கோபுரங்கள் பற்றிய அரை-நாள் பயிற்சித் திட்டம்(சு.மா.க பிரிவின் ஒத்துழைப்புடன் ) | 115 |
| 07. | காகிதாதிகள் மூலங்கள் மாசு பற்றிய அரை-நாள் பயிற்சி (சு.மா.க பிரிவின் ஒத்துழைப்புடன் ) | 45 |
| 08. | ம.சு.அ சாரதிகளுக்கு இரண்டு-நாள் வதிவிட பயிற்சி | 43 |
| 09. | வடமேல் மாகாண கள உத்தியோகத்தர்களுக்கு பரிசோதனை அறிக்கை தயாரித்தல் பற்றிய இரண்டு-நாள் பயிற்சி | 18 |
| 10. | ம.சு.அ பணியாளர்களுக்கு நிச்சயமற்ற மதிபீடுகள் பற்றிய பயிற்சி (ஜெய்க்கா கருத்திட்டத்தின் ஒத்துழைப்புடன்) | 19 |

| | | |
|---|---|---|
| 11. | வாகன புகை பரிசோதனை நிலையங்களை ஆய்வுசெய்தல் பற்றிய பயிற்சி(மோட்டார் வாகன திணைக்களத்தின் ஒத்துழைப்புடன்) | 95 |
| 12. | ம.சு.அ யின் கீழ் மட்ட ஊழியர்களுக்கான இரண்டு-நாள் வதிவிட பயிற்சிப்பட்டறை(குழு.1) | 23 |

(1) 2015ஆம் ஆண்டில், தற்போதைய சுற்றாடல்பிரச்சினைகள் மற்றும் பொதுவான பிரச்சினைகள் பற்றிய பணியாளரின் அறிவை இற்றைப்படுத்தும் நோக்கில் பிரமுகர்களின் விரிவுரைகள் வரிசையில் ஒரு பகுதியாக 09 விரிவுரைகள் ஒழுங்கமைக்கப்பட்டன.

## 15.1.2வெளிநாட்டுப் பயிற்சி

சுற்றாடல் மாசுக் கட்டுப்பாடு, அபாயகர கழிவு முகாமைத்துவம், திண்மக் கழிவு முகாமைத்துவம், வளித் தரம் கண்காணிப்பு, சுற்றுச்சூழல் நீர் தரம் கண்காணிப்பு, புவியியல் தகவல் முறைமை, சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் மதிப்பீடு மற்றும் சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வு போன்ற துறைகளில் பயிற்சி பெறுவதற்கான வாய்ப்பு 104 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டதுடன் 72 உத்தியோகத்தர்கள் பிரதானமாக குறுகிய-கால பயிற்சிக்காகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்

2015ஆம் ஆண்டில், 25 பூர்வாங்க விசாரணைகள் மற்றும்03 முறைசார்ந்த விசாரணைகள் மனித வளப்பிரிவால் கையாளப்பட்டன.

**மனிதவளங்கள் முகாமைத்துவ பிரிவு**

ம.சு.அ யின் அங்கீகரிக்கப்பட்ட மொத்த பதவியணி 2015.01.01 இல் உள்ளவாறு 1151 ஆகும்.ஆயினும், 2014.11.12 ஆம் திகதிய25/2014ஆம் இலக்க சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க மொத்த பதவியணியானது 1165 வரை அதிகரிக்கப்பட்டது. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் ஒப்புதலுடன் கள உதவியாளர் பதவிகள் 09 உருவாக்கப்பட்டன. பணிப்பாளர் (திட்டமிடல்) பதவியானது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் உருவாக்கப்பட்டது.

அதற்கிணங்க, ம.சு.அ யின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 2015.12.31 இல் உள்ளவாறு 1173ஆகும் என்பதுடன் தற்போதுள்ள பணியாட்களின் தொகையானது874 ஆகும்.

ம.சு.அ தலைவரான திரு.டி.டபிள்யூ. பிரதாபசிங்க 2015.01.21 ஆம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வருமாறு இராஜினாமா செய்தார். பேராசிரியர். மேர்வின் லால் தர்மசிறி அவர்கள்2015.02.02 ஆம் திகதி தலைவரராக தனது கடமைகளை ஏற்றுக்கொண்டார்.

ம.சு.அ பணிப்பாளர் நாயகம்கலாநிதி.சாரங்க அலஹபெரும, தனது பதவியை 2014 ஆம் ஆண்டு டிசம்பரில் இராஜினாமா செய்தார. அதனைத் தொடர்ந்து திரு.கே.எச் முத்துகுட ஆராச்சி பணிப்பாளர் நாயகமாக தனது கடமைகளை 2015.02.05 ஆம் திகதி ஏற்றுக்கொண்டார்.

அட்டவணை15.2: 2015ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஆட்சேர்ப்பு,பதவியுளர்வு,பதவி விலகல், பதவி இடைநிறுத்தம் மற்றும் பணிஓய்வு

| பதவி | | 2014 | | | |
|---|---|---|---|---|---|
| | | ஆட்சேர்ப்பு | பதவியுளர்வு | பதவி விலகல்/இடைநிறுத்தம்/இடமாற்றம் | இளைப்பாறல் |
| 2 | **மத்திய முகாமையாளர்** பிரதிப் பணிப்பாளர் | | | | |
| | உதவிப் பணிப்பாளர் | 01 | 01 | | |
| 3 | **இளநிலை முகாமையாளர்** தொழில்நுட்ப உத்தியோகத்தர் | | | 01 | |
| 4 | **அமுலாக்கம் / நீடிப்பு/இ.நடவடிக்கை** சிரேஸ்ட சுற்றாடல் உத்தியோகத்தர் | | 16 | | |
| | பிரதேச சுற்றாடல் உத்தியோகத்தர் / சுற்றாடல் உத்தியோகத்தர் | 28 | | 16 | |
| | உதவி சட்ட உத்தியோகத்தர் | 01 | | 01 | |
| 5 | **முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்)** | | | | |
| | மொழிபெயர்பாளர் | | | 01 | |
| 6 | **உள்ளக கணக்காய்வு உதவியாளர்** | | | 01 | |
| 7 | **ஆரம்ப மட்ட (தேர்ச்சி)** மோட்டார்வாகன மெக்கானிக் | 01 | | | |
| | போக்குவரத்து உதவியாளர் | | | | 01 |
| | சாரதி | 04 | | 01 | |
| 8 | **ஆரம்ப மட்ட (அரை-தேர்ச்சி)** | | | | |
| | இயந்திர இயக்குனர் | | | 01 | |
| 9 | **ஆரம்ப மட்ட (தேர்ச்சியற்ற)** கள உதவியாளர் | 01 | | | |
| | அலுவலக உதவியாளர் | 08 | | 02 | 01 |
| | | **44** | **17** | **24** | **02** |

மேற்படி பதவிகளுக்கு மேலதிகமாக, முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின்30(i) இலக்கசுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க இரண்டு (02)

சாரதிகள் ஆரம்ப மட்ட (தேர்ச்சி) சேவை வகுப்புIIற்கு பதவி உயர்வு செய்யப்பட்டனர் அத்துடன் ஒரு (01) அலுவலக உதவியாளர் ஆரம்ப மட்ட(தேர்ச்சியற்ற) சேவை வகுப்புIIற்கு பதவிஉயர்வு செய்யப்பட்டார்.

### 15.2.1 "பிலிசறு" தேசிய திண்ம கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம்

அட்டவணை15.3: பிலிசறு கருத்திட்டம் ஆட்சேர்ப்பு,பதவியுயர்வு, பதவி விலகல்

| பதவி | | 2015 | | |
|---|---|---|---|---|
| | | ஆட்சேர்ப்பு | பதவி விலகல் /இடமாற்றம் | இளைப்பாறல் |
| 1. | பிரதி கருத்திட்ட பணிப்பாளர் | | 01 | |
| 2. | கருத்திட்ட கணக்காளர் | 01 | | |
| 3. | கருத்திட்ட செயலாளர் | 01 | | |
| 4. | கருத்திட்ட உதவியாளர் | 03 | 01 | |
| 5. | கருத்திட்ட உத்தியோகத்தர்கள் | 02 | 01 | |
| 6. | உழுதுவிஞைநர் | 04 | 02 | |
| 7. | கருத்திட்ட பொறியியலாளர் | 01 | 01 | |
| 8. | கணக்கீட்டு உதவியாளர் | 01 | 01 | |
| 9. | சட்ட உதவியாளர் | | 01 | |
| | | **13** | **08** | |

### 15.2.2தேசிய நுகர்வுக்கு பின்னரான பிளாஸ்டிக் கழிவு முகாமைத்துவம் கருத்திட்டம்.

அட்டவணை15.4:தேசிய நுகர்வுக்கு பின்னரான பிளாஸ்டிக் கழிவு முகாமைத்துவம் கருத்திட்டத்தில் ஆட்சேர்ப்பு,பதவி ஒயர்வு,பதவி விலகல்

| பதவி | | 2015 | | |
|---|---|---|---|---|
| | | ஆட்சேர்ப்பு | பதவி விலகல் /இடமாற்றம் | இளைப்பாறல் |
| 1. | இளநிலை கணக்காளர் | 01 | | |
| | | **01** | | |

### 15.2.3 திண்ம கழிவு அகற்றல் வசதி நிர்மாணம்கருத்திட்டம்

அட்டவணை15.5: EDCF கருத்திட்டஆட்சேர்ப்பு,பதவி ஒயர்வு,பதவி விலகல்

| பதவி | | 2015 | | |
|---|---|---|---|---|
| | | ஆட்சேர்ப்பு | பதவி விலகல் /இடமாற்றம் | இளைப்பாறல் |
| 1. | கருத்திட்ட கணக்காளர் | 01 | | |

| பதவி | | 2015 | | |
|---|---|---|---|---|
| | | ஆட்சேர்ப்பு | பதவி விலகல் /இடமாற்றம் | இளைப்பாறல் |
| 2. | கருத்திட்ட பொறியியலாளர் | | 01 | |
| | | **01** | **01** | |

## 15.3 நிதிப் பிரிவு

2015.12.31 ஆம் திகதியில் முடிவடைந்த நிதியாண்டுக்கான நிதிசார் கூற்றுகளின் குறிப்புகள்

கணக்கீட்டுக் கொள்கைகள்

### 15.3.1 .கூட்டாண்மை தகவல்

நிலையகம் மற்றும் சட்டவடிவம்
மத்திய சுற்றாடல் அதிகார சபையானது ஓர் நியதிச்சட்ட அமைப்பாகும். அதன் தலைமையகமானது இல 104,“பரிசரபியச” டெண்சில் கொப்கேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல, இலங்கை என்ற அமைவிடத்தல் அமைந்துள்ளது.

**பிரதான செயற்பாடுகளும் நடவடிக்கைகளின் இயல்பும்**
எமது தொழில்நுட்ப நிபுணத்துவம் மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த மாசுக்கட்டுப்பாடு, இயற்கைவளங்கள் மீதான முகாமைத்துவம் மற்றும்சுற்றாடல் கல்வி ஆகியவற்றின் ஊடாக சுற்றாடலை பாதுகாத்து அதன் தரத்தை மேம்படுத்தல்மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பிரதான நடவடிக்கைகள் ஆகும்.

ஊழியர்களின் எண்ணிக்கை
இவ்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ஊழியர்களின் எண்ணிக்கையானது 874 ஆகும்.

தயாரிப்பின் அடிப்படை
இணக்கப்பாட்டு கூற்று

நிதிசார் நிலைமை பற்றிய கூற்று,நிதிசார் செயலாற்றுகை கூற்று,காசுப் பாய்ச்சல் கூற்று, பங்கு மாற்றங்கள் பற்றிய கூற்று மற்றும்நிதிசார் கூற்றுக்களின் குறிப்புகள் ஆகியவற்றைமத்திய சுற்றாடல் அதிகார சபையின் நிதிசார் கூற்றுக்கள் உள்ளடக்குகின்றன.
இந்த கூற்றுக்கள் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தால் விதிக்கப்பட்டுள்ள இலங்கை பொதுத்துறை கணக்கியல் நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன.

### 15.3.2 அளவீட்டின் அடிப்படை

நிதிசார் கூற்றுக்கள் வரலாற்றுச் செலவின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன

நிதிசார் கூற்றுக்களில் பணவீக்க காரணிகளுக்கான சீராக்கங்கள் எதுவும் இடம்பெறவில்லை.

**நாணய சமர்ப்பனம் மற்றும் செயற்பாடு**
இந்த நிதிசார் கூற்றுக்கள் இலங்கை ரூபாய்களில் சமர்ப்பிக்கப்படுகின்றது. ம.சு.அ யின் செயற்பாட்டு நாணயமாகஇலங்கை ரூபாய்களே செயற்படுகின்றன.

குறிப்பிடத்தக்க கணக்கியல் கொள்கைகள்
கீழே கொடுக்கப்பட்டுள்ள கணக்கியல் கொள்கைகளானது இந்த நிதிக் கூற்றுக்களில் உள்ள அனைத்து கால அளவுக்கும் சீரான முறையில் பிரயோகிக்கப்பட்டுள்ளன.

### 15.3.3 ஆதணம், பொறி மற்றும் உபகரணம்

ஆதணம், பொறி மற்றும் உபகரணங்களின் கொள்விலையானது அவற்றை பயன்படுத்தும்

நோக்கத்திற்காக தொழில்படுநிலைக்கு கொண்டு வருவதாக ஏற்பட்ட செலவுகளுடான கொள்வனவு செலவுகளையும் கொண்டிருக்கும். ஒரு சொத்தை ஆரம்பத்தில் கிரயத்தில் அங்கீகரித்ததன் பின்னர், மீள் மதிப்பிடப்பட்ட சொத்துக்கள் அவற்றுக்கு பின்னர் ஏற்படும் தேய்மானத்தை கழித்து மீள் மதிப்பிப்படும்.கிரயத்தில் அல்லது மதிப்பீட்டிலிருந்து திரண்ட தேய்மானத்தை கழித்த பின்னரே அனைத்து ஆதனங்கள், பொறி மற்றும் உபகரணங்கள் பதிவு செய்யப்படுகின்றன. ஆதனம், அல்லது உபகரணமொன்று பல்வேறு பயன்பாட்டு ஆயுலை கொண்டிருக்குமாயின் அவை தனியான ஆதனம், பொறி அல்லது உபகரணங்களாக கணக்கெடுக்கப்படும்.

ஆதனத்தின் எஞ்சிய பெறுமானம், பயன்படு ஆயுட் காலம் மற்றும் தேய்மான முறைகள் என்பன மீளாய்வு செய்யப்பட்டு ஒவ்வொரு நிதியாண்டின் முடிவில் பொறுத்தமாயின் சீராக்கப்படுகின்றன.

### 15.3.4 ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - மானியமாக கிடைக்கப்பெற்றவை

மானியத்தின் கீழ் பெறப்படும்ஏதும் ஆதனம், பொறி மற்றும் உபகரணம் ஆகியன கிரயத்தில் மூலதனமாக்கப்படுகின்றன.
கிரயத்திலிருந்து திரண்டபெறுமானத் தேய்வு கழிக்கப்பட்ட பின்னரேஆதனம், பொறி, உபகரணம் மற்றும் ஏனைய இறையிலி காணிகள்கிரயத்தில் பதியப்படுகின்றன. இறையிலி காணிகள் கிரயத்தில் பதியப்படுகின்றன.

ஆயட் காலத்திற்கேற்ப குறிப்பிட்ட தொகைகளை பதிவளிப்பதற்காக இறையிலிகாணி தவிர்ந்த சகல ஆதனங்கள் பொறி மற்றும் உபகரணங்களின் கிரயத்திற்கு நேர்கோட்டு முறையை பயன்படுத்தி பெறுமானத்தேய்வு ஏற்பாடுகள் கணக்கிடப்படுகின்றன

பயன்பாட்டிற்கு எடுக்கக்கூடிதாக உள்ள திகதியில் இருந்துஅகற்றுதல் இடம் பெறும் திகதி வரையில ஆதனத்திற்கு தேய்மானம் வழங்கப்பட்டுள்ளது.
மேல் குறிப்பிட்டதை போன்று ஆதனம், பொறி, உபகரணங்கள் என்பன கீழே குறிப்பிட்டுள்ளதைப் போல் நேர்கோட்டு முறையில் மதிப்பிறக்கம் செய்யப்படுகின்றது.மேலும் ஆதனம், பொறி மற்றும் உபகரணம் என்பன எஸ்.எல்.எஸ்.ஏ.எஸ்-7 இல் குறித்துரைக்கப்பட்டவாறு கிரயத்தின் முறையில் கணக்கிடப்படுகின்றது.
மோட்டர் வாகனங்கள் வருடமொன்றுக்கு 25%
தளபாடம், அலுவலக உபகரணங்கள் வருடமொன்றுக்கு 10%
ஆய்வுகூட உபகரணங்கள் வருடமொன்றுக்கு 10%
நூலகம் புத்தகங்கள் வருடமொன்றுக்கு 2.5%
கட்டிடங்கள் வருடமொன்றுக்கு 2.5%
தொம்பே கழிவு அகற்றல் அமைவிடம்வருடமொன்றுக்கு 2.5%

ஆதனம், பொறி மற்றும் உபகரணமொன்று கையுதிர்தல் வேலையில் அல்லது பயன்பாடு அல்லது கையுதிர்தல் மூலம் எதிர்கால பொருளாதார பயன்கள் எதிர்பார்க்கப்படாத வேலையில் ஏற்றங்கீக்கப்படாத நிலைக்கு உள்ளாகின்றது.ஏற்றங்கீகரிக்கபடாமை காரணமாக தவறவிடப்படும் யாதேனும் ஒரு ஆதாயயீட்டல் அல்லது இழப்பு (நிகர கையுதிர்தல் வருமானம் மற்றும் சொத்தின் காவுத்தொகை ஆகியவற்றுக்கு இடையிலான வித்தியாசம் கணக்கிடப்படுகின்றது) ஏற்றங்கீகரிக்கப்படாத வருடத்தின் வருமானக் கூற்றில் உள்ளடக்கப்படுகின்றது.

செயலாற்றுகை தரத்தின் ஆரம்ப மதிப்பிட்டிலிருந்து எதிர்பார்க்கப்படும் எதிர்கால

பொருளாதார பயன்களை மீள் நிறுவல் அல்லது பேனும் முகமாக ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் பழுதுபார்த்தல் அல்லது பேனுகை தொடர்பாக ஏற்படும் செலவினமானது ஒரு செலவாக ஏற்றங்கரீக்கப்படுகின்றது.

### 15.3.5 பொருட் பட்டியல்கள்

நிதியாண்டில் உபயோகித்த கையிருப்புக்கள் வருமானம் மற்றும் செலவினத்தின் கிரயத்தில் அறவிடப்படுகின்றது. எஞ்சிய கையிருப்பானது கிரயத்தில், விற்பனை விலையில் அல்லது நிகர காசு மதிப்பு இவற்றில் எது குறைவாகவுள்ளதோ அதன் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படுகின்றது.
இரசாயனப் பொருட்கள் மற்றும் கண்ணாடிப் பொருட்களை பொருத்த மட்டில் ஆண்டில் இடம்பெற்ற ஒட்டுமொத்த கொள்வனவும் உபயோக பொருட்களாக கருதப்படும். இவ்வகையான பொருட்களை அளவீடு செய்வதில் உள்ள சிரமம் காரணமாகவும் இந்த முறை பின்பற்றுப்பட்டது. பயன்பாடானது ஒப்பீட்டளவில் குறைவான செலவினத்தை கொண்டதாலும் இந்த முறை பின்பற்றப்பட்டது.

### 15.3.6 குறுகிய தவனை முதலீடு

மூன்று மாதங்களுக்கு மேலான முதிர்வடைவு காலத்தை கொண்ட நிதிச்சந்தை சாதனங்களில் செய்யும் முதலீடுகளானது குறுகிய தவணை முதலீடுகளாக கருதப்பட்டு கிரயத்தில் பதியப்படும்

### 15.3.7 காசும் காசிற்கு நிகரானவைகளும்

காசும் காசிற்கு நிகரானவையும் கையிலுள்ள காசையும் வங்கி வைப்புக்களையும் உள்ளடக்குகின்றது.

### 15.3.8 காசுப்பாய்ச்சல் கூற்று

காசுப்பாய்ச்சல் கூற்றானது மறைமுக முறையை பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளன

### 15.3.9 பொறுப்புகளும் ஏற்பாடுகளும்

கடந்த கால சம்பவங்களின் விலைவாக ஏற்றபட்டுள்ள தற்போதைய கடப்பாடு ஒன்று இருக்கும் வேளையிலும், அதன் தீர்வானது பொருளாதார பயன்களை உள்ளடக்கிய வளங்களின் வெளிப்பாயச்சல் ஒன்றின் விளைவக்கு இட்டுச் செல்வதாக எதிர்பாக்கப்படும் வேளையில் பொறுப்புக்கள் ஐந்தொகையில் ஏற்று அங்கீகரிக்கப்படுகின்றன.கடனாளிகளின் கோரிக்கையின் பேரில் அல்லது ஐந்தொகை திகதியில் இருந்து ஒரு வருடத்திற்குள் செலுத்த வேண்டிய கடப்பாடுகள் நடைமுறை பொறுப்புகளாக ஐந்தொகையிலகருதப்படுகின்றன.

நம்பத்தக்க வகையில் மதிப்பீடு செய்யக்கூடிய தற்போதய சட்ட அல்லது ஆக்கப்பூர்வமான கடப்பாடொன்று கடந்த கால நிகழ்வொன்றின் விளைவாக ம.சு.அ கொண்டிருக்குமானல், ஏற்பாடு ஏற்று அங்கீகரிக்கப்படுகின்றதுடன்,கடப்பாட்டை தீர்ப்பதற்காக பொருளாதார பயன்களின் வெளிப்பாய்ச்சல் அவசியப்படும் என்தும் சாத்தியமே.

### 15.3.10 வரியிடல்

வரி செலவுகள் நிதிசார் கூற்றில் அறிக்கையிடப்படுவதுடன் 2006 ஆண்டில் 10ம் இலக்க இறைவரி வருமான ஏற்பாடு மற்றும் அதன் திருத்தங்களுக்கு இணங்க கணக்கிடப்பட்டுள்ளது.

### 15.3.11ஊழியர் பயன்கள்

I. வரையறுத்த பங்களிப்பு திட்டம்

| **குறிப்பு 17** | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **கையிருப்பு** | | | | | | | | |
| காகிதாதிகள் மற்றும் அலுவலக தேவைகள் | 2,491 | 2,009 | - | - | - | - | 2,491 | 2,009 |
| புத்தகங்கள் மற்றும் வெளியீடுகள் | 2,206 | 1,222 | - | - | - | - | 2,206 | 1,222 |
| மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் | 145 | 462 | - | - | - | - | 145 | 462 |
| மின்சார உபகரணங்கள் | 9 | 14 | - | - | - | - | 9 | 14 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| கள உத்தியோகத்தர் மோட்டார் சைக்கிள் | - | 6,536 | - | - | - | - | - | 6,536 |
| பசளை தொட்டிகள் | - | - | 74 | 240 | - | - | 74 | 240 |
| ஊக்குவிப்பு சாதனங்கள் | - | - | 120 | 191 | - | - | 120 | 191 |
| **மொத்தம்** | **4,850** | **10,243** | **194** | **430** | **-** | **-** | **5,044** | **10,673** |

அட்டவணை15.26: குறிப்பு 18

| | | ம.சு.அ | | பிலிசறு கருத்திட்டம் | | EDCF கருத்திட்டம | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | **2015** | **2014** | **2015** | **2014** | **2015** | **2014** | **2015** | **2014** |
| **<u>குறிப்பு 18</u>** | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **<u>பெறத்தக்கவை</u>** | | - | - | 737 | - | 9 | - | 746 | - |
| நானாவித முற்பனம் | 18.1 | 17 | 177 | - | - | - | - | 17 | 177 |
| கொள்முதல் முற்பனம் | 18.2 | 270 | 1,202 | - | - | - | - | 270 | 1,202 |
| பெறத்தக்க வைப்பீடுகள் | 18.3 | 1,334 | 1,138 | - | - | - | - | 1,334 | 1,138 |
| பனம்மோட்டார் சைக்கிள் கடன்-சாரதிகள் | 18.4 | 1,247 | 1,459 | - | - | - | - | 1,247 | 1,459 |
| சு.தா.ம முற்பனம் | 18.5 | 31 | 202 | - | - | - | - | 31 | 202 |
| பிளாஸ்டிக் கழிவு பண முற்பனம் | 18.6 | 0 | 4 | - | - | - | - | 0 | 4 |
| இடர் உதவிக்கடன் | | 76,976 | 70,599 | - | - | - | - | 76,976 | 70,599 |
| விழுா முற்பனம் | | 353 | 796 | 14 | - | - | - | 366 | 796 |
| குடும்ப வைத்திய காப்புறுதி | | 250 | 261 | - | - | - | - | 250 | 261 |

| | | ம.சு.அ | | பிலிசறு கருத்திட்டம் | | EDCF கருத்திட்டம | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | **2015** | **2014** | **2015** | **2014** | **2015** | **2014** | **2015** | **2014** |
| **குறிப்பு 18** | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| பனம்விசேட முற்பனம் | | 1,465 | 58 | - | - | - | - | 1,465 | 58 |
| சேர்பெறுமதி வரி பெறத்தக்கவை | | 4,822 | 2,400 | - | - | - | - | 4,822 | 2,400 |
| காசு பணிச்செலவு | | 60 | 60 | - | - | - | - | 60 | 60 |
| மாலே கருத்திட்டம்(எரிபொருள் செலவு) பெறத்தக்கவை | | 459 | 330 | - | - | - | - | 459 | 330 |
| முற்பனம் திரட்டல் -நிரோன் என்டர்பிரைஸ் | | 9,284 | - | - | - | - | - | 9,284 | - |
| பிலிசறு கருத்திட்டம் பெறத்தக்கவை | | 315 | - | - | - | - | - | 315 | - |
| சம்பள முற்பனம் | | 43 | - | - | - | - | - | 43 | - |
| கடல்சார் சுற்றாடல் மாசு அதிகாரசபை | | 396 | - | - | - | - | - | 396 | - |
| பெறத்தக்க வாடகை-பிளாஸ்டிக் மற்றும் பிலிசறு கருத்திட்டம் | | - | 1,076 | - | - | - | - | - | 1,076 |
| வைத்திய கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம்(Sisil Hanaro Encare) | | - | 6,000 | - | - | - | - | - | 6,000 |
| **மொத்தம்** | | **97,321** | **85,761** | **751** | **-** | **9** | **-** | **98,081** | **85,761** |

அட்டவணை15.27: குறிப்பு 19

| | | ம.சு.அ | | பிலிசறு கருத்திட்டம் | | EDCF கருத்திட்டம | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2015 | 2014 | 2015 | 2014 | 2015 | 2014 | 2015 | 2014 |
| **<u>குறிப்பு 19</u>** | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **<u>மீள்கொடுப்பனவுகள்</u>** | | | | | | | | | |
| முற்பண கொடுப்பனவு | 19.1 | 4,574 | 4,508 | 2,921 | 200 | - | - | 7,495 | 4,708 |
| பிலாஸ்டிக் கழிவு முகாமைத்துவ முற்பனம் செலவுத்தொகை | | 49 | 1,000 | - | - | - | - | 49 | 1,000 |
| **மொத்தம்** | | **4,623** | **5,508** | **2,921** | **200** | **-** | **-** | **7,543** | **5,708** |

அட்டவணை15.28: குறிப்பு 20

| | ம.சு.அ | | பிலிசறு கருத்திட்டம் | | EDCF கருத்திட்டம் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2015 | 2014 | 2015 | 2014 | 2015 | 2014 | 2015 | 2014 |
| குறிப்பு 20 | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **<u>காசு மற்றும் காசுக்கு நிகரானவைகள்</u>** | | | | | **-** | **714** | - | 714 |
| இலங்கை வங்கி, பெலவத்தை-பிரதான கணக்கு இல 0002937303 | 147,541 | 87,407 | - | - | - | - | 147,541 | 87,407 |
| இலங்கை வங்கி, பெலவத்தை- மாலே 0002972309 | 1,404 | 1,936 | - | - | - | - | 1,404 | 1,936 |
| இலங்கை வங்கி, பெறுநிறுவன கிளை, 1608 | 5,219 | 8,093 | - | - | - | - | 5,219 | 8,093 |
| இலங்கை வங்கி, பெலவத்தை, Polycess 2937361 | 2,265 | 1,775 | - | - | - | - | 2,265 | 1,775 |
| இலங்கை வங்கி, பெலவத்தை - DEO - 2937330 | - | - | - | - | - | - | - | - |
| வங்கியிலுள்ள பணம் | - | - | - | 22,318 | - | - | - | 22,318 |
| காசு முற்பனம் | - | - | - | 30 | - | - | - | 30 |
| **மொத்தம்** | **156,429** | **99,210** | **-** | **22,348** | **-** | **714** | **156,429** | **122,273** |

அட்டவணை15.29: குறிப்பு 21

| | | ம.சு.அ | | பிலிசறு கருத்திட்டம் | | EDCF கருத்திட்டம் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2015 | 2014 | 2015 | 2014 | 2015 | 2014 | 2015 | 2014 |
| **குறிப்பு 21** | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **செலுத்தப்படவேண்டியவை** | | | | | | | | | |
| செலுத்தப்படவேண்டிய வைப்பீடு | 21.1 | 53 | 53 | - | - | - | - | 53 | 53 |
| சு.தா.ம கருத்திட்டம் | 21.2 | 70,537 | 66,286 | - | - | - | - | 70,537 | 66,286 |
| மோட்டார் சைக்கிள்களுக்காக பெற்றுக்கொண்ட முற்பனம் | | 454 | - | 350 | 350 | 6 | 6 | 810 | 356 |
| தீரும்பவும் பெறத்தக்க கேள்விப்பத்திர வைப்பு | | 1,607 | 1,266 | - | - | - | - | 1,607 | 1,266 |
| வைத்திய காப்புறுதி கோரிக்கைகள் | | 312 | 143 | - | - | - | - | 312 | 143 |
| மேல் கொத்மலை நீர் தரம் | | 728 | 728 | - | - | - | - | 728 | 728 |
| செலுத்தவேண்டிய முத்திரை வரி | | 2,907 | 2,168 | - | - | - | - | 2,907 | 2,168 |
| முற்பனமாக கிடைத்த வட்டி(நிலையான வைப்பீடுகள்) | | 293 | 323 | - | - | - | - | 293 | 323 |
| வாடகை கட்டணம் | | 505 | 496 | 16,785 | 21,008 | - | - | 17,290 | 21,504 |
| மோட்டார் சைக்கிள் காப்புறுதி | | 70 | 70 | - | - | - | - | 70 | 70 |
| பேசல் உடன்படிக்கை நடைமுறையாக்கம் | | 174 | 174 | - | - | - | - | 174 | 174 |
| திண்ம கழிவு முகாமைத்துவ படி(DO) | | 3 | 3 | - | - | - | - | 3 | 3 |
| யுனிலங்கா பாதுகாப்பு சேவை | | 300 | - | - | - | - | - | 300 | - |

| | | ம.சு.அ | | பிலிசறு கருத்திட்டம் | | EDCF கருத்திட்டம் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2015 | 2014 | 2015 | 2014 | 2015 | 2014 | 2015 | 2014 |
| **குறிப்பு 21** | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| பிலிசறு முற்பன நிலுவை | | 8 | - | - | - | - | - | 8 | - |
| மீட்டல்-கமரா | | - | 60 | - | - | - | - | - | 60 |
| | | | | | | | | | |
| **மொத்தம்** | | **77,951** | **71,769** | **17,135** | **21,358** | **6** | **6** | **95,091** | **93,134** |

அட்டவணை15.30: குறிப்பு 22

| | ம.சு.அ | | பிலிசறு கருத்திட்டம் | | EDCF கருத்திட்டம் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2015 | 2014 | 2015 | 2014 | 2015 | 2014 | 2015 | 2014 |
| **குறிப்பு 22** | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **அட்டுறுச் செலவு** | - | - | - | - | 275 | 897 | 275 | 897 |
| சம்பளங்களும் வேதனங்களும் | 4,399 | 3,567 | - | - | - | - | 4,399 | 3,567 |
| ஊழியர் சேமலாப நிதியம் | 5,677 | 4,581 | - | - | - | - | 5,677 | 4,581 |
| ஊழியர் நம்பிக்கை நிதியம் | 1,135 | 916 | - | - | - | - | 1,135 | 916 |
| மேலதிக நேரம் | 628 | 614 | - | - | - | - | 628 | 614 |
| உள்ளூர் போக்குவரத்து | 3,018 | 1,554 | - | - | - | - | 3,018 | 1,554 |
| வெளிநாட்டு போக்குவரத்து | 28 | 3 | - | - | - | - | 28 | 3 |
| கட்டிட பழுதுபார்தலும் பேணுகையும் | 397 | 477 | - | - | - | - | 397 | 477 |
| அலுவலக உபகரணங்கள் பழுதுபார்தலும் | 81 | 65 | - | - | - | - | 81 | 65 |

| | ம.சு.அ | | பிலிசறு கருத்திட்டம் | | EDCF கருத்திட்டம் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2015 | 2014 | 2015 | 2014 | 2015 | 2014 | 2015 | 2014 |
| **குறிப்பு 22** | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| பேணுகையும | | | | | | | | |
| பாதுகாப்பு கட்டணங்கள் | 2,128 | 4,722 | - | - | - | - | 2,128 | 4,722 |
| மின்சாரக் கட்டணங்கள் | 907 | 1,755 | - | - | - | - | 907 | 1,755 |
| எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கி | 2,823 | 2,543 | - | - | - | - | 2,823 | 2,543 |
| காகிதாதிகள் | 643 | 299 | - | - | - | - | 643 | 299 |
| தொலைதொடர்பாடல் | 967 | 931 | - | - | - | - | 967 | 931 |
| பத்திரிகை | 19 | 31 | - | - | - | - | 19 | 31 |
| நீர்வினியோகம் | 59 | 50 | - | - | - | - | 59 | 50 |
| சேர் பெறுமதி வரி (அட்டுறுச்செலவுகளுக்கான செலவுகள்) | 1,015 | 263 | - | - | - | - | 1,015 | 263 |
| கணக்காய்வு கட்டணங்கள் | 2,543 | 2,043 | - | - | - | - | 2,543 | 2,043 |
| அலுவலக கட்டிட வாடகை | 75 | 27 | - | - | - | - | 75 | 27 |
| பிளாஸ்டிக் செலவுகள் | 31 | 320 | - | - | - | - | 31 | 320 |
| தேசத்தை கட்டியெழுப்பும் வரி | 429 | 682 | - | - | - | - | 429 | 682 |
| இடர் உதவிக்கடன்-முத்திரை வரி | 1 | 0 | - | - | - | - | 1 | 0 |
| தே.வ.மு பிரிவு | 234 | 300 | - | - | - | - | 234 | 300 |
| திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு | 300 | 111 | - | - | - | - | 300 | 111 |

| | ம.சு.அ | | பிலிசறு கருத்திட்டம் | | EDCF கருத்திட்டம் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2015 | 2014 | 2015 | 2014 | 2015 | 2014 | 2015 | 2014 |
| **குறிப்பு 22** | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| சு.மா.க பிரிவு(ஆய்வுகூடம்) | 39 | 561 | - | - | - | - | 39 | 561 |
| நானாவித செலவுகள் | 61 | 3 | - | - | - | - | 61 | 3 |
| மாசு கட்டுப்பாட்டு பிரிவு | 59 | 390 | - | - | - | - | 59 | 390 |
| அலுவலக உபகரணங்கள் | 22 | 2,056 | - | - | - | - | 22 | 2,056 |
| அலுவலக தளபாடம் | 156 | 2,306 | - | - | - | - | 156 | 2,306 |
| பாடசாலை நிகழ்ச்சித்திட்டம்-திறைசேரி | 109 | 220 | - | - | - | - | 109 | 220 |
| WIP மூலதனம் சொத்துக்கள் | 15,533 | 3,496 | - | - | - | - | 15,533 | 3,496 |
| வைத்திய விடுமுறை பணம் பெறல் | 31,057 | 22,812 | - | - | - | - | 31,057 | 22,812 |
| தேசிய நிகழ்வுகள் | 142 | 13 | - | - | - | - | 142 | 13 |
| பாடசாலை நிகழ்ச்சித்திட்டம்-அமைச்சு | 3,683 | 43 | - | - | - | - | 3,683 | 43 |
| நலன்புரி செலவுகள் | 251 | 70 | - | - | - | - | 251 | 70 |
| காப்புறுதி | 498 | 400 | - | - | - | - | 498 | 400 |
| பொருளாதார சேவை கட்டணங்கள் | 138 | 155 | - | - | - | - | 138 | 155 |
| அபாயகர கழிவு முகாமைத்துவம் பிரிவு | 528 | 27 | - | - | - | - | 528 | 27 |
| மோட்டார் வாகன பழுதுபார்த்தல் மற்றும் பேணுகை | 562 | - | - | - | - | - | 562 | - |
| ஆய்வுகூடம் மேம்பாடு | 528 | - | - | - | - | - | 528 | - |
| வைத்திய கழிவு முகாமைத்துவம் | 15,092 | - | - | - | - | - | 15,092 | - |

| | ம.சு.அ | | பிலிசரு கருத்திட்டம் | | EDCF கருத்திட்டம் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2015 | 2014 | 2015 | 2014 | 2015 | 2014 | 2015 | 2014 |
| குறிப்பு 22 | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| பசுமை விருதுகள் | 16 | - | - | - | - | - | 16 | - |
| ஆய்வுகூட இரசாயணப்பொருள் கொள்முதல் | 216 | - | - | - | - | - | 216 | - |
| உறுப்புரிமை கட்டணம் | 3 | - | - | - | - | - | 3 | - |
| மோட்டார் சைக்கிள் கடன் | 0 | - | - | - | - | - | 0 | - |
| உள்ளூர் அதிகார சபை/ நிறுவனம் | - | - | 195,281 | 180,466 | - | - | 195,281 | 180,466 |
| செலுத்தவேண்டிய பணிக்கொடை | 0 | - | - | - | - | - | 0 | - |
| சட்டச் செலவுகள் | 2 | - | - | - | - | - | 2 | - |
| இ-கழிவு நிகழ்ச்சித்திட்டம் | 233 | - | - | - | - | - | 233 | - |
| கொய்கா கருத்திட்டம் | 139 | - | - | - | - | - | 139 | - |
| சு.க.வி பிரிவு- 319 | 1,170 | - | - | - | | - | 1,170 | - |
| ஜைகா கருத்திட்டம் | 1,385 | - | - | - | - | - | 1,385 | - |
| ஆய்வுகூடம் மேம்பாடு-413 | 16,459 | - | - | - | - | - | 16,459 | - |
| உள்ளூர் பயிற்சி | - | 119 | - | - | - | - | - | 119 |
| ஆய்வுகூட உபகரணம் | - | 191 | - | - | - | - | - | 191 |
| ஆக்கிரமிப்பு தாவரங்கள் அகற்றல் | - | 25 | - | - | - | - | - | 25 |
| SAICM சுற்றாடல் மாசு கட்டுப்பாடு | - | 16 | - | - | - | - | - | 16 |
| VET செலவுகள் | - | 38 | - | - | - | - | - | 38 |
| பாடசாலை நிகழ்ச்சித்திட்டம் | - | 958 | - | - | - | - | - | 958 |
| ICES நிகழ்ச்சித்திட்டம் | - | 26 | - | - | - | - | - | 26 |
| புவியியல் தகவல் பிரிவு | - | 2 | - | - | - | - | - | 2 |
| தபால் செலவு | - | 2 | - | - | - | - | - | 2 |

| | ம.சு.அ | | பிலிசறு கருத்திட்டம் | | EDCF கருத்திட்டம் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2015 | 2014 | 2015 | 2014 | 2015 | 2014 | 2015 | 2014 |
| குறிப்பு 22 | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| சுற்றாடல் பேணுகை | - | 290 | - | - | - | - | - | 290 |
| முன்பள்ளி | - | 50 | - | - | - | - | - | 50 |
| முத்திரை வரி | - | 0 | - | - | - | - | - | 0 |
| **மொத்தம்** | **115,616** | **60,124** | **195,281** | **180,466** | **275** | **897** | **311,172** | **241,487** |

அட்டவணை15.31: குறிப்பு 23

| - | ம.சு.அ | | பிலிசறு கருத்திட்டம் | | EDCF கருத்திட்டம் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| - | 2015 | 2014 | 2015 | 2014 | 2015 | 2014 | 2015 | 2014 |
| குறிப்பு 23 | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **மீண்டெழும் மானியங்கள்** | | | | | | | | |
| மாலைதத்தீவு பிரகடனம் | 2,550 | 3,084 | - | - | - | - | 2,550 | 3,084 |
| பிளாஸ்டிக் கழிவு மானியம் | 16,815 | 16,316 | - | - | - | - | 16,815 | 16,316 |
| புவியியல் தகவல் முறைமை கருத்திட்டம் | 67 | 67 | - | - | - | - | 67 | 67 |
| சுற்றாடல் மாசு நடவடிக்கை பற்றிய தரவுத்தளம் அபிவிருத்தி | 111 | 111 | - | - | - | - | 111 | 111 |
| பாரிய அளவிலான நீர் தரம மானியங்கள் | 660 | 660 | - | - | - | - | 660 | 660 |
| KITA மானியம் | 106 | 106 | - | - | - | - | 106 | 106 |
| நீர் தரம் கண்காணிப்பு நிகழ்ச்சித்திட்டம் | | | - | - | - | - | 265 | |

| - | ம.சு.அ | | பிலிசறு கருத்திட்டம் | | EDCF கருத்திட்டம் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| - | 2015 | 2014 | 2015 | 2014 | 2015 | 2014 | 2015 | 2014 |
| **குறிப்பு 23** | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| | 265 | 265 | | | | | | 265 |
| சமுதாயம் சார் நீர் தரம் முகாமைத்துவம் | 526 | 526 | - | - | - | - | 526 | 526 |
| மூன்று பிரதான நீர் நிலைகளில் நீர் தரம் | 291 | 291 | - | - | - | - | 291 | 291 |
| ம.சு.அ ஆய்வுகூட மேம்பாடு- 2013 | 19,268 | 2,326 | - | - | - | - | 19,268 | 2,326 |
| ம.சு.அ ஆய்வுகூட மேம்பாடு - 2012 | 857 | 857 | - | - | - | - | 857 | 857 |
| தேசிய தகவல் நிலையம் மேம்பாடு | 94 | 94 | - | - | - | - | 94 | 94 |
| சர்வதேச இரசாயண முகாமைத்துவ மூலோபாய அணுகுமுறை அபாயகர கழிவு முகாமைத்துவம் | 599 | 1,336 | - | - | - | - | 599 | 1,336 |
| சர்வதேச இரசாயண முகாமைத்துவ மூலோபாய அணுகுமுறை சுற்றாடல் மாசு கட்டுப்பாடு | 3,716 | 3,782 | - | - | - | - | 3,716 | 3,782 |
| பாடசாலை பசுமையாக்கம்-- எச்.என்.பீ அசுவரண்ஸ் | 68 | 68 | - | - | - | - | 68 | 68 |
| பாடசாலை முன்னோடி நிகழ்ச்சித்திட்டம் | 2,277 | 137 | - | - | - | - | 2,277 | 137 |
| சுற்றாடல் பேணுகை கருத்திட்டம் | 692 | 690 | - | - | - | - | 692 | 690 |
| ஈர தினம்-2016 | 468 | - | - | - | - | - | 468 | - |
| களனி நதி மானியம் | 1,038 | - | - | - | - | - | 1,038 | - |
| நீர் தரம் - பாரிய நீர் நிலைகள் | 1,512 | - | - | - | - | - | 1,512 | - |
| தேசிய பசுமை விருது மானியம் | | - | - | - | - | - | 290 | - |

| - | ம.சு.அ | | பிலிசறு கருத்திட்டம் | | EDCF கருத்திட்டம் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| - | **2015** | **2014** | **2015** | **2014** | **2015** | **2014** | **2015** | **2014** |
| **குறிப்பு 23** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| | 290 | | | | | | | |
| பசுமை கருத்திட்ட மானியம | 67 | - | - | - | - | - | 67 | - |
| பாதுகாப்பான கையடக்க தொலைபேசி அகற்றல் பற்றிய கருத்திட்டம் | 304 | - | - | - | - | - | 304 | - |
| இ-கழிவு மானியம் | - | 470 | - | - | - | - | - | 470 |
| ஈரநிலம் தினம் CBL | - | 191 | - | - | - | - | - | 191 |
| ICES பாடநெறி மானியம் | - | 232 | - | - | - | - | - | 232 |
| மருத்தவ கழிவு அகற்றல் நிகழ்ச்சித்திட்டம் | - | 1,347 | - | - | - | - | - | 1,347 |
| **மொத்தம்** | **52,639** | **32,957** | **-** | **-** | **-** | **-** | **52,639** | **32,957** |

அட்டவணை15.32: குறிப்பு 24

| - | ம.சு.அ | | பிலிசறு கருத்திட்டம் | | EDCF கருத்திட்டம் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| - | **2015** | **2014** | **2015** | **2014** | **2015** | **2014** | **2015** | **2014** |
| **குறிப்பு 24** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| பணிக்கொடை ஏற்பாடு | 227,134 | 176,821 | 163 | 66 | - | - | 227,297 | 176,887 |
| - | | | | | | | | |
| **மொத்தம்** | **227,134** | **176,821** | **163** | **66** | **-** | **-** | **227,297** | **176,887** |

அட்டவணை15.33: குறிப்பு 25

| | ம.சு.அ | | பிலிசரு கருத்திட்டம் | | EDCF கருத்திட்டம் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2015 | 2014 | 2015 | 2014 | 2015 | 2014 | 2015 | 2014 |
| **குறிப்பு 25** | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **மூலதன மானியம்** | - | - | **8,760** | **8,760** | **2,255** | **3,523** | **11,015** | **12,283** |
| FRMP மூலதன மானியம் | 1 | 2 | - | - | - | - | 1 | 2 |
| ஒல்லாந்து மூலதன மானியம் | 4,008 | 6,360 | - | - | - | - | 4,008 | 6,360 |
| EA1P மானியம் | 5,047 | 5,221 | - | - | - | - | 5,047 | 5,221 |
| மூலதன மானியம்-திறைசேரி நிதியம் | 105,902 | 98,161 | - | - | - | - | 105,902 | 98,161 |
| மூலதன மானியம்-திறைசேரி நிதியம்(மோட்டார் வாகனங்கள்) | 123,024 | 3,424 | - | - | - | - | 123,024 | 3,424 |
| ஜ.நா.அ.நி | 1,735 | 2,689 | - | - | - | - | 1,735 | 2,689 |
| APPELL கருத்திட்டம் | 8 | 16 | - | - | - | - | 8 | 16 |
| நூலக புததகங்கள் மானியம் | 105 | 141 | - | - | - | - | 105 | 141 |
| சர்வதேச அபிவிருத்தி சங்கம் | 110,507 | 114,656 | - | - | - | - | 110,507 | 114,656 |
| IRMP | 1,289 | 1,289 | - | - | - | - | 1,289 | 1,289 |
| ஐக்கிய நாடுகள் சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டம். | - | 1 | - | - | - | - | - | 1 |
| ஜ.நா.சு.நி மூலதன மானியம | - | 1 | - | - | - | - | - | 1 |
| இ-கழிவு மூலதன மானியம் | 19 | 28 | - | - | - | - | 19 | 28 |
| பிளாஸ்டிக் கழிவு முகாமைத்துவம் | 2,693 | 2,995 | - | - | - | - | 2,693 | 2,995 |

| | ம.சு.அ | | பிலிசறு கருத்திட்டம் | | EDCF கருத்திட்டம் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2015 | 2014 | 2015 | 2014 | 2015 | 2014 | 2015 | 2014 |
| <u>குறிப்பு 25</u> | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| மூலதன மானியம் | | | | | | | | |
| புவியிளல் தரவு முறைமை மூலதன மானியம் | 440 | 560 | - | - | - | - | 440 | 560 |
| வீட்டு கழிவு குறைத்தல் கருத்திட்டம்-கம்பஹ | 94 | 142 | - | - | - | - | 94 | 142 |
| சுனாமிக்கு பிந்திய மூலதன மானியம் | 43 | 64 | - | - | - | - | 43 | 64 |
| இயற்கை களநிலைய மானியம் | 388 | 400 | - | - | - | - | 388 | 400 |
| இடைமட்ட மாடி | 20,625 | 21,250 | - | - | - | - | 20,625 | 21,250 |
| சுற்றாடல் மாசு நடவடிக்கைகள் பற்றிய தரவுத்தளம் அபிவிருத்தி | 659 | 824 | - | - | - | - | 659 | 824 |
| தெண் ஆசிய நிகழ்ச்சித்திட்டம் | 42 | 53 | - | - | - | - | 42 | 53 |
| கையடக்க தொலைபேசிகளை பாதுகாப்பாக அகற்றல் | 203 | 238 | - | - | - | - | 203 | 238 |
| ஜோன்கீல்ஸ் மன்றம் | 71 | 83 | - | - | - | - | 71 | 83 |
| நூலக தகவல் நிலையம் | 1,091 | 1,253 | - | - | - | - | 1,091 | 1,253 |
| முன்னோடி நிகழ்ச்சித்திட்டம்-அமைச்சு நிதி | 143 | 167 | - | - | - | - | 143 | 167 |
| ம.சு.அ ஆய்வுகூட மேம்பாடு | 51,835 | 49,667 | - | - | - | - | 51,835 | 49,667 |
| சுற்றாடல் பேணுகை கருத்திட்டம் | 191 | 215 | - | - | - | - | 191 | 215 |
| சர்வதேச இரசாயண முகாமைத்துவ மூலோபாய அணுகுமுறைஅபாயகர கழிவு முகாமைத்துவம | 434 | 489 | - | - | - | - | 434 | 489 |

| | ம.சு.அ | | பிலிசறு கருத்திட்டம் | | EDCF கருத்திட்டம் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2015 | 2014 | 2015 | 2014 | 2015 | 2014 | 2015 | 2014 |
| **குறிப்பு 25** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| சர்வதேச இரசாயண முகாமைத்துவ மூலோபாய அணுகுமுறைசுற்றாடல் மாசு கட்டப்பாடு | 420 | 471 | - | - | - | - | 420 | 471 |
| பிலிசறு கருத்திட்டம்-ஆய்வுகூட உபகரணம் | 3,247 | 3,148 | - | - | - | - | 3,247 | 3,148 |
| EDCF கட்டிட நிதியம் | 1,595 | 1,637 | - | - | - | - | 1,595 | 1,637 |
| கொய்கா மூலதன மானியம் | 425,510 | - | - | - | - | - | 425,510 | - |
| நீர் கண்காணிப்பு (ஜெய்க்கா | 6,152 | - | - | - | - | - | 6,152 | - |
| நீர் கண்காணிப்பு(ஜெய்க்கா) | 390 | - | - | - | - | - | 390 | - |
| **யுனிசெப்** | 104 | - | - | - | - | - | 104 | - |
| அபான்ஸ் ஓடோ தனியார் லிமிடட் | 97 | - | - | - | - | - | 97 | - |
| **மொத்தம்** | **868,112** | **315,642** | **8,760** | **8,760** | **2,255** | **3,523** | **879,127** | **327,926** |

# 16.0.சுநிழசவ ழக வாந யுரனவைழச புநநெசயட ழடி வாநகுயைெஉயைட ளுவயவநஅநவெள

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. } ஐஈஎன்/ஈ/சீஈஏ/01/15/22 ඔබේ අංකය / உமது இல. / Your No. }

දිනය / திகதி / Date } 2016 திசெம்பர் 09

தலைவர்,
மத்திய சுற்றாடல் அதிகார சபை

**மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1988 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச் சட்டத்தின் 6(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவானதோர் அறிக்கை அதிகார சபையின் தலைவருக்க 2016 ஆகஸ்ட் 26 ஆந் திகதியன்று வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, .- இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

AGDSL
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

1.3 **கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 03

முன்னைய ஆண்டில் காணி மற்றும் கட்டிடங்கள் என வகைப்படுத்தப்பட்டிருந்த ரூபா 2,450,000 பெறுமதியான காணி மீளாய்வாண்டின் போது சீராக்கப்பட்டிருந்த போதும், அதற்குரிய தேய்மானமாகிய ரூபா 428,750 சீராக்கல் செய்யப்படவில்லை.

(ஆ) இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 07

நியாயமான பெறுமதியின் குறிப்பிடத்தக்கவாறு அமையாத மாற்றங்களை மாத்திரம் உடைய ஆதனங்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் என்பன 03 அல்லது 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டுமாயினும், ரூபா 95,469,873 பெறுமதியுடைய மோட்டார் வாகனங்கள் சம்பந்தமாக அதற்கமைய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3

## 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

கணனி இயந்திரங்கள் சம்பந்தமாக அவற்றைப் பயன்படுத்தக் கூடிய காலம் மதிப்பீடு செய்யப்படாது அலுவலக உபகரணங்களுக்காக பின்பற்றப்படுகின்ற வருடாந்த தேய்மானமாகிய கிரயத்தின் 10 சதவீதக் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டிருந்தது.

## 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின்போது பல்வேறு நிறுவனங்களிலிருந்தும் ஏனைய செயற்திட்டங்களிலிருந்தும் பெறப்பட்ட ரூபா 20,178,000 கூட்டுத்தொகை பெறுமதியுடைய சொத்துக்கள் கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் அவற்றிற்கான தேய்மானம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மூலதன மானியமாக முன்னைய ஆண்டில் பெறப்பட்ட ரூபா 395,200,000 பெறுமதியான செயற்திட்டங்கள் 2014 ஆம் ஆண்டின்போது மூலதனமாக்கப்படாததால் அவற்றிற்குரிய தேய்மானமாகிய ரூபா 9,443,854 தொகை பின்னோக்கி சீராக்கல் செய்யப்படுவதற்குப் பதிலாக மீளாய்வாண்டிற்கான இலாபத்திற்கெதிரே எதிரீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) பல்வேறு நிறுவனங்களிலிருந்து மூலதன மானியாகப் பெற்றிருந்த ரூபா 528,152,772 சொத்துக்களுக்கான பெறுமதி நிதி அசைவொன்றாக காசுப்பாய்ச்சல் கூற்றில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டின்போது மோட்டார் சைக்கிள் கொள்வனவிற்காகச் செலவிட்டிருந்த ரூபா 7,320,000 மீளாய்வாண்டினது நிதி வெளிப்பாய்ச்சலாக காட்டப்பட்டிருந்தது.

## 2.2.4 கணக்காய்விற்கான சான்றின்மை

இடைப்போக்கில் உள்ள கையிருப்பு மற்றும் நடைபெறும் வேலையாகிய ரூபா 34,546,481 கூட்டுத்தொகை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய செயற்திட்டச் செலவினமாகிய ரூபா 164,361,911 கூட்டுத்தொகை என்பனவற்றிற்கான விரிவான பட்டோலை மற்றும் கட்டணப் பட்டியல் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமை அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2006 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 1466/5 ஆம் இலக்க வர்த்தமானி | 20 அல்லது அதற்குக் குறைந்த மைக்கோரன் கன அளவு கொண்ட பொலித்தீனை உள்ளூர்ப் பாவனைக்காகத் தயாரித்தல், அவ்வுற்பத்திகளை விற்றல் அல்லது பயன்படுத்தல் தடை செய்யப்பட்டுள்ளபோதும், இக் கட்டளைகளை அமுலாக்குவதிலான முன்னேற்றத்தைப் பரீட்சிப்பதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையினது XXIV அத்தியாயத்தின் 10.3 ஆம் பிரிவும் 2011 திசெம்பர் 30 ஆந் திகதிய 155 ஆம் இலக்க தேசிய வரவு, செலவுத் திட்டச் சுற்றறிக்கையும் | இடர் கடன் கணிப்பிடும் போது உத்தியோகத்தர்களின் அடிப்படைச் சம்பளத்தின் அடிப்படையில் கடன் தொகை கணிப்பிடப்பட வேண்டுமாயினும், மொத்தச் சம்பளத்தின் அடிப்படையில் அதிகாரசபை கணிப்பீடுகளை மேற்கொண்டு கொடுப்பனவு செய்தமையால், 123 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 17,431,997 கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன், 59 உத்தியோகத்தர்களுக்கு சுற்றறிக்கை வரம்பிற்கும் அதிகமாக இடர்கடன் வழங்கப்பட்டிருந்தது. |
| (இ) 2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்கப் | நிலையான சொத்துக்கள் வருடாந்தம் மெய்மையாய்வு செய்யப்பட்டு நிலையான சொத்துப் பதிவேட்டு மீதியுடன் இணக்கஞ் |

5

AGDSL
විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

| | | |
|---|---|---|
| | பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.5 ஆம் பிரிவு | செய்யப்பட வேண்டுமாயினும், அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ஈ) | 2009 மே 26 ஆந் திகதிய 39 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை | மேலதிக படிகளை வழங்கும்போது முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் இணக்கத்தை அதன் பொருட்டுப் பெறவேண்டுமாயினும், அதற்கு முரணாக பட்டப்பின் படிப்புத் தகைமைகளைப் பெற்றுள்ள 22 உத்தியோகத்தர்களுக்கு மூன்று சம்பள ஏற்றங்கள் வீதம் வழங்கப்பட்டிருந்தன. |
| (உ) | திறைசேரிச் சுற்றறிக்கைகள் | |
| | (i) 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | நிலையான சொத்துப் பதிவேட்டை முறையாகவும் நாளது வரையாகவும் பேணியிருக்கவில்லை. |
| | (ii) 2002 நவெம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | கணனிகள் மற்றும் கணனி மென் அணிகள் சம்பந்தமாக முறையாகவும் நாளது வரையாகவும் பதிவேடொன்று பேணப்படவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின்போது அதிகாரசபை மற்றும் அதற்குரிய 02 செயற்திட்டங்களினது நிதி விளைவுகள் ரூபா 72,318,000 பற்றாக்குறையாக அமைந்ததுடன், அதற்கொப்பான முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 61,310,000 ஆகவும் இருந்தமையால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஆண்டினது நிதி விளைவுகளில் ரூபா 11,008,000 நலிவு தென்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் செயற்பாட்டு வருமானம் ரூபா 86,026,000 அதிகரித்திருந்தபோதும், செயற்பாட்டுச் செலவினம் ரூபா 97,033,000

6



REPORT OF THE AUDITOR GENERAL ON THE FINANCIAL STATEMENTS

அதிகரித்தமையானது மேற்படி நிதி விளைவினது நலிவுக்கு முக்கிய காரணங்களாக அமைந்தன.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்கையில் 2011 ஆம் ஆண்டில் நிதி மிகை ஏற்பட்டிருந்தபோதும், 2012 முதல் 2015 வரை தொடர்ச்சியாக நிதிப் பற்றாக்குறையே ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஊழியர் ஊதியம், அரச வரி மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களது தேய்மானம் ஆகியவற்றைக் கருத்திற்கொள்ளுமிடத்து அதிகார சபையின் பங்களிப்பு 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 453,482 மற்றும் ரூபா 646,565 என்பனவாகும்.

3.2 நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்ட சட்டபூர்வ நிகழ்வுகள்

சுற்றாடல் துஷ்பிரயோகம் மற்றும் சுற்றாடல் அனுமதிப்பத்திரங்களைப் பெறாமை தொடர்பாக நிறுவனம் வெளி நிறுவனங்களுக்கு எதிராக மீளாய்வாண்டின்போது 60 வழக்குகளையும் முன்னைய ஆண்டில் 116 வழக்குகளையும் நீதி மன்றங்களில் தொடர்ந்திருந்தது.

04. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1988 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரசபையின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் பிரதான நோக்கங்கள் பின்வருமாறு.

* தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் கீழ் சுற்றாடல் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதன் பொருட்டு சுற்றாடலுக்குத் தீங்கு விளைவிப்பதும் தீங்கு ஏற்படக் கூடியதாக அமையக்கூடியதுமான கழிவுகளை அகற்றுதல், குவித்து வைத்தல் அல்லது ஏனைய மாசடையும் வழிகளது தன்மை, அளவு, உள்ளீர்த்தல் மற்றும் தாக்கம் என்பவற்றை முறைப்படுத்துதல், பேணுதல் மற்றும் கட்டுப்படுத்துதல் என்பன.

7

* சுற்றாடல் தாக்க விளைவுகளை பகுப்பாய்வு செய்தவாறு படிப்படியாகப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்படும் சுற்றாடல் பிரச்சினைகளின் வாயிலாக சுற்றாடலில் மனதிற்கிசைந்த அபிவிருத்தியை உறுதி செய்யக்கூடிய வகையில் நாட்டின் இயற்கை வள முறைமையைப் பாதுகாத்தல்.

* சுற்றாடலைப் பாதுகாக்கையில் பொதுமக்களது ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் பெற்றுக்கொள்ளுதல், விசேடமாக, பாடசாலைச் சிறுவர்களது ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளுதலை நோக்காகக் கொண்டு உள்ளூர், தேசிய மற்றும் உலகளாவின சுற்றாடல் பிரச்சினைகள் குறித்துப் பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

இந்நோக்கங்களில் பின்வரும் நோக்கங்கள் நிறைவேற்றப்படவில்லை.

(i) குறித்தவொரு உள்ளூராட்சி நிறுவனத்தினது கட்டுப்பாட்டு எல்லைக்குள் சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பான ஏதாவதொரு பரிந்துரை மற்றும் விஷேடமாக சுற்றாடல் மாசடைதல் சம்பந்தமானதொரு பரிந்துரையின் பிரகாரம் செயற்படுமாறும் அந்தச் பரிந்துரைகளை அமுல்படுத்துமாறும் குறித்த உள்ளூராட்சி நிறுவனத்திற்கு அறிவித்தல்.

(ii) சுற்றாடலைப் பாதுகாத்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் சம்பந்தமாக ஏனைய நாடுகளுடனும் சர்வதேச அமைப்புக்களுடனும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளுதலும் அவற்றைப் பேணுதலும்.

(ஆ) பிலிசறு செயற்திட்டம்
---------------------------------------

2008 – 2010 ஆம் ஆண்டுகளுக்கான 3 ஆண்டுகாலத்தின் போது நிறைவு செய்வதற்குத் திட்டமிட்டிருந்த செயற்திட்டங்கள் தொடர்பாகத் திறைசேரி ரூபா 5.633 மில்லியினை ஒதுக்கீடு செய்திருந்த போதும், மீளாய்வாண்டு முடிவு வரை 45 சதவீதத்தைக் குறிக்கும் ரூபா 2.555 பில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. 2016 மே முடிவு வரை செயற்திட்டம் நிறைவு பெறாதிருந்ததுடன், இது தொடர்பாகப் பின்வரும் விடயங்களும் அவதானிக்கப்பட்டன.

8

(i) 2015 தேசத்துக்கு மகுடம் நிகழ்ச்சியோடிணைந்து மாத்தறை மாநகர சபையில் நீர்வாயு ஜீரண தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி செயற்படுத்தப்படும் கொட்டவில கழிவு முகாமைத்துவச் செயற்திட்டத்திற்கு 2014 ஆம் ஆண்டிலும் 2015 ஆம் ஆண்டு ஆரம்பத்திலும் ஒப்பந்தங்களுக்கென ஒதுக்கப்பட்டிருந்த தொகையில் 55 சதவீதத்தைக் குறிக்கும் ரூபா 64,356,000 வேலையை ஆரம்பிப்பதற்கான முற்பணமாக ஒப்பந்தக் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. இச் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் இடைநடுவே நிறுத்தப்பட்டிருந்ததுடன் இச்செயற்திட்டமானது 2016 மே 01 ஆந் திகதியளவிலும் மீண்டும் ஆரம்பிக்கப்படாதிருந்தது.

(ii) கொம்போஸ்ட் தொகுதியை நிர்மாணிப்பதற்காக நான்கு பிரதேச சபைகளுக்கும் ஒரு நகர சபைக்கும் முற்பணமாக ரூபா 5,552,962 வழங்கப்பட்டிருந்த போதும், அந் நிர்மாண வேலைகள் முடிவுறவில்லை.

(iii) 06 உள்ளூராட்சி நிறுவனங்களது கொம்போஸ்ட் செயற்திட்டங்கள் 05 மாதங்கள் தொடக்கம் 3 ஆண்டுகள் 09 மாத கால தாமதத்தின் பின்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

(iv) செயற்திட்ட நோக்கங்களுக்கு அப்பாற்படும் விதத்தில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பணிகளுக்காக ரூபா 1,372,000 செலவிடப்பட்டிருந்தது.

(இ) பொருளாதார ஒத்துழைப்பு நிதியக் கடன் வசதியுடன் திண்மக் கழிவுகளை அகற்றுவதற்கான வசதிகளுக்கான நிர்மாண வேலைச் செயற்திட்டம் (EDCF)

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 48 மாதங்களுக்குள் செயற்திட்டத்தை நிறைவேற்றும் அடிப்படையில் கொரிய அரசாங்கம் மற்றும் இலங்கை அரசாங்கம் என்பவற்றிடமிருந்து முறையே 33,536,000 அமெரிக்க டொலர்களும் 8,350,000 அமெரிக்க டொலர்களும் பயன்படுத்தப்பட்டு 2013 நவெம்பரில் வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2016 மே மாதமளவில் செயற்திட்டம் ஆரம்பமாகி 02 ஆண்டுகளும் 05 மாதங்களும் கடந்திருந்த போதிலும் உத்தேசிக்கப்பட்ட 04 நிலத்தை நிரப்பும் நிலையங்களின் நிர்மாண வேலைகள் முடிவடையாதிருந்தன. இதன் பொருட்டு 2014 ஆம் ஆண்டில்

9

ரூபா 143,515,900 மற்றும் 2015 ஆம் ஆண்டில் ரூபா 192,000,000 என நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ii) திண்மக் கழிவுகளை அகற்றும் வசதிகளை உருவாக்குவதற்காக 2015 ஆம் ஆண்டில் ரூபா 300,000,000 வெளிநாட்டுக் கடனாக நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்த போதும், ஏற்பாடு செய்த நிதியை முற்றாகப் பயன்படுத்தாது 2015 திசெம்பர் 29 ஆந் திகதியன்று அமைச்சின் பாதுகாப்பு மற்றும் நீர் வள முகாமைத்துவ செயற்திட்டத்திற்கு மாற்றப்பட்டிருந்தது.

(iii) வெளிநாட்டு நிதியுதவியுடன் இணைந்த உள்ளூர்க் கிரயத்திற்கென மீளாய்வாண்டின்போது ரூபா 92,000,000 நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டபோதும், ரூபா 14,953,000 மாத்திரமே பயன்படுத்தப்பட்டமையால் மொத்த நிதியேற்பாட்டின் 84 சதவீதமாகிய ரூபா 77,047,000 குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது.

4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தொம்பே சுகநல கழிவுகளைத் தேக்கி வைக்கும் நிலத்தை நிரப்புவதற்கான செயற்திட்டத்தினது சூழலில் அமைந்த நுழைவு வீதியை நிர்மாணிப்பதற்காக ரூபா 69,500,000 ஒப்பந்தம் ஒன்று வழங்கப்பட்டமை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நிலையப் பரிசோதனையின்போது ஏற்றுக்கொள்ளப்பட்ட வீதத்திலும் அதிகமான மதிப்பீடு செய்யப்பட்டமை, நடைபெறாத வேலைகளுக்கு மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டமை, எதிர்பாரா நிகழ்வுகளுக்காக மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டமை போன்ற காரணங்களால் ரூபா 22,266,495 கூடுதலாக மதிப்பீடு செய்யப்பட்டு ஒப்பந்தகாரருக்கு ரூபா 8,151,173 கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மேலும், பாதையை நிர்மாணிக்கும் வேலை குறித்த நியமங்களுக்கேற்ப அமைய இருக்கவில்லையென 05 ஆய்வுகூட அறிக்கைகளின் வாயிலாக உறுதியாகியிருந்தபோதும், இது தொடர்பாக அதிகாரசபை கவனஞ் செலுத்தியிருக்கவில்லை.

(ஆ) சுற்றாடல் அமைச்சினால் அதிகாரசபைக்கு வழங்கப்பட்ட 06 வாகனங்கள் 03 ஆண்டுகளாக அதிகாரசபையால் பயன்படுத்தப்பட்டவாறிருந்தபோதும்,

10

அவற்றினது உரித்தை முறையாகச் கையேற்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(இ) நிறைவேற்றுனர் படிகளாக அதிகாரசபையின் உத்தியோகத்தர்களுக்கு ரூபா 1,901,000 படியானது 2016 ஏப்ரல் மாதமளவிலும் மீண்டும் அறவிடப்படாதிருந்தது.

(ஈ) சுற்றாடலில் ஏற்படும் தாக்கங்களை மதிப்பிட்டு செயற்திட்ட அறிக்கைகளை அங்கீகரிக்கும் பணிகளுக்காக 21 செயற்திட்டங்களுக்குரிய செயற்திட்ட ஆலோசகர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த நிர்வாகச் செலவினமாகிய ரூபா 325,339 அறவிடப்பட்டிருக்கவில்லை.

4.3 **சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

திறைசேரியின் அங்கீகாரமின்றி அதிகாரசபையின் 874 உத்தியோகத்தர்களுக்கு உணவுப் படியாக நாளாந்தம் ரூபா 85 வீதம் மீளாய்வாண்டின்போது ரூபா 12,902,384 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

4.4 **நிதியத்தைக் குறைவாகப் பயன்படுத்துதல்**

மீண்டுவரும் மற்றும் மூலதன உதவியாக 10 செயற்திட்டங்களுக்குப் பெறப்பட்ட ரூபா 4,333,917 குறித்த நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்படாது குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது.

4.5 **பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2007 ஆம் ஆண்டின்போது 20 மைக்ரோனுக்குக் குறைந்த பொலித்தீன் உற்பத்தியைப் பரிசீலிப்பதற்காக ரூபா 452,660 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட 10 உபகரணங்கள் 2016 மே மாதம் வரையும் பயன்படுத்தப்படாதிருந்தது.

(ஆ) ஏறக்குறைய 4 ஆண்டுகளாக ரூபா 6,050,000 பெறுமதியுடைய மோட்டார் வாகனமொன்று பயன்படுத்தப்படாது வாகனப் பிரிவில் காணப்பட்டது.

4.6 இனங்காணப்பட்ட இழப்புகள்

2014 ஆம் ஆண்டின்போது செலுத்தப்பட வேண்டிய ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத் தொகை குறித்த தினத்தில் செலுத்தப்படாததால் ரூபா 18,130 தண்டப்பணமாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன், இத்தொகையைப் பொறுப்பான உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவுமில்லை.

4.7 ஏனைய அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரசபையின் வளங்கள்

தொம்பே கிறீன் பார்க் நிலையத்திற்கெனக் கிடைக்கப்பெற்ற ரூபா 6,675,000 பெறுமதியுடைய கம்பெக் வாகனமொன்று 2014 ஆம் ஆண்டு முதல் கடுவெலை மாநகர சபையின் பாவனைக்கு அங்கீகாரமின்றி வழங்கப்பட்டிருந்தது.

4.8 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 1173 ஆகும். உள்ளவாறான பதவியணி 874 ஆகும்.

(ஆ) புதிய ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்படாது பதவியணி அங்கீகரிக்கப்படுதலின் போதும் பதவி உயர்வுகளின் போதும் உரிய அடிப்படையில் தகைமைகளைப் பெற்ற உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் தவறிப்போனமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே, தற்போதுள்ள ஆட்சேர்ப்பு நடைமுறைக்கமைய ஒவ்வொரு பதவிக்குரிய மூலப் பட்டப் படிப்பு மற்றும் பட்டப்பின் படிப்புத் தகைமைகள் மற்றும் அதிகாரசபையில் பல ஆண்டு சேவை அனுபவத்தை ஈடாகக் கொண்டு தகைமைகள் தீர்மானிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன. சில பதவிகளில் தற்போது கடமை புரியும் உத்தியோகத்தர்களிடம் காணப்படும் தகைமைகளை உள்ளடக்கியவாறு ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

4.9 வாகனப் பாவனை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(ஆ) பயன்படுத்தப்படுவதிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ள 04 வாகனங்களைக் கைதவிர்ப்புச் செய்வதற்கோ அல்லது ஏலத்திலிடவோ தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) காணாமல் போன ரூபா 183,000 கிரயமுடைய மோட்டார் சைக்கிள் ஒன்று சம்பந்தமான விசாரணை நடவடிக்கைகள் கணக்காய்வுத் தினமான 2015 திசெம்பர் 31 வரை முடிவடையாதிருந்தது.

5. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

5.1 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினது உத்தேச பதவியணியில் உள்ளகக் கணக்காய்வாளருடன் 07 உத்தியோகத்தர்களையும் கொண்டிருத்தல் வேண்டுமாயினும், 2006 ஆகஸ்ட் 01 இல் உள்ளவாறு 03 உத்தியோகத்தர்கள் மாத்திரம் அதில் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர். அதிகாரசபையின் நோக்கெல்லையுடன் ஒத்துப்பார்க்குமிடத்து இப்பதவியணி போதுமானதல்ல என அவதானிக்கப்பட்டது.

5.2 சுற்றாடல் மற்றும் சமூகப் பொறுப்புகளை நிறைவேற்றுதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின்போது 2053 சுற்றாடல் புகார்கள் பெறப்பட்டிருந்ததுடன், அதில் 79 சதவீதமான 1614 தீர்த்து வைக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படாததுடன், புகார்களைத் தீர்த்து வைக்கும் முன்னேற்றம் மிகவும் குறைந்த மட்டத்தில் நிலவியமையும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) தேசிய ரீதியாகப் பிரச்சினைக்குட்பட்ட நகரை அண்மித்த ஒரு இடத்தில் சேகரிக்கப்படும் கழிவுப் பொருட்கள் சம்பந்தமாக நாட்டிலே சிறிய அல்லது மத்திய பரிமாணத்திலான கழிவுப் பொருள் முகாமைத்துவச் செயற்திட்டத்தை அமுலாக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளைத் தயாரித்தல் தொடர்பாகக் கவனஞ் செலுத்துதல், திண்மக்கழிவு முகாமைத்துவத்தினூடாக ஏற்படும்

இடைக்காலப் பேறாகிய சேதன உர உற்பத்தியினூடாக இரசாயன உரத்தைப் பயன்படுத்துவதற்கான மாற்றுத் தீர்வைப் பெற்றுத் தருவது மற்றும் சுற்றாடலுக்கு ஏற்படும் தீங்கைக் குறைப்பது போன்றே அதிகாரசபை இலாபத்தை ஈட்டுவதும் போன்ற விடயங்கள் சம்பந்தமாக முன்னுரிமையைக் காட்டுதல் அதிகாரசபைக்குரிய பொறுப்பாக இருந்தபோதும், அவற்றின் பொருட்டு கூடிய கவனஞ் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) கைத்தொழில்களுக்கு சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்களை முறையான நடைமுறைகளுக்கேற்ப வழங்குவதன் காரணமாக மக்களுக்கு அதிகாரசபை வழங்கும் சேவையானது வெற்றிகரமாக நிறைவேறியிருக்கவில்லை.

(ஈ) சமனல வனப் பாதுகாப்புச் சுற்றாடலில் உள்ள 07 ஊற்றுக்கள் என அறிமுகஞ் செய்யப்பட்டுள்ள 07 ஊற்றுக்களில் ஆறாவது ஊற்றுக்கு மேற்புறமாக அணை ஒன்று நிர்மாணிக்கப்பட்டு நீர் திருப்பப்பட்டு நாயகங்க சிறிய அளவிலான மின் நிலையமொன்று அமைக்கப்பட்டு 06 மற்றும் 07 ஊற்றுக்களில் ஊற்று நீர் சிந்துவதற்கான அபாயம் நிலவுவதை இனங்கண்டிருந்ததுடன், அது தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட புகார்கள் மற்றும் அனர்த்தம் என்பன கருத்திற்கொள்ளப்படாது அதற்குரிய ஆரம்பச் சுற்றாடல் அறிக்கை வழங்கப்பட்டிருந்தது. தற்போது செயற்திட்டம் நிறைவேறியுள்ளபோதும், அந்த 07 ஊற்றுக்களில் 02 நீர் இல்லாமல் போகும் அபாயம் நிலவி வருவது களப் பரிசோதனை அறிக்கைகளின் மூலம் உறுதி செய்யப்பட்டிருந்த போதும், அது தொடர்பாக எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

(உ) தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களும் பிரதான பணிகளும் என்பவற்றுக்கிடையே சுற்றாடலில் கழிவுப் பொருட்களும் தீங்கு விளைவிக்கும் பொருட்களும் கலத்தல் மற்றும் சுற்றாடலின் தன்மையைப் பாதுகாப்பதைப் போன்றே அதனை முன்னேறுவதற்குரிய சகல முறைப்படுத்தும் நடவடிக்கைகளையும் ஒருங்கிணைக்கும் பொறுப்பு என்பன அதிகாரசபையையே சாரும். அநேக உள்ளுராட்சி நிறுவனங்களால் நகரை அண்மித்த பகுதிகளில் சேகரிக்கப்படும் கழிவுப் பொருட்களை அகற்றுவது சுற்றாடலுக்கும் பொதுமக்களது சுகாதாரப் பாதுகாப்பிற்கும் பெரியளவு சிக்கலாக அமைவதால் அவற்றிற்குத் துரித தீர்வை எட்டுவதற்கான அவசியம் தொடர்பாகக் கவனஞ் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

14

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் சம்பந்தமான குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத்துறைகள் | அவதானிப்புகள் |
|---|---|---|
| (அ) | பதவியணியினர் கட்டுப்பாடு | ஆட்சேர்ப்பு நடைமுறைக்கேற்ப ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்கல், சம்பள ஏற்றம் என்பன வழங்கப்படாமை. |
| (ஆ) | செயற்திட்ட அமுலாக்கல் மற்றும் கட்டுப்பாடு | குறித்த தினத்தில் செயற்திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்காமை மற்றும் செயற்திட்டங்களுக்குரிய இறுதி அறிக்கைகள் மற்றும் கணக்குகள் என்பவற்றைச் சமர்ப்பிக்காமை. |
| (இ) | வாகனக் கட்டுப்பாடு | பயன்படுத்தப்பட முடியாத வாகனங்களை அகற்றுதல் மற்றும் வாடகைக்கு வாகனங்களைப் பெறுவதைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமாயினும், அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை. |

ஒப்பம் :- டபிள்யூ. பீ. சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)